வரு.74 இல. 12 ★

www.vaaramanjari.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

2022 மார்ச் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை


March 20 Sunday, 2022

32 பக்கங்கள் 50/-






03 மூன்றிலிரண்டை இழப்பது அரசுக்கு பாதிப்பில்லை!



05 பௌத்தத்தை தமிழ், சிங்களம் என பிரித்துப் பார்க்கலாமா?



13 14ஆம் ஆண்டு எடிசன் தமிழ் திரை விருது



24 இவ்வாரம் ஆரம்பமாகும் இந்தியன் பிரீமியர் லீக்

நாட்டின் தற்போதைய நிலைமை பற்றி ஆராய

## ஜனாதிபதி தலைமையில் புதனன்று சர்வகட்சி மாநாடு

பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு அழைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமை தொடர்பில் விரிவாக ஆராய்ந்து உரிய தீர்வு காண்பதற்கான வழிவகைகளை முன்னெடுக்கும் வகையில் விசேட



சர்வகட்சி மாநாடு ஜனாதிபதி கோட்டாபயராஜபக்ஷவின்தலைமையில்எதிர்வரும்புதன்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது. இந்த சர்வ கட்சி மாநாட்டில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான 04

துறைமுகத்தில் தேங்கியுள்ள 2,000 கொள்கலன்களில்

## இந்திய பொருட்களை விடுவிக்க முன்னுரிமை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

துறைமுகத்தில் தேங்கியுள்ள அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய 2,000 கொள்கலன்களை விடுவிப்பதற்கு தேவையான நிதியை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அத்தியாவசியப் பொருட்கள் 04



தேவையற்ற நீண்ட வரிசையை தவிர்க்கவும்

## தேவையான அளவு எரிபொருளை மட்டுமே கொள்வனவு செய்யவும்

நிலைமை இரு தினங்களுக்குள் சீராகும்

- அமைச்சர் காமினி லொக்குகே



தேவையானளவு எரிபொருளை மாத்திரம் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றுக் கொள்ளுமாறு வலுசக்தி அமைச்சர் காமினி லொக்குகே பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள அவர், கேள்வி அதிகரித்துள்ளதன் 04

எந்தவிதமான நிபந்தனைகளையும் விதிக்காது



# இலங்கை மீதான தனது நட்பை வெளிப்படுத்திய இந்தியா

ஒரு பில். அமெரிக்க டொலர் கடனுதவி குறித்து பசில்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இந்தியா, இலங்கைக்கு வழங்கிய ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவிக்காக நிபந்தனைகள் எதனையும் விதிக்கவில்லையென தெரிவித்த நிதியமைச்சர், எனினும் இந்த கடனை மூன்று வருட தவணைகளில் திருப்பி செலுத்தவேண்டுமென்றும் தெரிவித்துள்ளார்.

கடனை திருப்பிச் செலுத்துவது தொடர்பில் ஜனாதிபதி விவேகமாக மிகவும் நீண்டகால திட்டத்தின் அடிப்படையில் செயற்படுகின்றாரென பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அயல்நாடான இந்தியா தனது நிலைப்பாட்டை தனது செயற்பாட்டின் மூலம் நிரூபித்துள்ளதென நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு அவசியமான உதவிகள் அனைத்தும் பொருளாதார ரீதியிலும் சமூக ரீதியிலும் வழங்கப்படுவதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளாரெனவும் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் மக்களுக்காக அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் உணவுகளை கொள்வனவு செய்வதற்காக ஒரு பில்லியன் டொலர் கடனுதவியை வழங்கியுள்ளது. குறிப்பாக தமிழ், சிங்கள புத்தாண்டை கருத்தில்கொண்டு இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது. இது கடந்த 17ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாகவும் பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். 04

> திட்டமிட்ட முறையில் திருப்பி வழங்க ஜனாதிபதி விவேகமான முறையில் செயற்படுவார்

நயினாதீவில் பிரதமர் வழிபாடு...



யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நயினாதீவிலுள்ள ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டபோது பிடிக்கப்பட்ட படம். பிரதமரின் இந்து சமய விவகாரங்களுக்கான இணைப்பாளர் சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## ரூ. 2,000 நட்டத்திலேயே 12.5 கிலோ GAS விற்பனை

லிட்ரோ பாதுகாப்பு தேசிய ஒன்றியம் தெரிவிப்பு



12.5 கிலோ நிறையுடைய சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றை விற்பனை செய்யும் போது 2,000 ரூபா வரை நட்டம் ஏற்படுவதாக லிட்ரோ நிறுவன பாதுகாப்பு தேசிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.


இந்த ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் ஒரு பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில் இந் நிறுவனத்தைக் கொண்டு செல்வதற்காக சமையல் எரிவாயு விலையை அதிகரிப்பதற்குத் தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டுமென 04

கொரோனா இன்னமும் அச்ச நிலையிலேயே

## போராட்டங்கள், கூட்டங்களில் கலந்துகொள்வதில் கவனம்

சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுப்பு



நாட்டுக்குள் கொவிட்19 தொற்று நிலைமை முன்னரைப் போன்று தீவிரமாகக் காணப்படாத போதிலும், அச்சுறுத்தல் நிலைமை முழுமையாக நீங்கவில்லையென சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் ரஞ்சித் பட்டுவந்துட்டாவ தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே 04



## ரயில் கட்டணங்கள் குறித்து நாளை முடிவு

அமைச்சர் திலும் அமுனுகம தெரிவிப்பு 04

## அரசாங்கத்தை விமர்சிப்பதே இந்த இருவரினதும் வேலை



சுமந்திரன், சாணக்கியன் குறித்து பிள்ளையான் 04

## அமைச்சர் டக்ளஸுக்கு கொரோனா தொற்று

நயினாதீவு சோதனையில் உறுதி

**யாழ்.விசேட நிருபர்**



கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று நயினாதீவுக்கு விஜயம் செய்தபோது அங்கு வைத்து 04

## அமெரிக்க அரசியல் விவகார அதிகாரி இலங்கை வருகிறார்



அமெரிக்க அரசியல் விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் விக்டோரியா நொலண்ட் நேற்று முதல் எதிர்வரும் 23ஆம் திகதி வரையில், பங்களாதேஷ், இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். 04

வாரமஞ்சரி

## எங்கள் கருத்து...

## ஆர்ப்பாட்டங்கள் மூலமாக சாதிக்கப்போவது என்ன?

அமெரிக்க டொலர் ஏற்றம் காரணமாக சமையல் எரிவாயு, எரிபொருட்கள் என்பவற்றுக்கு உலக அரங்கிலேயே தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலைமையில் இன்று இலங்கையும் அதற்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளது.


இந்த இக்கட்டான நிலைமையை உணர்ந்து கொள்ளாத அரசியல் கட்சிகள் சில செய்துவரும் ஆர்ப்பாட்டங்களும், வீதிகளை மறித்து நடத்தும் போராட்டங்களும் எந்தவித அர்த்தமும் இல்லாத வெறுமனே அரசியல் விளம்பரம் தேடுகின்ற ஒரு செயலாகவே கருத முடிகிறது.

உண்மையில் அரசாங்கம் இத்தகைய ஒரு இக்கட்டான சூழ்நிலையில் அதனை மக்கள் மீது முழுச் சுமையையும் செலுத்தாது அதனை தானும் தாங்கியவாறு நாட்டை வழி நடத்தி வருகின்றது. இந்த நிலை புரியாது அரசியல் கட்சிகள் சில ஆட்சியை கைப்பற்றவும், மக்களை தம் பக்கம் திருப்பவும் படாதபாடுபட்டு வருகின்றன.

இவ்வாறு பணமும், உணவும் கொடுத்து பாமர மக்களை கொழும்புக்கு அழைத்து ஆர்ப்பாட்டங்களை நடத்தும் கைங்கரியத்தை செய்வதன் மூலமாக அவர்களால் எதனையும் சாதித்து விட முடியாது. இதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். கொரோனா அச்சுறுத்தல் காரணமாக அதளபாதாளத்தில் வீழ்ச்சி அடைந்திருந்த உலகமே தற்போதுதான் அதிலிருந்து சிறிது சிறிதாக மீண்டு எழுந்து வருகின்றது. இதனை விடவும் ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கிடையிலான யுத்தம் மீண்டும் ஒரு பொருளாதார அச்சுறுத்தலை உலகுக்கு எச்சரிக்கையாக விட்டுள்ளது. ஏற்கனவே வளர்ந்த நாடுகள் கூட எரிபொருள் தேவைகளுக்கு ஈடு கொடுக்க முடியாது தடுமாறுகின்றன. மசகு எண்ணெய்யின் விலை உச்சத்தை அடைந்துள்ளது. 04

## டிஜிட்டல் முறையில் நீர் கட்டணங்கள்

அறிமுகப்படுத்தியது நீர் வழங்கல் சபை



டிஜிட்டல்முறையில் நீர் கட்டணம் செலுத்தும் முறையை அறிமுகப்படுத்த தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தீர்மானித்துள்ளது. இலங்கையில் கடதாசி மற்றும் அச்சுப்பதிக்கும் பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக இத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. டொலர் தட்டுப்பாடு 04

தாமதமாக வருவதற்கு

## அனுமதி கோரும் அரச ஊழியர்கள்



நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி முடியும் வரை, அரச ஊழியர்கள் தாமதமாக வருவதற்கு சலுகை அல்லது முன்னர் பயன்பாட்டிலிருந்த வருகை பதிவு ஆவண முறையைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்குமாறு அரசாங்க தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு 04

## IMF செல்வதே பொருத்தமானது அரசுக்கு மத்திய வங்கி பரிந்துரை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் நிலவும் பொருளாதார நிலையை கவனத்திற்கொண்டு நெருக்கடி நிலைக்கு தீர்வு காணும் வகையில் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வது சிறந்தது என மத்திய வங்கி அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

அத்துடன் அதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முறைமை தொடர்பில் விசேட யோசனைகளை மத்திய வங்கியானது அரசாங்கத்திற்கு 04



(படம்: கயான் புஷ்பிக)

தினகரன் வாரமஞ்சரியில் தொடராக வெளிவந்த எழுத்தாளர் வைத்திய கலாநிதி ஞானம் ஞானசேகரனின் "யாவரும் கேளீர்" எனும் பத்தி எழுத்து அடங்கிய நூல் வெளியீட்டு விழா நேற்றுக் காலை கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி W. தயாரத்ன, தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர், பேராசிரியர் சோ. சந்திரசேகரன், கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி என். காண்டீபன் உட்பட பலர் கலந்து கொண்டனர். நூலின் முதற்பிரதியை புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

விக்கல் வீராச்சாமி



அண்ணே, நாட்டில எரிவாயுவுக்கும் பெட்ரோல் டீசலுக்கும் வரிசையில நிக்கிற சனத்தை பாத்தா எனக்கு ஒரு டவுட்டா இருக்கு....

எனக்கும் அதே டவுட்தான், இவையும் உந்த ஆர்ப்பாட்டத்துக்கு வாற சனம் மாதிரி ரேட் பேசிக் கொண்டு வந்து நிக்க வைக்கிறாங்களோ...!!!







தினகரன் வாரமஞ்சரியில் தொடராக வெளிவந்த வைத்திய கலாநிதி ஞானம் ஞானசேகரனின் யாவரும் கேளிர் எனும் பத்தி எழுத்து அடங்கிய நூல் வெளியீட்டு விழா நேற்று காலை கொழும்பு வெள்ளவத்தை தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி W. தயாரத்ன, தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர், பேராசிரியர் சோ. சந்திரசேகரன், கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி என். காண்டீபன் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

படங்கள் கயான் புஷ்பிக, எம்..நசார்

## தினகரன் பத்திரிகையின் 90ஆவது ஆண்டு விழாவின்போது






# பேருவளை, தர்காநகர் தினகரன் வாசகர் வட்ட ஏற்பாட்டிலான மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஆரம்பம்




**பீ.எம் முக்தார்**

லேக் ஹவுஸ் நிறுவனத்தின் வெளியீடான தினகரன் பத்திரிகையின் 90 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு பேருவளை மற்றும் தர்காநகர் தினகரன் வாசகர் வட்டம் ஏற்பாடு செய்த மாபெரும் கிரிகெட் சுற்றுப் போட்டியின் ஆரம்ப நிகழ்வு நேற்று 19ம் திகதி பேருவளை மாளிகாசேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலை விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது.

பேருவளை நகர சபைத் தலைவர் மஸாஹிம் முஹம்மத், பேருவளை பொலிஸ் நிலைய நிர்வாகப் பிரிவுப் பொறுப்பதிகாரி நிலந்தபெரேரா, பொலிஸ் பொதுமக்கள் உறவுப் பிரிவின் பொறுப்பதிகாரி ரத்னஸிரி பத்திரகே, பேருவளை, தர்காநகர் வாசகர் வட்டத்தின் தலைவரும் பிரபல சமூகசேவையாளருமான தேசமான்ய பாஸி ஸூபைர்,சமூகசேவையாளர் ரியாஸ்தீன் இமாம்தீன் ஆகியோர் போட்டி ஆரம்பநிகழ்வில் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

இச்சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் வெற்றிபெரும் அணிக்கு தினகரன் வெற்றிக் கிண்ணத்துடன் 25000 ரூபா ரொக்கப்பணமும் இறுதிப் போட்டியில் பங்குபற்றும் அணிக்கு கிண்ணத்துடன் 15000 ரூபா ரொக்கப்பணமும் வழங்கப்படும். அதேசமயம் சிறந்த பந்து வீச்சாளர், சிறந்த வீரர், சிறநந்த துடுப்பாட்டக்காரர் ஆகியோருக்கும் பெறுமதி வாய்ந்த பரிசில்களுடன் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**படங்கள் : பீ.எம் முக்தார்**







## இலங்கை வங்கி

### விலைமதிப்புள்ள சொத்துக்களின் விற்பனை

| ஆதன இலக்கம் | நகரம் | ஆதனத்தின் அமைவிடம் | ஆதன வகை | பரப்பளவு |
|---|---|---|---|---|
| 451 | மாவத்தகமை | மாவத்தகமை, கிவுல மீதன்வெல வீதியில் அமைந்துள்ள "ரின்சே லொட்ஜ்". | காணியும் கட்டடமும் | ரூட்-1 பேர்-1 |
| 455 | குருணாகல் | குருணாகல் வந்துராகலையில் (வங்துராகல பன்சல அருகிலுள்ள வீதியில்) அமைந்துள்ள "வலவ்வேவத்த". | தரிசு நிலம் | ரூட்-1 பேர்-12 |
| 457 | குருணாகல் | குருணாகல் கோணவலை, விலகெதரவில் அமைந்துள்ள "ஹல்லாவே நிவச". | காணியும் கட்டடமும் | ரூட்-1 பேர்-10.7 |
| 459 | இரத்தினபுரி | இல: 162 ஏ, ரத்கங்க சந்தி (சிறிய தம்பதிவ பன்சலைக்கு அருகே) குடாவயில் அமைந்துள்ள "திஹானா ரெஸ்ட்". | காணியும் கட்டடமும் | பேர்-15 |
| 475 | கம்பஹா | இல: 387/பீ, தேகவத்த வீதி, தொம்பே (தொம்பே மருத்துவமனைக்கு அருகே), கம்பஹாவில் அமைந்துள்ள " தொடம்கஹவத்தை ". | காணியும் கட்டடமும் | ரூட்-1 பேர்-1.49 |
| 484 | பியகம | முன்னாள் பீ.என். எஸ். அலுமினியம் இல: 98/2, பமுனுவில வீதி, கோனவல, பியகமவில் அமைந்துள்ள "மூனமல்கஹவத்தை". | தரிசு நிலம் | பேர்-26.5 |
| 485 | மாத்தளை | இல:44/5,தொடந்தெனியவில் அமைந்துள்ள "ஹூலன்கமுவ எஸ்டேட்". | காணியும் வீடும் | பேர்-27.2 |

மேற்குறிப்பிட்ட சொத்துக்கள் தொடர்பாக விலைகூறல்களை முன்வைக்க ஆர்வமுடைய தரப்பினருக்கு (முதல் தரப்பினருக்கு மட்டும்) அழைப்பு விடுக்கின்றோம்.

விண்ணப்பங்கள் 2022.04.07 ஆம் திகதி வரை மட்டுமே விநியோகிக்கப்படும். அத்தோடு மீளளிக்கப்படாத 2,000.00 ரூபாவுக்கான வைப்பொன்றையும் மீளளிக்கப்படும் 50,000.00 ரூபாவுக்கான வைப்பொன்றையும் எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் வைப்பிலிடலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை, குறித்த சொத்துக்கள் தொடர்பான இலக்கத்தினைக் "PROP/02/2022" குறிப்பிட்டு ஒட்டிய தபாலுறையில் 2022.04.08 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். 2022.04.08 ஆம் திகதி விலைக் கூறல்கள் திறக்கும் போது விண்ணப்பதாரிகளை சமூகளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். விண்ணப்பதாரிகளின் ஏலங்களை அங்கீகரிப்பது அல்லது புறக்கணிப்பது இலங்கை வங்கிக்குரிய உரிமையாகும்.

**மேலதிக விபரங்களை வேலை நாட்களில் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடாக பெற்றுக் கொள்ளலாம்.**

முகவரி: இலங்கை வங்கி, கையகப்படுத்தப்பட்ட சொத்துப் பிரிவு,
3 ஆம் மாடி, தலைமையகம், "BOC சதுக்கம்" இல: 01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

தொலைபேசி: உதவிப் பொது முகாமையாளர்,
வசூலிப்பு நிறுவனப் பிரிவு - 011 238 6080/ 011 220 3410
சிரேஷ்ட முகாமையாளர் - 011 232 1170/ 011 220 3429/ 076 962 7068
உதவி முகாமையாளர் - 011 220 3470/ 071 841 8898
மின்னஞ்சல் முகவரி: mgrforeclosed@boc.lk

* www.boc.lk என்ற இணையதளத்தினுள் பிரவேசித்து 'Special Notices' என்பதன் கீழுள்ள 'Foreclosed Properties for sale' என்பதைப் பார்வையிடவும்.
* பின்வரும் QR குறியீட்டினூடாக சொத்துக்களுக்கான அனுகலை பெற்றுக் கொள்ளலாம்.

1975 BOC CALL CENTRE www.boc.lk

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்




உலகத் தமிழர் வம்சாவளி அமைப்பின் எட்டாவது சர்வதேச மகாநாடும் ஒன்றுகூடலும் சென்னை வர்த்தக மையத்தின் கேட்போர் கூடத்தில் (11.3.2022 ) காலை நடைபெற்ற போது விழாவின் சிறப்பு மலரை சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட புரவலர் ஹாசிம் உமருக்கு V.I.T. பல்கலைக்கழகத்தின் தலைவர் கலாநிதி விஸ்வநாதன் வழங்குவதையும் அருகில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், உலகத் தமிழர் வம்சாவளி அமைப்பின் தலைவர் செல்வக்குமார் ஆகியோர் காணப்படுகின்றனர்.




தமிழ்நாடு வக்ஃப் சபையின் தலைவராக இப்போது செயல்படும் மாவட்ட மற்றும் செஷன்ஸ் நீதிபதி எஸ். அப்துல் மாலிக், 16.03.2022 அன்று சென்னையிலுள்ள இலங்கை துணைத் தூதரகத்தில் துணைத்தூதுவர் டொக்டர் டி. வெங்கடேஷ்வரனை நேரில் சந்தித்துப் பேசினார்.



# அரசியல் அரங்கம்

அர்ஜூன்

**'மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இழப்பது அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மைக்கு பெரிய பிரச்சினையாக இருக்கப் போவதில்லை' என்று கைத்தொழில் அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்தார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன காரணமாகவே பங்காளிக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாவதற்கான வாய்ப்புக் கிடைத்தது எனவும் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க குறிப்பிட்டார். எமக்கு வழங்கிய விசேட பேட்டியின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.**



# மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இழப்பது அரசின் ஸ்திரத்தன்மைக்கு பாரிய பாதிப்பில்லை!

## அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க பேட்டி

**கே: விமல் வீரவன்ச மற்றும் உதய கம்பன்பில ஆகியோர் அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டதைத் தொடர்ந்து சர்ச்சை ஏற்பட்டுள்ளது. அவர்களின் அமைச்சுப் பதவிகள் பறிக்கப்படுவதற்குக் காரணம் என்ன?**

பதில்: ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்கு விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் தியாகங்களைச் செய்தனர். அரசியல் கூட்டணிக்குள் கருத்து மோதல்கள் ஏற்படலாம். எவ்வாறாயினும், அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பைப் பாதுகாப்பது மிகவும் முக்கியமானது. கெரவலப்பிட்டி எல்.என்.ஜி மின் உற்பத்தி நிலையம் தொடர்பாக அரசாங்கம் கைச்சாத்திட்ட உடன்படிக்கையை எதிர்த்து எமது அமைச்சரவை அமைச்சர்கள் சிலர் கூட நீதிமன்றத்திற்குச் சென்றனர்.

சில நேரங்களில், அவர்கள் அதை நேர்மையான நோக்கத்துடன் செய்திருக்கலாம். சோசலிச மற்றும் மார்க்சிச கருத்துக்கள் சில அரசாங்க சட்டமியற்றுபவர்களின் மனதில் உள்ளன. ஆனால் முதலில் அவர்கள் சோசலிசத்தின் வீழ்ச்சிக்கான காரணத்தையும் சீனாவும் வியட்நாமும் எவ்வாறு வேகமாக முன்னேறி வருகின்றன என்பதையும் ஆய்வு செய்ய வேண்டும்.

ஐரோப்பாவில் இருந்து வெளிநாட்டு முதலீடுகள் அதிகம் கொண்டுவரப்பட வேண்டும். அப்படித்தான் சீனாவும் வியட்நாமும் தங்கள் பொருளாதாரத்தை வளர்த்தெடுத்தன. வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது அரசியல் இயக்கத்தின் ஊடாக மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் அரசாங்கம் பெற்ற வெற்றியை மேலும் பாதுகாக்கவும் நேர்மையாக முயற்சிக்கலாம். நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என வதந்திகள் பரவிய போது, எரிபொருள் பிரச்சினையும் தலைதூக்கியது. அமைச்சரவையில் இருக்கும் போது, 'இன்னும் இரண்டு நாட்களுக்கு எங்களிடம் எரிபொருள் உள்ளது' என சில அமைச்சர்கள் கூறியதால் மக்கள் பீதியடைந்தனர். முன்னாள் அமைச்சர்களான வீரவன்ச மற்றும் கம்மன்பில ஆகியோர் அமைச்சரவையில் இருந்த போது, அரசாங்கத்தின் செயற்பாடுகளையும் சில அமைச்சர்களின் செயற்பாடுகளையும் கடுமையாக விமர்சித்திருந்தனர்.

அது மாத்திரமன்றி, அவர்கள் அரசுக்கு எதிராக நீதிமன்றத்துக்கும் சென்றனர். இவற்றையெல்லாம் ஜனாதிபதியும் அரசாங்கத்தினரும் அதிகபட்சமாகப் பொறுத்துக் கொண்டனர். முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதியும் அரசாங்கமும் அவ்வளவாக பொறுத்துக் கொள்ளவில்லை. நாட்டின் நிலைமை தொடர்பில் ஊடகங்களுக்கு சுருக்கமான கருத்தை மாத்திரமே அவர் தெரிவித்தார். அவ்வாறான முறையில் அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாது என்ற நிலை வந்தது. அதனால்தான் அவர்கள் அமைச்சர் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டனர்.

**கே: அண்மையில் கூட்டமொன்றைக் கூட்டி தேசியக் கொள்கையொன்றை வெளியிட்ட அரசாங்கத்தின் 11 அங்கத்துவக் கட்சிகளும், அரசாங்கத்திலும் அமைச்சரவையிலும் தமது கருத்தைத் தெரிவிக்க சந்தர்ப்பம் வழங்கப்படாமையால் அந்தத் தெரிவுக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளன. இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்: அரசாங்கத்திற்குள்ளேயே தமது கருத்துக்களை தெரிவிப்பதற்கு அரசியல் கட்சிகளுக்கு சந்தர்ப்பம் கிடைக்காமல் போகலாம். அவர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட வாய்ப்பு அளித்திருந்தால், அது மிகவும் பொருத்தமாக இருந்திருக்கும். ஆனால், அவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படாவிட்டால், வெளியில் கூட்டத்தை நடத்தி, அரசை கடுமையாக விமர்சிக்கக் கூடாது என்பதே அதற்குக் கூறக் கூடிய பதிலாகும். அதற்கான வாய்ப்பைப் பெற அவர்கள் முயற்சி செய்திருக்க வேண்டும். அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 11 கூட்டணிக் கட்சிகளில் ஸ்ரீங்கா சுதந்திரக் கட்சிக்கு 14 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களுக்கு ஓரளவு வாக்கு உள்ளது.

எவ்வாறாயினும், விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பிலவின் கட்சி உறுப்பினர்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிட்டதன் காரணமாக பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டனர். பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரவுக்கும் இது பொருந்தும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கீழ் போட்டியிட சந்தர்ப்பம் வழங்கப்படாவிடின் அவர்கள் பாராளுமன்றத்திற்கு சென்றிருக்க முடியுமா?

**கே: தமது அமைச்சுப் பதவிகளில் இருந்து நீக்கப்பட்ட பின்னர், பாராளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மபில ஆகியோர் அரசாங்கத்திற்கும் நிதியமைச்சருக்கும் எதிராக கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். இது பற்றி நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?**

பதில்: தற்போது அரசில் இருந்து வெளியே வந்துள்ளனர். அவர்கள் இன்னும் ஆட்சியில் இருக்கிறார்களா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. அவர்கள் எதிர்க்கட்சியில் சேரவில்லை. அவர்கள் இன்னும் ஆளும் கட்சியில் இருப்பார்கள் என நம்புகின்றேன். அரசாங்கத்தில் இருந்துகொண்டு ஜனாதிபதி, பிரதமர், நிதியமைச்சர் மற்றும் அரசாங்கத்தை கடுமையாக விமர்சிக்கும் இரண்டு முன்னாள் அமைச்சர்கள் தற்போது எடுத்துள்ள நிலைப்பாடு பாரதூரமான விடயமாகும்.

**கே: விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோரை பதவி நீக்கம் செய்ய எடுக்கப்பட்ட தீர்மானத்தின் காரணமாக பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு அரசாங்கத்தில் இருந்து விலகினால் அது அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துமா?**

பதில்: வீரவன்ச மற்றும் கம்மன்பில ஆகியோரின் அமைச்சுப் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டமையினால் ஏற்பட்டுள்ள நெருக்கடியானது அரசாங்கத்திற்கு சில பாதகங்களை ஏற்படுத்தியுள்ளது. குறைந்த பட்சம், அரசாங்கம் மற்றும் அரசியல் கூட்டணிக்குள் எவ்வாறு செயல்படுவது என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அவர்கள் தங்கள் பொறுப்புக்களிலிருந்து இருந்து நீக்கப்பட்ட பிறகு அரசாங்கத்தை கடுமையாகத் தாக்கினால், அவர்கள் அரசாங்கத்தில் இருப்பது மிகவும் கடினம். எம்.பி.க்கள் குழு அரசாங்கத்தில் இருந்து வெளியேறினால், அது மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இழக்கும்.

2005 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற போது அவருக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இருக்கவில்லை. பின்னர் பெரும்பான்மை கிடைத்தது. சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பதவியேற்கும் போது அவருக்கு பாராளுமன்றத்தில் ஒரேயொரு பெரும்பான்மை ஆசனம் மட்டுமே இருந்தது. இருப்பினும், அவர் இரண்டு முறை ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். எனவே, மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இழப்பது அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மைக்கு பெரிய பிரச்சினையாக இருக்காது.

**கே: எரிபொருள், எரிவாயு மற்றும் மின்வெட்டு காரணமாக மக்கள், தொழிற்சாலைகள், ஹோட்டல்களுக்கு பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த நிலைமைகளை எவ்வாறு சரிசெய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது?**

பதில்: இந்த அரசியல் நெருக்கடியும் எரிபொருள் தட்டுப்பாட்டுக்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகும். இன்னும் சில நாட்களுக்கு பெட்ரோல், டீசல் என்று அவ்வப்போது வதந்திகள் பரவி வந்தன. எரிபொருள் கொள்வனவு செய்வதற்கு டொலர்கள் இல்லை எனவும் கூறப்பட்டது. இதுபோன்ற அறிக்கைகளை வெளியிடும் போது, மக்கள் பீதியடைந்து, தங்களால் இயன்ற அளவு பெட்ரோல், டீசல் இருப்பைப் பேண முயல்கின்றனர். தேவைக்கு அதிகமாக சேமிக்கச் செல்வதாலேயே பிரச்சினை அதிகமாகிறது. இந்தப் பிரச்சினையை விரைவில் தீர்ப்பதற்கு அரசாங்கம் முயற்சிகளை எடுத்துள்ளது.

> **" ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினாலேயே பங்காளிக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எம்.பியாவதற்கு வாய்ப்புக் கிடைத்தது "**




# வியாதியை குணமாக்குவதாயின் கசப்பான மருந்தை நாம் அருந்தியே ஆக வேண்டும்!

கைமருந்தானது எமது கலாசாரத்தின் ஒரு பகுதியாகும். சாதாரணமான நோய்களுக்காக கைமருந்துகளை பயன்படுத்தும் சந்தர்ப்பம் உள்ளது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் அயலவர்கள், அறிந்தவர்கள் அனைவருமே கைமருந்து வைத்தியர்களாக மாறுகிறார்கள். கைமருந்து நல்ல சிகிச்சை என்பதோடு நோய் குணமாகி சாதாரண நிலைக்கு மாறுவதற்கு இடமுண்டு. கைமருந்துகள் பலன் அளிக்காத சந்தர்ப்பத்தில் விசேட சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டிநேரிடும். கைமருந்துகள் பலன் அளிக்காத சந்தர்ப்பத்தில் சந்திக்கும் விசேட வைத்தியர் சரியான முறையில் சிகிச்சை பெறாமல், நோயை மறைத்து வைத்திருந்தது குறித்து எச்சரிக்கை செய்வார். அதன் பின்னரே சிகிச்சையை ஆரம்பிப்பார்.

இலங்கையின் பொருளாதாரமும் சுகவீனம் அடைந்து மற்றும் மோசமான நோய் அறிகுறிகள் பலவற்றை காட்டுவது இரகசியமான விடயமல்ல. கடந்த காலங்களில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் நோயின் தன்மையை அறிந்திருந்தன. நிச்சயமாக நோயை குணப்படுத்துவதாகக் கூறி ஆட்சிக்கு வருகிறார்கள். அதிகாரத்தைப் பெற்ற பின்னர் நோயை மறந்து விடுகிறார்கள்.

பொருளாதாரத்தில் காணப்படும் வியாதியைப் பார்க்கும் போது, பாரதூரமான அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டி யுள்ளது. சமூகத்திற்கு வேதனை அளிக்கக் கூடிய முடிவாகக் காணப்படுவதோடு, மருந்தும் கசப்பானது. இனிப்பான வார்த்தைகளைக் கூறி ஆட்சிக்கு வரும் ஆட்சியாளர்கள் சரியான சிகிச்சையைத் தவிர்க்கிறார்கள். கைமருந்தால் தீர்வுகாண இதுவரை காலமும் முயற்சி செய்தார்கள். சரியான சிகிச்சை அளிப்பதாக காட்டிக் கொண்டாலும் இறுதியில் அதனை கைவிட்டதை சுட்டிக்காட்ட வேண்டும். சரியான சிகிச்சையை அளிக்க தாமதப்படுத்தியது இறுதியில் பொருளாதாரத்தை மோசமான நிலைமைக்கு இட்டுச் சென்றுள்ளது. நோயாளிக்கு மாத்திரமல்ல அதன் பொறுப்பாளருக்கும் இது புரிந்துள்ளது. தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள உக்கிரமான பொருளாதாரப் பிரச்சினைகள் நோயின் தன்மை அதிகரித்துள்ளது என உறுதி செய்யும் காரணியாகும்.

இலங்கையின் பொருளாதாரத்தில் மோசமான இரண்டு நோய்கள் உள்ளன. தேசிய வருமானம் குறைவு ஒன்று. மற்றையது வருமானத்தை விட அதிகமாக செலவு செய்யப்பட்டு வருகிறது. வர்த்தகம்நோயின் மற்றைய பக்கம் எனக் குறிப்பிடலாம். ஏற்றுமதி வருமானத்தை விட, இறக்குமதி செலவு அதிகரித்துள்ளது. வருமானத்துக்கும் மற்றும் செலவுக்கும் இடையேயான இடைவெளியை நிரப்புவதற்கு நாட்டிற்குள் கடன் வாங்க மற்றும் அதனைச் செலுத்த பணத்தை அச்சிடும் அரசாங்கம், வெளிநாட்டு வர்த்தகத்தில் அதாவது ஏற்றுமதி மற்றும் இறக்குமதி இடைவெளியை நிரப்புவதற்காக வர்த்தகக் கடனை பாவிக்கின்றது. உள்நாட்டு வெளிநாட்டு கடன் மற்றும் அதற்கான வட்டி இலங்கையின் பொருளாதார கட்டமைப்பை பலவீனப்படுத்தியுள்ளதோடு பல நாடுகளிலிருந்தும் கிடைக்கும் உதவிகளால் பாதுகாக்கப்பட வேண்டிய நிலைமைக்கு தற்போது தள்ளப்பட்டுள்ளது.

அரசாங்கத்தைப் பொறுப்பேற்கும் ஆட்சியாளர்களுக்கு விதியிலிருந்து தப்புவதற்கு செய்ய வேண்டிய தீவிரமான அறுவைச் சிகிச்சை பற்றிய புரிந்துணர்வு இல்லை. தேர்தலில் வெற்றி பெறும் அவர்கள் பொருளாதாரத்தை மேம்படுத்த செய்ய வேண்டிய சிகிச்சையை புறந்தள்ளி உள்ளதோடு, அவர்களின் கவனம் அடுத்த தேர்தலில் வெற்றி பெரும் தந்திரம் பற்றியே உள்ளது.

அரசாங்கத்தின் நோயைக் காண்பித்து நட்பு நாடுகளிடமிருந்து தற்காலிக மாத்திரைகளை வாங்கி விழுங்கும் பொருளாதாரத்திதற்கு அப்பால், வாழ வைக்கக் கூடிய முறைகளை சிந்திப்பது அவசியமாகும். இன்று முடிவெடுப்பதன் மூலம் எதிர்கால பரம்பரை பாதுகாக்கப்படும் என்பதோடு பாரிய சீர்திருத்தங்களை மேற்கொள்ளா விட்டால் அதன் இழப்பை அனுபவிக்கப் போவது எமது பிள்ளைகள் என்பதை மறந்து விடக் கூடாது.

வருமானத்தை அதிகரிக்க வேண்டியுள்ளது. தேசிய வருமானம் அதிகரிக்க இரண்டு உபாயங்கள் உள்ளன. ஒன்று வீண் செலவுகள் மற்றும் அநாவசியமான நிவாரணங்களை மிகவும் குறைத்து இடைவெளியை நிரப்புவதற்காக வரியை அதிகரிக்க வேண்டி நேரிடும்.அவ்வாறு அதிகரிக்காமல் நடத்திச் செல்வதற்கு மென்மேலும் கைத்தொழில்கள் மற்றும் திட்டங்களை ஆரம்பிக்க சந்தர்ப்பங்கள் அளிக்க வேண்டும். உள்ளூர், வெளியூர் முதலீடுகளை அதிகரித்தால் அதன் மூலம் பெறப்படும் வருமானம் நன்மையாகும். வெளிநாட்டு சொத்துக்களை பலப்படுத்துவது இன்னுமொரு மூலோபாயமாகும். ஏற்றுமதிக்கான ஆர்வம் இங்கு மிகவும் முக்கியமாகும்.

ஏற்றுமதி செய்யக் கூடிய பொருத்தமானவற்றை நாட்டில் உற்பத்தி செய்ய வேண்டும். பாரிய அளவில், போட்டி விலைக்கு உயர்ந்த தரத்தில் உற்பத்திகளை மேற்கொள்ளக் கூடிய சூழலை ஏற்படுத்தினால் ஏற்றுமதி வருமானத்தை வலுவடையச் செய்யலாம். சிறிய நாடொன்றினால் பாரிய அளவில் உலக சந்தைக்கு பொருத்தமானவற்றை உற்பத்தி செய்வது இலகுவான காரியமல்ல. தேவையான உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பத்துக்கு பெருமளவு முதலீடு அவசியமாகும். சிங்கப்பூர் போன்ற நாடுகள் சர்வதேச முதலீடுகளின் மூலமே அதனை வெற்றி கொண்டுள்ளன.

வருமானத்தை அதிகரிக்கும் அந்நிய செலாவணியை சம்பாதிக்கும் முறை பற்றி முடிவுகளை எடுக்க வேண்டும். இந்தியா, சீனா அல்லது வேறொரு நாட்டிலிருந்து கிடைக்கும் சலுகைகளை மீண்டும் செலுத்த வேண்டும். நாணய நிதியம் மூலம் கிடைக்கும் கடன் கையிருப்பை கூட திரும்பச் செலுத்த வேண்டும். எமக்குள்ள நோய்வாய்ப்பட்ட பொருளாதாரத்துக்கு வேறு நாடுகளின் சிகிச்சை பொருத்தமற்றது. எமக்குத்தான் சத்திர சிகிச்சை அளிக்க வேண்டியுள்ளதோடு கசப்பான மருந்தை நாம் அனைவருமே அருந்த வேண்டியுள்ளது. ஆட்சியாளர்கள் மீது குற்றம் சுமத்தும் வேளையில், அரசியல் மேடையில் இனிமையான வார்த்தைகளை கூறுவோரை மீண்டுமொருமுறை நியமிப்பது செய்யக் கூடாத வைத்தியமாகும்.

தமிழில்: வீ.ஆர்.வயலட்

# அரசாங்கத்தை விமர்சிப்பதே இந்த இருவரினதும் வேலை

## சுமந்திரன், சாணக்கியன் குறித்து பிள்ளையான்

கண்முன்னே இடம்பெற்ற அழிவுகளுக்கு நியாயம் கேட்க வேண்டியவர்களே பக்கச்சார்பாக இருந்து அரசாங்கத்தின் மீது பழியை சுமத்துகின்றமை வேதனையான விடயமென மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட ஊரணி சந்தியிலிருந்து திருப்பெருந்துறை வரையில் அமைக்கப்பட்டுள்ள பொது மக்களுக்கான நடைபாதை மற்றும் பூங்கா என்பனவற்றின் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்தான் இந்த நாட்டை அதளபாதாளத்துக்கு இட்டுச்சென்றது. அந்த இழப்புகளை ஏற்படுத்தியவர்களுடன் இணைந்து இன்று சுமந்திரனும் சாணக்கியனும் கையெழுத்துப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். எனினும் அரசாங்கம் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது.

அரசியல் ரீதியான முரண்பாடுகள், கொள்கைப் பிரச்சினைகள் இருந்தாலும் மக்கள் வாக்களித்தனர் என்ற அடிப்படையில் மக்களுக்கான தேவையை நிறைவேற்றுவதில் பின்னிற்கும் அவசியம் கிடையாது. அந்த அடிப்படையில் நாங்கள் தொடர்ந்தும் மக்களுக்காக பணியாற்றுவோம்.

இந்த அரசாங்கம் தோல்வியடைந்ததாக தெரிவிக்கப்படுகின்ற போதிலும் இந்த அரசாங்கம் தோல்வியடையவில்லை, தோல்வியடையப் போவதுமில்லை. இது பெரும்பான்மை பலத்துடன் இருக்கும் அரசாங்கம்.

இந்த பாராளுமன்ற காலம் முடியும் வரைக்கும் இந்த அரசாங்கம் பயணிக்கும்.



அது மட்டுமன்றி மட்டக்களப்பில் இடம்பெற்ற ஈஸ்டர் குண்டுவெடிப்பு. காத்தான்குடியில் ஆரம்பித்த மத பயங்கரவாதம் காரணமாகத்தான் அதிகூடிய பாதாளத்திற்கு எமது பொருளாதாரத்தை இட்டுச்சென்றது.

இந்த குண்டுவெடிப்பு மட்டக்களப்பு நகரிலும் 32மேற்பட்ட உயிர்களை காவுகொண்டதுடன் 100க்கு மேற்பட்ட காயமடைந்தோரையும் ஏற்படுத்தியது.

இதற்கு காரணமாகயிருந்தவர்கள், வவுணதீவில் பொலிஸாரைக் கொன்றவர்கள், கடந்த காலத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தினால் நாங்கள் அனுபவித்தபோது அதனைக் கண்டும் காணாதவர்கள் போலிருந்தவர்கள் இன்று அந்த இழப்புகளையும் அழிவுகளையும் ஏற்படுத்தியவர்களுடன் இணைந்து சுமந்திரனும் சாணக்கியனும் கையெழுத்து போராட்டம் நடத்தும் சூழ்நிலையில் தான் இன்று அரசாங்கம் பல்வேறுபட்ட பணிகளை இங்கு முன்னெடுத்து வருகின்றது.

அரசியலில் போட்டிகள், பொறாமைகள், கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் அழிவுகளுக்கு நியாயம் கேட்க வேண்டியவர்களே அதனை மறந்து ஒரு பக்கச் சார்பாக, அரசாங்கத்தின் மீது பழியை சுமத்த நினைப்பது வேதனையான விடயமாகுமென்றும் அவர் தெரிவித்தார்.

# தவக்கால சிந்தனை



## இறை உறவை புதுப்பிப்போம்

வருடம்தோரும் தவக்காலம் வந்து செல்கிறது. ஒவ்வொரு ஆண்டும் நாம் நம்முடைய தவ முயற்சிகளை அதிகப் படுத்துகின்றோம், திருப்பயணங்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்துகின்றோம்.

ஆனால், கடவுளுக்கும் நமக்கும் இடையிலான அந்த உறவின் இடைவெளி மட்டும் அப்படியே இருக்கிறது. ஏன் இந்த நிலை?

நாம் நம்முடைய தவறை உணர்ந்து மனம் வருந்துவது இல்லை. எனவே தான் இறைவனோடுள்ள உறவின் விரிசல் அப்படியே இருந்துகொண்டிருக்கிறது. ஊதாரி மைந்தன் உவமையில் இளைய மகன் தந்தையின் சொத்தில் பங்கை வாங்கிக்கொண்டு மனப்போன போக்கிலே வாழ்கிறான். இறுதியிலே அனைத்தையும் இழந்த பின்பு அவன் தந்தையிடம் வருகிறான். அவன் தந்தையிடம் வரும்போது, எப்படிப்பட்ட மனநிலையில் வருகிறான் என்றால், தன்னுடைய தவறுகளுக்காக உண்மையிலேயே மனம் நொந்து வேதனைப்படுகிறான்.

அவன் தன் தந்தையைப் பார்த்து " அப்பா கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன். இனி நான் உம்முடைய மகன் என அழைக்கப்பட தகுதியற்றவன்" என்று சொல்லுகிறான்.

இந்த மனநிலைதான் அவனுக்கும் தந்தைக்கும் இடையிலான அந்த உறவு விரிசலை நீக்கியது. தந்தைக்கும் மகனுக்கும் இடையே புதிதாக ஒரு உறவுப்பரிமாணத்தை ஏற்படுத்தியது. ஊதாரி மைந்தனிடம் இருந்த மனநிலை நம்மிடம் இருப்பதில்லை. நாம் நம்முடைய தவறை, நம்முடைய பாவங்களை உணர்ந்து ஏற்றுக்கொள்வதில்லை. இந்த நிலை வரும்போது நம்மாலும் இறைவனோடுள்ள உறவை புதுப்பித்துக்கொள்ள முடியும்.

அருட்தந்தை அருண்ரெக்ஸ்...

# ரயில் கட்டணங்கள் நாளை முடிவு

## அமைச்சர் திலும் அமுனுகம தெரிவிப்பு




ரயில் கட்டணம் தொடர்பில் தீர்மானிக்கும் குழுவின் அறிக்கை, தமக்கு கிடைத்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார். இந்த அறிக்கை நேற்று முன்தினம் அமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ரயில்வே திணைக்கள பொது முகாமையாளர் உள்ளிட்டோர் இந்தக் குழுவில் அடங்கியுள்ளனர். அதன் அறிக்கை தொடர்பான கலந்துரையாடல், நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இதேவேளை, எரிபொருள் விலை அதிகரித்துள்ளதையடுத்து ரயில் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக ரயில்வே திணைக்களமும் தெரிவித்துள்ளது.

ரயில் கட்டணங்களை அதிகரிப்பது தொடர்பில் ரயில்வே தொழிற் சங்கங்களுக்கும் போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகமவுக்குமிடையில் நாளை திங்கட்கிழமை விசேட பேச்சுவார்த்தை ஒன்று நடைபெறவுள்ளதாக ரயில்வே நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

# தென்மாகாண தமிழ் கல்விக்கு உரமூட்டிய எம்.ஜே.முஹம்மது' நூல் வெளியீட்டு விழா இன்று



'தென்மாகாண தமிழ் கல்விக்கு உரமூட்டிய எம்.ஜே.முஹம்மது' நூல் வெளியீட்டு விழா இன்று (20) காலை 8.30 மணிக்கு மீயெல்ல அல்மினா மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெறும். நிஸார் பவுண்டேசன் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த விழாவில் எம்.என். எம். நஜீப்தீன் பிரதம அதிதியாக கலந்து கொள்வதோடு விசேட அதிதியாக கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.எம்.ஆகில் கலந்து கொள்கிறார். எம்.என்.எம். ஆசிக் வரவேற்புரையாற்ற உள்ள அதே வேளை ஆசிரிய ஆலோசகர் எம்.எஸ்.எம். ஹிசாம் நூல் விமர்சனம் செய்கிறார். பாடசாலை அதிபர் எம்.வை.எம். நவாஸ் சிறப்புரையாற்றுவார்.

தென்மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளராக எம்.ஜே.எம். முஹம்மது நீண்டகாலம் பணியாற்றியுள்ளதோடு அவர் தொடர்பான இந்த நூலை மர்ஹூம் ஹபீபுர் ரஹ்மான் எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது.

பாஹிம்

# கொழும்பு பெரிய பள்ளிவாசல் வருடாந்த பிறை; விழிப்புணர்வு மாநாடு இன்று

பேருவளை விசேட நிருபர்

கொழும்பு பெரிய பள்ளிவாசலில் வருடாந்த பிறை விழிப்புணர்வு மாநாடு இன்று 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் பி.ப 1.30 மணிவரை நடைபெறும்.

இதனை கொழும்பு, பெரியபள்ளிவாசல் பிறைக்குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கொழும்பு பெரிய பள்ளிவாசல் நிர்வாக சபை தலைவர் அதன் உறுப்பினர்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ளனர்.

கொழும்பு பெரியபள்ளிவாசல் பிறைக்குழுத் தலைவர் கலீஃபதுஷ் ஷாதுலி மௌலவி எம்.பி.எம் ஹிஷாம் (பதாஹி) தலைமை உரை நிகழ்த்துவார்.

ஹிஜ்ரி 1443 ரமழான் மற்றும் ஷவ்வால் மாதங்களுக்குண்டான தலைப்பிறைகளின் வானியல் கணிப்பீடுகள் என்ற தலைப்பில் மௌலவி எம்.ஆர் அப்துர் ரஹ்மானும், பிறை பார்த்தல் முக்கியத்துவம் என்ற தலைப்பில் மௌலவி எச் அப்துல் நாஸர் (ரஹ்மானி) யும் தலைப்பிறையை தீர்மானிப்பதில் சாட்சியத்தின் வகிபாகம் என்ற தலைப்பில் மௌலவி சீ.ஐ.எம் அஸ்மீர் (ஹஸனி) யும் மௌலவி எ.எச்.எ சுஹைப் (ஹஸனி) கொழும்பு, பெரியபள்ளிவாசல் பிறைக்குழுவின் கடந்தகால நினைவுகள் என்ற தலைப்பிலும் உரைநிகழ்த்துவர்.

கொழும்பு, பெரியபள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் எம். தௌபீக் ஸுபைர் நன்றி உரை நிகழ்த்துவார். மௌலவி எம்.எம் அஹமெட் ஷாஹ் (ஜமாலி பயாஸி) துவாப் பிரார்த்தனை நிகழ்த்துவார். மௌலவி அஹமட் (மஹலரி) நிகழ்ச்சிகளை ஒருங்கிணைக்கவுள்ளார்.

## அனுமதி கோரும்...

கோரிக்கை விடுத்துள்ளது.

மின்சாரம் மற்றும் எரிபொருள் நெருக்கடி காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதால், உரிய நேரத்துக்கு பணிக்கு செல்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அரச ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே கைரேகை பதிவு இயந்திரத்தைப் பயன்படுத்தும்போது, தாமதமாக வருபவர்களுக்கு சலுகை வழங்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பதாக அச்சங்கத்தின் பொதுச் செயலாளர் அஜித் கே.திலகரத்ன தெரிவித்துள்ளார்.

## IMF செல்வதே பொருத்தமானது...

முன் வைத்துள்ளதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், தற்போதைய நிலைமையில் விருப்பம், விருப்பமின்மை எவ்வாறாயினும் சர்வதேச நாணய நிதியத்திற்கு செய்வதற்கான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நிலவும் நெருக்கடி நிலைக்குத் தீர்வு காண்பதற்காக மூன்றாவது தரப்பின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் நாட்டுக்கு கிடைக்கவுள்ள நன்மைகள் மற்றும் நட்டங்கள் தொடர்பில் விரிவாக கண்காணித்து அதற்கிணங்கவே பேச்சுவார்த்தை நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார். அது தொடர்பில் தாம் தெளிவான நிலைப்பாட்டில் உள்ளதாக நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி தெரிவித்திருந்தார் என்பதையும் மத்திய வங்கி ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்வாறில்லாவிட்டால் தற்போதைய மிகவும் நெருக்கடி நிலைமை மேலும் உக்கிரமடைய வாய்ப்பு உண்டு என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில் எட்டு யோசனைகளைக் கொண்ட மகஜரை அரசாங்கத்திடம் கையளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.:

## அமைச்சர் டக்ளஸுக்கு கொரோனா...

மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் அமைச்சருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில் மஹிந்த ராஜபக்‌ஷவின் நாகவிகாரை விஜயத்தின் போது அமைச்சர் பங்கேற்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

## டிஜிட்டல் முறையில்...

காரணமாக அச்சிடுவதற்குத் தேவையான காகிதங்களை இறக்குமதி செய்ய நிறுவனங்கள் பல சிரமங்களை எதிர்கொள்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளாக நீர்க் கட்டணம் அதிகரிக்கப்படவில்லை என்பதனால் தற்போது அந்தத் தீர்மானம் தொடர்பில் பரிசீலனையை மேற்கொள்ளவும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை முடிவு செய்துள்ளது.

## ரூ. 2,000 நட்டத்திலேயே...

லிட்ரோ பாதுகாப்பு தேசிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

தற்போது 12.5 நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு 2,675 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. எனினும் இதற்காக லிட்ரோ நிறுவனத்திற்கு 4,662 ரூபா செலவாகுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை நீண்ட நாட்களாக நாட்டில் நிலவிய எரிவாயு தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக நேற்று முதல் சமையல் எரிவாயு விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

நேற்று மட்டும் சுமார் ஒரு இலட்சத்து 20,000 சமையல் எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அத்துடன் நாளை திங்கட்கிழமை 3,500 மெற்றிக் தொன் எரிவாயு அடங்கிய கப்பலொன்று நாட்டை வந்தடையவுள்ளது.

## அமெரிக்க அரசியல் ...

இந்திய பசுபிக் கூட்டமைப்புக்கு அர்ப்பணிப்பு வழங்கும் நோக்கிலும் ஒத்துழைப்பு வழங்கும் நோக்கிலும் இந்த விஜயம் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் பங்களாதேஷ், இலங்கை மற்றும் புதுடெல்லியிலுள்ள வெளியுறவு தரப்பினருடன் ஆலோசனைகளை மேற்கொள்வார்.

இந்த விஜயங்களின்போது, அவர் தலைமையிலான தூதுக்குழு, சிவில் சமூகம் மற்றும் வர்த்தக தலைவர்களையும் சந்தித்து பொருளாதாரக் கூட்டாண்மைகளை மேலும் வலுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமென அமெரிக்க இராஜாங்க திணைக்களம் அறிவித்துள்ளது.

## போராட்டங்கள், கூட்டங்களில்...

அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

கொவிட்19 தொற்றுக்குள்ளானோரில் 57 பேர் அதிதீவிர சிகிச்சை பிரிவில் இன்னமும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். முன்னரை விட தற்போது கொவிட்19 தொற்று நிலைமை தீவிரமாக இல்லாத போதிலும் , முழுமையாகக் குறைவடையவில்லை.

தொற்றுக்கான புதிய பிறழ்வுகள் தோற்றம் பெறக்கூடிய வாய்ப்புக்களும் உள்ளன.

எனவே அடிப்படை சுகாதார விதிமுறைகளை பின்பற்றி அனைவரும் பாதுகாப்பாக செயற்பட வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## இலங்கை மீதான...

இந்தியா எந்த நிபந்தனைகளையும் விதிக்கவில்லையென தெரிவித்துள்ள நிதியமைச்சர், மூன்று வருட தவணை முறையில் இலங்கை இதனைத் திருப்பி செலுத்தவேண்டுமென தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் பிரச்சினைகள் இந்த கடனுதவி மூலம் தீர்க்கப்படுமா? என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், மக்களின் பிரதிநிதிகள் வர்த்தக சமூகத்தினர் அனைவரும் இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்காக ஒன்றுபடவேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

கடனுதவி மூலம் மக்களுக்கு கிடைக்ககூடிய நன்மைகள் சென்றடைவதை அதிகாரிகள் உறுதி செய்யவேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மண்ணெண்ணெய் வரிசைகள், எரிபொருள் வரிசைகள் இன்னமும் முடிவுக்கு வராததை நான் அவதானித்துள்ளேன் என்று தெரிவித்த நிதியமைச்சர், பொதுமக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர் என்பது தெளிவாகின்றதெனவும் தெரிவித்துள்ளார்.

சில பொருட்கள் விநியோகம் தாமதமானலும் பொருட்கள் வழங்குவதற்கான உத்தரவை அமைச்சர்கள் வேகமாகவிடுவார்கள் எனவும் பசில் ராஜபக்‌ஷ தெரிவித்துள்ளார்.

சீனாவிடம் வாங்கிய கடன்களை இலங்கை எப்போதாவது திருப்பி செலுத்துமா? என்ற கேள்விக்கு, நாங்கள் திருப்பி செலுத்துவோமென அவர் பதிலளித்தார்.

## தேவையான அளவு எரிபொருளை

காரணமாகவே எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசையில் மக்கள் காத்திருக்கின்றனர் என்று குறிப்பிட்டார்.

இருப்பினும் எதிர்வரும் இரண்டு நாட்களில் இந்த நிலை சரிசெய்யப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனத் திடமிருந்து, கொள்கலன்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றைக் கொண்டு செல்லும் தாங்கி ஊர்திகளுக்கான எரிபொருள் இன்மையால், எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருளை விநியோகிக்கும் பணிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

அகில இலங்கை கனியவள தனியார் தாங்கி ஊர்தி உரிமையாளர்கள் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

இது குறித்து, இலங்கைக் கனியவள மொத்த களஞ்சிய முனையத்துக்கு அறியப்படுத்தியமையையடுத்து அதற்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளதாக அந்த சங்கத்தின் செயலாளர் சாந்த சில்வா தெரிவித்துள்ளார்.

கொலன்னாவை களஞ்சியசாலையிலிருந்து அவர்களுக்கு எரிபொருளை வழங்குவதற்கு கனியவள கூட்டுத்தாபனம் இணங்கியுள்ளது.

இவ்வாறான பின்னணியில் நேற்றும் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். பல எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

# எங்கள் கருத்து...

## ஆர்ப்பாட்டங்கள் மூலமாக சாதிக்கப்போவது என்ன?

இந்நிலையில் இலங்கை போன்ற வளர்ந்து வரும் நாடுகள் இவற்றுக்கு முகம் கொடுப்பதென்பது உண்மையிலேயே ஒரு சவாலாகவே அமையும். அவ்வாறு இருந்தும் இன்றைய அரசாங்கம் தன்னாலான முயற்சிகளை மக்களுக்காக எடுத்து வருகின்றது. இதுவே இன்று பத்து பிரிவுகளாக இயங்கி வருகின்ற எதிர்க்கட்சி ஆட்சியில் இருந்திருந்தால் மக்கள் சொல்லொணாத் துயரத்தை அடைந்திருப்பார்கள். அது தெரிந்தும் நாட்டு மக்களை திசைதிருப்பி அவர்கள் அரசாங்கத்துக்கு எதிராக செயல்படும் விதம் அருவருக்கத்தக்கது.

இதனை நன்கு புரிந்து கொண்டிருந்தும் மக்கள் அவர்களது ஏவலுக்கு செவி சாய்ப்பது உண்மையில் வருத்தம் தருகின்ற செயற்பாடாகும்.

எனவே நாட்டு மக்கள் இன்றைய உண்மையான உலக நடப்பு நிலை உணர்ந்து அரசாங்கம் செய்து வருகின்ற மக்கள் நலன்சார் பணிகளுக்கு தமது ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும். இன்று எதிரணியில் இருந்து கூச்சல் போடும் அரசியல் தலைமைகள் பலரும் கடந்த ஐந்து வருடகால நல்லாட்சி அரசாங்கத்தில் எதனையுமே செய்யாது தோல்வியடைந்த அரசாங்கமாக வெளியேறி சென்றவர்களே என்பதை அவர்களும், அவர்களுக்காக தமது நேரத்தையும், பணத்தையும் வீணாக விரயம் செய்து செலவிட்டு ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்வோர் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதே எமது கருத்தாகும்.

## இந்திய பொருட்களை விடுவிக்க...

இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதற்குத் தேவையான நிதியை பெற்றுக் கொடுப்பதற்கு நிதியமைச்சு மற்றும் வர்த்தக அமைச்சுக்கள் தீர்மானித்துள்ளதுடன் அது தொடர்பில் தமது சங்கத்துக்கு அறிவித்துள்ளதாகவும் அந்த சங்கத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள அத்தியாவசியப் பொருட்களுக்கு முன்னுரிமையளிக்க உள்ளதாக அந்த சங்கத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அதன்படி அரிசி, சீனி, பெரிய வெங்காயம், செத்தல் மிளகாய், கடலை, பருப்பு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் இந்திய அரசாங்கத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள கடன் உதவியின் மூலம் துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை துறைமுகத்தில் தேங்கியுள்ள அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய கொள்கலன்களை விடுவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தியுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.(ஸ)

## ஜனாதிபதி தலைமையில் புதனன்று...

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் கலந்து கொள்ள உள்ளதாக தெரிவித்துள்ளன.

அதேவேளை மேற்படி சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்வதில்லை என்ற முடிவை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

எனினும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பத்துக் கட்சிகளின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான அத்துரலிய ரதன தேரர் மற்றும் பேராசிரியர் திஸ்ஸ விதாரண ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாக அந்த கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இந்த மாநாட்டில் பங்கேற்கும் என அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

சர்வகட்சி மாநாடு எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமை நடைபெற உள்ள நிலையில் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சிகளுக்கும் ஜனாதிபதி செயலகம் அதற்கான அழைப்பை எழுத்து மூலமாக விடுத்துள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசாங்கம் சர்வகட்சி மாநாடு என்ற பெயரில் கட்சிகளை ஒன்றுகூட்டி பேச்சுவார்த்தை நடத்துவது நேர்மையான நோக்கத்துடன் அல்ல என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மற்றும் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச,உதய கம்மன்பில ஆகியோர் தெரிவிப்பதுடன் தாம் அந்த மாநாட்டில் கலந்து கொள்வதில்லை எனத் தெரிவித்துள்ளனர். (ஸ)

# பௌத்தத்தை தமிழ், சிங்களம் என பிரித்துப் பார்க்கலாமா?

## முரண்பாடுகளின்றி குருந்துமலை விவகாரம் தீர்க்கப்பட வேண்டும்!

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள குருந்துமலை பகுதி தொடர்பில் பல்வேறு சர்ச்சைகள் மற்றும் வாத விவாதங்கள் நடைபெற்று வரும் நிலையில் கொழும்பிலுள்ள பௌத்தாலோக பவுண்டேசன் என்ற அமைப்பு குருந்துமலை தாது கோபுரத்தின் புனரமைப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

வரலாற்றுப் புகழ்மிக்க தொல்பொருள் பிரதேசமான குருந்துமலை பகுதியின் தற்போதைய நிலைமையை நேரில் கண்டறியும் வகையில் கொழும்பிலிருந்து ஊடகவியலாளர்கள் குழுவொன்றை மேற்படி பௌத்தாலோக பவுண்டேஷன் அமைப்பினர் முல்லைத்தீவுக்கு அழைத்துச் சென்றனர்.

தொல்பொருள் பிரதேசமாக குருந்து மலைப் பிரதேசம் விளங்குகிறது. எனினும் இது பௌத்தர்களுக்கு சொந்தமான தா? அல்லது இந்துக்களுக்கு சொந்தமானதா? என்ற சர்ச்சையும் வாதப் பிரதிவாதங்களும் இன்றைக்கும் நீடித்து வருகிறது. எனினும் இரண்டு மதத்தவர்கள் மட்டுமன்றி அனைத்து மக்களும் வந்து போகக் கூடிய தொல்பொருள் இடமாகவும் இது விளங்குகிறது.





குருந்துமலையின் தாதுகோபுரம் மன்னர் காலத்தில் நிர்மாணிக்கப்பட்டது என்பதற்கு சான்றாக அதன் அனைத்து கட்டட நிர்மாண அமைப்புகளும் அக்காலத்து கட்டடக் கலையை பின்பற்றியதாக அமைந்துள்ளது. தாதுகோபுரம் 'கபுக்கல்' என்ற மண் கற்களால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது என்கின்றனர் தொல்லியல் துறையின் புனர்நிர்மாணம் அல்லது மீள் நிர்மாணப்பணிகள் பெரும்பாலும் சிதைவுற்றுள்ள அந்த கற்களை பயன்படுத்தியே மேற்கொள்ளப்பட்டு வருவதை காணமுடிந்தது. நிர்மாணப் பணிகளில் பெருமளவிலானோர் பங்கேற்றுள்ளதுடன் இராணுவத்தினர் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினரும் அதில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதை அவதானித்தோம். ஒரு மீள் நிர்மாணப் பணியில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்ற கேள்வியும் எழவே செய்கிறது. எதிர்த்தரப்பின் வாயை மூடச் செய்வதற்காகவா? என்று ஒருவர் கேள்வி எழுப்பவும் செய்தார்.

இந்த வருடத்தின் பொசன் பண்டிகைக்கு முன்னர் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்ய முடியும் என நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் கூறுகின்றனர். அதாவது ஜூன் மாதத்துக்கு முன்னர் ஊடகவியலாளர்களோடு தொல்பொருள் அதிகாரி கபில சேனாதீர, பௌத்தாலோக பவுண்டேஷன் அமைப்பின் ஊடகச் செயலாளர் மகேஷ் சேனாதீரவும் இப் பயணத்தில் இணைந்துகொண்டனர்.

நிர்மாணப் பணிகள் மற்றும் அங்குள்ள தொல்பொருள் முக்கியத்துவம் தொடர்பில் இருவரும் தெளிவுபடுத்தியதுடன் குருந்துமலை தாது கோபுரம் மற்றும் அதனை அண்டிய தொல்பொருள் பிரதேச பகுதிகளுக்கும் அவர்கள் எங்களை அழைத்துச் சென்றனர்.

வவுனியா பிரதேச தொல்பொருள்அலுவலகத்தின் தொழில்நுட்ப அதிகாரியும் குருந்துமலை புனரமைப்பு திட்டத்திற்குப் பொறுப்பான அதிகாரியுமான கபில சேனாதீரவோடு நாம் உரையாடியபோது அவர் சில விஷயங்களைத் தொட்டுப் பேசினார்.

குருந்துமலை பகுதியில் அகழ்வுப் பணிகளை கடந்த வருடம் செப்டம்பர் 22ஆம் திகதிதான் ஆரம்பித்தோம். தற்போது குருந்துமலை தாது கோபுர புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டு

மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

புனரமைப்பு பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. இந்த தாது கோபுரத்தின் முழுமையான உயரம் 35 அடிகளாகும். ஏற்கனவே இந்த தாதுகோபுரம் எவ்வாறு நிர்மாணிக்கப்பட்டிருந்ததோ அதில் எந்த வித்தியாசமும் ஏற்படாமல் அதேபோன்று இதனை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கான காணி விஸ்தீரணம் 25 ஏக்கராக உள்ள நிலையில் இதனை அண்டிய குருந்துமலை வனப்பகுதி சுமார் 400 ஏக்கர்களைக் கொண்டுள்ளது.

இந்த புனரமைப்பு திட்டத்தில் தொல்பொருள் தரப்பு அதிகாரிகள் ஐந்து பேர் பணிபுரிகின்றனர். நிர்மாணப் பணிகளுக்கு நிதி உதவி வழங்கும் ஜகத் சுமதி பாலவின் அதிகாரிகளும் உள்ளனர்.

அதனைவிட இராணுவத்தினர் மற்றும் சிவில் பாதுகாப்பு படையினரின் ஒத்துழைப்புக்களும் எமக்குக் கிடைக்கின்றன.

புனரமைப்புக்கான அகழ்வின்போது சில பொருட்கள் எமக்கு கிடைத்தன. யானையின் முகம் போன்ற சிலைகளும் காணப்பட்டன. அத்துடன் இது பௌத்த வழிபாட்டு தலம் என்பதற்கான சில புராதனப்பொருட்களும் கிடைத்துள்ளன.இதனை அண்டிய பகுதிகளில் பாரிய கட்டடங்கள் இருந்ததற்கான சிதைவு ஆதாரங்கள் கிடைத்துள்ளன. எனினும் அதை வைத்து எவ்வளவு மக்கள் இங்கு அக்காலப்பகுதியில் வசித்திருக்கக் கூடும் என்பதை அனுமானிக்க முடியாது.

இதனை அண்டியதாக குருந்துமலை குளம் தண்ணிமுறிப்பு குளம் ஆகியன காணப்படுகின்றன.நாக தீபவுக்கு அடுத்தபடியாக இந்த இடம் ஒரு வழிபாட்டு தலமாக இருந்துள்ளது. அனுராதபுர வரலாற்றிலும் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

புராதன எழுத்துச் சுவடிகள் காணப்பட்டன. அதில் மத்திய கால சிங்கள எழுத்துக்களை ஒத்ததான எழுத்துக்கள் கல்லில் பொறிக்கப்பட்டுள்ளன. அவை 1700 வருடங்களுக்கு முற்பட்டவை என குறிப்பிட முடியும். அவை நான்காவது உதய மன்னனுடையதாகும். கிறிஸ்து வருடம் 946954 காலத்தை அது குறிக்கின்றது மகாவம்சத்தின் பிரகாரம் விஜயன் இலங்கை வந்து திருமணம் செய்து ஒரு புதிய சமூகத்தை உருவாக்கியபோதே சிங்கள மொழியும் படிப்படியாகத் தோன்றியிருக்க முடியும். கி.பி. 946 காலத்தல் அம்மொழி எவ்வளவு தூரத்துக்கு வசனங்களை எழுதும் அளவுக்கு வளர்ச்சி கண்டிருக்குமா? என்ற கேள்வியும் உள்ளது என்றார் அவர்.

குருந்துமலை தொல்பொருள் பிரதேசத்திற்கு ஒரு நீண்ட வரலாறு உள்ளது. அது இந்து, பௌத்த மதங்கள் மற்றும் மன்னர்களை அடிப்படையாகக் கொண்டவை. அசோக மன்னன் தேவ நம்பிய தீசன் உள்ளிட்ட மன்னர்கள் அதனோடு சம்பந்தப்படுகின்றார்கள்.

இத் தாதுகோபுரத்துக்கு வருவோமானால் (கி.மு. 571604)ல் முதலாவது அக்கபோ மன்னனால் அமைக்கப்பட்டதாகவும் நான்காவது அக்கபோ (கி.மு 667 683)மன்னரின் காலத்தில் அது முறையாக ஸ்தாபிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எனினும் மகாவம்சத்தில் முதலாவது விஜயபாகு மன்னன் காலத்தில் (10551110) அது ஸ்தாபிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (மகாவம்சம் 1963: 41,16)

குருந்துமலை அடிவாரத்திலுள்ள குருந்துமலை குளம் அங்கு நிலவிய தண்ணீர் பிரச்சினையை தீர்ப்பதற்காக மூன்றாவது மகிந்த மன்னன் அவரது மனைவி மற்றும் மகளுடன் அப் பிரதேசத்திற்கு வருகை தந்ததன் பின்னர் அமைக்கப்பட்டதாகவும் அது தொடர்பான கல்வெட்டு பற்றி 1905 தொல்பொருள் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாம் இதுவரை கிடைக்கவில்லை.

எனினும் இந்த பகுதியில் சிதைந்த நிலையில் மேலும் ஒரு கல்பட்டு கிடைத்திருப்பதாக தொல்பொருள் அதிகாரி கூறுகிறார்.

மகிந்த தேரின் காலத்திற்கு முன்னரே குருந்துமலையில். விகாரைகள் தொகுதி அமைந்திருந்த தடயங்கள் உள்ளதாகவும் அங்கு பௌத்த பிக்குகள் நூற்றுக்கணக்கில் வருகை தந்து வாழ்ந்ததற்கான சான்றுகள் காணப்படுவதாகவும் அவர் கூறுகிறார்.

என்னும் இடைப்பட்ட காலத்தில் இந்து பக்தர்கள் அதனை கோவிலாக உபயோகித்து வழிபாடுகளை மேற்கொண்டதற்கான தடயங்களும் அங்கு காணப்படுகின்றன என்பது அவர் கூறும் முக்கிய விடயம்.

யுத்த காலத்தில் முல்லைத்தீவு பகுதியை விடுதலைப் புலிகள் வசப்படுத்திக் கொண்டிருந்த போது இந்த பிரதேசத்தில் புதையல் தோண்டப்பட்டிருக்கலாம் என்பதை ருசுப்படுத்தும் வகையில் ஆழக் குழிகள் காணப்படுகின்றன.











சிலவேளை மேற்படி விகாரைக்கு அசோக மன்னனின் அனுசரணை கிடைத்திருக்கலாம் எனவும் கற்பனைகள் நிலவுகின்றன. அதேவேளை அவரை நினைவு கூரும் வகையில் இந்த விகாரை நிர்மாணிக்கப் பட்டதாகவும் கற்பனைகள் நிலவுகின்றன.

அசோக மன்னன் புத்த காயா, தென்னிந்தியா மற்றும் அவற்றை அண்டிய பகுதிகளில் விகாரைகளை நிர்மாணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எனவே தென்னிந்தியாவுடன் இந்த புனித பிரதேசத்திற்கு நெருங்கிய தொடர்புகள் இருந்திருக்கக் கூடும். என்பதையும் அந்தத் தொல்பொருள் அதிகாரி சுட்டிக்காட்டினார்.

இன்னொரு விசேஷம் என்னவென்றால், கபோக் கற்களைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப் பட்டுள்ள தாதுகோபுரம் இலங்கையில் குருந்து மலையில் மட்டுமே உள்ளது என்பதாகும். இவ்வாறான தாதுகோபுரம் நாட்டின் வேறு எந்தப் பகுதியிலும் காணப்படவில்லை என்பதும் முக்கியமானதாகும். மண் குன்றில் நிர்மாணிக்கப் பட்டுள்ள இந்த தாதுகோபுரம் நீண்ட காலமாக காடாகக் காணப்பட்டது. நான் பௌத்த மகா சம்மேளனத்தின் தலைவராக செயற்பட்ட காலத்தில் எல்லாவல மேதானந்த தேரர் மூலமே குருந்துமலை தொடர்பில் அறிந்து கொண்டேன். அதன் பின்னர் தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தை சந்தித்து அது தொடர்பில் கலந்துரையாடினேன்.

இந்த வரலாற்று பிரசித்தி பெற்ற குருந்துமலை தாது கோபுரத்தை எமது அடுத்த பரம்பரைக்கு எடுத்துச் செல்வது அவசியம் எனக் கருதினேன். அதனால் அதனை புனரமைப்புச் செய்யும் பணிகளை நான் ஆரம்பித்தேன். அதற்கென 55 இலட்சம் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டது. தற்போது நிர்மாணப் பணிகள் நிறைவடையும் நிலையில் காணப்படுகின்றன" என்றும் கபிலசேனாதீர தெரிவித்தார்.

யுத்தம் முடிவுக்கு வந்த 2009ஆம் ஆண்டுக்கு பின்னர் இத்தகைய தடைசெய்யப்பட்ட வன பகுதிகளுக்குள் பிரவேசிப்பதற்கான வாய்ப்புகள் கிடைக்கப் பெற்றதும் முல்லைத்தீவு வவுனியா மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் காடுகளில் மறைந்து உள்ள நூற்றுக்கணக்கான தொல்பொருள் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.


கபில சேனாதீர

அதனையடுத்து அந்த தொல்பொருள் இடிபாடுகள் பௌத்த மதத்திற்கு சொந்தமானவை அங்கு பௌத்த பிக்குகள் வாழ்ந்துள்ளனர். பௌத்த விகாரைகள் இருந்துள்ளன என பௌத்தர்களும், அது பௌத்த தலம் அல்ல.இந்து கோவில்களை கொண்ட தலங்கள் என்றும் அது தமிழர்களுக்கு சொந்தமானவை என்றும் தமிழர்களும் கூறி வருகின்றனர். இந் நிலையிலேயே 2013 ஓகஸ்ட் மாதம் இந்த பிரதேசம் ஒரு தொல்பொருள் தலமாக வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டது.

இது இப்படி இருக்க இலங்கைக்கு சங்கமித்திரை வருகைதந்த வரலாறு முல்லைத்தீவையே அடிப்படையாக கொண்டிருப்பது பற்றி முல்லைத் தீவிலுள்ள ஆசிரியர் ஒருவருன் பேசினோம்.

"பௌத்தமதம் சிங்கள மக்களுக்கு மட்டும் சொந்தமானது அல்ல. பௌத்தர்கள் தமிழர்கள் இன்றும் இந்தியாவில் வாழ்கின்றனர். சங்கமித்திரை மற்றும் அவரோடு வந்தவர்கள் இந்துக்களாகவே இருந்தனர் வடக்கில் இந்துமக்கள் வாழ்கின்ற பிரதேசத்திற்கு அவர்கள் வந்ததற்கான காரணம் இந்துக்கள் பௌத்தத்தை பாதுகாப்பர் என்ற நம்பிக்கையில்தான். அவர் ஒரு போதும் தென் பகுதிக்குச் செல்ல வில்லை.

மேற்படி குருந்துமலை பகுதி தமிழ் மக்களுக்கு சொந்தமான காணிகளிலேயே உள்ளது. சோல்பரி காலத்திலேயே அந்த காணிகளுக்கான உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அந்த வகையில் இத்தகைய தொல்பொருள் பிரதேசங்களை பாதுகாப்பதில் இந்து மக்களுக்கு பொறுப்பு உள்ளது. அவர்கள் அதனை செய்வார்கள். அதை விடுத்து தொல்பொருள்களை பாதுகாப்பதற்காக அங்கு விகாரைகளை அமைத்து அதன் பின்னர் அங்கு சிங்கள பௌத்தர்களை குடியேற்றும் நோக்கத்தையே தமிழ் மக்கள் எதிர்க்கின்றார்கள். அனைத்தும் இந்தியாவில் இருந்தே இலங்கை வந்தன. வடக்கின் பல்வேறு பகுதிகளிலும் தொல்பொருள் பிரதேசங்கள் காணப்படுகின்றன. அவை தொல்பொருள் பிரதேசங்களாக மட்டும் பாதுகாக்கப்பட்டால் எந்த எதிர்ப்புகளும் எழ வேண்டிய அவசியம் கிடையாது. ஆனால் தொல்பொருள் என்ற பெயரில் தமிழ் மக்களின் பிரதேசங்களில் சிங்கள மக்களை குடியேற்றுவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

அதனையே தமிழ் மக்கள் எதிர்க்கின்றனர்" என்பது இவர் தரப்பு வாதம். 1919 காலங்களில் அது தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ள நிலையில் அதன்பின்னர் எதிர்கொள்ள நேர்ந்த கொரோனா வைரஸ் சூழ்நிலை அதனோடு இணைந்த பல்வேறு காரணங்கள் காரணமாக அவை கிடப்பில் போடப்பட்டுள்ளன.

தற்போது குருந்துமலை தாதுகோபுரம் புனரமைக்கப்பட்டு வருகிறது. அதனை அண்டிய பிரதேசங்களில் அடுத்தடுத்து புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அதற்கான நிதியுதவியை கொழும்பில் பௌத்தாலோக பவுண்டேஷன் வழங்குவதுடன் அதன் தலைவர ஜகத் சுமதிபால இது தொடர்பில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார்.

இந்த கட்டுரையில் மேலும் பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். இடப்பற்றாக்குறை காரணமாக சேர்த்துக் கொள்ளப் படவில்லை மற்றொரு சந்தர்ப்பத்தில் அது தொடர்பாக பேசலாம்.

நேரடி ரிப்போர்ட் :
லோரன்ஸ் செல்வநாயகம்...
படங்கள்:
துஷ்மந்த மாயாதுன்னே

# நெருக்கடிக்கு துரிதமான தீர்வு காண அதிரடி நடவடிக்கைகள்!



**டொலர் நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளால் நாடு பாரிய சிக்கல்களுக்கு முகங்கொடுத்திருக்கும் இன்றைய நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த புதன்கிழமை நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையானது மக்கள் மத்தியில் பெரிதும் பரபரப்பாகப் பேசப்பட்டு வருகிறது.**

'நாடு முகங்கொடுத்துள்ள இடர்பாடுகளிலிருந்து மீட்சி பெறுவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும்' என அவர் கோரிக் கைவிடுத்திருந்தார். அவருடைய உரை குறித்து எதிர்க்கட்சியினர் விமர்சனங்களை முன்வைத்திருந்தாலும், ஜனாதிபதி தனது உரையில் நாட்டின் தற்போதையை நிலையை மறைப்பதற்கான எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை.

இன்றைய இந்த நிலைமையிலிருந்து மீள்வதற்கு மேற்கொள்ளவிருக்கும் முயற்சிகளுக்கு மக்களின் முழுமையான ஒத்துழைப்பை ஜனாதிபதி கோரியிருந்தார்.

இதுபோன்ற தருணங்கள் தொடர் நெருக்கடிகள் ஏற்படும் போது, சில விடயங்கள் எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவையாகக் காணப்படுகின்றன. இலங்கை ரூபாவின் பெறுமதியை மிதக்க விடுவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் மற்றும் எரிபொருள் விலை அதிகரிப்பு போன்றவற்றை இதற்கான உதாரணங்களாகக் கூறலாம்.

இருந்தபோதும் தற்போதைய பொருளாதார சூழலில் இவை தவிர்க்க முடியாதவை. உண்மையில், மக்கள் அனுபவிக்கும் அசௌகரியங்களுக்கு தீர்வு காண கடுமையான தீர்மானங்களை விரைவாக எடுக்கத் தீர்மானித்துள்ளதாகவும், தனது நடவடிக்கைகளுக்குப் பொறுப்பேற்பதாகவும் ஜனாதிபதி தனது உரையில் தெளிவாகக் கூறியிருந்தார்.

ஜனாதிபதி சுட்டிக்காட்டியபடி, நமது தற்போதைய பிரச்சினைகளுக்கு கொவிட்19 மாத்திரமே காரணமாக இல்லாவிட்டாலும், அதுவே அடிப்படைக் காரணம் என்பதை நாம் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். தடுப்பூசிகள், பரிசோதனைகள், சிகிச்சைகள் மற்றும் தனிமைப்படுத்தல் போன்றவற்றுக்காக 1000 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பணம் அரசுக்குச் செலவாகியுள்ளது.

இந்தத் தொற்றுநோய் நிலைமை அரசாங்கத்துக்குக் கிடைக்க வேண்டிய நிதி வருமானங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

சில வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடும் போது நாம் கொவிட்டை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தியுள்ளோம் என்பதையும் யாரும் மறுக்க முடியாது.

'உங்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலைவாசி உயர்வை நான் நன்கு அறிவேன். எரிவாயு தட்டுப்பாடு மற்றும் அதேபோன்று, எரிபொருள் தட்டுப்பாடு. மின்வெட்டு போன்ற பிரச்சினைகளை நான் நன்கு அறிவேன். கடந்த இரண்டு மாதங்களாக பொதுமக்கள் அனுபவித்த பல இன்னல்கள் குறித்தும் நான் நன்றாக உணர்ந்துள்ளேன். அதற்காக எங்களால் செய்ய முடிந்த அனைத்தையும் நாம் செய்தாலும், எங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களினால் இந்த நிலைமை தொடரும் என்பதை நான் அறிவேன்.

நான் செய்யும் செயல்களுக்கு நான் பொறுப்பேற்கிறேன். பொதுமக்கள் அனுபவிக்கும் ஒரு சில சிக்கலான வாழ்க்கை முறைகளுக்கு தீர்வு காண இன்று நான் கடுமையான முடிவுகளை எடுக்க உறுதி பூண்டுள்ளேன். அதற்கு உதவ தேசிய பொருளாதார சபையையும், அதற்கு ஒத்துழைப்பு வழங்க ஒரு ஆலோசனைக் குழுவையும் நியமித்தேன். இதன் மூலம், நான் எடுக்கும் முடிவுகள் செயற்படுத்தப்படுகிறதா என்பதை தொடர்ந்து கண்காணிக்கவும் நடவடிக்கை எடுப்பேன். எனவே, மக்களுக்காக நான் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் நம்பிக்கை வைக்குமாறு நான் உங்களை முதலில் கேட்டுக் கொள்கிறேன்' என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

## நாட்டை சரிவிலிருந்து மீட்பதற்கு உறுதியான கொள்கைகள் பின்பற்றப்பட வேண்டியது அவசியம்; சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயற்படவும் அரசு தயார்!

இதற்கும் அப்பால் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடுமாறு பல்வேறு தரப்பினர் கோரிக்கை விடுத்து வந்தனர். இருந்தபோதும் இது விடயத்தில் அரசாங்கம் உறுதியான நிலைப்பாட்டை எடுக்காமலிருந்து வந்தது.

இந்த நிலையில், சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயற்படவிருப்பதாக ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். நிலைமைகள் மோசமடைந்த பின்னர் இத்தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாக எதிர்க்கட்சிகள் விமர்சித்தாலும், நாட்டை சரியான பாதைக்குக் கொண்டு செல்ல இத்தீர்மானம் வரவேற்கப்பட வேண்டியதாகும்.

இது மாத்திரமன்றி, ஜனாதிபதி தலைமையில் அமைச்சரவை அமைச்சர்களைக் கொண்ட பொருளாதார கவுன்சில் அமைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் இதற்கு ஆலோசனை வழங்குவதற்காக 16 துறைசார் விற்பன்னர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கான கூட்டு முயற்சிகளை எடுக்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

அதேநேரம், இலங்கைக்கு வரும் சிக்கல்களின் போது உடனடியாகக் கைகொடுக்கும் உற்ற நண்பனாக விளங்கும் இந்தியா மீண்டும் ஒருமுறை எமக்கு உதவிக்கரம் நீட்டியுள்ளது. இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்தியத் தரப்பினருடன் நடத்திய பேச்சு

## ஜனாதிபதி தலைமையிலான பொருளாதார கவுன்சிலுக்கு ஆலோசனை வழங்க 16 துறைசார் விற்பன்னர்கள் நியமனம்

வார்த்தைகளுக்கு அமைய 1 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் உதவியை இந்தியா வழங்கியுள்ளது.

இது தொடர்பான ஒப்பந்தத்தில் திறைசேரியின் செயலாளர் ஆர்ட்டிக்கல கைச்சாத்திட்டிருந்தார். எரிபொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு ஏற்கனவே இந்தியா கடனை வழங்கியிருந்த நிலையில், தற்பொழுது அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்டவற்றின் கொள்வனவுக்கு இந்தக் கடன்தொகையை வழங்கியுள்ளது. இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையில் காணப்படும் உறவுகளை வலுப்படுத்தும் மற்றுமொரு சந்தர்ப்பமாக இது அமைகிறது.

கடந்த காலங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்தியா எமக்கு உதவிக்கரம் நீட்டியுள்ளது. குறிப்பாக எல்.ரி.ரி.ஈயினருக்கு எதிரான இறுதி யுத்தம், சுனாமி அனர்த்தம், கொவிட் தொற்றுநோய் சூழல் எனப் பல்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கைக்கு முதன் முதலில் உதவிகளைச் செய்த நட்பு நாடாக இந்தியா விளங்குகிறது. இந்த வரிசையில் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கும் அரசாங்கத்தின் முயற்சிகளைப் பலப்படுத்தவும் இந்தியா தற்பொழுது முன்வந்துள்ளது.

நாட்டை சரிவிலிருந்து மீட்பதற்கு உறுதியான கொள்கைகள் பின்பற்றப்பட வேண்டியதன் அவசியம் உணரப்பட்டிருக்கும் அதேநேரம், ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற வேறுபாடுகள் இன்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய காலகட்டமாகவும் இது அமைந்துள்ளது. விலைவாசி அதிகரிப்புக் காரணமாக மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது என்பது உண்மையே.

இருந்தபோதும் இந்தச் சூழலைப் பயன்படுத்தி எதிர்க்கட்சிகள் சுயலாப அரசியல் செய்யக் கூடாது. நாடு மிகவும் மோசமான நிலைக்குச் செல்வதைத் தடுக்க கட்சி பேதங்களை மறந்து எதிர்க்கட்சிகள் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தற்பொழுது இருக்கும் நிலையில் ஆட்சி அதிகாரத்தில் ஏற்படக் கூடிய மாற்றம் பிரச்சினைகளைத் தீர்க்காது என்பதையும் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**பி.ஹர்ஷன்...**

# இலங்கைக்கு என்றும் உதவும் 'மூத்த சகோதரன்' இந்தியா!

**இலங்கையின் 'மூத்த சகோதரன்' என்று இந்தியாவை முன்னொரு காலத்தில் நமது நாட்டவர்கள் பெருமையாகக் கூறுவதுண்டு. அதற்கான காரணம் இல்லாமலில்லை. இலங்கைக்கு எவ்வகை–யான ஆபத்தும், நெருக்கடியும் நேருகின்ற வேளையிலும் இந்தியா ஓடோடி வந்து கைகொடுத்து உதவுவது வழக்கம். அதன் காரணமாகவே இலங்கையில் மூத்த சகோதரனாக இந்தியாவை அன்றைய நாட்களில் மக்கள் பெருமையாகக் குறிப்பிட்டனர்.**

இரு நாடுகளுக்கும் இடையே நெருக்கமான நட்புறவுகள் வரலாற்று ரீதியாக நிலவி வருகின்றன. பண்டைய மன்னராட்சிக் காலம் தொட்டு இந்த நட்புறவு நிலவி வருகின்றது. இலங்கை_ இந்திய மன்னர்களுக்கிடையே பண்டைய காலத்தில் நெருக்கமான நட்புறவுகள் நிலவி வந்ததற்கான வரலாற்று ஆதாரங்கள் உள்ளன. இலங்கையில் அரசியல் நெருக்கடி நிலவிய வேளையில் இங்கிருந்த மன்னர்கள் இந்திய மன்னர்களிடம் நட்புரீதியில் உதவிகள் கோரியுள்ளனர். அவ்வேளையில் தென்னிந்திய மன்னர்கள் படைகளை அனுப்பி உதவி புரிந்துள்ளனர்.

அதேபோன்று தென்னிந்திய மன்னர்கள் சிலருக்கு அந்நாளில் இலங்கை அரசர்கள் உணவுத் தேவைக்கான பெருமளவு நெல்லை அனுப்பி வைத்ததாக வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன. நட்புறவு ரீதியாகவே இந்த உதவிகளை இலங்கை மன்னர்கள் அனுப்பி வைத்துள்ளனர்.

இவ்வாறான நட்புறவு வரலாற்று ரீதியாக தொடர்ந்தபடி வந்துள்ளது. இலங்கையில் சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமராகப் பதவி வகித்த காலத்தில் ஜே.வி.பியினர் ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டு நாட்டைக் கைப்பற்றுவதற்குத் திட்டமிட்டிருந்தனர். ஆனால் அவர்களது திட்டத்தை முன்கூட்டியே அறிந்து கொண்ட அன்றைய அரசு ஜே.வி.பியினரின் பயங்கரவாதத்தை அடக்கியது.

அன்றைய இந்த நெருக்கடி வேளையில் இலங்கைக்கு உடனடியாகவே கைகொடுத்து உதவ



## பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு புதுடில்லி வழங்கிய ஒரு பில்லியன் டொலர் அவசர கடனுதவி





## இலங்கையின் வரலாற்றில் நெருக்கடி காலகட்டத்தில் கைகொடுத்து உதவ இந்தியா என்றுமே பின்வாங்கியதில்லை

இந்தியா தயாராக இருந்தது. இதே போன்றுதான் இலங்கையில் புலிகள் இயக்கத்தின் தீவிரவாதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் இந்தியா தனது பங்களிப்பை அன்று வழங்கியிருந்தது.

இவையெல்லாம் இந்திய_ இலங்கை நட்புறவின் அடையாளங்களாகும். இலங்கைக்கு நெருக்கடி ஏற்படுகின்ற எந்த வேளையிலும் இந்தியா கைகொடுப்பதற்கு தயங்கப் போவதில்லை என்பதையே இந்த வரலாற்று நிகழ்வுகள் எமக்கு உணர்த்துகின்றன. நெருக்கடி வேளையில் தோள்கொடுக்கும் தனது நட்புறவுக் கொள்கையில் இருந்து இந்தியா என்றுமே பின்வாங்கியதில்லை என்பது இன்றைய காலத்திலும் நன்கு புரிகின்றது.

இலங்கை தற்போது பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது. உலகளாவிய கொவிட் பெருந்தொற்றினால் எமது நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சி இதுவாகும். எரிபொருள் பற்றாக்குறை, மின்சார தயாரிப்புக்கான செலவினம், அன்றாட பாவனைப் பொருட்களின் விலையேற்றம் என்றெல்லாம் இலங்கை பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளது.

உள்நாட்டுப் பொருளாதாரத்தை சீரமைத்து முன்னைய நிலைமைக்கு மீண்டு வருவதாயின் இலங்கைக்கு சில காலம் தேவைப்படுமென்பதே பொருளாதார நிபுணர்களின் கருத்தாகும். ஆனால் அதுவரை இலங்கை பொருளாதார நெருக்கடியை சமாளித்தபடி சென்று கொண்டிருக்க முடியாது. அவசரமான கடனுதவிகளின் மூலமே இன்றைய நெருக்கடியில் இருந்து இலங்கையினால் விடுபட முடியும்.

தற்போதைய இக்கட்டான நிலைமையில் இலங்கைக்கு இந்தியா கைகொடுத்து உதவியுள்ளது. இந்தியா இப்போது இலங்கைக்கு வழங்கியுள்ள கடனுதவியை வரலாற்று ரீதியான நட்புறவின் முக்கிய அடையாளமாகவே நாம் கருத வேண்டும். 'பிக் பிரதர்' என்ற மூத்த சகோதரன் நிலைமையில் இருந்து இந்தியா ஒருபோதுமே பின்வாங்கப் போவதில்லை என்பதுதான் யதார்த்தம்.

ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியை இலங்கைக்கு இந்தியா இப்போது வழங்கியுள்ளது. இலங்கையை நிதி நெருக்கடியில் இருந்து மீட்பதற்கும், மருந்து, உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்கும் இந்தியா இந்த ஒரு பில்லியன் டொலர் கடனை கடந்த வியாழனன்று வழங்கியது.

இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், இலங்கை நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகிய இருவரும் 'வீடியோ கொன்பரன்ஸ்' வாயிலாக கடந்த மாதம் பேச்சு நடத்தியிருந்தனர். இதையடுத்து இலங்கை அரசு எரிபொருள் கொள்முதல் செய்ய 3750 கோடி ரூபா(இந்திய நாணயப் பெறுமதி) உதவித் தொகையை அளிக்க இந்திய அரசு அப்போது ஒப்புக் கொண்டிருந்தது.இந்நிலையில் இந்திய ஏற்றுமதி இறக்குமதி வங்கி_ இலங்கை அரசு இடையே கடன் உதவிக்கான ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

இலங்கையின் பொருளாதார வீழ்ச்சியை ஈடுகட்டும் வகையில், இந்தியாவுடன் கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்காக நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ புதுடில்லி சென்றிருந்தார். இரண்டு நாள் பயணமாக இந்தியா சென்றிருந்த பசில் ராஜபக்ஷ, மத்திய அரசுடன் முக்கிய பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். அதனையடுத்தே இந்திய கடனுதவி கடந்த வியாழனன்று கைச்சாத்தானது.

இந்தியா ஏற்கனவே கடந்த மாதம் இலங்கைக்கு 3,750 கோடி ரூபாய் கடனுதவி அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இத்தொகையை கொண்டு இந்தியாவிடம் இலங்கை எரிபொருட்களை வாங்கியிருந்தது.

இலங்கையின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகித்துவரும் சுற்றுலாத் துறை, கொரோனா காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளாக வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கு இதுவும் முக்கிய காரணமாகும்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான நட்புறவில் முன்னர் சில காலம் இடைவெளியொன்று நிலவியதுண்டு. ஆனாலும் அந்த இடைவெளியானது சீர்செய்யப்பட்டுள்ளதென்பதையே இந்தியாவின் இன்றைய உதவி தெளிவுபடுத்துவதாக இராஜதந்திர வட்டாரங்கள் கூறுகின்றன.



# நல்லிணக்கத்துக்கு விரோதமான வகையில் மனித உரிமைகள் பேரவை செயற்பாடுகள்

## சர்வதேச சமூகத்தின் ஒருதலைப்பட்சமான செயற்பாடுகளுக்கு அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் ஜெனீவாவில் அளித்த உறுதியான விளக்கம்!

வார இறுதி

## அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

**கொவிட்–19 தொடர்பான சவால்களை பொருட்படுத்தாமல், சட்டச் சீர்திருத்தம் உட்பட தேசிய செயன்முறைகளின் மூலம் நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பை உலகின் தென்பகுதியில் உள்ள அரசுகள் அங்கீகரித்திருப்பதாக வெளிவிவகார அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.**

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத் தொடர் நடைபெற்று வரும் நிலையில், இலங்கை விவகாரம் இரு தடவைகள் பேரவையில் கலந்துரையாடப் பட்டிருந்தது. 46/1 தீர்மானத்தை மேற்கோள் காட்டி 'இலங்கையின் பொறுப்புக்கூறல் திட்டத்தை' மனித உரிமைகள் பேரவை நிறுவியுள்ளது.



ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்குள் உள்ளகத் திறன் விருத்திப் பயிற்சியாக மட்டுமே இருக்க வேண்டிய செயலானது, தன்னிச்சையாக ஒரு திட்டத்தின் நிலைக்கு உயர்த்தப்பட்டு, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் ஏனைய வெளிப்புற வழிமுறைகளுடன் பட்டியலிடப்பட்டுள்ளது.

இந்த செயற்பாடானது நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை முன்னெடுப்பதை இலக்காகக் கொண்டு, தொடர்ச்சியான தேசிய செயற்பாடுகளை ஆரம்பித்து நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டுள்ளதொரு தருணத்தில், அனைத்துக்கும் விரோதமான நடவடிக்கைகளே ஜெனீவாவில் இடம்பெற்று வருகின்றன என்று அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகம் 'பொறுப்புத் திட்டம்' ஒன்றை நிறுவுவதானது அதன் ஆணையை மீறுவதாகக் குறிப்பிட்டு, சாட்சியங்களை சேகரிப்பதில் சாட்சியங்களைச் சேகரிப்பதை நோக்காகக் கொண்டு ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படக் கூடிய செயற்பாடுகள் நாட்டுக்குள் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக சமூகங்களுக்கிடையில் கசப்புணர்வுகளையும், வெறுப்புக்களையும் தூண்டுவதற்கான வாய்ப்புக்களையே அதிகமாகக் கொண்டுள்ளன என்பதையும் அமைச்சர் தெரிவித்துள்ளார். கலாசார, சமூக மற்றும் பிற வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல் உலகின் பிற பகுதிகளில் திணிக்க முயலும் சூழ்நிலைகள் ஜெனீவாவில் உருவாக்கப்படக் கூடாது நல்லிணக்கம் ஒரு உணர்வுபூர்வமான விடயம் என்பதால் வழங்கப்படும் தீர்வுகள் உள்நாட்டு தேவைகளுக்கு ஏற்றவாறு உருவாக்கப்பட வேண்டும்.

கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக சர்வதேச நீதிமன்றங்களிலும், பல்வேறு நாடுகளின் நீதிமன்றங்களிலும் பயன்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படும் 120,000 சாட்சியங்கள் தமது அலுவலகத்தில் இருப்பதாக ஆணையாளர் நாயகம் தெரிவித்திருந்தார்.

இந்த 120,000 சாட்சியங்கள் என்ன என்பது எமக்குத் தெரியாது, இது நியாயத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கு முற்றிலும் எதிரானது. ஒரு குற்றச்சாட்டு இருந்தால், அதை யார் செய்கிறார்கள், எந்த ஆதாரத்தின் அடிப்படையில் குற்றச்சாட்டு உள்ளது என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். ஆனால் இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுகள் பெயர் தெரியாத நபர்களிடம் இருந்து வருகிறது.

ஆதாரங்களை ஆய்வு செய்யவும், வடிகட்டவும், நம்பகத்தன்மை மற்றும் துல்லியத்தை சோதிக்கவும் எங்களுக்கு வாய்ப்பு இல்லை. குற்றச்சாட்டுகள் பாரபட்சமாக இருக்கலாம், துரோகத்தால் தூண்டப்படலாம். அவை புறம்பான நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படலாம். ஆனால் இந்த ஆதாரங்கள் என்று அழைக்கப்படுபவை பற்றிய எந்தத் தகவலும் எங்களுக்கு வழங்கப்படாததால், எங்களிடம் எதையும் கண்டறிய எந்த வழியும் இல்லை.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு அமைக்கப்பட்டுள்ள வகிபாகத்தை உலக நாடுகளின் சில பிரதிநிதிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. மூன்று மில்லியன் அமெரிக்க டொலர், பிராந்தியத்தில் இந்த ஆணையின் அதிகப்படியான செலவு குறித்தும் கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கை விவகாரம் தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நாயகம் எழுத்து மூல அறிக்கையை சமர்ப்பித்திருந்ததை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்தன.

49 ஆவது அமர்வு தொடர்பில் முழுமையான திருப்தி அடைவதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் விளக்கமளித்துள்ள அவர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

"உயர்மட்டப் பிரிவின் போது ஏழு நிமிடங்களுக்கு ஒரு முறையும், பின்னர் ஊடாடும் உரையாடலில் ஐந்து நிமிடங்களும் சபையில் இரண்டு முறையும் உரையாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. வரையறுக்கப்பட்ட நேரத்தில் குறிப்பிட்ட ஐந்து விடயங்கள் குறித்து நான் சபை உறுப்பினர்களின் கவனத்தை ஈர்த்தேன். முதலாவது சமநிலை மற்றும் விகிதாசாரத்தின் கேள்வி உலகின் தற்போதைய சூழ்நிலையில், ஐரோப்பாவில் பொங்கி எழும் போரை உள்ளடக்கியது, இது நியாயமானதா மற்றும் இந்த அளவு நேரத்தையும் கவனத்தையும் ஆற்றலையும் இலங்கைக்கு ஒதுக்குவது நியாயமானதா? நாம் அமைதியான நாடு. இலங்கையின் நிலைமைக்கும் அது பெறும் கவனத்திற்கும் இடையில் தெளிவான விகிதாசார பற்றாக்குறை உள்ளது.




**சாட்சியங்கள் சேகரிக்கும் பொறிமுறைக்காக மில்லியன்கணக்கான டொலர் செலவு செய்யப்படுகிறது. இந்தப் பணிகளில் நியமிக்கப்படும் அதிகாரிகளுக்கு பெரும் சம்பளம் வழங்கப்படுகிறது. இது நியாயமானதா? மனித இனத்தின் நலனுக்கு உதவுமா?**



**நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை முன்னெடுப்பதை இலக்காகக் கொண்டு, தொடர்ச்சியான தேசிய செயற்பாடுகளை ஆரம்பித்து நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டுள்ளதொரு தருணத்தில், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படக் கூடிய செயற்பாடுகள் நாட்டுக்குள் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக சமூகங்களுக்கிடையில் கசப்புணர்வுகளையும், வெறுப்புக்களையும் தூண்டுவதற்கான வாய்ப்புக்களையே அதிகமாகக் கொண்டுள்ளன.**

இரண்டாவது விடயம், இந்த ஊடாடும் உரையாடலின் நோக்கம், சபையின் 49வது அமர்வில் ஐ.நா மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் சமர்ப்பித்த அறிக்கையை பரிசீலிப்பதாகும். அறிக்கையின் மேலோட்டமான ஆய்வும், அதில் 85 சதவீதம் தற்போதைய பிரச்சினைகளில் உள்ளது என்பதை தெளிவாகக் காட்டுகிறது.

பயங்கரவாதத்திற்கு எதிரான போருடன் இதற்கு எந்தத் தொடர்பும் இல்லை, ஆனால் உள் இயல்புடைய விஷயங்களைப் பற்றி பேசுகிறது. மேலும் இந்த விடயங்கள் பாராளுமன்றம் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் பொறுப்புகளுக்குள் நான்கு சதுரங்களாகும். அரசியலமைப்புச் சீர்திருத்தம், அதிகாரப் பகிர்வு, நிர்வாக சேவை மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள் நியமனத்தின் உரிமை மற்றும் முறையற்ற தன்மை போன்ற விடயங்கள் உள்நாட்டு அதிகார வரம்பிற்கு உட்பட்டவையாகும், அவை மனித உரிமைகள் பேரவையின் செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகளுடன் எந்தத் தொடர்பும் இல்லாதவை.

மூன்றாவது புள்ளி, பாகுபாடு பற்றிய ஒரு கேள்வி தெளிவாக உள்ளது. ஐநா அமைப்பின் 196 உறுப்பு நாடுகளின் உள்நாட்டு விவகாரங்கள் தொடர்பாக ஐநா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மற்றும் மனித உரிமைகள் கவுன்சில் இந்த மாதிரியான விசாரணையை தொடங்கினால், அதன் விளைவு என்னவாக இருக்கும் என்று நான் கேட்டேன். அது ஏற்கத்தக்கதா? எவ்வாறாயினும், மனித உரிமைகள் ஆணைக்குழு மற்ற நாடுகளின் அத்தகைய விசாரணையை ஒருபோதும் சிந்திக்காது, பின்னர் ஏன் இலங்கையை தனிமைப்படுத்த வேண்டும்? இது தேர்ந்தெடுக்கப்பட்ட சிகிச்சையாகும், இது ஐ.நா அமைப்பின் ஸ்தாபகக் கொள்கைகளுக்கு எதிரானது.

நான்காவது விடயம் இலங்கை மீதான விசாரணைக்காக பாரியளவு செலவு செய்தமையாகும். உலக மக்கள்தொகையில் பாதி பேர் உயிர்காக்கும் தடுப்பூசிகளை அணுகுவதற்குப் போராடும் சூழ்நிலையில் உலகம் இப்போது உள்ளது. பல மக்கள் ஒரு தடுப்பூசி கூட பெறவில்லை. அந்தச் சூழ்நிலையில்தான் மனித உரிமை ஆணையம் இந்த விசாரணைக்கு, சாட்சியங்கள் சேகரிக்கும் பொறிமுறை என்று சொல்லப்படுவதற்கு, மில்லியன் கணக்கான டொலர்களை செலவு செய்கிறது. இந்தப் பணிகளில் நியமிக்கப்படும் மற்றும் ஒப்படைக்கப்படும் அதிகாரிகளுக்கு பெரும் சம்பளம் வழங்கப்படுகிறது. தற்போது கிடைக்கும் வரையறுக்கப்பட்ட வளங்களை நியாயமான முறையில் பயன்படுத்துவது நியாயமானதா? இது பொதுவாக மனித இனத்தின் நலனுக்கு உதவுமா?

ஐந்தாவதும் இறுதியுமான விஷயம், இந்தச் செலவின் விளைவு என்ன என்பது. இது ஏதாவது நன்மை செய்கிறதா? மாறாக சர்வதேச சமூகத்தை பிளவுபடுத்துவதன் மூலம் பாரிய தீங்கையே செய்து வருகின்றது. ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கும் ஒரு வாய்வழி புதுப்பிப்பு மற்றும் எழுதப்பட்ட அறிக்கை உள்ளது. இவை அனைத்தும் சர்வதேச சமூகத்தை பிளவுபடுத்துகிறது, ஏனெனில் அறிக்கை மீது வாக்குகள் எடுக்கப்படுகின்றன என்பது பற்றியும் தான் எடுத்துக் கூறினேன்".

இவ்வாறு அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் சுட்டிக் காட்டியுள்ளார்.

இருந்தபோதும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையுடன் தொடர்ந்தும் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் திருத்தத்தைக் கொண்டுவருவது உள்ளிட்ட உடனடி நடவடிக்கைகள் பலவற்றை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. இவ்வாறான முன்னேற்றகரமான நடவடிக்கைகளை சர்வதேசம் கவனத்தில் கொள்வது தேவையானது. இதனை விடுத்து மறைமுகமான நிகழ்ச்சி நிரலுக்கு அமைய தொடர்ந்தும் இலங்கை மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதற்கு சர்வதேசம் எத்தனிப்பது ஏற்புடையது அல்ல என்றும் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.



**மறைமுகமான நிகழ்ச்சி நிரலுக்கு அமைய தொடர்ந்தும் இலங்கை மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதற்கு சர்வதேசம் எத்தனிப்பது ஏற்புடையது அல்ல. சர்வதேச சமூகத்தை பிளவுபடுத்துவதன் மூலம் பாரிய தீங்கு இழைக்கப்படுகிறது!**



# இந்திய வம்சாவளித் தமிழர் மலேசியாவிலும் இலங்கையிலும்

1820 களுக்குப் பிறகு இந்தியாவில் இருந்து தொழில் நிமித்தம் புலம் பெயர்ந்த இந்திய வம்சாவளித் தமிழர்கள் சுமார் 3 கோடிக்கும் அதிகமாக உலகெங்கும் பரவி வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

ஆனால் இலங்கையைத் தவிர இதர நாடுகளில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழர்கள் தமது வாழ்வியலை காலத்துக்கேற்ப புதிய கோணத்தில் வடிவமைத்துக் கொண்டுள்ளார்கள். அநேகமாக தென் கிழக்காசிய நாடுகளில் வாழ்வோர் பெருமைப்படத்தக்க முன்னேற்றத்தை எட்டியிருக்கின்றார்கள்.

மலேசியா போன்ற நாடுகளில் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு இந்திய வம்சாவளித் தமிழர்களின் பங்களிப்பு அதிகம். இலங்கையிலும் கூட அதே தேசிய பொருளாதரத்தில் இவர்களின் பங்களிப்பு கணிசமானது. ஆனால் மலையக மக்கள் இங்கு பெற்றுள்ள சில உரிமை வாய்ப்புகள் மலேசியாவில் காணப்படவில்லை. முக்கியமாக ஓய்வுபெற்ற ஒரு தொழிலாளி தொடர்ந்தும் தமக்கான குடியிருப்பில் வாழக்கூடிய வாய்ப்பு இங்கு உண்டு. இது மலேசிய தொழிலாளர்களுக்கு இல்லை. ஒரு தொழிலாளி ஓய்வுபெறும் பட்சத்தில் அவரின் ஒட்டுமொத்தக் குடும்பமும் குடியிருப்பினைக் காலி செய்துவிட வேண்டும்.

இதனால் இன்று ஒவ்வொரு தோட்டங்களிலும் பத்து அல்லது பதினைந்து தமிழ்க் குடும்பங்களையே காணமுடிவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஒரு காலக்கட்டத்தில் 80 வீதத்துக்கும் அதிகமாக பெருந்தோட்டங்களில் பணிபுரிவோர் தொகை இன்று 30 வீதமாக குறைவடைந்து போயுள்ளது.





தவிர முன்னர் இறப்பர் தோட்டங்களாக இருந்தவை தற்போது செம்பனை (முள்ளுத் தெங்காய்) தோட்டங்களாக மாற்றம் பெற்றுள்ளன.

ஆனால் தொழிற்றுறை இதனால் பாதிப்படைவில்லை. தொழிலாளர் புலம் பெயர்வினால் ஆளணி வளம் குன்றிவிடவில்லை என்பது இங்கு அவதானத்துக்கு உரியது. இறப்பருக்கு மாற்றுப்பயிராக செம்பனை இனங்காணப்பட்டு பெருந்தோட்டத் துறை கட்டமைப்பு அப்படியே காக்கப்படுகின்றது.

ஆளணி வளம் குறைவடைந்து செல்வதைச் சமன் செய்ய பங்களாதேஷ், இந்தோனேஷியா போன்ற நாடுகளில் இருந்து தொழிலாளர்கள் அழைத்து வரப்படுகின்றனா். இதனால் மலேசிய பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை தொடர்ச்சியாக பேணப்படும் பின்புலம் காணப்படுகின்றது.

அத்துடன் இங்கிருந்து வெளியேறும் தொழிலாளர் சமூகம் தமது கல்வித் தகுதியின் அடிப்படையில் வேறு தொழில்களில் ஈடுபட முடிகின்றது. இளைய தலைமுறையினர் தமது பெற்றோர் செய்துவந்த வேலையைத் தாமும் செய்ய வேண்டும் என்னும் போக்கை உதறித் தள்ளிவிட்டு வேறு தொழில்களில் கவனம் செலுத்துவதால் சமூகரீதியில் புதிய பரிமாணம் நோக்கிய பயணத்தை ஆரம்பிக்க முடிகின்றது.

இங்கும் பரம்பரைத் தொழிலைக் கைவிடும் மனோபாவம் உக்கிரமடைந்து வருவதால் வேறு தொழில்களைத் தேடி பெருந்தோட்டத் தொழிலாளர்களின் இடப்பெயர்வு நடக்கவே செய்கின்றது. ஆனால் அதன் மூலம் புதிய வாழ்வியல் மாற்றத்துக்கான அத்திவாரம் இடப்படுகின்றதா என்றால் அதுதான் இல்லை. காரணம் கல்வியறிவில் பிற்பட்டிருப்பதால் முன்னேற்றத்துக்கு வழிவகுக்கக் கூடியதான தொழில்களைப் பெற முடிவது இல்லை.

கொழும்பு போன்ற நகரங்களில் கடின உழைப்பும் கைநிறையாத வேதனமும் பெற்று வாழும் ஒரு வேதனை வாழ்க்கை. இதனால் தொடர்ச்சியாகவே விரக்தி. தொழில் பாதுகாப்போ உத்தரவாதமோ கிடையாது. தொழில்சார் உரிமைகள் மறுதலிக்கப்படுகின்றன. பெருந்தோட்டக் கட்டமைப்பைப் போன்றே தினக்கூலி முறைமை.

இதனால் தோட்டங்கள் காடுகளாகிக் கொண்டிருக்கின்றன. நல்ல விளைச்சல் நிலங்கள் கூட வீணாக விடப்படுகின்றன. எஞ்சி நிற்கும் தொழிலாளர்கள் (அநேகமானோர் பெண்கள்) தொழில் பாதுகாப்பின்றி அச்சத்துடனேயே வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்த நிலைமையே நீடிக்கின்றது. இதனால் தினந்தோறும் குளவிக் கொட்டு, தேனி, சிறுத்தை தாக்கு, பாம்புக் கடி என்று பலவேறு அனர்த்தங்கள் நிகழ்கின்றன. இதன் காரணமாக உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. மொத்தத்தில் இங்கு வேலை செய்வது என்பது உயிருக்கு உத்தரவாதம் இல்லாத விஷயம். கம்பனி தரப்பு இப்பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையைக் கட்டிக் காப்பதை விட்டு வேறு வழிகளில் தமது வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதிலேயே பெரிதும் நாட்டம் காட்டுகின்றன.

தேயிலைத் துறையைப் பொறுத்தவரை பெருந்தோட்ட உற்பத்தி மற்றும் ஏற்றுமதி என்னும் இரு பிரிவுகள் முதன்மை பெறுகின்றன. ஆனால் இவ்விரண்டு பிரிவுகளிலும் இன்று அரசியல் ஆதிக்கம் அதிகரித்துச் செல்வதே இத்துறையின் தற்போதைய வீழ்ச்சிக்கு அடிப்படை என்போரும் உளர். இத்தரப்பினர் ஒட்டு மொத்தமாக அரச துறைசார் அத்துமீறல்கள் காரணமாகவே பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை தள்ளாட்டம் கண்டு வருவதாக கவலைத் தெரிவிக்கின்றனர். பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை எப்படி தனியார் கம்பனி கரங்களில் சிக்கி தத்தளிக்கின்றதோ அதே போலவே ஏற்றுமதியும் தனியார் நிறுவனங்கள் மூலமே கையாளப்படுகின்றது.

இதனால் அரசின் பங்களிப்பு என்பது ஓரங்கட்டப்படுகின்றது. அரசினால் மானியங்கள் வழங்கப்படுவது கிடையாது. நிதி ஒதுக்கீடுகளும் இடம்பெறுவது இல்லை என்பது ஏற்றுமதியாளர் சங்கத்தின் ஏக்கம்.

இதேவேளை சிறு தோட்ட உற்பத்தியாளர் நலன் பற்றியே அரசு அவதானம் கொள்கிறது. இன்று தேயிலை உற்பத்தியில் 70 வீதமானவை சிறு தோட்டங்கள் மூலமே கிடைக்கின்றன. இத்துறைக்கு அரசு அபரிமிதமான சலுகைகளை அள்ளி வழங்குகின்றது. இந்தக் கரிசனையில் இம்மியளவாவது பெருந்தோட்டப்பயிர்ச் செய்கையில் காட்டப்படுவது இல்லை.

காலநிலை சார்ந்த ஓர் உற்பத்தி தன்மையை கொண்டிருக்கும் தேயிலை துறை நிலையான வருமானத்தைக் கொண்டிருக்க வாய்ப்பே இல்லை என்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய வாதம் தான். இதேநேரம் தேயிலை ஏலத்தில் விடப்படும்போது விலை நிர்ணயம் உள்ளிட்ட முறைகோடுகளும் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது. தரமற்ற தேயிலை ஏற்றுமதி சந்தைப் படுத்தப்படும்போது நாட்டிற்கு அது அவப்பெயரையே தேடித்தரும்.

இதுபற்றிக் கவனம் செலுத்தப்படுவது அவசியம். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பெருந்தோட்டத்துறையை நவீன தொழில் நுட்பங்களை உள்வாங்கிக் கொண்டுள்ள தொழில் நிறுவனமாக மாற்றப் போவதாக தமது தோ்தல்கால வாக்குறுதியில் கூறி இருந்தார். பாரம்பரிய தேயிலை உற்பத்தி முறைமை நவீனப்படுத்தப்படுவதன் மூலம் அதன் வீழ்ச்சியை தடுக்க முடியும் என்றே பலரும் நம்புகிறார்கள். குறிப்பாக ஜப்பான், வியட்நாம் போன்ற நாடுகளின் முன்மாதிரியைப் பின்பற்றுவது ஆரோக்கியமாக அமையலாம்.

இன்றைய நிலையில் பெருந்தோட்டத் துறை மூவிதமான சவால்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது. முதலாவது வீழ்ச்சியடைந்து செல்லும் நிலைமை. அடுத்தது ஆளணி இழப்பு, மூன்றாவது தரமான தேயிலை ஏற்றுமதியும் சர்வதேச சந்தையில் பெறக்கூடிய (தக்கவைக்கக் கூடிய) நம்பிக்கையும.

கொழும்பில் இடம்பெறும் ஏல விற்பனையில் மேற்கொள்ளப்படும் மோசடியால் பாரிய இழப்புகளைச் சந்திக்க வேண்டியுள்ளது என்பது ஆய்வுத்தகவல். ஏனெனில் தரமற்ற தேயிலை ஏற்றுமதிக்கு அனுமதிக்கப்படுவதால் சர்வதேச ரீதியிலான புறக்கணிப்புக்கு ஆளாகும் நிலை தோன்றுகிறது. பாவனையாளர்களது நுகர்விற்கு ஏற்றது அல்ல என்று கண்டறியப்பட்டு நிராகரிக்கப்படும் தேயிலையைக் கூட தூய தேயிலை என்ற பெயரில் ஏற்றுமதி செய்யப்படும் முறைகேடு நிகழ இடமுண்டு. இது தவிர்க்கப்பட வேண்டியது முக்கியம்.

உண்மையில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் வீழ்ச்சியில் இத்துறைசார் தொழிலாளர்களுக்கு எந்தவித தொடர்புகளும் இல்லையென்பது உறுதியாக நிறுவப்பட்டுள்ளது. ஆனால் முழுப்பழியும் தொழிலாளர் மீது சுமத்திவிட்டு கம்பனி தரப்பு நாடகமாடுகின்றது. இதனால் இத் துறையின் எதிர்காலம் நிச்சயமற்றதாக காணப்படுகிறது என்னவோ நிஜம்.

எனவே தேயிலைத் துறையை நவீனப் படுத்துவதன் மூலம் அத்துறைசார் தொழிலாளர்களது வாழ்வியலில் மாற்றத்தைக் கொண்டு வருவதே உசிதமானது. இதே போன்று மலேசியா போன்ற பிற நாடுகளில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழர்களைப் போல இங்குள்ளவர்களும் சிந்தித்து செயற்படுவதே புத்திசாலித்தனமானது.

பன். பாலா...

---

## அரப்பலாகந்த, லிஸ்க்லேன் பிரிவு

# செயலற்றுப்போன 17 லட்சம் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட குடிநீர்த்திட்டம்

**பிரதேசசபை உறுப்பினர் எஸ். விஜேபாண்டி முயற்சியால் மீண்டும் குடிநீர்வசதி**

**‘இது குறித்து அன்றைய அமைச்சராக இருந்த பழனி திகாம்பரம் அவரது அதிகாரிகள், அமைச்சின் செயலாளராக இருந்த ரஞ்சனி நடராஜபிள்ளை, ட்ரஸ்ட் நிறுவனத்தின் அப்போதைய தலைவராக இருந்த வீ.புத்திரசிகாமணி, திலகராஜ் எம்பி மற்றும் பிரதேச அரசியல்வாதிகள் பலரின் கவனத்துக்கு கொண்டுவந்த போதிலும் எந்தவொரு பயனும் ஏற்படவில்லை’**

மக்களின் நன்மை கருதி முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தரமானதாகவும் உறுதியானதாகவும் நீடித்து நிலைக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டியது அவசியம்.

வீடமைப்புத் திட்டம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்படும்போது அங்கு போக்குவரத்து வசதி உட்பட இதர வசதிகளும் குறிப்பாக, குடிநீர் வசதி இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். சகல வசதிகளுடனும் கூடியது எனக்கூறி ஆரம்பித்து வைக்கப்படும்போது அங்கு அத்தியாவசியத் தேவையான குடிநீர் வசதியில்லாவிடின் அந்த வீட்டுத் திட்டத்தால் எந்தப் பயனும் இல்லை.

பெருந்தோட்டப் பகுதிகளில் கடந்த காலங்களில் நல்லாட்சியில் முன்னெடுக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களில் பல்வேறு குறைபாடுகள் இருந்து வருவதுடன் குறிப்பாக குடிநீர் வசதியில்லாத நிலையே காணப்படுவது மிகப்பெரிய குறைபாடாகும்.

களுத்துறை மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட வீட்டுத்திட்டங்கள் சிலவற்றில் குடிநீர் வசதியில்லாத நிலை இருந்து வருவதை இங்கே சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

களுத்துறை, தெபுவன அரப்பொலகந்த தோட்டம், லிஸ்க்லேன் பிரிவில் மண்சரிவு அபாயத்தை எதிர்நோக்கிவந்த 29 குடும்பங்களின் பாதுகாப்பு கருதி கடந்த நல்லாட்சியின் மலைநாட்டு, புதிய கிராமம் உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்து தோட்ட நிர்வாகத்தினால் பாதுகாப்பான இடத்தில் காணி ஒதுக்கப்பட்டு தலா 7 பேர்ச் காணியில் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் ட்ரஸ்ட் நிறுவனத்தின் மேற்பார்வையில் ஒவ்வொரு வீடும் 10 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு பயனாளிகளுக்கே இலவசமாகவே கையளிக்கப்பட்டது.

குடிநீர்த் திட்டத்துக்கென 17 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் குடிநீர்த் திட்டம் ஆரம்பித்து வைக்கப்படாத நிலையில் அவசர அவசரமாக வீட்டுத் திட்டத்தை திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. திறந்து வைப்பதற்கு முதல் நாள் பவுசரில் நீர் கொண்டுவரப்பட்டு வீட்டுக் கூரைகளில் தண்ணீர்தாங்கிகளில் நீரை நிரப்பி வீட்டுத் திட்டம் திறந்து வைக்கப்பட்டது.

இது ஒரு ஏமாற்று நடவடிக்கை என்பது பயனாளிகளுக்குத் தெரியும். ஆனால் வீட்டுத் திட்டத்தை திறந்து வைத்த அரசியல்வாதிகளுக்கும், அதிகாரிகளுக்கும் இந்த ஏமாற்று வித்தை தெரிந்திருக்கவில்லை. ஆனால் யாரோ சில அதிகாரிகளின் ஆலோசனையின் பேரில் இந்த ஏமாற்று வித்தை அரங்கேற்றப்பட்டிருந்ததை ஒரு சிலர் மட்டுமே அறிந்திருந்தார்கள்.

வீட்டுத் திட்டம் திறந்து வைக்கப்பட்டு சில மாதங்களின் பின்னரே ட்ரஸ்ட் நிறுவனத்தினால் குடிநீர்த் திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. எனினும் பொருத்தமான இடத்தில் கிணறு தோண்டப்படாமல் மழைக்காலத்தில் கழிவுகள் நீரினால் அள்ளுண்டு செல்லும் நீரோடை ஒன்றுக்கு அருகில் கிணறு தோண்டப்பட்டு சிலிண்டர்கள் இறக்கப்பட்டு கிணற்றைச் சுற்றி சிமெந்து கற்களால் கட்டப்பட்டுள்ளதாக பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.

நீர் இறைக்கும் இயந்திரத்தின் மூலம் நீர் உறிஞ்சி எடுக்கப்பட்டு வீட்டுத் திட்டத்துக்கு அருகில் உயரத்தில் பொருத்தப்பட்ட சுமார் 20 ஆயிரம் லீற்றர் நீரைக் கொள்ளும் பிளாஸ்ரிக் தண்ணீர்த் தாங்கியில் நீர் நிரப்பப்பட்டு அதிலிருந்து குடியிருப்பாளர்களுக்கு நீர் விநியோகிக்கும் முறை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆனால் இத்திட்டம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத நிலை ஒருபுறமிருக்க, கிணற்று நீர் குடிப்பதற்கு உகந்ததாக இல்லாமல் களிமண் நிறமாக இருப்பதால் பயனாளிகள் இந்த நீரை குடிப்பதைத் தவிர்த்து மலசலகூடத் தேவைகளுக்கு மட்டுமே பாவித்து வந்ததாகத் தெரிவித்துள்ளனர்.



கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக குடிநீருக்காக பெருங்கஸ்டங்களை எதிர்நோக்கி வரும் இங்குள்ள மக்கள் நீண்டதூரம் நடந்து சென்று பாழுங்கிணறு ஒன்றிலிருந்தே குடிநீரைச் சுமந்து வருகின்றனர். குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்து கொள்கின்றனர்.

குடிநீர்த் திட்டத்துக்கென 17 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் மூலம் குடிப்பதற்கு உகந்த சுத்தமான நீரைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளமை குறித்து பயனாளிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அன்றைய அமைச்சராக இருந்த பழனி திகாம்பரம் அவரது அதிகாரிகள், அமைச்சின் செயலாளராக இருந்த ரஞ்சனி நடராஜபிள்ளை, ட்ரஸ்ட் நிறுவனத்தின் அப்போதைய தலைவராக இருந்த வீ. புத்திரசிகாமணி, திலகராஜ் எம்.பி மற்றும் பிரதேச அரசியல்வாதிகள் பலரின் கவனத்துக்கு கொண்டுவந்த போதிலும் எந்தவொரு பயனும் ஏற்படவில்லையென பயனாளிகள் கவலை தெரிவித்தனர்.

கடந்த 2018.10.17 ஆம் திகதியன்று இந்த அமைச்சுக்கு நான் நேரடியாகச் சென்று திலகராஜ் எம்.பியைச் சந்தித்து இதுபற்றி விபரமாக எடுத்துக்கூறியதையடுத்து அவர் உடனே அமைச்சில் பணிபுரிந்த பெண் அதிகாரியொருவரை அழைத்து அவருடன் பேசினார். அந்த அதிகாரி குடிநீர்த்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு நீர் விநியோகம் இடம்பெறுவதாக கூறி அப்போது சமாளித்து விட்டார். இவ்வாறு அவர் தெரிவித்த போதிலும் இன்றுவரையில் அத்திட்டம் பயனாளிகளுக்கு பயன்படாமல் கைவிடப்பட்ட நிலையில் இருப்பதே உண்மை.

2018ம் ஆண்டு 26ம் திகதி ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தையடுத்து ட்ரஸ்ட் நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்ட காலஞ்சென்ற எஸ். அருள்சாமியின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டபோது நேரில் சென்று பார்வையிட இருப்பதாகக் கூறியபோதும் அவர் திடீரென காலமாகிவிட்டார்.

இங்கு அமைக்கப்பட்டிருந்த குடிநீர்த் திட்டம் குறித்து ட்ரஸ்ட் நிறுவனத்தின் காலி காரியாலய அதிகாரியொருவர் கருத்துத் தெரிவிக்கையில், பொறியியலாளர்களின் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பொருத்தமான இடத்திலேயே கிணறு தோண்டப்பட்டது என்றும் நீர்வழங்கல் பகுதியினரால் பரிசோதனை செய்யப்பட்டு கொதிக்கவைத்து குடிக்க வேண்டும் என பயனாளிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.



எஸ்.விஜேபாண்டி

இப் பிரச்சினைக்கு தற்காலிகத் தீர்வாக பிரதேச சபை ஊடாக தினமும் பௌசர் மூலம் குடிநீரை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பின்னர் தொடங்கொட பிரதேசசபை ஆளுங்கட்சி உறுப்பினர் எஸ். விஜேபாண்டி மேற்கொண்ட நடவடிக்கையால் பிரதேச சபை மற்றும் மாகாண சபை நிதி ஒதுக்கீட்டின் மூலம் சுமார் 10 லட்சம் ரூபா செலவில் புதிய குடிநீர்த் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இது குறித்து குடியிருப்பாளர்கள் பிரதேச சபை உறுப்பினர் எஸ். விஜேபாண்டி மற்றும் பிரதேச சபைத் தலைவர் டெனியல் விஸ்வசாந்த ஆகியோருக்கு நன்றி தெரிவித்துள்ளனர். மக்களின் நாடித் துடிப்பை அறிந்த அரசியல்வாதி.

இங்கிரிய மூர்த்தி...

# ரணில் ஒன்றும் 'சுப்பர் மேன்' இல்லை

**ரணில் விக்கிரமசிங்க 'சுப்பர்மேன் இல்லை ஆட்சியமைக்க. ரணில் ஆட்சியமைப்பதற்கான வாய்ப்பு இல்லை என்கின்றார் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன். தினகரன் வாரமஞ்சரிக்கு அவர் வழங்கிய செவ்வி பின்வருமாறு.**



**கே: தமிழ் தேசிய கட்சிகள் அரசாங்கத்திற்கு ஆதரவாக செயற்படுவதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றதே, உண்மையா?**

பதில்: தமிழ் தேசிய கட்சிகளுக்கிடையிலான முரண்பாடுகள் தமிழ் மக்களுக்கு சங்கடமான பாதகமான நிலைமைகளை கொடுத்துக்கொண்டிருக்கின்றது. இந்த முரண்பாடுகளினால், அரசாங்கம் தன்னை தப்பித்து வைத்துக்கொள்வதற்கான வசதியையும், வழி வகைகளையும் ஏற்படுத்திக் கொடுக்கின்றது. நன்றாக அரசியலைப் புரிந்தவர்கள், ஆகக்குறைந்தது தலைவர்களாக இருக்கின்றவர்கள், சரியான பாதையில் கொண்டு செல்ல வேண்டும். எமக்குள் இருக்கும் பகைமை முரண்பாடுகள் அரசாங்கத்திற்கு லாபகரமானதாக மாறிவிடக்கூடாதென் பதில் இவர்கள் கவனமாக இருக்க வேண்டும். இது இன்று முதல் இல்லை, மிக நீண்டகாலமாக நடந்து வருகின்றது. இதை இல்லாமல் செய்வதற்கு தொடர்ந்தும் பலர் கதைக்கின்றார்கள் ஆனால், எந்தவிதமான பெறுபேறுகளையும், பிரியோசனங்களையும் கொடுக்கவில்லை என்று தான் நினைக்கின்றேன்.

**கே: 13வது திருத்தத்தை நீக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும், இந்திய அரசு இனப்பிரச்சினை விடயத்தில் மௌனம் காப்பது போன்று 13வது திருத்ததை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தமிழ் மக்களின் தேவைகளை நிறைவேற்றுமென நம்புகிறீர்களா?**

பதில்: 13வது திருத்தம் தொடர்பான சர்ச்சைகள், அது ஏதோ ஒற்றையாட்சிக்குள் கொண்டு வருவதற்கு, இந்தியாவிற்கு வழங்கிய கடிதத்தில் இருந்ததாகவும் அதற்குத் தான் கையொப்பமிட்டதாகவும், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான கட்சியினர், மிகத் தீவிரமாக, அதற்கெதிராக செயற்பட்டார்கள். ஆனால், கையெழுத்திட்ட கட்சிகள் இலங்கை இந்திய ஒப்பந்தம் கையெழுத்திட்ட காலத்தில் இருந்தே அதனுடன் நேரடியாக தொடர்புபட்டவர்கள். நாங்கள் அனைவரும் 13வது திருத்தம் முடிந்த முடிவாகவோ, தமிழ் மக்களுடைய அபிலாசைகளை தீர்க்கக்கூடிய தீர்வாகவோ, ஏற்றுக்கொள்ளவில்லை. 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டுமென்று உரியவர்களை கேட்டுக் கொண்டதற்கான அடிப்படை காரணம் இலங்கை அரசு 13வது திருத்தத்தை இல்லாமல் செய்வதற்கான முழுமையான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கின்றது.

அதைத் தடுக்க வேண்டும். எங்களுடைய அரசியல் அமைப்பில் அதிகாரப் பரவல் என்ற பெயரில் அற்ப சொற்பமாக ஏதோ இருக்கின்றது. அதைக் கூட இல்லாமல் செய்துவிடக்கூடாது. இல்லாமல் செய்து விட்டால் அடுத்தது என்ன என்ற கேள்வி இருக்கின்றது. இந்தியாவிற்கு தார்மீக கடமையும் இருக்கின்றது. எங்களுக்கு அவர்கள் ஏற்கனவே கூறியும் இருக்கின்றார்கள். ஆகவே, அவர்களுக்கு 13வது திருத்தத்தை இல்லாமல் செய்வதை தடுப்பதற்கான தார்மீக கடமை இருக்கின்றது. அதனால் தான் நாங்கள் அதைக் கேட்டிருக்கின்றோம். 13வது திருத்தத்துக்கு எதிராக கதைத்தவர்கள் இதுவரை காலமும் ஒரு தீர்வு சம்பந்தமாக, இதை எப்படி அடையப் போகின்றோம் என்று சொன்னதில்லை. தொடர்ந்தும், குறை சொன்னதை தவிர வேறு எதையும் செய்யவில்லை.

எங்களைப் பொறுத்தவரையில் இருப்பதையாவது காப்போம். கட்டி எழுப்பலாம் என்று தான் நாங்கள் அதைச் செய்தோம். இந்தியா மிக நீண்டகாலமாக எமது பிரச்சினையில் இருந்து விலகி இருக்கின்றது. இதன் மூலமாவது இந்தியாவை எமது பிரச்சினையில் தலையிட வைக்க வேண்டும் என்ற எண்ணமும் எங்களுக்கு இருந்தது. ஏனென்றால், இன்று இருக்கின்ற நிலைமையில், சர்வதேச அழுத்தங்கள் இந்த நாட்டிற்கு இல்லாவிட்டால், பிரச்சினைகள் நிச்சயமாக தீர்க்கப்படமாட்டாது. ஆகவே, இந்தியா மட்டுமே அக்கறை காட்டும். இந்தியா ஒன்றைத் தான் மற்ற நாடுகளும் விட்டுவிடுவார்கள். இந்தியா என்ன நடவடிக்கை எடுக்கின்றதோ அதை நாங்கள் ஆதரிப்போம் என்று அமெரிக்கா பல தடவைகள் சொல்லியிருக்கின்றது. அதனால்தான் நாங்கள் இந்தியாவிடம் கேட்டோம்.

**கே: இன்றைய சூழ்நிலையில், தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத்தில் இந்தியாவை நம்புவது தமிழ் மக்களை அழிவுப் பாதைக்கு கொண்டு செல்லும் என பலதரப்புக்கள் குற்றஞ்சாட்டுகின்றன. நீங்கள் இந்தியாவை மேலும் நம்புவது ஆரோக்கியமானதா?**

பதில்: உறுதிபட சொல்லவில்லை. ஏதோ ஒரு நாடு பின்னால் இருக்கின்றது. இன்று இருக்கின்ற உலக அரசியல் சூழ்நிலையில், ஏதோ ஒரு நாடு பின்னணியில் நிற்கின்றபோது தான் நாங்கள் பலமாக ஏதாவது செய்ய முடியும். அதை இந்தியா ஒன்று தான் செய்ய முடியும். வேறு எந்த நாடும் செய்ய முடியாது. இந்தியா பல காலமாக மௌனமாகவே இருந்திருக்கின்றது. ஏனென்றால் நாங்களும் கேட்கவில்லை. விடுதலைப் புலிகளின் போராட்ட காலத்தில் எவருமே இந்த 13 பற்றி சிந்திக்கவில்லை. அவர்கள் ஒரு இலக்கு வைத்துப் போராடிக்கொண்டிருந்தார்கள்.

**சுமித்தி தங்கராசா...**

அந்த இலக்கை மீறி வேறு ஒன்றைக் கேட்க வேண்டும் என்ற தேவை தமிழ் மக்களுக்கு இருக்கவில்லை. விடுதலைப் புலிகள் மௌனித்த பின்னர், அரசியல் தீர்வு வரும் என்ற ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்த படியால், இந்த ஏற்பாடுகளில் கவனம் செலுத்திக்கொண்டிருந்த தமிழ் கட்சிகள், அதுவும் நடைபெறாது போன பின்னர், ஏதோ ஒரு விதத்தில் இந்த 13வது திருத்தத்தை சரி காப்பாற்றி வைத்துக்கொள்வோம் என்ற எண்ணத்தில் தான் இதைக் கேட்டிருக்கின்றார்கள். இதை விடுத்து, எவரையும் எதையும் கேட்க கூடாதென்றால், இதை எப்படி அடைவது என்ற கேள்வி இருக்கின்றது. இன்று வரை இந்தியா தாங்கள் என்ன செய்யப் போகின்றோம் என சொல்லவில்லை. எங்களைப் பொறுத்தவரை, இந்த முயற்சியை எடுத்தோம். இதை வேறு நல்ல முயற்சியை வேறு யாராவது எடுக்கப் போகின்றார்கள் என்றால், அது வரவேற்கத்தக்கது. வெறுமனவே, குறை சொல்லிக்கொண்டிருப்பதில் பிரச்சினைகள் தீரப் போவதில்லை. ஆகவே, அதை அவர்கள் செய்ய வேண்டும்.

**கே: பங்கரவாத தடைச்சட்ட சீர்திருத்தத்திற்கு எதிராக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனினால் தலைமை தாங்கப்பட்ட கையெழுத்து நடவடிக்கைகள் அரசாங்கத்திற்கு சார்பாக பெறப்பட்டதாக குற்றஞ்சாட்டப்படுகின்றதே, உண்மையா?**

பதில்: இந்த குற்றச்சாட்டை நானும் அறிந்தேன். இதில் என்ன அரசாங்கத்திற்கு சார்பாக இருக்கின்றது. எந்த வகையில் அரசாங்கத்திற்கு சார்பாக இருக்கின்றது. கடந்த காலத்திலும் செய்யப்பட்ட விடயம். இலங்கையில் அனைத்து இன மக்களும் கையொப்பமிடுகின்றார்கள். உடனடியாக, பாரியதொரு தாக்கத்தை அரசு மேல் ஏற்படுத்தாது விட்டாலும், மிக அதிக எண்ணிக்கையான மக்கள் இதைக் கேட்கின்றார்கள் என உலகிற்கு காட்டுவது நல்ல விடயமாகவே பார்க்க முடியும்.

**கே: இலங்கை சீனாவை கைவிட்டு, இந்தியாவுடன் நேசக்கரம் நீட்டுவதை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்: பொருளாதார நெருக்கடியில், இவ்வாறான நடவடிக்கைகள் எடுத்தால், கடைசியாக பாதகத்தில் முடியும். ஆனால், நடுநிலையான கொள்கைகள் எடுத்து, எந்த நாடுகளும் எமது நாட்டில் ஆதிக்கம் செலுத்தாமல், அரசாங்கம் நடக்குமாக இருந்தால், அது நல்ல விடயம். சீனாவின் ஆதிக்கம் மிக அதிகமாக வந்துகொண்டிருந்தது. இப்போது அது குறைக்கப்பட்டிருக்கி;ன்றது. அந்தஅடிப்படையில், அரசாங்கம் இந்தியாவுடன் நேசக்கரம் பிடித்தால், அது ஒரு நல்ல விடயமாகவே நான் பார்க்கின்றேன்.

**கே: ஐ.நா தீர்மானங்கள் தொடர்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பு என்ன நிலைப்பாட்டில் உள்ளது?**

பதில்: ஐ.நா உட்பட இந்தியா மற்றும் ஏனைய நாடுகள் தொடர்பில் நாங்கள் கதைக்கின்ற போது, அவர்கள் 100 வீதம் ஏதோ செய்கின்றார்கள், செய்யப் போகின்றார்கள் என்பதைக் காட்டிலும், அவர்களின் அழுத்தங்கள் இந்த அரசாங்கம் மீது வரவேண்டும் என்ற ஒரு நோக்கம். ஆகவே, அவர்களை முழுமையாக நம்பி இருந்து ஏமாறுகின்றோம் என்று அர்த்தமும் அல்ல. சர்வதேச அழுத்தங்கள் இந்த நாட்டின் மேல் வர வேண்டுமென்றால், இது தான் ஒரு வழி. அதற்காக அதை செய்யாமல் விடவும் ஏலாது. அதை நம்பி இருந்து ஏமாறுகின்றோம் என்றல்ல அர்த்தம். அதை நாங்கள் தொடர்ந்து செய்து கொண்டு தான் இருக்க வேண்டும். சில விடயங்கள் குறைவாக இருக்கும். கூடுதலாக இருக்கும். அது அந்த நாடுகளையும், அந்த நாட்டில் இருக்கக்கூடிய தேவைகளைப் பொறுத்ததும், இலங்கை மிகச்சிறிய நாடு. ஐ.நா கூட்டத்தொடர் ரஷ்யாவுடனேயே போய்க்கொண்டிருக்கின்றது. நாங்கள் இவ்வாறான சம்பவம் நடக்குமென்று எதிர்பார்க்கவும் இல்லை. இம்முறை மிக இறுக்கமான அறிக்கையை ஐ.நா ஆணையாளர் கொடுத்திருக்கின்றார். இம்முறை தீர்மானங்களாக வராது. அடுத்த செப்டெம்பரில் தான் தீர்மானங்களாக வரும். தீர்மானம் எடுக்கின்ற போது தான் எமது செயற்பாடுகளை கவனமாக செய்து, இங்குள்ள நிலவரங்களின் தகவல்களையும், சரியான தரவுகளையும் கொடுத்தால், அவர்கள் அதை இறுக்கமாக எடுப்பார்கள். ஐக்கிய நாடுகள் சபைக்கு நடைமுறைப்படுத்துகின்ற அதிகாரம் கிடையாது. ஐ.நா சபைக்கு மட்டுமே உண்டு. அவ்வாறு ஐ.நா பொதுச் சபை மற்றும் பாதுகாப்புச் சபைக்கு கொண்டு செல்வதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். தொடர்ந்தும் முயற்சிகளை முன்னெடுக்கின்ற போது, ஒரு நாள் கட்டாயமாக பயனளிக்கும்.

**கே: விரைவில் இந்திய பிரதமர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவிருக்கின்றார். தமிழ் தேசிய கூட்டமைப்பு சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கான கோரிக்கைகளை முன்வைத்துள்ளீர்களா?**

பதில்: வருகின்றபோது சந்திப்பை மேற்கொள்வதற்கான வாய்ப்பை தருவார் என நம்புகின்றேன். அவ்வாறு சந்தித்தால், தற்போதுள்ள பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளதுடன், இந்த நாட்டில் பிரச்சினைக்கு பஞ்சமில்லை. அந்தப் பிரச்சினைகள் தொடர்பாக நாங்கள் மிகத் தெளிவாக கதைப்போம். முக்கியமாக எமது தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றி எடுத்துரைக்கவும், தீர்வு விடயம் தொடர்பாகவும் எடுத்துரைப்போம்.

**கே: ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஆட்சி அமையும் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு ஆட்சி உருவாகுமா? அவ்வாறு உருவாகினால், ஆதரவு கொடுப்பீர்களா?**

பதில்: அவ்வாறு ஆட்சி உருவாகுவதற்கான வாய்ப்புக்கள் மிக மிக அரிது. என்னைப் பொறுத்தவரையில், என்னுடைய தனிப்பட்ட கருத்து. அப்படியான ஒரு ஆட்சி உருவாகுமென்று நான் அதை நம்பவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட ரணில் ஒன்றும் சுப்பர் மான் இல்லை. ரணில் ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்பு மிக மிக குறைவு.


**பெயர் பெற்ற வங்கி ஒன்றின் கிளைக்கு காரியாலய இடம் வேண்டப்படுகிறது**

- நிலப்பரப்பு அண்ணளவாக 2500 சதுர அடிகள். (இரண்டு மாடிகள் கொண்ட கட்டிடமாக இருப்பின், அதன் நிலப்பரப்பு 1500 சதுர அடிகளுக்கு மேலாக இருக்க வேண்டும்)
- நகரத்தின் வியாபார கேந்திர பகுதியில் காணப்பட வேண்டும்
- குறைந்தது 4 கார்கள் நிறுத்தக் கூடிய வாகனத்தரிப்பிட வசதி.
- வீதி முகப்பு 30 அடிகளுக்கு மேல் காணப்பட வேண்டும்.
- 3 பேஸ், 60 அம்பியர் மின் இணைப்பு

**நுவர எலிய**

தயவு செய்து தொடர்பு விவரங்கள், இருப்பிடம், காணப்படும் வசதிகள், எதிர்பார்க்கப்படும் வாடகை போன்றவற்றை கொள்முதல் மேலாளர், த. பெ. இலக்கம் 317, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பவும்.

Browns Engineering & Construction

**Browns Engineering and Construction (Pvt) Ltd**

இல. 19 |Browns கெபிடல்கட்டிடம் |5ஆம் மாடி |டெட்லி சேனாணாயக்க மாவத்தை கொழும்பு 08'இலங்கை

**வழங்குனர்களைப் பதிவு செய்தல் 2022/23**

2022/2023 ஆம் ஆண்டுக்காக கீழே படய்யலிடப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு தாமாகப் பதிவு செய்துகொள்ள விரும்புகின்ற நாடுபூராகவும் உள்ள கீர்த்திமிக்கத் தயாரிப்பாளரகள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் வழங்குனர்களிடமிருந்து Browns Engineering & Construction (Pvt) Ltd மூலம் விண்ணப்பங்கள் கோரப்படுகினற்ன.

| விபரம | வகை |
|---|---|
| கட்டடப் பொருட்களும் ஹாட்வெயார் பொருட்களும் | A |
| பொதுவான மூலப் பொருட்கள்<br>செங்கற்கள், சீமெந்து புலொக் கல், மண், கிரவல், மணல், சல்லி கறக்ள், உடைத்தகருங்கற்கள், ABC, கற்பாறைகள், தார், புவிபிரயோக், விரிப்புகள, சீமெந்து, Ready - mix சீமெந்துக் கலவை, மென்சாந்து (Grout) வர்ணப்பூச்சுகள், அறுப்புமரம், Plywood, மீள் வலுவூட்டப்பட்ட உருக்கு கம்பி, கட்டுக் கம்பி போன்றன. | A 1 |
| பொதுவான ஹாட்வெயார் பொருட்கள் - M. S Plate, G I Pipes (வலிமை வாய்ந்த, நடுத்தரமான) சாரக் குழாய்கள் (Scaffolding) ஏணி, GI கட்டுக்கம்பி, கம்பி வலை, வெல்டிங் கம்பி, அலுமினியம், செப்பு, வெண்கல குழாய்கள், நீர்ப்பம்பிகள், மூழ்கிப் பம்பிகள், மின்சாரக் கருவிகள், நட்டு மற்றும் போல்ட், சிறிய கருவிகள் மற்றும் துணை பொருட்கள், ஆணி, கவவ் ிகள் மற்றும் ஹாட்வெயார் பொருத்துகள், இழுவைப் சட்டங்கள்ஃகோல்கள், போன்றன. | A 2 |
| முன் வார்ப்புசெய்யப்பட்ட கொங்ரீட் பொருட்கள<br>முன் வார்ப்புசெய்யப்பட்ட மூடி கொங்ரீட் சட்டகங்கள், சுருஸ்ஃக் குழாய்கள், ஓரக்கற்கள் பாதுகாப்புக் கற்கள், கிலோமீட்டர் கம்பங்கள், நேர்க்குற்றிகள், கைபிடிகள், இணைப்பிகள், எல்லை அடையாளப்படுத்தும் பொருட்கள், முன்கூட்டியே அழுத்தம் செய்யப்பட்ட கொங்ரீட் விட்டங்கள் போன்றன. | A 3 |
| தார் பொருட்கள் MC30, CRS1, CRS2, CSS1, Bitumen 60/70, Bitumen 80/100, போன்றன. | A 4 |
| தொலைத்தொடர்பு நோக்கத்திற்கான கம்பங்கள் ஹாட்வெயார் பொருட்கள், ஏரியல் பொருத்துகள், (C-கொக்கி, L- கொக்கி, நட்டு மற்றும்போல்ட், போல் ப்ரகெட்ஸ், முடிவு ப்ரகெட்ஸ், 2R ப்ரகெட்ஸ், நேரான கவ்விகள்) கருவிகள், (திருகானி செலுத்தி, குறடு, இணைந்த திருகி (Combination spanner), நைவாள் சட்டகம், பாரிய சுத்தியல், மின்சார வயர், தார் வெட்டி) | A 5 |
| இயந்திர மற்றும் மின்சார அத்துடன் குழாய் பொருதது் கள், குழாய் பொருத்தல் வேலைகளுக்கான (HDPE/ PVC/ uPVC), துணைப் பொருட்கள், மின்சாரக் கடத்தி, சுகாதார பொருத்திகள், மின்சாரக் கேபள், வலையமைப்புக் கேபள், பய்பர் கேபள், பெட்ச் கோட், சுவிட்ச்கள், சொக்கெட் கோட், MCB, RCCB, விளக்கு பொருத்திகள் போன்றன. | A 6 |
| பாதுகாப்பு உபகரணங்கள், பொதுவான பொறியியல் வேலைகள், பாதுகாப்பு சப்பாதது் , தலைக்கவசம், கையுறைகள், பாதுகாப்பு அங்கிகள், பாதுகாப்புக் கண்ணாடிகள், பாதுகாப்பு சமிக்சை பலகைகள், மின்னும் ஒளி விளக்குகள் | A 7 |
| சீருடைகள் / ஆடைகள் மற்றும்துணைப் பொருட்கள் | A 8 |
| இயந்திரம் / உபகரணம் மறறு் ம் வாகன வாடகை<br>பாரிய இயந்திரம், டோஸர், பெக்கோ, லோடர்ஸ், அகல்வுக் கருவிகள், டிப்பர், பார ஊர்தி, நிர்மாண உபகரணங்கள், அதிர்விகள், வளைக்கும் இயந்திரம், பொலேரோ கெப் வாகனம், பூம் ட்ரெக், (3 டொன், 5 டொன்)இ மினி வேன், சிறிய வர்த்தக வாகனங்கள், நான்குசக்கர கெப் ரக வாகனங்கள், க்றூ கெப்ரக வாகனங்கள், வேன்கள், SUV uf வாகனங்கள், மோட்டார்சைக்கிளக்ள்போன்றன. | B |
| தொலைத் தொடர்பூட்டல் / மின்சார மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் | C |
| வாயுச் சீராக்கிகள், மின்பிறப்பாக்கிகள், மின்சார சாதனங்கள், (குளிர்சாதனப் பெட்டி, ஹீட்டர்ஸ், கொதிகலன்கள், வெக்யூம் க்ளீனர், உதிரிப்பாகங்கள் மற்றும் வேறு துணைப் பொருட்கள்) வலையமைப்பு சுவிட்ச்கள் (L3,L2 மற்றும் ஏனைய), ரௌடர்ஸ் மற்றும் ஏனைய மாற்றிகள். | C1 |
| தொலைத் தொடர்பூட்டல் உபகரணங்கள், (செல்லிடத் தொலைபேசிகள், தொலைபேசி முறைமை மற்றும் வேறு தொடர்புபட்ட துணைப் பொருட்கள்) | C2 |
| காகிதாதிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | D |
| மடிக் கணினி, அச்சு இயநதிரங்கள், போட்டோ பிரதி இயந்திரங்கள், கட்டர் ஸடென்சில், ப்லொட்டர் இயந்திரங்கள் அல்லது ஸ்கேனர்கள், காசோலை வரைவு இயந்திரங்கள், புத்தகம் கட்டும் இயந்திரங்கள், லெமினேட்டிங் இயந்திரங்கள், பணி நிலையங்கள் சேமிப்பகங்கள் போன்றன.<br>கணினி சார்ந்த உபகரணங்கள் (UPS, சேமிப்பகம் மென் பொருள், CCTV கெமரா முறைமை, விசைப் பலகை, mouse, monitors) அச்சு இயந்திர நுகரத்தக்கவை (ரிபன்கள், கார்ட்ரிஜ், டோனர்கள்) | D1 |
| அலுவலக உபயோகப் பொருட்கள் - அனைதது் வகையான கடித உறைகள் / அச்சிடப்பட்ட கடித உறைகள், ஒட்டும் பதார்த்த போத்தல்கள், பேபர் க்லிப்ஸ், பைல் மட்டை, பொக்ஸ் பைல், பைல் ஒட்டும் பொருட்கள், பைல்கள் மற்றும் கோவைகள் டிபெக்ஸ், ப்லாஸடி க் கோவைகள், இறப்பர் முத்திரை பேட்கள், பேபர் ஊசிகள், ஸ்டேப்லர் பின்கள், துளை கருவிகள், ஸ்டேப்ளர் இயந்திரங்க் ள், மார்க்கர் பேனாகள், பேனாக்கள், பென்ஸில்கள், அடிமட்டம், கத்தரிக்கோல், புத்தகங்கள், தட்டச்சுத் தாள்கள் | D2 |
| தளபாடங்களும் பொருத்துகளும்<br>வீட்டு மற்றும் அலுவலக தளபாடங்கள் (மேசைகள்/கதிரைகள்/கபட்களை/பைல் இறாக்கைகள்) | E |
| இயந்திரங்கள் மறறு் ம் உபகரணங்கள் வழங்கள்<br>Compressors, ஸ்ப் ்ரே இயநதிரங்கள், நீர்ப் பம்பிகள், தச்சு வேலை இயந்திரங்கள், உதிரிப்பாகங்கள், வீதி இயந்திரங்கள், நிலஇயந்திரங்கள், காகிதாதி மற்றும் நடமாடும் ரெடி மிக்ஸ் கொங்ரீட் பொறிகள், தார் பொறித் தொகுதி அதிர்வி இயந்திரங்கள் போன்றன. | F |
| சேவைகள | |
| 1. கப்பற் பொருள் அனுப்பும் முகவர்கள்<br>2. பாதுகாப்புச் சேவைகள்<br>3. தீயணைப்பு சேவைகள் மற்றும் பராமரித்தல்<br>4. தொழிலாளர் வழஙக்ல் (தேர்ச்சி பெற்ற, தேர்ச்சி பெறாத)<br>5. வாயுச் சீராக்கி பராமரிப்புச் சேவைகள் | |

**நியதிகளும் நிபந்தனைகளும்**

1. ஏற்கனவே பதிவுசெய்துள்ள வழங்குனர்கள், அதிகாரமளிக்கபட்டட் வணிகர்கள் பதிவுசெய்வதற்கு மீண்டும் விண்ணபபிக்க வேண்டும்.
2. எமது விபரக்குறிப்புகளுக்கும் தேவைபப்ாடுகளுக்கும் இணங்கவளங்கள் செய்வதற்குதவறுகின்ற வழங்குனர்கள்ஃ ஒபபந்தக்காரர்கள் தகைமை இழப்பர் என்பதுடன் மேலதிக அறிவித்தலின்றி கறுபப்ப் படடி யலில் இடம்பெறுவர்.
3. https://www.brownsinvestments.com/media/#media இணைப்பில் அல்லது Browns தலைமை அலுவலகத்திலிருந்து சேகரிக்கக் கூடிய மாதிரி ஆவணங்களில் வழங்கப்பட்ட மாதிரிக்குஅமைவாக சுயமாக தயாரிக்கப்படட் விண்ணப்பப் படிவத்தில் விண்ணபபிக்குமாறு விண்ணப்பதாரிக்கு ஆலோசனை வழங்கபப்டுகின்றது.
4. விண்ணபப்படிவத்தில் குறித்துரைக்கப்பட்ட வியாபாரப் பதிவுச் சான்றிதழ் மற்றும் ஏனைய தொடர்புடைய ஆவணங்களின் பிரதி விண்ணபப்ப் படிவத்துடன் சேர்த்துசமர்ப்பிக்கப்பட வேண்டும். சொலல்பப்டட் ஆவணத்தினை சமர்ப்பிப்பதற்கு தவறுகின்றமை இணங்காமையாகக் கொள்ளப்படுவதுடன், அத்தகைய விண்ணப்பதாரிகள் தகைமை இழபப்ர்.
5. அனைத்து விண்ணப்பங்களும் பதிவுத் தபால் மூலம் அல்லது விண்ணப்பம் சமர்ப்பிக்கும் இணைப்பிற்கு சமர்ப்பிபப் தன் வாயிலாக 30/04/2022 அன்று அல்லதுஅதற்குமுன்னர். இதன் கீழ் குறிபபிடப்படடுள்ள முகவரிக்கு அனைத்து விண்ணபப்ங்களும் ஒபப்டைக்கப்பட வேண்டும்.
6. முடிவுத் திகதிக்கு முன்னர் கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களை மதிபப்டீசெய்து ஏதேனும் விண்ணபப்ங்களை ஏற்றுக் கொள்வதற்கு அல்லது கம்பனி உரிமையினைக் கொண்டிருக்கும்.

விண்ணப்பங்கள் அனுப்பபப் ட வேண்டியது, பெறுகை முகாமையாளர்

**Browns Engineering & Construction (Pvt) Ltd,**

5ஆம் மாடிஇ இல. 19, Browns கெபிடல் கட்டிடம், டெட்லி சேனாணாயக்க மாவத்தை, கொழும்பு 08

தொலைபேசி இல: 077 769 8225 / 070 470 3054

Email: nishanthawi@brownsinvestments.com, prasadcr@brownsinvestments.com

# ஆளுக்கொரு ஆசை

## அரசை வீழ்த்துவதில் அயராத வீணாசை!



உள்நாட்டு உற்பத்திகளில் நாட்டம் காட்டாத நிலைமைகளால் ஏற்பட்டுள்ள விபரீதங்களுக்கு கூட்டுப்பொறுப்பு அவசியம். எந்த அரசியல் கட்சிகளும் இதில் தனியே பிரிந்து நிற்க இயலாது. கடந்த காலங்களில் பெற்ற கடன்களால்தான் இன்றைய கையறுநிலை என யாரையும் விரல்நீட்ட முடியாத விபரீதமும் இதுதான். இதனால்தான், எல்லோரையும் கூட்டுப்பொறுப்புடன் ஒத்துழைக்குமாறு ஜனாதிபதி கோரியுள்ளார்.

இந்த ஒத்துழைப்பு அரசியல் ஆதாயம் சாராததாக இருப்பதும் அவசியம். தொழிற்சங்கங்களைத் தூண்டிவிடல், தருணம் பார்த்துக் கழுத்தறுக்க கைவிரித்தல், பதுக்கிவைத்தல் மற்றும் அரசியல் சாயம் பூசாது செயற்படல். இதுதான், ஜனாதிபதி கோரும் ஒத்துழைப்பு. ஆனால், இந்த உழைப்புக்கு இன்று ஒருவரும் தயாரில்லை.

யாரால் வந்த நெருக்கடி இது? இந்த நெருக்கடி யாரை நேரடியாகப் பாதிக்கிறது? என்ற பார்வைகள்தான் இப்போது அவசியம். இதைவிடுத்து வரவுள்ள வெளிநாட்டு உதவிகளைத் தடுப்பதும், சர்வதேசத்தில் அரசாங்கத்தைக் காட்டிக் கொடுப்பதும் தர்ம அரசியலாகுமா? ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைக்கு பொறுப்பானவர்களுக்குப் பதிலடிக்க தேர்தல் இருக்கிறதுதானே! அதற்காக, இப்போதிருந்தே இதற்கான வியூகங்களிலிறங்குவதுமக்களின் வயிற்றிலடிப்பது மாதிரித்தான்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணிலின் நிலைப்பாடும் இதுதான். எல்லோரும் மூழ்கப்போகும் வெள்ளம் வருகையில், இவரால்தான் வந்ததென்ற வீண்வம்பு பேசுவது, நுணலும் தன் வாயால் கெடும் என்பதுதானே! நாட்டின் கருவூலமான திறைசேரியை கூண்டோடே அள்ளிச்சென்ற கூட்டத்தினரின் சாயல்கள்தானே! அரசைப் புரட்ட சந்திக்கு வந்துள்ளன. அதைக் காப்பாற்றவோ அல்லது தண்டிக்கவோ



**யாரால் வந்த நெருக்கடி இது? இந்த நெருக்கடி யாரை நேரடியாகப் பாதிக்கிறது? என்ற பார்வைகள்தான் இப்போது அவசியம். இதைவிடுத்து வரவுள்ள வெளிநாட்டு உதவிகளைத் தடுப்பதும், சர்வதேசத்தில் அரசாங்கத்தைக் காட்டிக் கொடுப்பதும் தர்ம அரசியலாகுமா? ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைக்கு பொறுப்பானவர்களுக்குப் பதிலடிக்க தேர்தல் இருக்கிறதுதானே!**



திராணியிழந்த ஸ்ரீ.ல.சு.க.தானே, இப்போது சர்வகட்சி மாநாட்டுக்கு அழைக்கிறது. அழைப்போடு மட்டும் நிற்கவில்லை இக்கட்சி. இன்னொரு புறம் கிளர்ச்சியையும் கிள்ளிவிடுகிறது. இதைத்தான் பிரதமர் பூடகமாகச் சொன்னார். ரணிலை அழைத்து தேசிய அரசாங்கம் அமைக்கும் அளவுக்கு அரசாங்கம் வங்குரோத்து அடையவில்லை என்கிறார் அவர்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள், இந்திய உதவிகள் மற்றும் இதர திட்டங்கள் எல்லாம் மீண்டெழுகைக்கான மூலவழிகளல்ல. முதல்வழிகள் மாத்திரமே! இருந்தும், இதிலும் சிக்கல் இருக்கிறதுதான்.

இதற்காக, இவர்கள் விதிக்கப்போகும் விதிகள் அல்லது நிபந்தனைகள் நாட்டைப் பாதிக்குமா? தமிழ் புலம்பெயர் அமைப்புக்களின் செல்வாக்குகளால், நாட்டின் இறைமைக்கு என்ன நேருமெனச் சிந்திப்பது நாட்டுப்பற்றாக இருந்தால் நல்லதுதான், அதற்காக இது ஆட்சிப்பற்றாக இருக்கக் கூடாது. எந்தப்பற்றாக இருந்தாலும் முதலில் மனிதப்பற்றாக அல்லது மானிடப்பாசமாக இருத்தலவசியம்.

இந்தியா இதைத்தான் செய்திருக்கிறது. ஒரு பில்லியன் அமெரிக்க டொலரைக் கடனாக வழங்கி, அயல் வீட்டு நண்பனின் அந்தரத்துக்கு உதவியிருக்கிறது. எரிபொருள், மருத்துவம், தொழினுட்பம் இன்னும் விவசாய நோக்குகளுக்குத்தான் இந்த நேசக்கரம். பின்னர்தான், இதற்கான பிரதிபலன்கள். இலங்கையின் இன்றைய நிலவரத்தில் இந்தப் பார்வைகளே அவசியம். இதைத்தான் நமது எதிர்க்கட்சிகளும் சிந்திக்க வேண்டும். இதைவிடுத்து, இன்றே தேர்தல் வேண்டும், உடனே அரசாங்கத்தை ஒப்படைக்க வேண்டும் என்பதெல்லாம் ஏமாந்தமான உணர்ச்சிகளே!

தனக்கு உதவ முன்வந்த மூன்று அரபுநாடுகளின் உதவிகளையும் அரசுக்குப் பெற்றுக்கொடுக்க பணியாற்றியிருந்தால், சஜித் ஆசைப்படுவது, அடுத்த தேர்தலில் கிடைக்காமலா போகும்? மக்கள் இதை மறக்காமலா இருப்பர்? இந்த அரசுக்கு அரபுநாடுகளா உதவப் போகின்றன? என்ற கேள்விகள் எழாமல் இருக்காதுதான். உதவ வைப்பதை விடவும் சஜித்துக்கு என்ன பெயரும் புகழும் இருக்கிறது. இதில் இது மட்டுமா? ஐக்கிய மக்கள் சக்திக்கு கிடைக்கும் வெளிநாட்டு உதவிகளுக்குப் பின்னால், ஏகாதிபத்தியம் ஏதோ அடையக் காத்திருக்கிறது என்ற தென்னிலங்கை பிரச்சாரத்துக்காவது வாய்ப்பூட்டு போட்டிருக்கலாம் இல்லையா?

**சுஹைப் எம்.காசிம்...✍**

---

**பிரபல எழுத்தாளரும் கவிஞருமான எம்.எச்.எம். ஷம்ஸின் 82 ஆவது பிறந்ததினத்தையொட்டி (17.03.1940 – 17.03.2022) இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

# ஷம்ஸின் எழுத்துக்கள் சமூக உணர்வும் தீட்சண்யமான பார்வையும் கொண்டவை

எழுத்தாளர் என்ற கருத்தின் எல்லாப் பரிமாணங்களுக்கும் வாழும் அர்த்தமாக எம். எச். எம். ஷம்ஸ் விளங்கினார். எழுத்து அவரது வாழ்க்கையும் நம்பிக்கையுமாகும். அதை அவர் தனக்காக மட்டுமன்றி சக மக்கள் பிரிவினரோடு பகிர்ந்து கொள்ளவும் பல்துறை எழுத்தாற்றல் உள்ளவர்களை உருவாக்கவும் தனது நேரத்தை செலவிட்டார். இளைய தலைமுறை எழுத்தார்வம் உள்ளவர்களை அவர் களது எழுத்துத் துறை எதைச் சார்ந்ததாக இருந்தாலும் அதை வளர்த்து மக்கள் மன்றத்திற்கு கொண்டு வரும் வரை அவர்களுக்கான ஆலோசனை களையும் உதவிகளையும் வழங்குவதில் தொடர்ச்சியாகச் செயல்பட்டார்.

எம். எச். எம். ஷம்ஸின் அகால மரணத்தினால் எழுத்துலக மற்றும் பத்திரிகை உலக செயற்பாடுகள் ஸ்தம்பித்தது போன்ற ஒரு உணர்வு பரவியதை ஷம்ஸை அறிந்தவர்கள் பெற்றனர்.

ஷம்ஸ் எப்போதுமே ஒரு வேறுபட்ட தனித்துவமான எழுத்தாளராக மிளர்ந்தார். பயமோ தயக்கமோ அவரது எழுத்துக்களில் என்றுமே இருந்ததில்லை.அவரது எழுத்துக்கள் அந்தளவு சமூக உணர்வும் தீட்சண்யமான பார்வையும் எதிரிகளின் சலசலப்புக்கு அஞ்சாத மனநிலையும் கொண்டவையாக இருந்தன.

ஷம்ஸைப் போன்ற ஒரு எழுத்தாளரை சமூகம் மிக நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர்தான் பெற முடியும். அவர் வாழ்ந்திருந்ததை விட அவரது முக்கியத்துவத்தையும் தேவையையும் அவரது இழப்பு பன்மடங்காக்கி உள்ளது.

சிங்கள – தமிழ் மக்களிடையே புகழ் பெற்ற வெண்புறாவே பாடலும் அவரது மாக விளங்கின. குறிப்பாக தினகரனில் 1997 ல் ஆரம்பமாகி பல வருடங்கள் இளைஞர்களின் இலக்கிய வளர்ச்சிக்காக அவர் நடத்திய 'புதுப்புனல்' அவரது புகழுக்கும் இலக்கிய பரப்புகைக்கும் உறுதுணையாக அமைந்திருந்தது. அதை அவர் எவ்வளவு பெரிய இலட்சியத்துடனும் வெறியுடனும் நடத்தினார் என்பதற்கு அதனால் பலன் அடைந்த நூற்றுக் கணக்கான இளைஞர்கள் அதற்குச் சாட்சி பகர்வார்கள். ஷம்ஸ் எழுதியவை கவிதையானாலும் சிறுகதையானாலும் நாவல்களானாலும் அதில் சமூக யதார்த்தம், சமூக மாற்றம், சாதாரண மனிதனின் அவலத்தின் வெளிப்பாடு என்பனதான் பிரதான பண்புகளாக அமைந்திருந்தன.





சமாதானப்பற்று மற்றும் போர் எதிர்ப்புப் பாடல்கள் கொண்ட 'மானுட கீதம்' (2004) நூலும் அவரின் மானுட நேசத்தின் மிகப் பெரும் நினைவுகளாக அவரது பெயரை மறையாது பாதுகாக்கும்.

ஷம்ஸின் எழுத்து முயற்சிகள் 1950களில் 'தென்மதி' என்ற கையெழுத்துச் சஞ்சிகையில் இருந்து ஆரம்பமாகியுள்ளது. இக்காலப் பகுதி அவரை எழுத்துத் துறைக்குத் தூண்டியது மட்டுமன்றி இக்காலப் பகுதியின் உள்நாட்டு வெளிநாட்டு அரசியல் நிகழ்வுகளும் அவற்றின் தாக்கங்களும் அவரை வெகுவாகப் பாதித்திருந்தன. குறிப்பாக 1956 ஐ அண்மித்த காலப் பகுதி இளைஞர் ஷம்ஸின் எதிர்காலத்திற்கான சிந்தனை ஓட்டங்களுக்குக் கால்கோள் இடுவதாக அமைந்தது. மேற்கத்திய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக எகிப்தில் நடந்த நாசரின் எழுச்சி, வியட்னாமிற்கு எதிரான அமெரிக்க ஆக்கிரமிப்பு ஆசிய ஆபிரிக்க நாடுகளின் காலனித்துவ ஆதிக்கம், அந்த நாடுகளின் விடுதலை வேட்கை, சோவியத் நாட்டினதும் சீனாவினதும் கியூபாவினதும் சோஷலிச கொள்கைகள், பலஸ்தீனப் பிரச்சினை, மார்க்சிய சிந்தனைகள் என்று அவரது எதிர்காலத்திற்கான சிந்தனைத் தளங்கள் பதிவு பெற்றன.

ஷம்ஸ் ஒரு பத்திரிகையாளராக இருந்ததும் தேசியப் பத்திரிகைகளில் அவருக்கு இருந்த தொடர்புகளும் அவரது செல்வாக்கிற்கும் மக்கள் தொடர்பிற்கும் பக்கபலமாக... 1965 களில் வெளிவந்த ஏ. ஏ. லத்தீபின் 'இன்ஸான்' பல முஸ்லிம் எழுத்தாளர்களின் இலக்கிய பட்டறையாக மட்டுமல்ல சமூக யதார்த்தம் சமதர்ம சிந்தனை மனித நேயம் என்பவற்றின் அடிப்படையில் இருந்து இலக்கியம் படைக்கும் புது அலைப் படைப்பாளிகள் பலரை அது தோற்றுவித்தது. அதன் மூலமும் அதே காலப் பிரிவிலும் எழுதிய அநேக இளம் முஸ்லிம் எழுத்தாளர்களின் இலக்கிய பிரவேசம் முஸ்லிம் இலக்கிய பாரம்பரியத்திற்கும் ஒரு பொது நோக்கில் தமிழ் பேசும் இலக்கிய உலகிற்கும் புது இரத்தம் பாய்ச்சுவதாக அமைந்தது.

1972 இல் வெளிவந்த வை. அகமதின் 'புதிய தலைமுறைகள்' போன்ற சில நல்ல நாவல்கள் வரிசையில் ஷம்ஸின் கிராமத்துக் கனவுகளுக்கும் முக்கிய இடமுண்டு. அது தான் வாழும் தென் பிரதேசத்தின் மண் வாசனையோடும் இயல்பாக மக்கள் வாழ்வில் எழும் பிரச்சினைகள் மோதல்கள் என்பவற் றோடும் அதேவேளை செல்வந்தர்கள் வறியவர்கள் அல்லது அடித்தட்டு மக்கள் என்ற வர்க்க மோதல்களுக் கிடையிலும் சமய ரீதியான கருத்து மோதல்களுக்கிடையிலும் பிரச்சினை களைச் சந்தித்த ஒரு கிராமத்தின் வாழ்வு ஷம்ஸின் நாவலில் பதிவு செய்யப்பட்டது.

ஷம்ஸ் தனது தென் மாகாண முஸ்லிம் கிராமங்களின் கடந்த தலைமுறையினரின் வாழ்வை சமூக யதார்த்தப் பார்வையோடு சித்தரித்து அது பற்றிய உண்மையான பதிவுகளை நம்முன் நாவலாக படைத்துள்ளார். ஒரு எழுத்தாளனிடம் இருந்து ஒரு சமூகமும் இலக்கிய உலகும் எதிர்பார்க்கும் ஒரு உயர்ந்த பணியை தனது 'கிராமத்துக் கனவுகள்' மூலம் ஷம்ஸ் நிறைவேற்றினார்.

எம். எச். எம். ஷம்ஸ் எந்தளவு இலக்கியவாதியாக இருந்தாரோ அதேயளவு சமூக சீர்த்திருத்த மற்றும் புரட்சிகர உணர்வுகளின் சொந்தக்காரராகவும் இருந்தார். அவரை முழுமையாகப் பார்ப்பது அவ்வளவு இலகுவானதல்ல. அவர் பற்றிய விரிவான தகவல் சேகரிப்பும் அவரது எழுத்துக்கள் பற்றிய விரிவான மதிப்பீடும் சாத்தியமாகும் போது அவரைப் பற்றிய பல்பரிமாண அளவீடு சான்றுகளுடன் முன்வைக் கப்படும் நிலை உருவாகும் என எதிர்பார்க்கலாம்.

பேராசிரியர்
**எம்.எஸ்.எம். அனஸ்...✍**
(நாச்சியாதீவு பர்வீனின் நூல் வெளியீட்டு விழாவொன்றில் ஆற்றிய உரையிலிருந்து)

CANADIAN ACADEMY
Pioneer in Higher Education

# கெனடியன் எகடமி கல்வி நிறுவனம்

## 22ஆவது வருட நிறைவை இன்று பெருமையுடன் கொண்டாடுகிறது

**22 ஆவது வருட நிறைவை விழாவைக் கொண்டாடும் கண்டி கட்டுகஸ்தோட்டையில் அமைந்துள்ள கெனடியன் எகடமி கல்வி நிறுவனத்தின் 22 ஆவது வருட நிறைவு விழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கெனடியன் கல்வி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் முஹமட் மின்ஹாஜ் தலைமையில் பொல்கொல்ல என். ஐ. சி. டி இன் பிரதான மண்டபத்தில் இன்று 9.00 மணிக்கு இடம்பெறுகிறது.**



**Mr. Mohammed Minhaaj**
(Canadian and C.E.O)
BIT(India), ACS(AU),
MCP Microsoft-U.S.A, NCC(SL),
DCBA(SL)

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் தூதுவர் எச். எம். பாருக் கலந்து கொள்கிறார்.அத்துடன் சிறப்பு அதிதிகளாக அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி, கம்பளை வர்த்தக சங்கத்தின் செயலாளர் கண்டி மாவட்ட கிக் குத்துச் சண்டை விளையாட்டுக் கழகத்தின் விசேட ஆலோசகருமான பஸ்லான் பாரூக், பூஜாப்பிட்டிய பிரதேச சபை உறுப்பினர் உவைஸ் ரஸான் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கண்டி கட்டுகஸ்தோட்டையில் அமைந்துள்ள கெனடியன் எகடமி கல்வி நிறுவனம் தேசிய மற்றும் சர்வதேச கல்வியை வழங்கி 22 ஆண்டுகள் நிறைவு விழாவைக் கொண்டாடுகிறது. இக்கல்வி நிறுவனம் 2000 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாகும். இதன் நிறைவேற்றுப் பணிப்பாளராக முஹமட் மின்ஹாஜ் விளங்குகின்றார். சிறந்த ஆசிரியர் குழாத்தினரை கொண்டு இயங்கி வருகின்றது.

மாணவர்களுக்கு சிறந்த கல்வியும் , உயர் தொழில் வாய்ப்புக்களையும் வழங்கி உயர் துறைகளில் நிலையான உறுதிப்பாட்டுடன் பணியாற்ற களம் அமைத்துக் கொடுக்கின்ற ஒரு கல்வி நிறுவனம் என்பது நாம் எல்லோரும் அறிந்த விடயம்.

இக்கல்வி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட முதல் இன்று வரையிலும் 1000க்கு மேற்பட்ட மாணவ, மாணவிகள் கல்வி கற்று பயனடைந்துள்ளார்கள்.இக்கல்வி நிறுவனம் அரசாங்கத்தில் உள்ள தொழில் கல்வி நிறுவனத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட உயர் கல்வி நிறுவனமாகும்.













கனடா ,போலாந்து, மலேசியா, சிங்கப்பூர் போன்ற பல நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களுடன் இக்கல்வி நிறுவனம் கைகோர்த்துக் கொண்டு மாணவர்களை வலுவூட்டி வருகின்றன. தொழில் சார் பாடநெறிகளை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு சிறந்த தொழில் பயிற்சி வழங்குவது மட்டுமல்ல தங்களது சகோதர நிறுவனத்தில் உடனடி வேலை வாய்ப்புக்களை வழங்கி வருகின்றனர். சிறந்த சம்பளமும் வழங்கப்படுகிறது.

மேலும் கல்வி நிறுவனத்தில் கற்கை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு சர்வதேச அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு உயர் கல்வியை மேற்கொள்வதற்கான வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. இங்கு கல்வி பயிலும் மாணவர்கள், அவர்கள் விரும்புகின்ற நாடுகளுக்கு சென்று கல்வியை மேற்கொள்ள வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அதற்கான செலவுகளை அப்பல்கலைக்கழகங்களுக்குச் செலுத்தி தமது கல்வி நடவடிக்கை மேற்கொள்ள முடியும். அதற்காக மேலதிகமான எந்தவிதமான கட்டணங்களும் அறவிடப்படுவதில்லை. இக்கல்வி நிறுவனத்தில் படிக்கின்ற மாணவர்களுக்கு இது ஒரு அரிய சந்தர்ப்பமாக அமைந்துள்ளன.







க. பொ. த சாதாரண தரம் மற்றும் க. பொ. த. உயர் தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் நலன் கருதி பல கற்கை நெறிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விசேடமாக அரசாங்கத்தின் கல்விக் கொள்கைக்கு உட்பட்ட அனைத்து பாடத் திட்டங்களும் இங்கு போதிக்கப்படுகின்றன. லண்டன் எடக்ஸல் கல்வித் திட்டமும் இங்கு போதிக்கப்படுகின்றன.

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் பரீட்சைக்கு தோற்றக் கூடிய மாணவர்களுக்காக நடத்தப்படும் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிக் கல்வியும் இங்கு போதிக்கப்படுகின்றன. மாணவர்களது எதிர்கால வாழ்க்கைக்கு பெறுமதிமிக்கதாக தொழில் கல்வி அமைந்துள்ளது. அதற்கான சேவை கட்டுகஸ்தோட்டை 'கனடியன்' கல்வி நிறுவனம் வழங்கி வருகின்றது.

இக்கல்வி நிறுவனத்தில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. மூன்று மொழிகளிலும் இங்கு கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதில் சிங்கள, முஸ்லிம், தமிழ், கிறிஸ்தவ ஆகிய அனைத்து மாணவர்களும் இன, மத பேதமின்றி ஒற்றுமையாக கல்வி பயிலுகின்றார்கள்.

மேலும் இதில் மாணவர்கள் மட்டுமல்ல பாடசாலை ஆசிரியர்கள், தனியார் கம்பனிகளில் பணி புரிபவர்கள். வர்த்தகர்கள் எனப் பலதரப்பட்ட பதவிகளில் உள்ளவர்களும் கல்வி பயிலுகின்றனர். கற்றல் கற்பித்தலுக்கு வயதெல்லை கிடையாது. அதை கனடியன் கல்வி நிறுவனம் நிரூபித்துள்ளது.அந்த வகையில் இக்கல்வி நிறுவனம் இன்றியமையாததொன்றாக விளங்குகின்றது.

2007 ஆம் ஆண்டில் இக்கல்வி நிறுவனத்தின் ஸ்தாபகரும் பணிப்பாளருமான முஹமட் மின்ஹாஜ் இலங்கையில் இருந்து அமெரிக்காவுக்குச் சென்று அங்குள்ள இராணுவத்தில் இணைந்து கொண்டார். நேட்டோ இராணுவத்தில் இணைந்து சுமார் 11 வருடங்கள் சேவையாற்றினார். இக்காலகட்டத்தில் கூட இக்கல்வி நிறுவனம் மூடப்படவில்லை. தொடர்ந்து இயங்கியது. அதன் பின்னர் நாட்டுக்கு வந்து இக்கல்வி நிறுவனத்தை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இக்கல்வி நிறுவனத்தின் விசேட தன்மை என்னவென்றால் இலவசமாக பயிற்சியினை வழங்குவதே ஆகும். இதற்காக சகோதர நிறுவனம் ஒன்று இயங்கி வருகிறது. கிரபிக் கௌரி , பட வரைஞர் பயிற்சி பெற்றவர்கள் இக்கல்வி நிறுவனத்தில் பணியாற்ற வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

பட வரைஞர் கற்கை நெறியினை பயிற்சி நிறுவனத்தில் மூன்று மாதங்கள் முழு நேரமாக கற்ற பொழுதும் அது எவ்வாறு தரப்படுத்தப்படுவதென்பதை நோக்குவதே பயிற்சி நிறுவனத்தின் பணியாகும். பாடத் திட்டத்திற்கு அமைய கற்றல், கற்பித்தல் முறைகளை மேற்கொண்டு அதற்கான சான்றிதழ்கள் வழங்கி வைத்தல் முக்கியமாக் கொண்டாலும் அதைவிட பயிற்சியினை வழங்குவதும் அதன் மூலம் நேரடியாகத் தரப்படுத்தி புலக்காட்சிக்கு உட்படுத்தி சந்தை வாய்ப்பை பெறுவதும் மிக மிக முக்கியம். இதனையே இக்கல்வி நிறுவனம் திறன்படச் செய்து வருகின்றது.

இதன் மூலம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நம்பிக்கையுடன் தொழில் வாய்ப்பை மாணவர்களுக்கு இக் கல்வி நிறுவனம் வழங்கிவருவதை யாரும் அறிந்த செய்தியே. கட்டார், குவைட் , சவூதி அரேபியா போன்ற மத்திய கிழக்கு நாடுகளில் உரிய கல்வித் தகைமைகளுக்கு ஏற்ப பயிற்சிகள் வழங்கி தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றார்கள்.

இக்கல்வி நிறுவனத்தில் கற்று வெளியேறும் எவராக இருந்தாலும் ஒரு பாடத்தை துறை போகக் கற்று அதில் நன்கு பயிற்சியும் தேர்ச்சியும் பெற்ற ஒருவராகத் தான் வெளியேறுவார்கள். இன்னும் ஒரு இடத்தில் அவர் பயிற்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது அவசியமில்லை. வெளியே சென்றால் திறன்பட வேலை செய்யலாம். நேடியாக தொழிலைச் செய்யலாம். இக்கல்வி நிறுவனத்தில் படித்தவர்கள் அமெரிக்காவில் நாசாவில் கூட வேலை செய்கிறார் என்று பெருமையுடன் கூறிக் கொள்ள முடியும். ஏராளமானவர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரிகின்றார்கள். இவர்கள் எல்லோரும் அதிக சம்பளத்திற்கு வேலை செய்கின்றார்கள்.




இவையே இக்கல்வி நிறுவனத்தின் வளர்ச்சிப்படிகளின் வெற்றிப்படி.

குறிப்பாக இங்கு கல்வி போதிக்கின்ற வளவாளர்கள் பெரும்பான்மையானவர்கள் இக்கல்வி நிறுவனத்தில் திறன்படக் கற்றவர்களே, இங்கே கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். ஆதலால் இடைக்கிடைய வளவாளர்கள் இல்லாமற் போதல் போன்ற மாற்றங்கள் எவையும் இடம்பெறுவதில்லை. இக்கல்வி நிறுவனத்தில் கற்றல், கற்பித்தல் தொடர்பில் நீண்ட காலம் கற்பித்தலில் ஈடுபடுகின்ற அனுபமிக்க வளவாளர்களே பணி புரிகின்றனர். இக் கல்வி நிறுவனத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் கற்றல் தொடர்பில் ஏமாற்றம் அடையத் தேவையில்லை.

வேறு கல்வி நிறுவனங்களில் பட்டப்படிப்பை மேற்கொண்டவர்கள் கூட இங்கு வந்து மீளவும் படித்து தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் நிறையப் பேர் இருக்கின்றார்கள். பட்டத்தைப் பெற்றிருந்தாலும் உரிய பயிற்சிகள் இல்லாமையினால் மீண்டும் அதனை கற்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. யார் வந்தாலும் மீண்டும் அவர்களுக்கும் முதிர்ந்த பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. வெறுமனே சான்றிதழ்களுடன் மாணவர்களை அனுப்புவதில்லை. அப்பாடநெறியில் பூரணமான பயிற்சியை வழங்கியே வெளியேற்றப்படுகின்றனர்.




கிரேபிக் வெப் டிசைன் என்றால் கண்டியில் மிகப் பிரபல்யமான கல்வி நிறுவனம் இது என்று சொல்லாம். அதிகளவிலான மாணவர்கள் இக்கல்வி நிறுவனத்தில் கல்வி பயிலுகின்றார்கள்.இதனை இக்கல்வி நிறுவனம் ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு போதித்து வருகின்றது.







ஏ. சி. சி ஏ. கணக்கியல் இதுவே ஒரு கணக்காளராக செல்வதற்கான ஆரம்ப பாட கற்கை நெறியாகும். கல்ஹின்னையைச் சேர்ந்த அஸ்கா லாஹிர் என்ற பெண்மணி வேறு நிறுவனத்தில் ஏ. சி. சி. ஏ கற்கை நெறியை நிறைவு செய்து சான்றிதழ் பெற்ற ஒருவர். அவருக்கு ஏதோ சந்தர்ப்பத்தில் இக்கல்வி நிறுவனத்துடன் தொடர்பு ஏற்பட்டது.

இக்கல்வி நிறுவனத்தில் அனுமதியைப் பெற்று மேலதிகமான கற்கை நெறியை மேற்கொண்ட இவர் இன்று கொழும்பில் கணக்கியல் கம்பனியில் உயர் பதவியில் தொழில் புரிகின்றார். இன்று இடம்பெறும் நிகழ்வில் சிறப்பு விருதினையும் அவர் பெற்றுக் கொள்கிறார். இப்படியான திறன் வாய்ந்த நிறையப் பிள்ளைகள் ஒவ்வொரு வருடமும் இக்கல்வி நிறுவனத்தில் இருந்து வெளியாகி வருகின்றார்கள்.







திகனயைச் செர்ந்த இன்சாப் வர்த்தக முகாமைத்துவத்தில் இளம் பட்டத்தை முடித்தார். லண்டன் பல்கலைக்கழகமொன்றில் கல்வி கற்கச் செல்ல விசா கிடைக்கப் பெற்று அதற்காக காத்துக் கொண்டு இருக்கிறார். இதுதான் இக் கல்வி நிறுவனத்தின் வெற்றிப் பாதையாகும்.




அப்துல்லா கனி மௌலவி.பல பட்டங்கள் பெற்றிருந்தார். ஆனால் இவருக்கு தொழில் வாய்ப்பு இல்லை. இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் இறுதியாக ஒரு பெற்றோர் மூலமாக இங்கு வந்து கல்வி கற்றார். கிரபிக் நிறைவு செய்தார். பின்னர் இரத்தினபுரிக்கு ஒரு கணக்காளராக வேலைக்குச் செல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. உண்மையிலேயே அவருக்கு எந்தவொரு கணக்கியலும் தெரியாது. வெறுமனே மூன்றே மூன்று நாள் முழு நேரமும் கற்று இன்று ஒரு கணக்காளராக வேலை செய்கிறார். இவர்தான் இன்றைய நிகழ்வின் வரவேற்புரை நிகழ்த்துகிறார். அஸ்கா லாஹிர் என்ற பெண்மணிதான் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கவுள்ளார்.



இம்ரான் கட்டுகஸ்தோட்டையைச் சேர்ந்தவர். மாலைதீவில் மருத்துவக் கம்; பனியில் வேலை செய்வதற்காக விசா கிடைத்துள்ளது. அதற்கு அவர் உடன் போக வேண்டும். எனினும் இது மிகவும் சிறிய இடைவெளியே காணப்பட்டது. ஐந்து நாட்கள் படித்து விட்டு தற்போது மாலை தீவில் சிறந்த முறையில் பணியாற்றுகின்றார். தக்க நேரத்தில் இப்படிப்பட்டவர்களுக்கு முழு நேரமும் உரிய பாடப் பயிற்சியினை வழங்கி தொழில் தகைமையும் திறனும் வாய்ந்தவர்களாக உருவாக்கி வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கின்ற ஒரு சிறந்த கல்வி நிறுவனம் ஆகும். வயது எல்லைகளையும் பார்ப்பது இல்லை. ஐந்தாம் ஆண்டு படிக்கின்ற பிள்ளைகள் வந்தாலும் கூட உயர்தர கற்கை நெறிகளை வழங்கி புதிய மாற்றங்களைச் செய்து வரும் நிறுவனமாகும்.




இங்கு இரு வகையிலான உத்தியோகஸ்தர்கள் சேவையாற்றுகின்றார்கள். ஒரு தரப்பினர் இக்கற்கை நெறி தொடர்பான பணிகளை முகாமைத்துவம் செய்வதற்காக செயற்படுகின்றனர். அடுத்து சகோதர கல்வி நிறுவனமான பயிற்சி வழங்கும் நிறுவனம் செயற்படுகின்றது. இதில் மற்றைய பிரிவினரால் பயிற்சியை நெறியை முடித்து வெளியேறும் பிள்ளைகளுக்கு ஊதியமாக வழங்கப்படும்.

அப்துல் கனி என்பவர் கிரபிக் டிசைன் பாட நெறியை மூன்று மாதங்களில் நிறைவு செய்தவர். இவர் இதனை முடித்தவுடன் விபத்தொன்றில் சிக்கி வீட்டில் படுத்த படிக்கையாக இருந்தார். அவருக்கு கைகொடுத்தது இந்த கிரபிக் டிசைன் மட்டும்தான். அவர் வீட்டில் இருந்து சம்பாதித்துக் கொண்டிருந்தார். இப்படி வெளியேறிய எவராக இருந்தாலும் இக்கல்வி நிறுவனத்தோடு தொடர்ந்து உறவுகளைப் பேணி வருகின்றார்கள்.

இக்கல்வி நிறுவனம் பணத்தை நோக்காக கொண்டு செயற்படும் கல்வி நிறுவனம் அல்ல. மற்றைய இடங்களில் உடன் பணம் செலுத்தா விட்டால் வகுப்புக்கு அனுமதி வழங்க மாட்டார்கள். இலவசமாக புலமைப் பரிசில்களும் வழங்கப்படுகின்றன. இன்றைய நிகழ்விலும் விசேடமாக சில மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன. சமூக நோக்கமாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் கல்வி நிறுவனம் என்ற அடிப்படையில் இதன் பணிப்பாளர் மின்ஹாஜ் செயற்பட்டு வருகின்றார். எனவே இவரது பணி உன்னதமானது. பாராட்டத்தக்கது.

க. பொ. த சாதாரணம் வரை கற்றுவிட்டு. க. பொ. த உயர் தரம் கற்காமல் இக்கல்வி நிறுவனத்தில் தொழில் கல்வியை நிறைவு செய்த மாணவர்கள் நிறையப் பேர் கனடாவுக்குச் செல்வதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்தகைய அரும் பெரும் பணிகளை ஆற்றி வரும் இக்கல்வி நிறுவனம் தமது 22 வது வருட நிறைவைக் கொண்டாடும் இன்றைய தினத்தில் தொடர்ந்து மென்மேலும் சிறப்புடன் பயணிக்க இறைவன் நல்லருள் புரிவனாக.

*Registrations are now open for All Courses such as Graphic Design Web Design, Arichitecture Design,MEP Engineering, HND in IT (Limited Seats only ) and also English Medium ICT Grade 6 to Grade 13, March 2022 Batch INTAKE. More Information please Contact 0765730044*

*Graphics Gallery*
*(All kinds of Graphic and Web Design )*

படங்களும் தகவல்களும்
**இக்பால் அலி**

பொருளாதார அரசியல்

# இலங்கையின் பொருளாதார நிலை: முகம் கொடுத்துத்தான் ஆக வேண்டும்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

**இலங்கை மிக மோசமானதொரு பொருளாதார நெருக்கடிக்குள் சென்றிருக்கிறது. நீண்ட காலமாகவே பொருளாதாரத்தில் இருந்துவரும் இரட்டைக்குறை நிலைகளான வரவு செலவுத்திட்டக் குறை நிலை மற்றும் சென்மதி நிலுவையின் வர்த்தகக் நிலுவைக் குறை நிலை என்பன நிலைத்திருக்க முடியாத அரச நிதி நிருவாகத்திற்கும் தொடர்ச்சியாக இலங்கை ரூபாவின் பெறுமதி தேய்வடைவதற்கும் பிரதான காரணங்களாகும்.**

இது சுதந்திரத்தின் பின்னர் இருந்தே அதிலும் குறிப்பாக 1977இல் பொருளாதாரம் திறந்து விடப்பட்ட பின்னர் அவதானிக்கப்பட்டு வரும் பிரச்சினையாகும். ஆனால் முன்னர் ஒருபோதும் மிகக்குறுகிய காலத்தில் இன்று அனுபவிப்பது போன்ற நெருக்கடி நிலைக்குள் இலங்கைப் பொருளாதாரம் வீழ்ந்ததில்லை.

2015 ஆம் ஆண்டிலிருந்தே இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மெதுவடைந்து சென்றமை தெளிவானது. எனினும் அதனை எதிர்கொள்வதற்கான வேலைத்திட்டங்களுடன் அரச நிதி நிர்வாகத்தை முன்னேற்றும் நடவடிக்கைகளை இலங்கை மேற்கொண்டது. வரிக்கொள்கைச் சீர்திருத்தங்களும் அரசாங்க கடன்களை மீளக்கட்டமைத்து செலுத்தும் வேலைத்திட்டங்களுடன் அரசாங்க செலவீடுகளை குறைக்கும் நடவடிக்கைகளிலும் இலங்கை ஈடுபட்டது. வெளிநின்ற பொதுப்படுகடன்களின் அளவு அதிகரித்துச் சென்ற நிலையில் இலங்கை கடன் நெருக்கடி நிலையினை எதிர்கொள்ளும் என பொருளியலாளர்கள் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில் 2019இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளில் கணிசமான மாற்றங்கள் ஏற்பட்டன. தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நோக்கில் இறக்குமதிப் பதிலீட்டு கைத்தொழில் கொள்கைகள் முன்னிலைப் படுத்தப்பட்டன. அதனால் நாட்டின் ஏற்றுமதிகளை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டன. அதேவேளை நாட்டில் மிகப்பெரிய செலவீடுகளை மேற்கொண்டு உருவாக்கப்பட்ட துறைமுகம், விமான நிலையம், தாமரைக் கோபுரம், அதிவேக வீதிகள் என்பன நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தர முடியாத நிலையில் கடன் சேவை செலுத்தலுக்காக மீண்டும் கடன் பெறுவது தவிர்க்க முடியாததாக மாறியது.

இவற்றின் ஒட்டுமொத்த விளைவாக நாட்டுக்குள் டொலரின் வருகை குறைவடைந்து வெளிச் செல்கை அதிகரித்தது. நாட்டின் டொலர் கையிருப்புகள் கடன் மீளச் செலுத்தலுக்காகப் பயன்படுத்தப்பட்டபோது கணிசமான வீழ்ச்சியினை எதிர்நோக்கின. இதனால் சர்வதேச கடன் தரமிடல் நிறுவனங்கள் இலங்கையின் இறைமைக் கடன் தரமிடலை தொடர்ந்து கீழ்நோக்கி நகர்த்தின. இலங்கை அந்த நிறுவனங்களுடன் சண்டைக்குப் போனதே தவிர துரதிருஷ்டவசமாக அதிலிருந்து சொல்லப்பட்ட செய்தியை சரியாகப் புரிந்துகொண்டு உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறியது.

அந்நியச் செலாவணிச் சந்தையில் டொலரின் பெறுமதி அதிகரிக்கும் போக்கு தொடர்ந்தது. இலங்கை ரூபாவில் குறுங்கால முதலீடுகளை மேற்கொண்டிருந்த வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தமது முதலீடுகளை மீளப் பெறத் தொடங்கினர். மறுபுறம் கடன் தரமிடல் கீழ்நோக்கி நகர்த்தப்பட்டமையால் திறைசேரி உண்டியல்களையும் முறிகளையும் பயன்படுத்தி கடன் பெறும் அரசாங்கத்தின் ஆற்றல் கணிசமாக வீழ்ச்சியடைந்தது.

முன்னர் மிகவும் கவர்ச்சிகரமான முதலீட்டு சாதனமாக விளங்கிய அரச பிணையங்கள் மதிப்பிழந்து போயின. அவற்றின் விலைகள் 60 சதவீதம் வரையில் வீழ்ச்சியடைந்தன. உயர் வட்டிவீதங்கள் வழங்கப்பட்ட போதிலும் அவற்றின் மீதான முதலீடுகள் வீழ்ச்சியடைந்தமை இலங்கையின் கடன் பெறும் ஆற்றலை வெகுவாகப் பாதித்தது.

எனவே நட்பு நாடுகளிடம் குறுங்காலக் கடன்களைப் பெற்று கடன் தவணைகளை செலுத்தும் நிலை உருவாகியது. அது இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் தேய்வடையக் காரணமாகியது. இதனால் இலங்கை டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதியை 203 ரூபா என்ற நிலையான மட்டத்தில் கட்டிப்போட்டது.

இந்த நடவடிக்கையே இலங்கை மேற்கொண்ட மாபெரும் தவறாகும். நாணய மாற்று வீதத்தை நிலையாக பேண வேண்டுமாயின் குறிக்கப்பட்ட 203 ரூபா விலையில் மத்தியவங்கி சந்தைக்கு டொலரை வழங்க வேண்டும். ஆனால் மத்திய வங்கியிடம் டொலர் கையிருப்புகள் இல்லை. ஆகவே செயற்கையாக 203 ரூபா என்ற மட்டத்தில் டொலரின் பெறுமதியை நிர்ணயித்து விட்டு அதை நடைமுறைப்படுத்தம் ஆற்றல் இல்லாத நிலையில் அதனைப் பின்பற்றுமாறு கூறியமை மத்தியவங்கி செய்த மிகப் பெரிய தவறு.

அவ்வாறு செய்யாமல் விட்டிருந்தால் டொலரின் பெறுமதி தொடர்ந்து அதிகரித்துச் சென்றிருக்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் இப்போது ஏற்பட்டதைப்போல ஓரிரு நாட்களில் 203 ரூபா மட்டத்திலிருந்து 275 ரூபாவாக மிகச் சடுதியான ஒரு அதிகரிப்பைச் சந்தித்திருக்காது.

இப்போது ஏற்பட்டுள்ள நிலை ஒரு பொருளாதார அதிர்ச்சியாகும். இந்த அதிர்ச்சி பொருளாதாரத்தின் நிச்சயமற்ற தன்மையை மேலும் அதிகரித்துள்ளது. டொலரின் பெறுமதி மேலும் அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பில் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் ஊகவணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டு மாபெரும் செல்வம் ஈட்டவும் தனியுரிமைகள் தோன்றவும் பதுக்கல் நடவடிக்கைகள் விரிவடையவும் மிகவும் வாய்ப்பான சந்தர்ப்பத்தை இது ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

> “ நாணய மாற்று வீதத்தை நிலையாக பேண வேண்டுமாயின் குறிக்கப்பட்ட 203 ரூபா விலையில் மத்தியவங்கி சந்தைக்கு டொலரை வழங்க வேண்டும். ஆனால் மத்திய வங்கியிடம் டொலர் கையிருப்புகள் இல்லை. ஆகவே செயற்கையாக 203 ரூபா என்ற மட்டத்தில் டொலரின் பெறுமதியை நிர்ணயித்துவிட்டு அதை நடைமுறைப்படுத்தும் ஆற்றல் இல்லாத நிலையில் அதனைப் பின்பற்றுமாறு கூறியமை மத்தியவங்கி செய்த மிகப்பெரிய தவறு ”

ரூபாவின் தேய்வினைத் தொடர்ந்து எல்லாப் பொருள்களின் விலைகளும் சடுதியான அதிகரித்துள்ளன. விலைக்கட்டுப்பாடுகள் இல்லாத நிலையில் வணிகர்கள் தமது எண்ணப்படி பொருள் விலைகளை நிர்ணயிக்கும் நிலையேற்பட்டுள்ளது. பொருள் விலை அதிகரிப்புடன் எரிபொருள், எரிவாயு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வாழ்க்கைச் செலவு விண்ணை முட்டி நிற்கும் நிலையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்கள் எதுவும் இதுவரை அறிவிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. மாறாக இப்போது ஏற்பட்டுள்ள இந்த மோசமான நிலைமைக்கான பொறுப்புக் கூறலில் இருந்து இலகுவாக நழுவிச்செல்லும் போக்கில் உரிய தரப்பினர் ஈடுபட்டுள்ளமையையும் தெளிவாகக் காண முடிகிறது.

அரச பதவியொன்றை வகிக்கும் போது ஒருவர் எடுத்த பிழையான நடவடிக்கைக்காக மட்டுமன்றி எடுக்க வேண்டிய சரியான நடவடிக்கையை எடுக்காமல் விட்டமைக்காகவும் பொறுப்புக் கூற வேண்டியவராவார். ஆனால் இப்போது எற்பட்டுள்ள பொருளாதார இழிநிலைக்கு தார்மீகப் பொறுப்பேற்கும் நிலையில் எவரும் இல்லை. மத்திய வங்கியின் ஆளுநர் இலங்கையில் டொலர் பிரச்சினை இல்லை. ஆகவே சர்வதேச நாணய நிதியத்திடம் (IMF) செல்ல வேண்டியதில்லை என்று பலதடவைகள் பேட்டியளித்தார். அரசாங்கமும் அவ்வாறே செயலாற்றியது.

இன்றைய நிலையில் மீண்டும் ரூபா மிதக்கவிடப்பட்டு ஒரு டொலருக்கு 275 ரூபா மட்டத்தைக் கடந்துள்ள நிலையில் வெளிநாடுகளில் உள்ளவர்கள் டொலர்களை இங்குவந்து கொட்டுவார்கள் என்றும் அதனால் டொலரின் விலை குறையலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் டொலரை நாட்டுக்கு அனுப்பத் தயங்குகின்றனர்.

உதாரணமாக, இத்தாலியில் உள்ள பெரும்பான்மை இன இலங்கையர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பொன்று இலங்கைக்கு டொலர்களை அனுப்புவதைத் தடுக்கும் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளதாகப் பத்திரிகைக் குறிப்பொன்று கூறியது. அதே போன்று ஜப்பானில் வாழும் இலங்கையர்களும் நாட்டுக்கு பணம் அனுப்பத் தயக்கம் காட்டுகிறார்கள்.

இலங்கையின் ஏற்றுமதிகள் உடனடியாக அதிகரிக்கும் சாத்தியங்கள் ஏதுமில்லை. இந்தியா தருவதாக ஒத்துக்கொண்டுள்ள ஒரு பில்லியன் கடனுதவி அத்தியாவசியப் பொருள்களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யவே பயன்படும். எனவே இலங்கையின் டொலர் கையிருப்பை அது மாற்றியமைக்காது. திடீர் ஞானோதயம் பிறந்து இப்போது IMF இடம் அடுத்த மாதம் செல்லப்போவதாக அறிவித்துள்ளார்கள். குறைந்த பட்சம் ஆறுமாதங்கள் ஆகும். அதன் உதவி கிட்டுவதற்கு.

# உக்ரைன்–ரஷ்யப் போர் மேற்குலகின் வெற்றியை நோக்கி நகர்கிறதா?



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

**உக்ரைன் ரஷ்ய போர் பல திருப்பங்களை நோக்கி நகர்கிறதை அண்மிய பதிவுகள் காட்டுகின்றன. மேற்குலகத்தின் ஒத்துழைப்புடன் உக்ரைன் ஜனாதிபதி ஜெலஸ்கி ரஷ்யாவினை முற்றாகவே துடைத்தளிக்கும் செயல்பாட்டில் ஈடுபட்டு வருகின்றதைக் காணமுடிகிறது. உக்ரைன் ஜனாதிபதியும் பிரதமரும் யூதர்களாக இருப்பதோடு இஸ்ரேலிய அணுகுமுறைகளை பின்பற்றுவதில் அதிக கவனம் கொண்டிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. அதாவது தமது இலக்கை அடைவதற்கு எத்தகைய எல்லையையும் பயன்படுத்துவதிலும் அதனை வெற்றி கொள்வதிலும் யூதர்களது உத்திகள் தனித்துவமானது. இறுதிவரையும் போராடும் திறனும் துணிவும் யூதர்களுக்கே உரியது. அதனையே ஜெலஸ்கி பின்பற்றுவதைக் காணமுடிகிறது.**

உக்ரைனுக்கு எதிரான போரை ரஷ்யா மேற்கொள்ளாது விட்டாலும் போரில் தோற்றுப் போனாலும் ஒரே விளைவையே ஏற்படுத்தும். அதனால் போரை வெற்றி கொள்வதில் அதிக சிரத்தையை ரஷ்யா எடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இக்கட்டுரையும் மேற்குலகம் மற்றும் உக்ரைனின் உத்திகளையும் ரஷ்யாவின் நகர்வுகளையும் அளவிடுவதாக அமையவுள்ளது.

முதலாவது, மேற்கின் ஊடகப் போர் பெரும் வெற்றியை ரஷ்ய-உக்ரைன் போரில் எட்டியுள்ளது. மேற்குலக ஊடகங்களாலும் அதன் உபாயங்களாலும் கட்டமைக்கப்பட்ட ஊடக உலகம் போர் பதிவுகளை உக்ரைனுக்கு ஆதரவாகவும் ரஷ்யாவுக்கு எதிராகவும் வெளிப்படுத்துவதில் வெற்றி கண்டுள்ளது. போர்க் களத்தில் ஏற்பட்டுள்ள இழப்புக்களை உலகம் முழுவதும் பரப்புவதிலும் அதனூடாக அனுதாபத்தை ஏற்படுத்துவதிலும் ஊடக உத்தி வெற்றியளித்துள்ளது. அது மட்டுமன்றி மேற்குலகத்தின் விருப்புக்களையும் தேவைகளையும் உக்ரைன் பின்பற்றும் வரையும் ஊடகப்பரப்பு உக்ரைனுக்கானது. அதில் ரஷ்யாவும் அதன் உத்திகளும் தோல்விகரமானவையாகவே காட்சிப்படுத்தப்படும்.

இரண்டாவது, மேற்குலகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து உலகளாவிய நிறுவனங்களும் நிதி மையங்களும் வர்த்தக கட்டமைப்புகளும் உலகளாவிய நீதி பொறிமுறைகளும் ரஷ்யாவுக்கு எதிரானதாக திருப்பப்பட்டுள்ளது. ரஷ்யாவுக்கு எதிரான போர்க் குற்றங்களை ஆதாரப்படுத்தியுள்ள மேற்குலகம் ரஷ்யாவுக்கு எதிரான தீர்மானத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் வெற்றிகரமாக (13 வாக்குகளால்) நிறைவேற்றியுள்ளது. பொருளாதாரத் தடைகளை வெற்றிகரமாக ரஷ்யா எதிர்கொண்டதனால் அடுத்த நகர்வுக்கு மேற்குலகம் ஈடுபட ஆரம்பித்துள்ளது. அமெரிக்க ஜனாதிபதி ரஷ்ய ஜனாதிபதி புடினை ஒரு போர்க் குற்றவாளி என ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். அதாவது இப்போர் அமெரிக்க ரஷ்யப் போராகவே தென்படுகிறது. அதாவது அமெரிக்கா ஆயுதங்களை வழங்குகிறது. ஏனைய நேட்டோ நாடுகளை ஆயுதம் வழங்குமாறு வற்புறுத்துகிறது. பாரிய நிதி உதவிகளை உக்ரைனுக்கு வழங்குகிறது.



அமெரிக்க காங்கிரஸ் அமைப்பை கூட்டி உக்ரைன்ஜனாதிபதியை உரையாற்ற ஏற்பாடு செய்துள்ளது. அவ்வுரையில் ஜெலன்ஸ்கி அமெரிக்காவுக்கு நன்றி தெரிவித்ததுடன் எந்த விட்டுக் கொடுப்புக்கும் தயாரில்லை என்பதை தெரிவித்துள்ளார். அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் ஜெலன்ஸ்கியை பாராட்டியதுடன் அவரது துணிச்சலை மெச்சினார்கள். ஒரு சந்தர்ப்பத்திலேனும் அமெரிக்கா விடும் தவறுகளை ஜெலன்ஸ்கி குறிப்பிடவில்லை. மக்களுடன் இணைந்து போராடும் தலைவன் தான் உக்ரைன் ஜனாதிபதி ஆனால் தனது மக்களை பாதுகாக்கும் உத்திகளையோ புவிசார் அரசியல் தனித்துவத்தையோ ரஷ்யாவின் பலத்தையோ எடைபோடாத தலைவராகவே உள்ளார். அதேநேரம் மேற்குலகத்தின் அடிமைத்தனத்தை மீள மீள உறுதிப்படுத்துகிறார். நேட்டோ நேரடியாக போருக்கு வராத போதே மேற்கை உக்ரைனியர்கள் உணர்ந்திருக்க வேண்டும். பலமான போரியல் ஆயுதங்களைக் கூட அமெரிக்கா நேரடியாக வழங்க மறுக்கிறது. ஏறக்குறைய போரில் களத்தை உக்ரைன் இழக்கும் நிலைக்குள் போர் களம் நகர்வதாக போரியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். பிரச்சாரப் போரில் மட்டும் உக்ரைன் வெற்றியை உறுதிப்படுத்துகின்றன மேற்குலக ஊடகங்கள். மேற்குலகம் உலகளாவிய ரீதியில் ரஷ்யாவுக்கும் புடினுக்கும் எதிரான பெரும் பிரசாரப் போரை நிகழ்த்திவருகிறது. ஏறக்குறைய அமெரிக்கா போரை நடாத்தும் நாடாகவே உள்ளது. உக்ரைன் பலியிடப்படும் தேசமாக மாறுகிறதை அமெரிக்கா கச்சிதமாக நிறைவேற்றிவருகிறதை அவதானிக்க முடிகிறது. ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்குமான போரை உக்ரைன் தற்போது நிகழ்த்தி வருகிறது. உக்ரைன் மக்கள் சிந்தும் ஒவ்வொரு குருதித்துளியும் அமெரிக்காவின் அதிகார இலக்குக்கானதாகவே உள்ளது.

மூன்றாவது, தற்போது அமெரிக்கா ரஷ்யாவின் நட்புக்களை உடைப்பதில் முனைப்பாக ஈடுபட்டு வருகிறது. ஏற்கனவே ரஷ்யாவுடனான இந்திய உறவை முறியடிக்க முடிந்தவரை முயன்று தோற்றுப்போன அமெரிக்கா தற்போது சீனாவுடனான தனது பேரம் பேசலைத் தொடக்கியுள்ளது. இரு நாட்டுத் தலைவர்களுக்குமான உரையாடல் அதிக முக்கியத்துவத்தை ஏற்படுத்தும் என மேற்கு ஊடகங்கள் செய்தி வெளியிட ஆரம்பித்துள்ளன. ரஷ்யா சீனாவிடம் ஆயுத தளபாடங்களை கோரியிருப்பதாகவும் ஏற்கனவே இந்தியாவிடம் ரஷ்யா ஆயுத தளபாடங்களையும் கோரியதாகவும் மேற்கு ஊடகப் பிரசாரம் நிகழ்த்தி வருகின்றது. ஏறக்குறைய ஐரோப்பிய நாடுகள் கிழக்கைரோப்பிய நாடுகள் மௌனம் சாதிக்கும் சூழலில் அமெரிக்கா நேட்டோவுக்கு வெளியே அமெரிக்கா ரஷ்யாவுக்கான வாய்ப்புகளை தகர்கிற முயற்சியில் ஈடுபடுகின்றதைக் காணமுடிகிறது. அதாவது நேட்டோவிலுள்ள கிழக்கு ஐரோப்பிய நாடுகளால் உக்ரைனுக்கு ஆயுதங்களை வழங்க முயன்ற அமெரிக்கா தோற்ற நிலையில் அந்நாடுகள் நேரடியாக ஆயுதம் வழங்க மறுத்த போதே சீனாவுடனான உரையாடலை தொடக்கியுள்ளது. சீனாவுடனான வர்த்தக மற்றும் சந்தையில் அமெரிக்காவுக்கு இழுபறி கடந்த பல ஆண்டுகளாக நீடிக்கும் நிலையில் இந்த உரையாடல் நிகழ்ந்துள்ளது. ரஷ்யாவுக்கான ஆதரவை வெளிப்படையாக சீனா கையாண்டாலும் மறைமுகமாக சீனாவின் ஆதரவு ரஷ்யாவுக்கே உண்டு என்பதை முன்கூட்டியே மேற்கு ஊடகங்கள் தெரிவித்து வருகின்றன.

நான்காவது, உக்ரைன் ஜனாதிபதி அமெரிக்கா மற்றும் ஜேர்மன் பாராளுமன்றங்களில் காணொளி மூலம் நிகழ்த்திய உரையில் போரை நிறுத்த உதவுமாறு கோரிக்கை விடுத்துள்ளார். அது மட்டுமல்ல விமானங்களையும் ஆயுத தளபாடங்களையும் வழங்குமாறும் போரில் நேட்டோவின் ஈடுபாட்டை வழங்குமாறும் கோரியுள்ளார். உக்ரைன் வான்பரப்பை பாதுகாக்க விமானம் பறப்பதற்க்கு தடைவிதிக்குமாறு அவர் கோரியுள்ளார். ஏறக்குறைய நேட்டோவை போரில் ஈடுபடுத்த வேண்டும் என்ற கோரிக்கையே அவரிடமுண்டு. அவை அனைத்தையும் அமெரிக்கா திட்டவட்டமாக மறுத்துள்ளது.

ஐந்தாவது, ரஷ்யாவின் உத்திகள் உலகளாவிய ரீதியில் பலவீனமானவையாகவே உள்ளன. ஊடகப் போரில் ரஷ்யாவின் தோல்வி யதார்த்தமாகவே தெரிகிறது. ஆனால் களத்தில் உக்ரைனின் விமானப் படையை தகர்த்துள்ளது. உக்ரைனின் விமானப்படைப் பலத்தை விமானத் தளங்களில் வைத்தும் ஏவுகணைத் தாக்குதல் மூலமும் உடைத்துள்ளது. தற்போது அயல் நாடுகளிடமிருந்து விமானங்களை வழங்குமாறு உக்ரைன் கோரி வருகிறது. அதற்கான வாய்ப்பினை அயல் நாடுகள் மறுத்து வருகின்றன. அவ்வாறே கடற்படையின் பலமும் ரஷ்யாவால் தகர்க்கப்பட்டுள்ளது. கருங்கடலில் ரஷ்யாவின் ஆதிக்கம் நிரந்தரமானதாக உள்ளது. உக்ரைனின் துறைமுகங்களையும் அதன் நகரங்களையும் ரஷ்யா கைப்பற்றியுள்ளது. ஏறக்குறைய ஒரு கொரில்லா போர் முறைக்கு உக்ரைன் போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக மேற்குலக போரியல் ஆய்வாளர்கள் தெரிவித்து வருகின்றனர். ரஷ்யா உலகளாவிய ரீதியில் பலவீனமாகவும் போர்க்களத்தில் பலமாகவும் காணப்படுவதாக அத்தகைய போரியல் ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன.

எனவே உக்ரைன் ரஷ்யப் போர் நீடிப்பதற்கான களத்தை மேற்குலகம் தயார் செய்கிறது. எந்தவித உத்தியுமற்ற உக்ரைன் மேற்குலகத்தின் நலனுக்கு பலியிடப்படும் நிலைக்குள்ளேயே அகப்பட்டுள்ளது. ரஷ்யாவையும் அதன் பலத்தையும் உக்ரைனை வைத்து தகர்க்க முடியுமென மேற்குலகம் கணக்குப் போட்டுள்ளது. இந்தியாவும் சீனாவுமே ரஷ்யாவின் உலகளாவிய பலமாக உள்ளது. அதன் முடிவுகளே அதிக மாற்றத்தை தரக்கூடியவை. ஆனால் அவற்றின் புவிசார் அரசியல் தீர்மானமே மேற்கை பாதிக்கும் விடயமாக மாறியுள்ளது. உக்ரைனைப் போன்ற நாடுகள் அல்ல சீனாவும் இந்தியாவும். அதனால் ரஷ்யாவுக்கான விளிம்பு நிலம் தனித்துவமானதாகவே அமையும்.










# 14ஆம் ஆண்டு எடிசன் தமிழ் திரை விருது



## சிறந்த நடிகர் சிம்பு









14ஆம் ஆண்டு எடிசன் தமிழ் திரை விருதுகள்

சென்னை வர்த்தக மையத்தில் இனிதே நடைபெற்றது. இவ்விழாவில் 2020 & 2021 ஆம் ஆண்டு வெளியீடு கண்ட தமிழ் திரைப்படங்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது. அதில் சிறந்த நடிகராக 'மாநாடு' கதாநாயகன் சிலம்பரசனும், சிறந்த நடிகையாக 'ஜெய் பீம்' கதாநாயகி லிஜோமொல் ஜோஸும் சிறந்த இயக்குனராக வெங்கட் பிரபு, சிறந்த பின்னணி பாடகி சைந்தவிக்கும், சிறந்த பாடலாசிரியருக்கான விருதை சினேகனுக்குப் பதிலாக அவருடைய மனைவி கனிகா பெற்றுக்கொண்டார்.

சிறந்த துணை நடிகை 'டாக்டர்' படத்திற்காக அர்ச்சனாவும், சிறந்த துணை நடிகருக்கான விருதை தம்பி ராமையாவும், சிறந்த குணசித்திர விருது 'ஜெய்பீம்' மணிகண்டனும் சிறந்த குணச்சித்திர நடிகையாக 'கர்ணன் 'படத்தில் நடித்த கௌரி ஜி கிஷனும், சிறந்த படத்தொகுப்புக்கு பிரவீன் கே எல்லும் சிறந்த கதைக்கான விருதை ஜெய் பீம் தா சே ஞானவேலும், சிறந்த அறிமுக நடிகையாக லொஸ்லியாவும் சிறந்த வில்லனாக 'ஜெய் பீம்' படத்தில் நடித்த தமிழும், சிறந்த நடன இயக்குனராக சாண்டி மாஸ்டரும் சிறந்த கேமராமேனாக 'மாநாடு' படத்தில் ரிச்சர்ட் மகேஷும், சிறந்த நாயகனாகவும் வில்லனாகவும் எஸ் ஜே சூர்யாவும் சிறந்த கிராமிய பாடகராக அறிவும், பாடகியாக கிடக்குழி மாரியம்மாவும், வளர்ந்து வரும் நடிகையாக திவ்யபாரதியும் இசை அரசர் விருது டி இமானுக்கும் சிறந்த அயல் நாட்டு படத் தயாரிப்பாளராக அருமை சந்திரனும், சிறந்த அறிமுக இசையமைப்பாளராக டீஎம் உதயகுமாரும் விருது வழங்கு கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் தமிழ் திரை உலக முன்னணி நடிகர் நடிகைகள் மற்றும் அயல்நாட்டு தூதர்கள் பல்வேறு நாட்டு தமிழ் திரை ரசிகர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். இந்த நிகழ்வை எடிசன் விருது குழு தலைவர் செல்வகுமார் மற்றும் பன்னாட்டு தொடர்பாளர் தீனதயாளன் மலேசியாவும் நிகழ்ச்சி ஏற்பாட்டு குழுவாக செயல்பட்டனர்.






யாழ்ப்பாணம், கீரிமலை பகுதியில் வரித்தூண்டல் கிராம வரித்துண்டல் ஆ.சீ. தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆண்டு 05க்குட்பட்ட 50 மாணவர்களுக்கு புத்தகப் பைகள் அதிபரின் வேண்டுகோளுக்மைய வழங்கப்பட்டன. பூமணியம்மா அறக்கட்டளையின் லண்டன் நகரத்தை சேர்ந்த வசந்தன் தம்பதிகளின் புதல்வனின் பிறந்தநளை முன்னிட்டு இந்த அனுசரணை வழங்கப்பட்டது.

படம்: வேலணை குறூப் நிருபர்





வாரமஞ்சரி BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845







## குரோபெக்ஸ் லிமிட்டட் - இந்தியா

**விநியோகஸ்தர் அல்லது முதலீட்டாளர் தேவை**

கர்நாடக மாகாணத்திலுள்ள உர உற்பத்தி கம்பனியான இந்தியா கொரோபெக்ஸ் கம்பனிக்கு அவர்களின் உரத்தை இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கிற்கு விநியோகம் செய்வதற்கு இலங்கை கம்பனியொன்று அல்லது முதலீட்டாளரொருவர் தேவை.

**திலக் – 094 – 071 – 8436137**




வாரமஞ்சரி

## திருமண சேவைகள்

உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும

**classified@lakehouse.lk**

உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.

உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.

முதல் 15 சொற்களுக்கு **100/-** ரூபா

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
- ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்

அனுஷா - 077 7 278 948 | ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 | கயனி - 011 2 429 342






## Advertise Here

5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT

adzsuo@gmail.com

## கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**ஒப்பந்த இலக்கம்: HOMESHOP/MPC/04/01**

இலங்கையில் அனைத்து கிராம சேவகர் பிரிவையும் உள்ளடக்கும் வகையில் பெண் தொழில்முயற்சியாளர்கள் மூலம் செயற்படுத்தப்படுகின்ற சிறிய நவீன பல்பொருள் விற்பனை நிலைய வலையமைப்பு ஒன்றை நிறுவுவதற்காக கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்களை பெறுவதற்கு அமைச்சு பெறுகைக் குழுவினால் (MPC) முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| விலைமனு கோரல் இலக்கம் | உபகரணம்/ பொருள் | தேவையான அளவு | மீளளிக்கப்படாத கேள்விமனு கட்டணம் ரூபா |
|---|---|---|---|
| HOMESHOP/MPC/04/01-I | காசாளர் நாற்காலி (Moveable) | குறைந்தது - 7,000<br>அதிகபட்சம் - 14,000 | 20,000.00 |
| HOMESHOP/MPC/04/01-II | தராசு வைக்கும் மேசை (Pos weight scale table) | குறைந்தது - 7,000<br>அதிகபட்சம் - 14,000 | 20,000.00 |
| HOMESHOP/MPC/04/01-III | மரக்கறி வைக்கும் ராக்கைகள் (08 தட்டுகளுடன்) | குறைந்தது - 7,000<br>அதிகபட்சம் - 14,000 | 20,000.00 |

02. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் பெறுகை வழிகாட்டி புத்தகத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு தேசிய போட்டிரீதியான விலைகோரல் நடைமுறை (NCB) மூலம் இந்த விலைமனு கோரப்படுவதோடு, அந்த திறன்களை பூர்த்தி செய்கின்ற அனைத்து தகைமைகளையும் கொண்ட விலைமனுதாரர்களுக்கு திறக்கப்பட்டுள்ளது.

03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற தகுதியுடைய விலைமனுதாரர்களுக்கு மேல் குறிப்பிடப்பட்ட பொருட்கள்/ உபகரணங்களுக்கு மீளளிக்கப்படாத 20,000.00 ரூபா தொகையை கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின், கணக்காளரிடம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்து ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட முழுமையான விலைமனு ஆவண தொகுதிகளை அல்லது தொகுதி ஒன்றை 2022.03.21 ஆம் திகதி தொடக்கம் 2022.04.07ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.00 வரை வேலை நாட்களில் கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு, விலைமனு ஆவணத்தை பரீட்சிப்பதற்கு வேண்டுமாயின் மேல் குறிப்பிடப்பட்ட திகதி மற்றும் காலத்தில் பணம் செலுத்தாது விலைமனு ஆவணத்தை பரீட்சிக்க முடியும்.

04. உங்களது விலைமனுவை 2022.04.08 ஆம் திகதி பி.ப. 1.00க்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், அமைச்சு பெறுகைகுழு (MPC), கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு, 8ஆவது மாடி, எச் கியு கொழும்பு கட்டிடம், இலக்கம் 464ஏ, ரி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது அந்த முகவரியில் சிரேஷ்ட உதவி செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள விலைகோரல் பெட்டியில் இடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

05. விலைமனுக்களை சமர்ப்பிக்கும்போது மேல் குறிப்பிடப்பட்ட தேவையான அளவுக்கு அல்லது தேவையான அளவில் பகுதிக்கு விலைமனுதாரர் ஒருவருக்கு விலைமனு சமர்ப்பிக்க முடியும்.

06. விலைமனுக்களை 'மூலப் பிரதி' மற்றும் 'நகல் பிரத' என முத்திரை பொறிக்கப்பட்ட தபால் உறைகளில் இட்டு அந்த உறையின் இடது பக்க மேல் மூலையில் விலைமனு கோரல் இலக்கத்தை ஒவ்வொரு பொருள் மற்றும் உபகரணத்திற்காக வெவ்வேறாக குறிப்பிட்டு ஒவ்வொரு விலைமனுவையும் ஒற்றைக் கட்ட ஒரு தபால் உறையில் மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.

07. தாமதித்து கிடைக்கின்ற விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது என்பதோடு, அந்த விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுவுடன் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டவாறு விலைமனு தரவு பட்டியலில் (BDS) குறிப்பிட்ட இலங்கை ரூபாவில் அங்கீகரிக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து வழங்கப்பட்ட 90 நாட்களுக்கு செல்லுபடியான விலைமனு பிணை ஒன்று இருத்தல் வேண்டும்.

08. விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற உடன் 04 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்ட முகவரியில், அந்த சந்தர்ப்பத்தில் பங்கேற்பதற்கு விருப்பம் காட்டும் விலைமனுதாரர்கள் முன்னிலையில் கிடைக்கப்பெற்றுள்ள விலைமனுக்கள் திறக்கப்படும்.

09. அமைச்சு பெறுகைக் குழுவின் (MPC) முடிவு இறுதி முடிவாகும்.

10. இது தொடர்பில் மேலதிக விபரங்கள் தேவைப்பட்டால் இந்த அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் (தொலைபேசி இலக்கம் 011-268-1186/ 071-445-7846 அல்லது மின்னஞ்சல் முகவரி info@coopmin.gov.lk).

**தலைவர்**
**அமைச்சு பெறுகைக் குழு (MPC)**
**கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும்**
**நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு.**

## கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**ஒப்பந்த இலக்கம்: HOMESHOP/MPC/04/03**

இலங்கையில் அனைத்து கிராம சேவகர் பிரிவையும் உள்ளடக்கும் வகையில் பெண் தொழில் முயற்சியாளர்கள் மூலம் செயற்படுத்தப்படுகின்ற சிறிய நவீன பல்பொருள் விற்பனை நிலைய வலையமைப்பு ஒன்றை நிறுவுவதற்காக கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்களை பெறுவதற்கு அமைச்சு பெறுகைக் குழுவினால் (MPC) முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| விலைமனு கோரல் இலக்கம் | உபகரணம்/ பொருள் | தேவையான அளவு | மீளளிக்கப்படாத கேள்விமனு கட்டணம் ரூபா |
|---|---|---|---|
| HOMESHOP/MPC/04/03-I | கதவு அழைப்பு மணி | குறைந்தது - 7,000<br>அதிகபட்சம் - 14,000 | 20,000.00 |

02. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் பெறுகை வழிகாட்டி புத்தகத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு தேசிய போட்டி ரீதியான விலைகோரல் நடைமுறை (NCB) மூலம் இந்த விலைமனு கோரப்படுவதோடு, அந்த திறன்களை பூர்த்தி செய்கின்ற அனைத்து தகைமைகளையும் கொண்ட விலைமனுதாரர்களுக்கு திறக்கப்பட்டுள்ளது.

03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற தகுதியுடைய விலைமனுதாரர்களுக்கு மேல் குறிப்பிடப்பட்ட பொருட்கள்/ உபகரணங்களுக்கு மீளளிக்கப்படாத 20,000.00 ரூபா தொகையை கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின், கணக்காளரிடம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்து ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட முழுமையான விலைமனு ஆவண தொகுதியை 2022.03.21ஆம் திகதி தொடக்கம் 2022.04.07ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.00 வரை வேலை நாட்களில் கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு, விலைமனு ஆவணத்தை பரீட்சிப்பதற்கு வேண்டுமாயின் மேல் குறிப்பிடப்பட்ட திகதி மற்றும் காலத்தில் பணம் செலுத்தாது விலைமனு ஆவணத்தை பரீட்சிக்க முடியும்.

04. உங்களது விலைமனுவை 2022.04.08 ஆம் திகதி பி.ப. 3.00க்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், அமைச்சு பெறுகைக்குழு (MPC), கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு, 8ஆவது மாடி, எச் கியு கொழும்பு கட்டிடம், இலக்கம் 464ஏ, ரி.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது அந்த முகவரியில் சிரேஷ்ட உதவி செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள விலைகேட்புப் பெட்டியில் இடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

05. விலைமனுக்களை சமர்ப்பிக்கும் போது மேல் குறிப்பிடப்பட்ட தேவையான அளவுக்கு அல்லது தேவையான அளவில் பகுதிக்கு விலைமனுதாரர் ஒருவருக்கு விலைமனு சமர்ப்பிக்க முடியும்.

06. விலைமனு ஆவணங்களை "மூலப் பிரதி" மற்றும் "நகல் பிரதி" என முத்திரை பொறிக்கப்பட்ட தபால் உறைகளில் இட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் "HOMESHOP/MPC/04/03-I" என்று குறிப்பிட்டு விலைமனுவை ஒற்றைக் கட்ட ஒரு தபால் உறையில் மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.

- A minimum of 2C 1S (National) or 2B 1C (International) required for IESL recognition.

**School of Technology**
තාක්ෂණ පීඨය
தொழில்நுட்பம் கற்கைபீடம்

BTech (Hons)
- Electronics
- Agricultural Technology
- Environmental Technology

BSc Textile Technology
- Textile and Clothing Technology†
- Fashion Merchandise Management†

Eligibility Criteria : A/L minimum of 3 S passes in Physical Science/ ICT/ Biological Science/ Technology Streams

**Business School**
ව්‍යාපාර පීඨය
முகாமைத்துவம் கற்கைபீடம்

BBM (Hons)
- Accounting and Finance
- Human Resource Management
- Marketing Management
- Operations Management
- Supply Chain Management

BSc (Hons)
- E-Tourism and Digital Marketing

Eligibility Criteria : Passed A/Ls in any stream

**School of Computing & IT**
පරිගණක සහ තොරතුරු තාක්ෂණ පීඨය
கணணியியல், தகவல் தொழில்நுட்பம் கற்கைபீடம்

BSc (Hons)
- Software Engineering
- Cloud Computing
- Cyber Security
- Data Science

Bachelor of
- Applied Information Technology† (BAIT)

Eligibility Criteria : Passed A/Ls in any stream

**School of Music**
සංගීත පීඨය
சங்கீதம் கற்கைபீடம்

Bachelor of Music (Hons)

Eligibility Criteria : Passed A/Ls in any stream

**School of Science**
විද්‍යා පීඨය
விஞ்ஞான கற்கைபீடம்

BSc (Hons) in Bio Systems Engineering

Eligibility Criteria : A/L minimum of 3 S passes in Physical Science Stream (Biological Science Stream applicable)

Scan the QR code to Apply Online

මුලකුරු සමඟ නම | பெயர் (முதல் எழுத்துடன்) | Name with Initials :

ඔබ හැදෑරීමට කැමති පාඨමාලාව | உங்கள் விருப்பமான பாடத்திட்டம் | Your Preferd Programme :

ස්ත්‍රී පුරුෂ භාවය | பால் | Gender : ........ උපන්දිනය | பிறந்த திகதி | Date of Birth :

ජාතික හැඳුනුම්පත් අංකය | தேசிய அடையாள அட்டை இல | NIC No : ........ පළාත | மாகாணம் | Province :

ලිපිනය | முகவரி | Postal Address :

දුරකථන | தொலைபேசி இல | Telephone - නිවස | நிரந்தர இல | Home : ........ ජංගම | கைத்தொலைபேசி | Mobile :

විද්‍යුත් තැපෑල | மின்னஞ்சல் முகவரி | Email :

අ.පො.ස. උසස් පෙළ වසර | க.பொ.த உயர் தர (வருடம்) | GCE A/L Year :

විභාග අංකය | சுட்டெண் | Index Number :

Z අගය | Z பெறுபேறு | Z-score :

පාසල | பாடசாலை | School :

මාධ්‍යය | மொழி மூலம் | Medium :

අ.පො.ස. උසස් පෙළ ප්‍රතිඵල | க.பொ.த உயர் தர | GCE A/L Results
අපේක්ෂිත ප්‍රතිඵල සමඟ අයදුම් කරන්න

| විෂය \| பாடம் \| Subject | ශ්‍රේණිය \| பெறுபேறு \| Grade |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. ඉංග්‍රීසි \| பொது ஆங்கிலம் \| General English | |
| 5. සාමාන්‍ය පොදු පරීක්ෂණය \| பொது அறிவு \| Common General Paper | |

I do hereby certify that the particulars furnished by me in this application are true and correct and I am prepared to abide by the rules and regulations governing the registration of the Sri Lanka Technological Campus. In case the information presented here is found to be incorrect, I agree that the Sri Lanka Technological Campus has the right to cancel my registration at any time.

අයදුම්කරුගේ අත්සන | விண்ணப்பதாரியின் கையொப்பம் | Applicant Signature

SLTC RESEARCH UNIVERSITY
SRI LANKA TECHNOLOGICAL CAMPUS
ශ්‍රී ලංකා තාක්ෂණික විශ්වවිද්‍යාලය
இலங்கை தொழில்நுட்ப பல்கலைக்கழகம்

අනුමැතිය ලත් | அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது | APPROVED — Ministry of Education
පිළිගත් | இனங்காணல் அங்கீகாரம் கொண்டது | RECOGNIZED — University Grants Commission (UGC)
පර්යේෂණ පදනම් කරගත් අධ්‍යාපනය | ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டது | RESEARCH ORIENTED — ORIS Office of Research & Innovation Services
අති විශිෂ්ට ආචාර්ය මඩුල්ල | தலைசிறந்த கல்விப்பீடம் | FACULTY PAR EXCELLENCE — 1:12 Staff : Student Ratio
මහා නේවාසික පහසුකම් | பல்கலைக்கழகத்தில் தங்குமிட வசதி | ON CAMPUS ACCOMMODATION — SLTC Hub
තරුණ විශිෂ්ටත්ව ශිෂ්‍යත්ව | இளம் கல்வியாளர்களின் சிறந்த வெளிப்படுத்தலுக்கான புலமைப் பரிசில் | YOUTH EXCELLENCE SCHOLARSHIP — ENTECH Youth Excellence Scholarship
ඕනෑම දවසක | ඕනෑම වේලාවක | எந்த நாளும் | எந்நேரமும் | ANY DAY | ANY TIME — 24/7 OPEN
තාක්ෂණය පාදක කරගත් ක්‍රියාකාරී ඉගෙනීමක් | தொழில்நுட்பம் உள்ளார்ந்த கற்கைநெறி | TECHNOLOGY ENABLED ACTIVE LEARNING — TEAL

*Sri Lanka Technological Campus is a registered trademark of SLT Campus ( Pvt ) Ltd

Sri Lanka Technological Campus is in partnership with RMIT University Australia/Vietnam, Lancaster University UK, Deakin University Australia and Lincoln University & Auckland University New Zealand for collaborative degree programmes.

**SRI LANKA TECHNOLOGICAL CAMPUS,** Ingiriya Road, Padukka.
www.sltc.ac.lk | E mail : admissions@sltc.ac.lk | Call Now : 0112 100 500




# இலங்கையின் முதலாவது ஆராய்ச்சி பல்கலைக்கழக அனுபவத்தை தரும் இலங்கை...

19ஆம் பக்க தொடர்ச்சி...

தற்போது இந்த இலங்கை தொழிநுட்ப பொறியியலாளர், தொழில்நுட்ப, தொழில்முறை கல்வி, வர்த்தக மற்றும் முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினி, இசை போன்ற ஆறு கல்வி பீடங்களைக் கொண்ட தமது பட்டப்படிப்பு கற்கைகளை அறிமுகப்படுத்தி இருப்பதோடு முதுமாணி பட்டப்படிப்பு கல்வி பீடம் ஒன்றும் இங்கு செயற்படுகிறது. இந்த அனைத்து கல்வி பீடங்கள் மூலமும் தொழில் சந்தைக்கு பொருந்துகின்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட 25 பட்டப்படிப்பு கற்கைகள் வரை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதோடு எல்லா சந்தர்ப்பங்களிலும் கோட்பாடு மற்றும் நடைமுறை ரீதியான பகுப்பாய்வு அடிப்படையிலான அறிவை தமது மாணவர்களுக்கு வழங்குவதற்கு அவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார்கள்.

ஆய்வு தொடர்பில் அதிக அவதானம் செலுத்தி, மாணவர்களை மையப்படுத்திய பெறுபேறை முன்னிலைப்படுத்திய கற்கை முறை ஒன்றை பயன்படுத்தும் இந்நாட்டின் முதலாவது பல்கலைக்கழகம் இந்த இலங்கை தொழில்நுட்ப பல்கலைக்கழகமாகும். இந்த பல்கலைக்கழகம் மூலம் கற்கைகளை பூர்த்தி செய்கின்ற மாணவர்களுக்கு பட்டப்படிப்பை பூர்த்தி செய்த பின் விரைவில் வேலைவாய்ப்பை பெறுவதற்கு அதிக வாய்ப்பு கிட்டுகிறது. மாணவர்களின் தனிப்பட்ட மற்றும் அறிவு வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற இலங்கை தொழில்நுட்ப பல்கலைக்கழகம் அவர்களின் பரந்த சிந்தனை, பகுப்பாய்வு ரீதியான சிந்தனை, குழு உணர்வுடன் பணியாற்றும் திறனை மேம்படுத்துவதற்கு பொருத்தமான சூழல் ஒன்று உருவாக்கி இருப்பதும் முக்கியமாக குறிப்பிட வேண்டிய காரணியாகும்.

அதுமட்டுமல்ல அரச பல்கலைக்கழகங்கள் தவிர்த்து இந்த நாட்டுக்குள் செயற்படுகின்ற ஒரே வதிவிட பல்கலைக்கழகமாகவும் இலங்கை தொழில்நுட்ப பல்கலைக்கழகம் உள்ளது. இதன் ஆசிரியர் குழாமில் 170 துறைசார் நிபுணர்கள் வரை செயற்படுவதோடு அவர்களில் 40க்கும் மேற்பட்டவர்கள் முதுமாணிப் பட்டத்தை பூர்த்தி செய்தவர்களாவர். மாணவர்களின் செயற்பாடுகளுக்கு பல்வேறு வகையில் உதவுவதற்காக 70க்கும் அதிகமான கல்வி சாரா ஊழியர்கள் பணியாற்றுகின்றனர்.

இந்த பல்கலைக்கழக கற்றலை மேற்கொள்வதறக்கு உள்ளீர்ப்பதற்கான பிரதான தகுதி, க.பொ.த. உயர் தர பரீட்சையில் மூன்று சாதாரண சித்திகளை (S) பெற்றுக்கொள்வதாகும். அனைத்து கற்கைகளுக்கும் மிகவும் நியாயமான கட்டணம் அறவிடப்படுவதோடு க.பொ.த. உயர் தர பரீட்சையில் பெற்றுக்கொண்ண பெறுபேறுக்கு அமைய முழுமையான புலமைப்பரிசில் மற்றும் பகுதி புலமைப்பரிசிலை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இங்கு உயர்தர பரீட்சையில் மூன்று A சித்திகளை பெறுகின்ற மாணவர்களுக்கு முழுமையான புலமை பரிசிலை பெற முடியும் என்பதோடு ஏனைய மாணவர்களில் ஒரு A சித்திக்காக 30% கட்டண கழிவும் ஒரு ட சித்திக்காக 20% உம் ஒரு C சித்திக்காக 10% உம் கட்டணக் கழிவு கிடைக்கும்.


இலங்கை தொழில்நுட்ப பல்கலைக்கழகம் மூலம் தற்போது தமது பல்கலைக்கழகத்தின் மூலமே வழங்கப்படுகின்ற வெளிவாரி பட்டம் வழங்கப்படுவதோடு உலகின் அங்கீகாரரம் பெற்ற பல்கலைக்கழகங்களுடன் ஒத்துழைப்போடு சர்வதேச தரத்திலான முதல் பட்டம் மற்றும் முதுமாணிப் பட்டத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி ஐக்கிய இராச்சியத்தின் லெங்கஸ்டர், அவுஸ்திரேலியாவில் டிக்கின், அவுஸ்திரேலியாவில் ஆர்.எம்.ஐ.ட, நியூசிலாந்தில் ஒக்லாண்ட், மலேசியாவில் லிங்கன், சிங்கப்பூரில் ஜேம்ஸ் குக் ஆகிய பல்கலைக்கழகங்களுடன் ஒத்துழைப்புடன் பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின்படிப்பு கற்கைகள் நடத்தப்படுவதோடு தேவையானவர்களுக்கு அந்த பல்கலைக்கழகத்தில் முதல் கல்வி ஆண்டுகளையும் இலங்கையில் அமைந்துள்ள இந்த பல்கலைக்கழகத்தின் மூலம் கல்வி செயற்பாட்டை மேற்கொண்டு பட்டப்படிப்பை பூர்த்தி செய்வதற்கு அந்த பல்கலைக்கழகத்திற்கு செல்வதற்கு வசதி அளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொழில்நுட்ப பல்கலைக்கழகம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விருதுகள் பலதை வென்றிருப்பதோடு தெற்காசிய பிராந்தியத்தில் வளர்ந்து வரும் சிறந்த கல்வி நிறுவனமாகவும் 2019 ஆம் ஆண்டில் விருது வென்றது. தெற்காசிய வர்த்தக விருதில் அந்த விருதை வென்றதோடு அந்த ஆண்டிலேயே சிறந்த தேசிய வர்த்தக விழாவிலும் இந்த பல்கலைக்கழகத்திற்கு விருது வழங்கப்பட்டது. அதுமட்டுமல்லாது CPM Sri Lanka நிறுவனத்தின் மூலம் 2022 ஆம் ஆண்டில் சிறந்த முகாமைத்துவ கட்டமைப்புகளை பயன்படுத்துகின்ற வெற்றிபெற்ற 10 நிறுவனங்களில் ஒன்றாகவும் இந்த பல்கலைக்கழகம் பெயரிடப்பட்டுள்ளது.

தற்போது இந்த பல்கலைக்கழக மாணவர்கள் 3000 பேருக்கு அதிகமானவர்கள் கல்வி கற்பதோடு அவர்களில் வெளிநாட்டு மாணவர்கள் சிலரும் இருப்பது மிகவும் முக்கிய விடயமாகும். எதிர்காலத்தில் 6000 பேருக்கு அதிகமான மாணவர்களுக்கு கல்வி செயற்பாட்டுக்காக வாய்ப்பை வழங்கி உலக அங்கீகாரம் பெற்ற முதன்மையான பல்கலைக்கழகம் ஒன்றாக மாற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுவதோடு, அதற்கு உதவுவதற்காக புதிய முதலீட்டாளர்கள் மற்றும் வளப் பங்களிப்பாளர்கள் பலரும் இலங்கை தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் கைகோர்த்து இருப்பதையும் குறிப்பிடுதல் வேண்டும்.

**எரந்த எதிரிமான்ன**
**புகைப்படம் - சுதத் நிஷாந்த**






# கல்விப் பொதுத் தராதரப் பரீட்சை எழுதியவர்களுக்கான கற்கைநெறித் தெரிவுகள் குறித்த சில ஆலோசனைகள்

கல்விப் பொதுத் தராதரப் பரீட்சைக்குத் தோற்றிய பல மாணவர்களும் பரீட்சை முடிவுகள் வரும் வரையில் தம்முன்னே ஒரு நீண்ட காலப் பொழுது கிடைத்துள்ளமையயும், அதனைப் பயனுள்ளதாக எவ்வறு கழிக்கலாம் என்பது பற்றியும் ஆழமாக யோசித்துக் கொண்டிருப்பீர்கள். உங்களுக்காகவே இந்தக் கட்டுரை வரையப் பட்டிருக்கின்றது. மேலதிக தகவல்களோ அல்லது தெளிவூட்டல்களோ தேவைப்படுமாயின் கட்டுரையாளரை thabo@univ.jfn.ac.lk எனும் மின்னஞ்சல் முகவரியினூடாகத் தொடர்பு கொள்ளலாம்.

பரீட்சையின் பெறுபேறுகள் எவ்வாறானதாகவும் அமையலாம். ஆனால் அவை உங்களை உங்கள் இலக்குகளை அடைவதில் இருந்து ஒருபோதும் தடுக்கின்ற ஆற்றல் கொண்டவையல்ல என்பதை மனதில் இருத்திக் கொள்ளுங்கள். நீங்களே உங்கள் முன்னேற்றத்திற்கான அடுத்தப் படியைத் தேர்ந்தெடுக்கின்ற சக்தி படைத்தவர் என்பதையும் மறந்துவிடாதீர்கள்.

இன்றைய மாறிவரும் உலக நடைமுறைகளில் நீங்கள் என்னவாக வரவிரும்பினாலும், எத்தகைய தொழிலை உங்கள் கனவுத் தொழிலாகத் தேர்ந்தெடுக்க விரும்பினாலும் அதனை அடைவதற்கான பல வழிமுறைகள் உங்கள் முன்னிருக்கின்றன. அவற்றை அடைவதற்காக உங்களை நீங்கள் எவ்வாறு தயார் படுத்தலாம், அத்தகைய தயார்படுத்தல்களுக்கு உஙளுக்கு முன்னே கொட்டிக் கிடக்கின்ற அரிய வாய்ப்புகள் எவை என்பது பற்றியும் இனிச் சற்றுப் பார்ப்போம்.

***ஆங்கில மொழியறிவை மேம்படுத்தல்***

இன்றைய தொழில் உலகம் வெறுமனே வகுப்பறைக் கற்றலுடனான தொழில் தேடுபவர்களை வரவேற்பதில்லை. வகுப்பறைக் கற்றலுக்கும் மேலதிகமாக மேலும் பல திறன்களை வளர்த்துக் கொண்டவர்களையே இன்றைய தொழில் தருநர்கள் தெரிவு செய்ய விரும்புகிறார்கள். தாய் மொழிப் புலமைக்கு மேலதிகமாக, ஆங்கிலத்தில் மேம்பட்ட அறிவு, மிகவும் ஒரு முக்கியமான ஒரு தகைமையாக இன்று பல நிறுவனங்களாலும் எதிர்பார்க்கப் படுகிறது. தெளிவான உச்சரிப்புடனான ஆங்கில அறிவும், எவருடனும் கூச்சமின்றி சரளமாக ஆங்கிலத்தில் தொடர்பாடல் செய்யக் கூடியவர்களை இன்றைய தொழில் உலகம் இருகரம் நீட்டி வரவேற்கிறது. பல்வேறு கற்கைநெறிகளைக் கற்கின்ற மாணவர்களும் தமது ஆங்கில மொழிப் புலமையை மேம்படுத்துவது மிகவும் முக்கியமானது. நவீன தொழிநுட்பம் சார்ந்த தகவல்களும், கட்டுரைகளும் மற்றும் செய்திகளும் முதலில் ஆங்கில மொழியிலேயே வெளிவருகின்றன என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

உங்கள் ஊரிலுள்ள நூலகத்தில் கட்டாயமாக ஆங்கில அறிவை வளர்க்கக் கூடிய புத்தகங்கள் நிறையவே இருக்கும். அவற்றை வாசிப்பதும் ஏனைய நூல்களை வாசிப்பதும் இதற்கான முதற் படியாக அமையும். இதற்கு மேலதிகமாக ஆங்கில மேம்படுத்தல் வகுப்புகளுக்குச் செல்வதும் பெருமளவு உதவும். கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய ஊர்களில் உள்ள மாணவர்கள் அங்குள்ள பிரித்தானிய தூதரகத்தின் அநுசரணையுடன் இயங்கும் பிரிட்டி' கவுன்சிலையோ (British Council) அல்லது அமெரிக்க தூதுவராலயத்தின் அநுசரணையுடன் இயங்கும் அமெரிக்கன் கோணரையோ (American Corner) நாடலாம். மாணவர்கள் அங்குள்ள சிறந்த நூலக வசதிகளை இலவசமாகப் பயன்படுத்தலாம். இணைய இணைப்புடன் கூடிய கணனிகள், புத்தகங்கள், ஒலிப்பதிவுகள் மற்றும் வீடியோப் பதிவுகள் எனப் பலவேறுபட்ட தகவல் களஞ்சியங்கள் மாணவர்களாகிய உங்களுக்காகவே காத்துக் கிடக்கின்றன. அங்கும் பல ஆங்கில அறிவை மேம்படுத்தும் கற்கை நெறிகளும் கற்பிக்கப் படுகின்றன. இந்த இரு நிறுவனங்களையும் மாணவர்கள் தங்கள் ஆங்கில அறிவை மேம்படுத்துவதற்கு நன்கு பயன்படுத்தலாம்.

ஆங்கில அறிவிற்கு மேலதிகமாக கணனியுடனான பரிச்சயம் மற்றொரு அவசியமானதொரு தகைமையாகும். இன்றைய இளையோர் மத்தியில் கணனி சார் தொழில் உலகம் முக்கியமான ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளது. கணனிகளை இயக்கத் தெரிவதுடன் மட்டும் நின்றுவிடாது, அதற்கு மேலதிகமாக பல்வேறு கணனிப் பிரயோகங்களைத் (Applications) திறம்படக் கையாளத் தெரிவதும் உங்களை வேலைக்கு தெரிவு செய்யப்பட்டோர் பட்டியலில் முன்னிலைக்கு இட்டுச் செல்லும். இணைய இணைப்புடனான கணனிகளுடனான நல்ல பரிச்சயம் மாணவர்களுக்கு ஒரு புதிய தொழிநுட்ப உலகத்தைத் திறந்துவிடும். பல்வேறுபட்ட தகவல்களும், பாடங்கள் சம்பந்தப்பட்ட தகவல்களும், ஆராய்ச்சிக் கட்டுரைகளும் என ஒரு பல்பரிமாண தகவல் களஞ்சியம் இணைய உலகில் உள்ளது.

நிகழ்நிலை மூலக் கற்றல் என்பது கொரோனாவிற்குப் பின்னரான இன்றைய உலகில் சர்வசாதரணமாகி விட்டது. நிகழ்நிலைக் கற்றலுகான பல்வேறுபட்ட வளங்களும் சாத்தியங்களும் இணையத்தில் நிறையவே உள்ளன. கீழே உள்ள இணைய சீர்மை வளப்படுத்திகளில் (Uniform Resource Locators) (URLs) அவ்வாறான சிலவற்றைப் பட்டியலிட்டுள்ளேன். இத்தகைய நிகழ்நிலைக் கற்கைநெறிகள் பலவும் உலகளாவிய ரீதியில் முன்னணியில் உள்ள பல்கலைக் கழகங்களாலேயே நடாத்தப் படுகின்றன என்பதையும், இந்தக் கற்கை நெறிகள் பலவும் இலவசமாகவே மாணவர்களுக்கு வழங்கப் படுகின்றன என்பதையும் கவனத்திற் கொள்க. உங்கள் விருப்பத்திற்கேற்ப பொருத்தமான கற்கை நெறியைத் தெரிவுசெய்து உங்கள் அறிவை மேம்படுத்தலாம்.

நிகழ்நிலைக் கற்றலுக்கான சில தளங்கள்:

www.coursera.org
https://ocw.mit.edu/index.htm
https://www.khanacademy.org

மேலே தரப்பட்ட தளங்களுக்கு மேலதிகமாக யூரியூப் (www.youtube.com) வலைத் தளத்திலும் பல கற்றல் வீடியோக்கள் உள்ளன.

கணனித் துறையில் சிறப்பாகத் தேர்ச்சிபெற விரும்பும் மாணவர்களுக்கு மேலேகுறிப்பிட்டுள்ள நிகழ்நிலைக் கற்கைத் தளங்களிலேயே பல்வேறுபட்ட கற்கைநெறிகள் உள்ளன. நவீன தொழில் உலகில் கணனிகள் பல்வேறுபட்ட செயற்கை மதிநுட்ப முறையில் அமைந்த வேலைகளை மிக இலகுவாக செய்து முடிக்கின்றன. பாரிய அளவில் வளர்ச்சியடைந்துள்ள கணனிகளின் ஆற்றல் இதனைச் சாத்தியமாக்கியிருக்கின்றது. இயந்திரக் கற்றல் (Machine Learning) மற்றும் ஆழக் கற்றல் (Deep Learning) என்னும் துறைகள் மூலம் மிகவும் சிக்கலான பல வேலைகளை கணனியில் இலகுவாகச் செய்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இந்த இரண்டு துறைகளும் கணனி விஞ்ஞானத்தில் இன்று மிகவும் பிரபல்யமான உப பகுதிகளாக மாணவர்களாலும், தொழில் தருநர்களாலும் அடையாளப்படுத்தப் பட்டிருக்கின்றன. பைத்தன் (Python) எனும் கணனிச் செய்நிரலாக்கல் மொழியில் சிறப்புத்தேர்ச்சி பெறுவது பல்வேறுபட்ட தொழில்களைப் பெற்றுக் கொள்ளவும் உயர்கல்வி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளவும் வழிவகுக்கும். கணனி வலையமைப்புக்கள் மற்றும் செயற்கைமுறை நுண்ணறிவு சார்ந்த கற்கை நெறிகளும் எதிர்காலத்தில் நல்ல வேலைவாய்ப்பைப் பெற்றுத்தர நிச்சயம் உதவும்.

பல்கலைக்கழகங்களில் வழங்கப்படும் பட்டங்களுக்கான கற்கை நெறிகளுக்கு மேலதிகமாகப் பல்வேறுபட்ட கற்கைநெறித் தெரிவுகளும் மாணவர் முன்னே இருக்கின்றன. கணக்கியல் துறையில் மேலும் அறிவு பெறுவதற்கும் நல்ல தொழில்வாய்ப்பை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெற்றுக்கொள்வதற்கும் CIMA மற்றும் AAT கற்கைநெறிகள் மிகவும் உகந்தவையாகும்.



இலங்கையில் அரச பல்கலைக் கழகங்களுக்கு இணையாக மேலும் சில நிறுவனங்களும் பட்டக் கற்கைநெறிகளை வழங்குகின்றன. இலங்கை தகவல் தொழிநுட்ப நிறுவனம் (SLIIT), தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம் (NIBM), தேசிய வியாபார முகாமைத்துவ பாடசாலை (NSBM) என்பன இவற்றுள் முன்னணியில் உள்ளன. பல்கலைக் கழக வாய்ப்பைத் தவறவிட்ட மாணவர்களும் இவற்றில் இணைந்துகொண்டு தமக்குப் பிடித்தமான துறைகளில் தேர்ச்சி பெறலாம். இந்த நிறுவனங்களால் வழங்கப்படும் பட்டங்களும் சான்றிதழ்களும் உங்கள் தேர்ச்சியை மேலும் உறுதிப் படுத்துபவையாக அமையும்.

இதனைவிட, பல்வேறுபட்ட தனியார் கல்வி நிறுபனங்களும் தற்போது பலவகையான சான்றிதழ்களையும், பட்டங்களையும் வழங்குகின்றன. இந்த நிறுவனங்கள் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள் பலவற்றுடன் இணைந்து மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்குகின்றன. APIIT, ICBT Campus, BCAS ஆகியவை இவற்றில் சிலவாகும்.

Fashion Designing எனப்படும் நவீன ஆடை வடிவமைப்பு துறை, ஹசயரபாவளஅயெ எனப்படும் கட்டடப் படவரைஞர் துறை, Hospitality Management எனப்படும் சுற்றுலாவுடன் சம்பந்தப் பட்ட விருந்தோம்பல் முகாமைத்துவம் மற்றும் Allied Health Sciences எனப்படும் இணைமருத்துவ விஞ்ஞானக் கற்கைநெறிகளும் தொழில் உலகில் பல்வேறுபட்ட தொழில் வாய்ப்புக்களுடன் தகுதியானவர்களை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன. அநேக மாணவர்களால் தேடிக் கற்கப்படும் துறைகளாக உள்ளன.

கற்பது எதுவாகினும் அதனை ஆழக் கற்பதுடன் தெளிவான புரிதலுடன் கற்பது நம்மை நல்லதொரு ஆற்றல் மிக்கவராக மாற்றும். கொரோனாவுக்குப் பின்னரான புதிய நடைமுறைகளில் மேலும் பல புதிய தொழில்கள் தோன்றியுள்ளன அல்லது ஏற்கனவே இருந்த பல தொழில் முறைகள் அவற்றின் செயல்பாட்டில் மாற்றம் பெற்றுள்ளன என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். மாணவர்கள் தம் முன்னே இருக்கும் தெரிவுகளின் அடிப்படையிலும், தமது துறை சார் விருப்பத் தெரிவின் அடிப்படையிலும் தமக்கான மேலதிக கல்வித் தயார்படுத்தலுக்கு தம்மைத் தயார்படுத்திக் கொள்ள இந்தக் காலப் பகுதியை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**கலாநிதி கதிரவேலு தபோதரன்,**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கணனி விஞ்ஞானத் துறை,
விஞ்ஞான பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

LAKE HOUSE
Advertising Supplements Department
Coordinated by Sajeewan Prasath

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மார்ச் மாதம் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# ஷேன் வோர்ன்: முற்றிலும் திரவ உணவு முறை பாதுகாப்பானதா? ஆபத்துகள் என்னென்ன?

பிரபல ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் ஷேன் வோர்ன், கடந்த வெள்ளிக்கிழமை இயற்கையான காரணங்களால் உயிரிழந்தார். இந்நிலையில், விரைவாக உடல் எடையை குறைக்க 14 நாட்களாக அவர் திரவ உணவு முறையைப் பின்பற்றியதாக கூறப்படுகிறது.

இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்பு, அவர் ஒரு பழைய புகைப்படத்தை ட்வீட் செய்து, "ஜூலைக்குள், சில ஆண்டுகளுக்கு முன்பு இருந்த இந்த வடிவத்திற்கு திரும்ப வேண்டும் என்பது இலக்கு." என்று தெரித்திருந்தார்.

இதற்கு முன்பு அவர் பலமுறை முயற்சித்த உணவு முறைதான் இது என்று ஷேன் வோர்னின் நண்பர்கள் தெரிவித்தனர். மேலும் அவரது திடீர் மரணத்திற்கும் இந்த உணவு முறைக்கும் தொடர்பு இருப்பதாக எந்த ஆதாரமும் இல்லை. நாம் சரியான நேரத்தில் சாப்பிடவில்லை என்றால் என்ன நடக்கும்?குடும்ப மருத்துவர் போல, குடும்ப விவசாயி இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க ஒரு புதிய முயற்சி இந்த உணவுகள் எவ்வளவு பாதுகாப்பானவை மற்றும் அவை உடலில் என்ன தாக்கத்தை ஏற்படுத்துகின்றன?

பல்வேறு வகையான திரவ உணவுமுறைகள் உள்ளன. ஆனால் அவை அனைத்தும், `குறைவான கலோரிகளை உட்கொள்வதன் மூலம் விரைவாக உடல் எடையை குறைக்க வேண்டும்` என்ற ஒரே நோக்கத்தையே கொண்டுள்ளன.

உடலில் உள்ள நச்சை நீக்கி சுத்தப்படுத்தக்கூடிய, பழ, காய்கறி ஜூஸ் முதல் குறைந்த கலோரிகள் கொண்ட மில்க் ஷேக்குகள் மற்றும் சூப்கள் வரை இந்த உணவுமுறை பட்டியலில் அடங்கும்.

ஆனால் தீவிரமான இந்த உணவு முறைகளால் உடல்நலத்துக்கு தீங்கு என்பதுடன் பெரும்பாலான மக்களுக்கு பொருந்தாது என்றும் வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர்.

ஒரு நாளுக்கு 800 கலோரிகள் மட்டுமே எடுத்துக்கொள்ளும்படியான உணவு முறையை குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமே பிரிட்டனின் தேசிய சுகாதார சேவையான NHS பரிந்துரைக்கிறது; குறிப்பாக பருமனான அல்லது கடுமையான பருமனுடன் டைப்2 நீரிழிவு நோயுள்ளவர்களுக்கு மட்டும்.

பல்வேறு மருத்துவ கண்காணிப்புகள் மற்றும் ஆதரவுகளோடு இந்த உணவுமுறை சோதனை



செய்து பார்க்கப்பட்டது. அதேபோல இதில் ஒரு நாளைக்கு தேவையான சத்துக்களும் இருக்கின்றன. எனினும் பொதுவாக ஆன்லைனில் காணப்படும் பிற திரவ உணவுமுறைகள் அவ்வாறானதாக இல்லை.

"ஜூஸ் உணவு முறை மக்களை எளிதில் ஈர்க்கிறது. காரணம், அவர்கள் விரைவான தீர்வை விரும்புகிறார்கள். ஆனால் உணவுக் கட்டுப்பாடு என்பது மிகவும் கடினமானது" என்கிறார் பிரிட்டனில் உள்ள உணவுமுறைகள் குறித்த அமைப்பை சேர்ந்த ஐஸ்லிங் பிகோட்.

"ஜூஸ் போன்ற திரவ உணவுக்கு நமது உணவில் ஒரு பங்கு உள்ளது. ஆனால், இந்த ஒரு பங்கு என்பது எல்லோருக்கும் பொருந்துவதில்லை. "அதேசமயம் சரியான உடல் எடை கொண்டவர்களிடம் இதை விளம்பரப்படுத்துவது கவலைக்குறிய ஒன்றாக உள்ளது," என்றார் அவர்.

பழம் அல்லது காய்கறி ஜூஸ் உங்களுக்கு நிறைய தாதுக்கள் மற்றும் வைட்டமின்களை வழங்கும். ஆனால் மிகக் குறைந்த அளவில்தான் புரதம் அல்லது கொழுப்பு கிடைக்கும்.

தோல் மற்றும் விதைகள் உட்பட முழு பழத்தையும் கூழ் செய்து சேர்க்காவிட்டால் உங்களுக்கு நார்ச்சத்து கூட பற்றாக்குறையாகி விடும்.

பிளைமவுத் பல்கலைக்கழகத்தின் ஊட்டச்சத்து துறை இணை பேராசிரியர் டாக்டர் கெயில் ரீஸ் கூறுகையில், "இந்த உணவு முறையில் ஒரு வாரத்திற்குப் பிறகு நீங்கள் சோர்வாக உணர்வீர்கள்," என்றார். ஊட்டச்சத்து சமநிலை இல்லாத, உடலுக்குத் தேவையான அனைத்தையும் கொடுக்காத உணவுமுறை நீண்ட நாட்களுக்குத் தொடரும்பட்சத்தில், அது "மிகுந்த பாதிப்பைத் தரக்கூடியதாக இருக்கலாம்" என்றும் அவர் கூறுகிறார்.

உடலில் சேமிக்கப்பட்டிருக்கும் இரும்புசத்து பயன்படுத்தப்பட்டு விடும். இது பெண்களுக்கு இரத்த சோகை வர வழிவகுக்கும். தசையின் வலு குறையும் மற்றும் குடல், நுரையீரல் மற்றும் கல்லீரல் ஆகியவை உங்கள் உடலை இயல்பாக செயல்பட வைக்கவே கடினமாக உழைக்க வேண்டியிருக்கும். அத்துடன், தலைவலி, தலைச்சுற்றல், கடும் சோர்வு, வயிற்றுப்போக்கு அல்லது மலச்சிக்கல் ஆகிய பக்க விளைவுகளுக்கும் சாத்தியமுண்டு.

நிறைய இயற்கை அமிலங்களைக் கொண்ட பழச்சாறுகள், பற்களில் உள்ள ஈறுகளை தேய்த்து விடுவதோடு, கலோரிகள் இல்லாததால் சுவாசமும் வித்தியாசமான வாசனையை உண்டாக்கும்.

திரவ உணவில் விரைவாக உடல் எடையை குறைப்பது சாத்தியம், ஆனால் பிகோட்டின் கூற்றுப்படி, மிகப்பெரிய சவால் "யோயோ ஆபத்து". அதாவது, உணவுமுறை மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பும்போது எடை கூடும் ஆபத்து.

"அதீத உணவுக்கட்டுப்பாடு, உடல் எடையை குறைப்பதற்கு ஒரு நிலையான தீர்வாகாது, ஏனெனில் இழக்கப்படும் எடையின் பெரும்பகுதி நீர் அல்லது மெலிந்த தசையாக இருக்கலாம்" என்று பிரிட்டிஷ் ஊட்டச்சத்து அறக்கட்டளையின் டாக்டர் சைமன் ஸ்டீன்சன் கூறுகிறார்.

## தற்கொலைகள் தடுக்கக்கூடியவை... (16ஆம் பக்கத் தொடர்)

அந்த வகையில் இலங்கையில் கடந்த வருடம் நிகழ்ந்த அனைத்து தற்கொலைகளின் பின்னணியாக வீட்டு வன்முறையுடன் கூடிய கணவன் மனைவிக்கிடையான முரண்பாடுகள், காதல் தோல்விகள் உள்ளடங்கிய உறவுச்சிக்கல்கள், உள நோய்களின் தாக்கம் என்பன அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

**கேள்வி : தற்கொலைக்கும் உளநோய்களுக்கும் இடையே இருக்கின்ற தொடர்பு பற்றிக் கூற முடியுமா?**

**பதில்:** உளநோய்கள் உள்ளவர்களில் தற்கொலை செய்துகொள்ளும் தன்மை அதிகரித்திருப்பது அறியப்பட்டுள்ளது. அனைத்து விதமான உளநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இது பொதுவானதாயினும் உளப்பிறழ்வு உள்ளிட்ட உளமாய நோய்கள், மனச்சோர்வு நோய், போதை வஸ்துப் பாவனையுடன் தொடர்புபட்ட உளநோய்கள் என்பவற்றால் பாதிக்கப்பட்டுள்ளவர்களில் தற்கொலை செய்துகொள்ளும் தகவு மிகவும் அதிகமாகக் காணப்படுகிறது. இந்த தற்கொலைகள், உளநோயினால் பாதிக்கப்பட்டிருப்பினும் அடையாளம் காணப்படாதவர்கள் (undiagnosed) மற்றும் அடையாளம் காணப்பட்ட பின்னரும் தகுந்த சிகிச்சையைத் தொடர்ந்து பெறாதவர்கள் மத்தியிலேயே அதிகம் ஏற்படுகிறது. அதே நேரம், தற்கொலை செய்து கொள்பவர்கள் அனைவரும் உளநோயால் பாதிக்கப்பட்டவர்கள் அல்ல. இவர்களில் கணிசமானவர்களில் உளநோய்கள் இதற்குக் காரணமாக இருப்பினும், வேறு பலரில் சமூக பொருளாதாரப் பிரச்சினைகளால் ஏற்படுத்தப்படும் அதீத அல்லது தொடர்ச்சியான மன அழுத்தமும் காரணமாகிறது.

**கேள்வி : எவ் வகையான உளப் பாதிப்புக்குட்பட்டவர்கள் தற்கொலை முயற்சியை மேற்கொள்கிறார்கள் ?**

**பதில் :** தற்கொலை முயற்சிகளுக்குப் பின்னாலும் பல காரணங்கள் இருக்கமுடியும். ஆயினும் இதற்கு இறுதியாக இட்டுச்செல்லும் நிகழ்வாக இருப்பது பெரிதும் உறவுகளில் ஏற்படும் முரண்பாடுகளே ஆகும். மேலும் தற்கொலை முயற்சிகளை மேற்கொள்பவர்களில் மிகவும் குறைந்த அளவினரில் மட்டுமே உளநோய்கள் இருப்பது அடையாளம் காணப்பட்டுள்ளது. தற்கொலை முயற்சியில் ஈடுபடுவோர் சிறுவர்களாக, கட்டிளமைப் பருவத்தினராக, இளவயதினராகவே அதிகம் உள்ளனர்.

**கேள்வி : தற்கொலை முயற்சியில் பெரிதும் ஈடுபடுவோர் சுய முயற்சியிலா மாறாக ஏனையோரின் தூண்டல்களால் ஈடுபடுகிறார்களா ?**

**பதில் :** தற்கொலை முயற்சி என்பது ஒருவரின் சுய முயற்சியே. ஆயினும் ஒருவரை தற்கொலை முயற்சியை நோக்கித் தள்ளுகின்ற, அந்த முயற்சியின் தீவிரத் தன்மையைத் தீர்மானிக்கின்றவையாக பல விடயங்கள் உள்ளன. அந்த வகையில் "பிரதியீடு செய்யப்படும் தற்கொலைகளை" (Copycat Suicide) கூற முடியும். தற்கொலை எண்ணம் கொண்ட ஒருவர் தான் கேட்ட அல்லது பார்த்த ஒரு தற்கொலை நடத்தையை மேற்கொள்ளத் தள்ளப்படுகிறார். மேலும் தனது பிரச்சினையை ஒத்த ஒருவர் தற்கொலை செய்து கொண்டதாக அறியும் சூழ்நிலையில் தானும் இந்த விடயத்தை செய்வது நியாயமானது என்று எண்ணவும் தலைப்படுகிறார். தமிழ் பேசும் மக்களை அதிகம் கொண்ட மாவட்டமொன்றில் செய்யப்பட்ட ஆய்வு ஒன்றில் பத்திரிகைச் செய்திகள் மற்றும் தொலைக்காட்சி நாடகங்கள் என்பனவே தற்கொலை முயற்சியின் வகை பற்றி அறிந்து கொண்ட முதலாவது சந்தர்ப்பமாக அடையாளம் கண்டதாக அறிக்கையிடப்பட்டிருப்பது மிக முக்கியமானது.

**கேள்வி : தற்கொலை முயற்சியில் இருந்து விடுபடுவதற்கு எவ்வாறான ஆலோசனைகளை கூறுகின்றீர்கள்?**

**பதில் :** தற்கொலை எண்ணம் தோன்றுவதைத் தடுக்கவேண்டும். மேலும் இந்த தற்கொலை எண்ணத்துக்கு இட்டுச் செல்லும் தனியே விடப்பட்டதான (loneliness), எதற்குமே பிரயோசனமற்றவர் (worthlessness) என்கின்ற எண்ணம், எதிர்காலம் தொடர்பான அவநம்பிக்கை எண்ணங்கள் (Hopelessness) தோற்றம் பெறும் ஆரம்ப சந்தர்ப்பத்திலேயே அவற்றின் உண்மைத் தன்மையைக் கேள்விக்குட்படுத்துவது முக்கியமானது. இப்படியான எதிர்மறை எண்ணங்களோ உணர்வுகளோ அடிக்கடி ஏற்படும்போதோ நீடிக்கும்போதோ உங்கள் மனதில் குழப்பமும் சோர்வும் ஏற்படலாம். இது தீர்வுக்கான தேடலை மட்டுப்படுத்தி தீர்வுக்கான எல்லா வழிகளும் அடைக்கப்பட்டதான, வாழ்க்கையை முடிப்பதுவே ஒரே வழி என்ற எண்ணத்துக்குள்ளும் இழுத்துச் செல்லவல்லன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் அந்த சிக்கலான எண்ணங்களை மற்றும் சிரமப்படுத்தும் உணர்வுகளை நம்பிக்கையான ஒருவரோடு பகிர்ந்து கொள்வது மனச்சுமையைக் குறைப்பது மாத்திரமல்ல, மனதில் ஒரு தெளிவையும் ஏற்படுத்தும்.

**10) கேள்வி : தற்கொலை எண்ணம் ஒன்றால் சிரமமுறும் நபர்கள் எவ்வாறு உதவியை நாட முடியும், இலங்கையில் அவ்வாறு நாடுகிறார்களா? இவர்கள் உதவி நாடுவதை ஊக்குவிக்க என்ன செய்யலாம் ?**

**பதில்:** இப்படியானவர்கள் தமக்கு அருகிலுள்ள வைத்தியசாலையிலோ பிரதேச செயலகத்திலோ அவர்களுக்குத் தேவையான உளவளத்துணை சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அதேபோல இந்த உதவிகளைப் பெறுவதற்கான அவசர தொலைபேசி இலக்கங்களையும் பயன்படுத்த முடியும். இலங்கையில் இவ்வாறு உதவிகளை நாடுபவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவானதாகவே உள்ளது. உதவி நாடுவதற்கு தற்கொலை பற்றிய சமூகக் களங்கம் (Social stigma) ஒரு பெரிய தடையாகும். நம்பிக்கையை ஊக்குவிப்பதன் மூலம் தற்கொலையைச் சுற்றியுள்ள களங்கத்தைக் குறைப்பதன் மூலம், மற்றவர் நலனில் அக்கறையுள்ள சமுதாயத்தை உருவாக்குவதன் ஊடாகவும் தேவைப்படுபவர்கள் தமக்கான உதவி பெற முன்வருவதில் வசதியாக உணர்கிறார்கள்.

**கேள்வி : தற்கொலைகளைத் தடுப்பதில் எவரும் பங்குகொள்ள முடியுமா, இதற்கு விசேட அறிவூட்டல் மற்றும் ஆற்றல்கள் தேவையா?**

**பதில் :** செயற்பாடுகளின் மூலம் நம்பிக்கையை உருவாக்குதல் என்பது தற்கொலை செய்யாது வாழ்வதற்கு பல மாற்று வழிகள் இருக்கிறது என்பதையும் அனைவரிடமும் வாழ்க்கை தொடர்பான நம்பிக்கையை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஒருவரால் இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் சரியான நடவடிக்கைகள் சிறியதாக இருந்தாலும், அவை தற்கொலை எண்ணங்களுடன் போராடுபவர்களுக்கு நம்பிக்கையை அளிக்கவல்லன. அந்த வகையில் நீங்கள் ஒருவரின் வாழ்வின் சவாலான தருணங்களில் சமூகத்தின் உறுப்பினராக, பெற்றோராக, நண்பராக, சக ஊழியராக அண்டை வீட்டாராக ஏன் அந்த வீட்டின் மகளாக மகனாகக் கூட இருந்து மற்றவர்களில் நம்பிக்கையை ஏற்படுத்த, அதன் மூலமாக தற்கொலையைத் தடுப்பதில் முக்கிய பங்கு வகிக்க முடியும்.

மேலும் தற்கொலை முயற்சியிலிருந்து தப்பி வாழும் நபர்களுக்கு நாம் ஆதரவாக இருக்கிறோம் என்பதற்கான சமிக்ஞைகளைத் தெரிவித்து அவர்களின் நலனில் அக்கறை காட்டுகிறீர்கள் என்று காண்பிப்பதன் மூலம் அவர்களுக்கு நம்பிக்கையைக் கொடுக்க முடியும். அவர்களின் சவால்களுக்கு அல்லது பிரச்சினைகளுக்கு என்ன செய்ய வேண்டும் அல்லது எவ்வித தீர்வுகள் உண்டு என்று நீங்கள் அவர்களுக்கு சொல்ல வேண்டியதில்லை.

மாறாக ஒருவரின் சவால் மிகுந்த பிரச்சினைகளால் நிறைந்த அனுபவங்களுடன் இணைந்துள்ள எதிர்மறை உணர்வுகளையும் எண்ணங்களையும் பகிர்ந்து கொள்ளத் தேவையான சந்தர்ப்பத்தை வழங்குவது, அவர்கள் கூறுபவற்றைச் செவிமடுப்பது என்பது பாதிப்புற்ற நபருக்கு ஆறுதலை அளிக்கக் கூடியது. அன்பான பேச்சு, அக்கறையான செவிமடுத்தல் என்பன சமூகத்துடன் இணைக்கப்பட்ட உணர்வை அவருள் ஏற்படுத்தி வாழ்க்கையில் நம்பிக்கையை மீளேற்படுத்தக்கூடியது மட்டுமல்ல, உயிர்களையும் காப்பாற்றக்கூடியது.

**கேள்வி : தற்கொலை நடத்தைகளைத் தடுப்பதிலுள்ள சவால்களாக நீங்கள் எவற்றைப் பார்க்கிறீர்கள்?**

**பதில் :** தற்கொலை நடத்தைகளுக்கான தடுப்பு திட்டங்கள் மற்றும் இடையீடுகள், தற்கொலை நடத்தைகளைக் கட்டுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், மன அழுத்தங்கள், மனக்கிளர்ச்சி மற்றும் தற்கொலை நடத்தைகளுக்கு அடியாக இருக்கின்ற சமூக, கலாசார, பொருளாதார, அரசியல், மத மற்றும் சூழல் காரணிகளைக் குறைப்பதாகவும் அமைய வேண்டும்.

மூன்று தசாப்தங்களாக போர் மற்றும் அனர்த்தங்களுக்குட்பட்ட நிலையில் இயல்பு நிலையை அடைய போராடி வருகின்ற சமூகங்களில் அதிகரித்து வரும் சமூக மற்றும் குடும்ப பிறழ்வுகள் மற்றும் சமூக வலைப்பின்னல்களின் இழப்பு ஆகியவற்றின் பின்னணியில் வாழும் பலருக்கு அவர்களின் அன்றாட பிரச்சினைகளை சமாளிக்க தேவையான திறன்கள் போதுமாக இருப்பதில்லை என்பதுடன் அவர்களால் சமூக ஆதரவு தரக்கூடிய அமைப்புகளை அணுகுவது எளிதானது அல்ல.

## மரண அறிவித்தல்

**திருமதி சாரா செல்வராணி விஸ்வநாதன்** ஓய்வுபெற்ற ஆசிரியர் வின்சன்ட் மகளீர் உயர்தர பாடசாலை மட்டக்களப்பு. கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார். அன்னார் விஜேந்திரா விஸ்வநாதன் அவர்களின் அன்பு மனைவியும் றுபேஸ் தர்மேந்திரா அவர்களின் அன்பு தாயாரும் காலஞ்சென்ற திரு. திருமதி செல்லதம்பி அவர்களின் அன்பு புதல்வியும் லக்சிதாவின் மாமியாரும், பிரிம்மிலிமாலா, காலஞ்சென்ற றோய் அவர்களின் அன்பு சகோதரியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் ஜயரத்ன மலர்ச்சாலை பொரளையில் 20.03.2022 காலை 8.30 மணியிலிருந்து 3.30 வரை பார்வைக்காக வைக்கப்படும். ஈமக்கிரியைகளும் இறுதி ஆராதனையும் பிற்பகல் 3.30 மணியிலிருந்து நடைபெறும். 021155

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

### வர்த்தகம்

### 209 வியாபார ஸ்தலம் வாடகைக்கு/ குத்தகைக்கு

கொழும்பு 06 வர்த்தக இடவசதி வாடகைக்கு. W.A. சில்வா மாவத்தைக்கு முகப்பாக 1ம் மாடி. தொடர்பு 0777 537555. 020975

### 233 இயந்திராதிகள்/ கை கருவிகள் விற்பனைக்கு

கிரைன்டிங் மில் விற்பனைக்கு. மிளகாய், அரிசி, தானியங்கள் அரைக்கும் மற்றும் நெல் குத்தும் மில்/மோட்டார்கள் நல்ல நிலையில் விற்பனைக்கு ண்டு . விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். லாபிர் 0775667454. 020251

### வேலைவாய்ப்பு

### 308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

கண்டி, குருநாகலை மற்றும் கேகாலை மாவட்டத்தில் உள்ள பிரபல நகைக்கடைகளுக்கு அனுவம் உள்ள SALESMAN மற்றும் Assistant Boys தேவை 0772738806. 020953

கொழும்பு 02 இல் உள்ள எயாகண்டிஷனிங் கம்பனியொன்றிற்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் நன்கு உரையாடக் கூடிய கணனி அறிவுள்ள விற்பனையாளர் (பெண்) தேவை. நேரத்தை ஒதுக்கிக் கொள்வதற்காக அழைக்கவும். 070 6665551. 020909

### 309 வெற்றிடங்கள் கணக்கியல்/ நிதி

சில்லறைக் கடைக்கு கணக்கு வேலை தெரிந்த SALESMEN தேவை. சம்பளம் அனுபவத்துக்கேற்ப பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு கொள்ளவும். 0771283150. 020070

### 312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

இரும்பு ஒட்டுநர்கள் தேவை. கேட், கிறீல், இரும்புக் கூரை, கை வேலி வேலை தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. கவர்ச்சிகரமான சம்பளம். 077 4066205. 020854

### 317 வெற்றிடங்கள் டெயிலர்கள்/ டிரஸ்மேக்கர்கள்

காற்சட்டை, சேர்ட் தைப்பதற்கு திறமையான டெயிலர் தேவை. அத்துருகிரிய டெயிலர் நிலையத்திற்கு தங்குமிட வசதியுண்டு. 0777909408, 0705205222. 020380

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

கண்டியில் 3 பேர் கொண்ட குடும்பத்திக்கு 25 வயதுக்கு உட்பட்ட வீட்டுப் பணிப்பெண் தேவை. 50 வயதிற்கு நெருங்கிய ஒரு ஆண் வேலைக்கு தேவை. 0777777275. 020950

தெஹிவளையிலுள்ள வீடொன்று சிறு குழந்தையைப் பராமரிப்பதற்காக 20 35 வயதுடைய பெண் ஒருவரைத் தேடுகிறது. இப்போது அழைக்கவும். 0776130055/ 0777787677. 020930

பத்தரமுல்ல இரண்டு மாடி வீடொன்றில் தங்கி வேலை செய்வதற்கு 3550 வயது, தமிழ் கிறிஸ்தவப் பெண்ணொருவர் தேவை. சம்பளம் 32,000/= அழைக்கவும்: 0 76144 1002, 0761441359. 020562

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

சுற்றுலாப் பயணிகளுக்கான ஹோட்டலில் சேவை செய்வதற்கு வெயிட்டர்கள், சமையற்காரர்கள், உதவியாளர் தோட்ட வேலைக்காக தொழிலாளர் உடனடியாக தேவை. 077 5925434. 021066

கொழும்பு 05, ஹெவ்லொக் வீதியில் இல் ஓர் சீன உணவகத்தில் வெற்றிடங்கள். பயிலுநர்/ பயிற்சி பெற்ற வெயிட்டர்கள், கிச்சன் ஹெல்பர், டிஷ் வொஷர்ஸ் மற்றும் வெயிட்டர்/ ரைடர்கள். தொடர்பு 07053 23273, 0765718240. 016128

### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

தென்னந் தோட்டத்தில் மாடொன்றை வண்டியில் பூட்டுதல் மற்றும் ஏனைய வேலைகள் செய்யக்கூடிய காவலாளி தேவை. தொடர்பு 0777897837. 019974

### 325 தொழில்துறை பொது

சிப்பிங் (Shipping) நிறுவனத்தில் சிறந்த அனுபவமுள்ள நபர் தேவை. இந்த இலக்கத்தை அழையுங்கள். 0777 671156. 017911

துறைமுக தீர்வை (clearing) நிறுவனத்திற்கு அனுபவமுள்ள கணக்காளர் (Accountant) தேவை. மேலும் Marketing அறிவு உடைய பலமொழிகளைக் கதைக்கக் கூடிய ஒருவர் தேவை. இந்த இலக்கத்தை அழையுங்கள். 0777 671156. 017908

தொழிற்சாலை வெற்றிடம் ஒரு நாளைக்கு ஊழியர் ரூ. 1500 பெண் ஊழியர் 1100 (தங்குமிடம் இலவசம் உணவு கொடுப்பனவு) 077 3077813, 0722 273273. 020744

07186537 78 சுத்திகரிப்பு சேவை விடயங்களுக்கு ஆண்/பெண் ஊழியர்கள் தேவை. தொடர்பு 071 8653781, 076 3155331, 0760989129 லோட்டஸ் கிளினிக். 020880

0779975547, 071 8653778 நட்சத்திர தர ஹோட்டலுக்கு சிவில் உடையில் பாதுகாப்பு அதிகாரிகள் உடனடியாகச் சேர்த்துக் கொள்வதற்கு உணவு இலவசம். (12 மணிநேரம்) இற்கு 1750/ 1450/ கொழும்பு. 071 8 653780. அலுவலகம் 0763155331, 070 6655331. 020879

### பொது

### 431 நானாவிதப் பொருட்கள் விற்பனைக்கு

இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட விலை உயர்ந்த புடவைகள், சல்வார்கள் , மற்றைய துணி வகைகள் விற்பனைக்காக தரகர்களை எதிர்பார்க்கின்றோம். மேலும் விபரங்களுக்கு கைதொலைபேசி இலக்கத்தை நாடவும். 0777696766. 019603



### காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

நுகேகொட சந்திக்கு அருகில் 44 பேர்ச் காணி விற்பனைக்கு. 0714345345. 020201

### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

களனி வராகொட வீதியில் 5 பேர்ச் இருமாடி வீதி பிரதான தேசிய பாடசாலைகள் இரண்டுக்கு 500 மீட்டர் அதிவேக வீதிக்கு 1.5 கி.மீ. கண்டி வீதிக்கு. 1. கி.மீ. களனி விஹாரைக்கு 1.கி.மீ. குழாய் நீர். ஒரு வாகனத்தை பார்க் செய்யும் வசதி. 0768483748. 020835

### 636 வீடு சொத்து யாழ்ப்பாணம் மாவட்டம் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சோனகத்தெரு AP லேன் கோவில் ஒழுங்கை 5 பேர்ச் 5 ரூம் மேல் பகுதியின் அரைப்பகுதி கொங்கிறீட் சிலேப் போடப்பட்டுள்ள வீடு விற்பனைக்கு ள்ளது. தொடர்பு கொள்ளவும். 0777103269. 020250

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

கல்கிசை வித்தியால பாதையில் ரெம்பிலர்ஸ் பாதைக்கப்பால் 16/4 இலக்கத்தில் ஒரு படுக்கையறை மேல்மாடி வீடு 25,000/ வாடகைக்கு. 020554

கல்கிசை, கல்லூரி வீதி, 16/4 தனியறையுடன் மேல் மாடி வீடு வாடகைக்கு. 25,000/=. 020556

களுபோவில, காலி வீதிக்கு அருகில் 02 அறைகளுடன் மேல் மாடியில் வீடு வாடகைக்கு/ குத்தகைக்கு உண்டு. பார்க்கிங் இல்லை. தொடர்பு 0714391552. 020246

கிருலப்பனை அவனியூ கொழும்பு05 ல் முதலாம் மாடியில் 3 படுக்கையறைகள், சுடுநீர் வசதி இணைந்த 2 குளியலறைகள், பான்றி கபேட், குக்கர் உள்ள சமையலறை, வாகனத்தரிப்பிடம் என்பவற்றோடு இணைந்த புதிய வீடு வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு 0776505027 021101

கொழும்பு 06 2 படுக்கையறை வீடு வாடகைக்கு. அலுவலகம் அல்லது தொழில்சார் தங்குமிடத்துக்கு பொருத்தமானது. தொடர்பு 0777 537555. 020973

மோதர, அளுத்மாவத்தை காளி கோவிலுக்கு அண்மையில் கொழும்பு15, 178, 155 பஸ் பாதையில் இரண்டு மாடி வீடொன்று வாடகைக்கு உண்டு. வாடகை 50, 000. 0769658101 . 019990

24/ 18/ 1/ 1 வெள்ளவத்தை மெனிங் பிளேஸ் முகவரியில் 2 படுக்கையறையுடன் வீடு வாடகைக்கு உண்டு. தொ.பே. 0761263828. 020546



### 647 வீடு சொத்து மாத்தளை மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

மாத்தளை நகரம் கண்டி வீதி வைத்தியசாலைக்கு அருகில் (2 மாடிகள் வாடகைக்கு) கிளை அலுவலகங்கள் வரவேற்கப்படுகின்றன. தொடர்பு 0777537555. 020974

### வாரமஞ்சரி திருமண சேவைகள்

### மணமகள்

கண்டி, உடுநுவர முஸ்லிம் நல்லொழுக்கம், மார்க்கப்பற்றுள்ள 26 வயது 5 அடி உயரம் சிறு பருமனான பெண்ணுக்கு தகுந்த துணையை பெற்றோர் எதிர்பார்க்கின்றார்கள். தொடர்பு கொள்ளவும் 0112553898, 0718225289. B177964

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) - 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342/343

## நிதி அமைச்சு
## இலத்திரனியல் பெறுகை செயலகம் (e-GP)

# ICT அலுவலர்களைச் சேர்த்துக்கொள்ளல் 03 பதவிகள்

நிதி அமைச்சின் கீழ் e-GP அமைப்பை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு இலத்திரனியல் பெறுகை செயலகம் (e-GP செயலகம்) இன் ICT அலுவலர் பதவிக்காக பொருத்தமான தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

மாதாந்த சம்பளம் (எல்லாம் அடங்கலாக) : ரூ. 40,000/-
வயதெல்லை - 50 வயதிற்குக் குறைவாக இருத்தல்

**தகைமைகள்:**

1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் அல்லது அதற்குச் சமமான பட்டப் படிப்பை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்
**அல்லது**
2) சம்பந்தப்பட்ட துறையில் ஓர் பட்டத்திற்கு ஓர் சமமான தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்
**அல்லது**
3) குறைந்தபட்சம் 02 வருட சம்பந்தப்பட்ட அனுபவத்துடன் மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட ஓர் தொழில்நுட்ப தொழில்சார் பயிற்சி நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொண்ட NVQ லெவல் 6 தகைமை

LAMP Platform இற்கு இணையதள அடிப்படையிலான மென்பொருள் அபிவிருத்தியில் அனுபவத்தை கொண்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமையளிக்கப்படும். User-Interface Design, System Resting and Documentations uder Agile இல் சிறந்த அறிவு Systems Security and Public Procurement இன் அறிவு மேலதிக தகைமையாகும்.

**சேர்த்துக் கொள்ளும் முறை:**
சம்பந்தப்பட்ட தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் குறுகிய பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர்.

**சேர்த்துக் கொள்ளும் அடிப்படை:**
எல்லா நியமனங்களும் ஆரம்பமாக ஒரு வருட காலத்தைக் கொண்டது அத்துடன் செயற்பாட்டு தரக்கணிப்பின் அடிப்படையில் சேவைக் காலம் நீடிக்கப்படும்.

**விதிகளும் நிபந்தனைகளும்:**
2019.03.15ம் திகதி 01/2019 இலக்க முகாமைத்துவ சேவை சுற்று நிருபத்தின் எல்லா நிபந்தனைகள் மற்றும் பின்தொடரும் திறைசேரி சுற்று நிருபங்களும் தொடர்பு நியமனங்களுடன் பொருந்தும்.

கீழ்க்காணும் இணையதள முகவரிக்கு மாத்திரம் விண்ணப்பதாரியின் தகைமையை நிரூபிக்கக் கூடிய கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவத்துடன் 2022.03.28 அல்லது அதற்கு முன் சுயவிபரக் கோவையை மின்னஞ்சல் செய்தல் வேண்டும்.

**egphr@promise.lk**

**திட்ட பணிப்பாளர்,**
**e-GP செயலகம்,**
**2ஆவது மாடி, புதிய கட்டிடம்,**
**நிதி அமைச்சு.**

20.03.2022




## Prime wish Garment (Pvt) Ltd
**(கீள்ஸ் இற்கு அண்மையில் மட்டக்குளிய, கொழும்பு-15)**

### ஆடைத் தொழிற்சாலை வேலை வாய்ப்புக்கள்

ஜுகி ஒப்பரேட்டர்ஸ் - ஆண்/ பெண்
கொலிட்டி செக்கர்ஸ் (QC) ஆண்/ பெண்
மெக்கானிக்/ டெக்னீஷியன்ஸ் கட்டர்ஸ்

### மாஸ்க்/பெக்டரி வேலைவாய்ப்புக்கள்

மெஷின் ஒப்பரேட்டர்ஸ், மெக்கானிக்/ டெக்னீஷியன்ஸ் ஸ்டோர்கீப்பர், தொழிலாளர்கள் சாரதிகள்

**457, ∴பர்கஸன் வீதி, கொழும்பு - 15**
**தொ.பே. 0771666919, 0767935537**
**Email: hr@primewish.co**



மேற்படி படத்திலுள்ள மொஹமட் பரீப் மொஹமட் சியாத் என்னும் 842072816V என்பவர் Singer Zahaar Electronic World Oddamavadi உள்ள எமது வியாபார நிறுவனத்தில் 31.12.2021 திகதியில் இருந்து சேவையில் இல்லை. எனவே மேற்குறித்த நபருடன் இனிமேல் மேற்கொள்ளப்படும் நிறுவனம் சார்ந்த எந்தவொரு வியாபார கொடுக்கல் வாங்கல்க்கும் நாம் பொறுப்பாளிகள் அல்ல என்பதை அறியத்தருகின்றோம்.

Singer Zahaar Electronic World
**நிர்வாகம்**

**0654929018**
**0760777055**

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
## நகர அபிவிருத்தி, கரையோர பாதுகாப்பு, கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு

**கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை**

# சுத்திகரிப்புச் சேவையை வழங்குவதற்காக விலைமனுக்கள் கோரல் 2022/2023

1. கொழும்பு -02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, தேசிய வீடமைப்பு திணைக்களக் கட்டிடத்தின் முதலாம் மாடியில் அமைந்துள்ள கூட்டாதன முகாமைத்துவ அதிகார சபை அலுவலகத்தின் சுத்திகரிப்புச் சேவையை மேற்கொள்வதற்காக சுத்திகரிப்பு சேவையை வழங்கும் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து 2022-04-07ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. இதன்பொருட்டு 500.00 ரூபா மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை கூட்டாதன முகாமைத்துவ அதிகார சபையின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை நிர்வாகப் பிரிவிற்கு சமர்ப்பித்ததன் பின் விபரக் குறிப்புகள், மாதிரிப் படிவங்கள் மற்றும் ஆவணங்களை 2022-04-06ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையான அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
3. சுத்திகரிக்க வேண்டிய கட்டிடம் மற்றும் உத்தேச சேவை தொடர்பில் இடப்பரப்பைப் பரீட்சித்துப் பார்ப்பதற்குத் தேவையானால் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன் கூட்டாதன முகாமைத்துவ அதிகார சபைக்கு வருகை தந்து புரிதலைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. விபரக்குறிப்புகள், மாதிரிப் படிவங்கள் மற்றும் ஆவணங்களை அலுவலக நேரத்தினுள் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. உங்களது விலைமனுக்களை உள்ளடக்கி முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கூட்டாதன முகாமைத்துவ அதிகார சபை அலுவலகத்தைச் சுத்திகரிப்பதற்கான விலைமனு'' எனக் குறிப்பிட்டு 2022-04-07ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
6. தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் 2022-04-07ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைகளைச் சமர்ப்பித்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**கூட்டாதன முகாமைத்துவ அதிகார சபை,**
**1வது மாடி, தேசிய வீடமைப்புத் திணைக்களக் கட்டிடம்,**
**ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு 02.**




## இலங்கை தரைப்படை

# கேள்வி அறிவித்தல்

1. கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, தரைப்படை தலைமையகம், இலங்கை தரைப்படையின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர், 2022 ஆம் ஆண்டின் 2 ஆவது அரையாண்டிற்காக அம்சங்களின் வழங்கலுக்காக (2022.07.01 ஆம் திகதியிலிருந்து 2022.12.31 ஆம் திகதி வரையும்) முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை நிலையான விலை விகிதத்தில் பெற்றுக் கொள்வார்.

| தொ. இல. | கேள்வி இலக்கம் | விளக்கம் | கேள்வியின் அண்ணளவான பெறுமதி |
|---|---|---|---|
| 01. | DES/04/2022/100(184) | CEMENT` | 94 மில்லியன் |
| 02. | DES/04/2022/100(185) | TOR STEEL & MILD STEEL | 95 மில்லியன் |
| 03. | DES/04/2022/100(186) | ELECTRICAL CEILING FANS | 13 மில்லியன் |
| 04. | DES/04/2022/100(187) | ELECTRICAL WIRES | 84 மில்லியன் |
| 05. | DES/04/2022/100(188) | ASBESTOS ROOFING SHEETS | 24 மில்லியன் |
| 06. | DES/04/2022/100(189) | ZINC ALUMINIUM ROOFING SHEETS | 63 மில்லியன் |
| 07. | DES/04/2022/100(190) | GI CORRUGATED SHEETS | 61 மில்லியன் |
| 08. | DES/04/2022/100(191) | TIMBER (Imported) | 71 மில்லியன் |
| 09. | DES/04/2022/100(192) | TIMBER (Local) | 24 மில்லியன் |
| 10. | DES/04/2022/100(193) | PLYWOOD SHEETS | 88 மில்லியன் |
| 11. | DES/04/2022/100(194) | GI PIPES | 71 மில்லியன் |
| 12. | DES/04/2022/100(195) | PVC PIPES/PVC FITTINGS | 30 மில்லியன் |
| 13. | DES/04/2022/100(196) | PAINT ITEMS | 67 மில்லியன் |
| 14. | DES/04/2022/100(197) | YARD ITEMS (River Sand) | 58 மில்லியன் |
| 15. | DES/04/2022/100(198) | YARD ITEMS (Metal/Rubble) | 70 மில்லியன் |
| 16. | DES/04/2022/100(199) | ELECTRICAL ITEMS/SWITCHES | 10 மில்லியன் |
| 17. | DES/04/2022/100(200) | ALUMINIUM ITEMS (Aluminium Bar Powder Coated / Aluminium Bar Natural) | 79 மில்லியன் |
| 18. | DES/04/2022/100(201) | TILES (Floor Tile/Wall Tile) | 38 மில்லியன் |
| 19. | DES/04/2022/100(202) | SANITARY FITTINGS (Commode, Wash Basins) (Cromium Plated Piller Tap, Cromium Plated Bip Tap) | 55 மில்லியன் |
| 20. | DES/04/2022/100(203) | STEEL ("C" Purlin, Angle Iron, MS Plate) | 86 மில்லியன் |
| 21. | DES/04/2022/100(204) | HARDWARE ITEMS (Wire Nails, Brass But Hingers) Paint Brush, Sand Paper) | 39 மில்லியன் |
| 22. | DES/04/2022/100(205) | TOOLS | 08 மில்லியன் |

2. 2022.03.21 ஆம் திகதியிலிருந்து 2022.04.18 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 4 மணிக்குமிடையில் (7 ஆம் தொகுதி, தரைப்படை தலைமையக 3 ஆம் மாடியிலமைந்துள்ள பொறியியலாளர் சேவைகளின் பணியகத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து) உரித்தான அனைத்து கேள்வி ஆவணங்களும் பெற்றுக் கொள்ளலாமென்பதுடன் அனைத்து கேள்விகளும் 2022.04.19 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு ஒருகொடவத்த, அவிசாவளை வீதி, 167/30 ஆம் இலக்கத்திலுள்ள செலிங்கோ கட்டிட தரைப்படை முகாமில் அனைத்து கேள்விகளும் திறக்கப்படும். கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்வதற்காக கம்பனி பதிவு, உரித்தான அம்சங்களை வழங்குவதற்கான கடந்த கால அனுபவம் மற்றும் நிதியிடல் திடநிலையை உறுதிப்படுத்துவதற்காக கடந்த ஆறு மாதங்களுக்கான வங்கி கூற்றுக்கள் ஆகியனவையும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பாதுகாப்பு அமைச்சுடன் பதிவு பெற்றுள்ள வழங்குநர்கள் இவ்வாறான ஆவணங்களை சமர்ப்பிப்பதிலிருந்து விலக்களிக்கப்படுவார்கள் என்பதுடன் பாதுகாப்பு அமைச்சின் பதிவு கடிதம் மாத்திரமே சமர்ப்பிப்பதற்கு தேவைப்படும்.

3. மேலே கூறப்பட்டுள்ள கேள்விகளில் ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் மற்றும் திட்டமாக தேவைப்படும் தகைமைகளை பூர்த்தி செய்பவர்கள் ஒவ்வொரு கேள்வி விண்ணப்பத்திற்கும் மீளளிக்கப்படாத கட்டணத்தை (10 மில்லியனிலிருந்து 50 மில்லியன் வரையும் - 3,500 ரூபா மற்றும் 50 மில்லியனிலிருந்து 100 மில்லியன் வரையும் 12,500 ரூபா) செலுத்துவதற்கு தேவைப்படுத்தப்படுவதனால் அதனை நிதிப் பணிப்பாளரின் அலுவலகத்தில் (கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, தரைப்படை தலைமையகம்) கேள்வி ஆவணங்களை பெறுவதற்கு முன்பதாக பெற்றுக் கொண்டு அதன் பற்றுச்சீட்டை பொறியியலாளர் சேவைகளின் பணியகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

**மேலதிக விபரங்களை பின்வரும் வழிகளினூடாக பெற்றுக் கொள்ளலாம்.**

அ. பொறியியலாளர் சேவைகள் பெறுகைப் பிரிவின் பணியகம் தொலைபேசி இல. : 011-2339317
ஆ. கேள்வி பிரிவின் பொதுவான கிளையின் குவாட்டர் மாஸ்டர் தொலைபேசி இல. : 011-2431301
இ. பொறியியலாளர் சேவைகளின் பணியகம் தொலைநகல் இல. : 011-2435143

**தரைப்படை தளபதி**
**இலங்கை தரைப்படை தலைமையகம்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர,**
**கொழும்பு.**

DMC
SRI LANKA

## அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு
## அனர்த்த முகாமைத்துவ நிலையம்

# பெறுகை அறிவித்தல்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் நிறைவேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் பெறுகைகளுக்காக பொருட்கள் மற்றும் சேவை வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்களை கோருவதற்கு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கீழ்க்காணும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக குறித்த வழங்குநர்களுக்கு தமது விருப்பின் பிரகாரம் பொறியிடப்பட்ட விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.

| பெறுகை இலக்கம் | பெறுகை | அதற்காக கொள்வனவு செய்வதற்கு தேவையான உருப்படி மற்றும் அளவுகள் |
|---|---|---|
| DMC/FIN/2022 (PROCU:04) | சமூக வலைத்தளங்களை ஒன்றிணைத்து தகவல்களை விநியோகிப்பதற்காக தகைமையான மென் பொருளை உருவாக்குதல், உட்படுத்துதல் மற்றும் செயற்படுத்துதல் (Installation & Commissioning) இற்கான வழங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் | Creating a Social Media Platform<br>01 No. of Desktop Server Computer<br>01 No. of 20KVA UPS |
| DMC/FIN/2022 (PROCU: 05) | அவசர செயற்பாட்டு நிலையம் மற்றும் 117 அழைப்பு நிலையத்தின் உபகரணங்களை மேம்படுத்துதல் மற்றும் கொள்ளளவை மேம்படுத்துதல் | 01 No. of Public addressing System For Emergency Operation Centre (EOC)<br>01 No. of DSLR Camers<br>05 Nos. of 64" Touch Panels<br>06 Nos. of Android Digital Signage Players<br>07 Nos. of Desktop Server Computer<br>01 No. of 20KVA UPS |

2022 மார்ச் 21ம் திகதி முதல் 2022 ஏப்ரல் 19ம் திகதி வரை வேலை செய்யும் எந்த தினத்திலும் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கொழும்பு -07 வித்யா மாவத்தையில் அமைந்துள்ள அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 3ஆம் மாடியில் நிதிப் பிரிவில் பெறுகைப் பத்திரத்தை மீளளிக்கப்படாத ரூ. 1000.00 கட்டணத்தை செலுத்திய பின்பு பெற்றுக் கொள்ளலாம்.

அதனடிப்படையில் மேற்படி பெறுகை வகுதி 02 இற்காக வேறுவேறாக பெறுகைப் பத்திரங்களை சமர்ப்பிக்க வேண்டியதுடன் அங்கு தமது விருப்பத்தின் பிரகாரம் குறித்த வகுதியின் ஒரு உருப்படிக்கு அல்லது சகல உருப்படிகளுக்கும் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம். அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களின் முழுப் பெறுமதிக்காக 1% கேள்வி பிணையொன்றையும் அரச பெறுகை வழிகாட்டல்களுக்கு அமைவாக சமர்ப்பித்தல் கட்டாயமாகும்.


மேலும் உங்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்விகளின் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்விகள் சமர்ப்பிககப்படும் பெறுகையின் பெயர் அல்லது பெறுகை இலக்கத்தைக் குறிப்பிட்டு பொறியிட்டு (நிறுவனத்திற்கு உரித்தான ஸ்டிக்கர் அல்லது நிறுவனத்தின் இறப்பர் முத்திரை அல்லது அரக்கு முத்திரை) தலைவர் திணைக்கள பெறுகைக் குழு, பெறுகைப் பிரிவு நிதிப் பிரிவு, அனர்த்த முகாமைத்துவ நிலையம், வித்யாமாவத்த, கொழும்பு 07 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது 3ஆம் மாடியில் நிதிப் பிரிவில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் 2022 ஏப்ரல் 20ம் திகதி மு.ப. 10.30 இற்கு அல்லது அதற்கு முன்பு இடம்பெறுவதுடன் அந்நேரத்தின் பின்பு கிடைக்கும் சகல கேள்விகளும் நிராகரிக்கப்படும்.

Social Media Platform உருவாக்குதல் 20 KVA UPS, 64" Touch Panels மற்றும் Android Digital Signage Players உருப்படிக்காக கேள்விகளை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்றவர்களுக்கு மட்டும் கேள்விக்கு முன்னரான கலந்துரையாடல் (Pre Bid Meeting) 2022.03.30 மு.ப. 10.30 இற்கு அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் தரைமாடி கேட்போர் கூடத்தில் நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதற்காக கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு சமுகமளிப்பதற்கு வாய்ப்பு உண்டு.

2022 ஏப்ரல் 20ம் திகதி மு.ப. 10.45 இற்கு கேள்வி திறக்கப்படுவதால் அவ்வேளையில் சமுகமளிப்பதற்கு கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு வாய்ப்பளிக்கப்படுவதுடன் அதற்காக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கும் போது அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட கடிதத்துடன் வருகைதரல் வேண்டும். மேலும் பெறுகை ஓடர்கள் வழங்கப்படும் வேளையில் தேவைப்படும் பொருட்களின் அளவை மாற்றுகின்ற உரிமை பெறுகைக் குழுவிற்கு உரித்தாகும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

**தலைவர் - திணைக்கள பெறுகைகக்குழு,**
**அனர்த்த முகாமைத்துவ நிலையம்,**
**வித்யா மாவத்த,**
**கொழும்பு -07.**
**தொ. பே. 0112-136270**

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words)
Any Single Newspaper: ரு. 500/- (Except Thinakaran Varamanjari) | Two Newspapers: ரு. 700/- (Except Thinakaran Varamanjari) | Three Newspapers: ரு. 850/-
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361



குறளமுதம் :

**எண்ணியார் எண்ணம் இழப்பர் இடன்அறிந்து**
**துன்னியார் துன்னிச் செயின்..**

***தெளிவுரை :***

*தக்க இடத்தை அறிந்து தம்மைக் காத்துக்கொண்டு பகைவரிடத்திற் சென்று தம் செயலைச் செய்தால், வலிமை இல்லாத வரும் வலிமை உடையவராய் வெல்வர்.*

# குறுக்கெழுத்துப் போட்டி இல. 03

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | ■ |
| ■ | 06 | ■ | ■ | 07 | 08 |
| 09 | 10 | 11 | ■ | ■ | 12 |
| ■ | 13 | 14 | 15 | 16 | ■ |
| 17 | ■ | 18 | ■ | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | ■ | 25 |

பெயர் ..............................
வகுப்பு ..............................
தொலைபேசி இல ..............................
பாடசாலை பெயர் ..............................
பாடசாலை முகவரி ..............................
..............................

.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(01) பத்து வருடங்கள் கொண்ட காலப் பகுதியை ஒரு சொல்லால் இவ்வாறு குறிப்பிடலாம்.
(07) இன்றைய தினத்தின் மறுநாள் இதுவாகும்.
(09) நீர்நிலைகளிலேயே கூடுதலான நேரம் சஞ்சரிக்கும் உயிரினம் இது. இரை பிடிப்பதற்காக தரைக்கு வருவதுண்டு. ஆடு, மாடுகள் மாத்திரமன்றி மனிதர் அகப்பட்டாலும் பிடித்துச் சென்றுவிடும். ஆறு, குளம் என்று வாழ்ந்த இந்த நகருயிரி இப்போது கடலுக்கும் வந்து விட்டது.
(13) வாழ்வில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய புனிதம். நமது அன்றாட பழக்கவழக்கங்கள், வாழும் இடம் போன்றவற்றை இவ்வாறுதான் வைத்திருக்க வேண்டும். (தலைகீழான சொல்)
(19) உணவை வெட்டுவதற்கு, கிழிப்பதற்கு, அரைப்பதற்கு பயன்படும் உறுப்பு.
(21) வெயில் வேளையில் சிறிய மழைத்தூறல் இருக்குமானால், வானத்தில் நாம் காணக்கூடிய வண்ணஜாலம்.

**மேலிருந்து கீழ்**

(02) அமைதி என்ற பொருள் தரும் சொல்.
(05) தன்மை, பன்மை பெயர்ச்சொல். (தலைகீழான சொல்)
(08) எமது உடல் உறுப்புகளில் மிகவும் முக்கியமானது இது. நினைவுகளின் பதிவிடம் மட்டுமன்றி, ஏனைய உறுப்புகளின் செயற்பாடுகளுக்கு கட்டளையும் வழங்கும். உடலின் கட்டுப்பாட்டு அறை. (தலைகீழான சொல்)
(11) அடிமைத்தனம், அடக்குமுறை அல்லது தடுப்புக் காவலில் இருந்து கிடைக்கின்ற சுதந்திரம். (தலைகீழான சொல்)
(16) எமக்கெல்லாம் நிறையுணவாகி பால் தருகின்ற சாதுவான மிருகம். (தலைகீழான சொல்)
(17) பாலூட்டிகள் மற்றும் நகருயிரிகள் போன்றவை பலவற்றில் உடலின் பின்புறமாக காணக்கூடிய உறுப்பு இது. (தலைகீழான சொல்)
(20)நிறையுணவான திரவ ஆகாரம். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 02

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. தினகரன் 08. கடை 10. களி 12. பாறை
14. அவள் 19. கதி 21. சந்திரமதி

**மேலிருந்து கீழ்**

01. திங்கள் 03. கனா 05. பாகன் 11. வளி
16. அந்தி 17. அகதி 19. மதி

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 01

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
**T. காயத்திரி,**
தரம் 12, பது/சரஸ்வதி மத்திய கல்லூரி,
அமுனுதோவ, மடுல்சீமை.

**இரண்டாம் பரிசு**
**சி. சிவஹரேசன்,**
தரம் 11, ஹைலன்ட்ஸ் கல்லூரி,
198, கோவிலடி, மஸ்கெலியா.

**மூன்றாம் பரிசு**
**எம்.ஏ.எப். அஸ்கா,**
தரம் 08, ப/ விஹாரமகாதேவி ம.ம.வி,
11/26A, ரத்வத்த மாவத்தை, பதுளை.

### பாராட்டு பெறுவோர்

1. **றுமைஸ் இன்சாப்,**
தரம் 10, சது/அல் அஸ்ரப் தேசிய பாடசாலை,
இறக்காமம். (கி/மா)

2. **ஸபியுர் ரஹ்மான்,**
தரம் 07, ACE சர்வதேச பாடசாலை,
10F/3, மகாபுத்கமுவ, கொட்டிகாவத்தை.

3. **ச. வகிஷ்னா,**
தரம் 05, மட்/ வின்சன் மகளிர் பாடசாலை,
435/36, 2ம் குறுக்குத் பூம்புகார், மட்டக்களப்பு.

4. **ஏ.லீ.ஏ. அப்துள்ளா,**
தரம் 05 சி, வெலிகம முஸ்லிம் ஆரம்ப பாடசாலை,
வெலிகாமம்.

5. **ஜே.எப். மிபா அப்ரிதா,**
தரம் 04, கமு/அலல் அஸ்ரப் ம.வி.,
இல. 41, ஜும்மா பள்ளி வீதி, மாவடிப்பள்ளி.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 03
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk

# சேர் ஆர்தர் சி. கிளார்க்



சேர் ஆர்தர் சி. கிளார்க் இங்கிலாந்தில் சமர்செட் என்ற இடத்தில் டிசம்பர் 16, 1917 இல் பிறந்தார். இவரது தந்தை ஒரு விவசாயி. தாய் அஞ்சல் நிலையத்தில் தந்தி அனுப்புனராகப் பணியாற்றினார். நான்கு குழந்தைகளில் மூத்தவரான கிளார்க் அருகில் உள்ள டாண்டன் நகர உயர்நிலைப்பள்ளியில் 'புலமைப்பரிசில்' பெற்ற மாணவனாகக் கல்வி பயின்றார். பிள்ளைப் பருவத்தில் சமர்செட் கடற்கரையோரமாக நடந்து செல்லும் போது தனது அறிவியல் கற்பனைகளை விழித்தெழச் செய்த பல நிகழ்ச்சிகளை நினைவு கூர்வார்.

முதல் உலகப்போரில் படுகாயமடைந்த தந்தையை தன் 13 ஆவது வயதில் கிளார்க் இழந்தார். இதன் பின் டான்டூனில் உள்ள ஷாய்ஷ் இலக்கணப் பள்ளியில் சேர்ந்து கல்வி பயின்றார். சிறு வயதிலேயே வானியலில் ஈடுபாடு கொண்ட ஆர்தர் சி. கிளார்க் பழைய அமெரிக்க அறிவியல் புதின நூல்களைப் படிப்பது வழக்கம். ஆரம்பக் கல்வியை முடித்த அவருக்கு தொடர்ந்து பல்கலைக்கழகத்தில் படிக்க குடும்ப வருவாய் போதாமையினால், தனது 19 ஆவது வயதிலேயே லண்டன் அரசுப் பணியில் சேர்ந்து பணியாற்றினார்.

இவர் தனது 17ஆம் அகவையிலேயே பிரித்தானியாவில் கோள்களியல் கழகத்தில் சேர்ந்தார். பின்னாளில் இதன் பொருளாளராகவும், தலைவராகவும் பொறுப்பு வகித்தார். அரசுப் பணியில் இவரது கணிதக் கூர்மை கணக்கு வழக்குகளைச் சரிபார்க்கும் பணிக்கு உயர்வித்தது. ஆனால் 1941இல் இரண்டாம் உலகப் போரின் போது அப்பணியிலிருந்து விலகி ரோயல் வான்படையில் இணைந்தார். அங்கு இலத்திரனியலில் பயிற்சி பெற்று வானொலிப் பள்ளியில் செய்முறைப் பயிற்சியாளரானார். இறுதியில் தென்மேற்கு இங்கிலாந்தில் வட காரன்வாலில் உள்ள டேலிட்ஸ்டோமூர் என்ற இடத்தில் அமெரிக்காவின் தரைக் கட்டுப்பாட்டு ராடார் அமைப்புக் குழுவில் பணியாற்றினார்.

இரண்டாம் உலகப் போர் முடிவின் பின்னர் ரோயல் வான்படையிலிருந்து விலகி லண்டன் கிங்ஸ் கல்லூரியில் இயற்பியல் மற்றும் கணிதவியலில் சேர்ந்தார். அதன் பின் பட்ட மேற்படிப்பாக வானவியலில் சேர்ந்தார். இப்படிப்பு அவருக்குச் சோர்வைத் தந்ததால் அதை விடுத்து 'சயின்ஸ் அப்ஸ்ட்ராக்ட்' என்ற இதழில் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார். இப்பணி அவருக்குச் சிந்திக்கவும் எழுதவும் நேரத்தைக் கொடுத்தது. 1951இலிருந்து கிளார்க் முழுநேர எழுத்தாளரானார்.

1937 தொடக்கம் 1945 வரையான காலப்பகுதியில் சில புதினங்களைக் கிளார்க் எழுதியிருந்தாலும் 1946 ஆம் ஆண்டில் அவர் எழுதிய Astounding Science Fiction என்ற நூல் தான் முதன் முதலில் விற்பனைக்கு வந்தது.

1949 இல் இவர் எழுதி வெளியிட்ட 'கோள்களுக்கிடையே பறத்தல்' என்ற நூல் பாமர மக்களும் படித்தறியும் விதமாக இருந்தது. இதில் புவியீர்ப்புப் புல அளவு, உந்தத் தேவையான கணக்கீடு, கோள்களைச் சென்றடையத் தேவையான பாதை போன்ற தொழிநுட்பக் கூறுகளைத் தனியே இணைப்பாக அளித்திருந்தார். இவரது இந்தக் கற்பனை வளம் விண்வெளியில் புதிய தேடலுக்கு வித்திட்டது.

1952 இல் இவர் எழுதிய 'விண்வெளியைக் கண்டறிதல்' என்ற நூல் இவரது வாழ்வில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. இதனால் இவரது புகழ் உலகெங்கும் பரவியது. 1953 இல் கிளார்க் மரிலின் மேஃபீல்ட் என்ற பெண்ணைத் திருமணம் புரிந்தார். மணம் புரிந்து ஆறு மாதங்களில் அவர்கள் பிரிந்தனர். ஆனாலும் 1964 ஆம் ஆண்டிலேயே அவர்கள் அதிகாரபூர்வமாகப் பிரிந்தனர்.

1962ல் இவர் போலியோ நோயினால் தாக்குண்டார். நோயின் தொடர் விளைவால் வாழ்வில் பிற்காலங்களைப் பெரும்பாலும் இவர் சக்கரநாற்காலியிலேயே கழித்தார். இவரது வெளியுலகத் தொடர்பு, தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் வழியாகவே இருந்தது. தன் கற்பனைக்கும், சிந்தனைக்கும், எழுதுவதற்கும் ஏற்ற அமைதியான இடமாக இலங்கையை தேர்ந்தெடுத்தார். இங்கு அவர் இறக்கும் வரை ஏறக்குறைய 45 ஆண்டு காலம் வாழ்ந்தார்.

இவர் தனது 90 ஆவது வயதில் 2008 ஆம் ஆண்டு மார்ச் 19 அன்று கொழும்பில் மரணமடைந்தார்.

**ஜே. நித்தியவாணி,**
லெமலியர், லிந்துலை.

# இவ்வார மழலை




பாக்கியராஜ் / கலைவாணி
இரட்டைபாதை, செல்வகந்த,
புசல்லாவ.

# மலர்கள்



மலர்கள் அழகானவை. அவை கண்ணுக்கு கவர்ச்சியையும் மனதுக்கு மகிழ்ச்சியையும் தருகின்றன. மனிதர் முதல் வண்டுகள் வரை மலர்களின் அழகில் மயங்குவதை நாம் காண்கிறோம். அழகை விரும்பும் அனைவரும் மலர்களை விரும்புவர். மலர்கள் இயற்கை அளிக்கும் பெரும் செல்வங்களாகும். பலபல வடிவங்களில் மலர்கள் மலர்கின்றன.

மல்லிகை, முல்லை, றோஜா, தாமரை, சூரியகாந்தி, செம்பருத்தி, அல்லி. நித்தியகல்யாணி, செவ்வந்தி, எக்ஸ்சோறா, எந்தூரியம், கனகாம்பரம், கடதாசிப்பூ போன்றன நாம் விரும்பும் மலர்களில் சிலவாகும். மலர்களால் மக்கள் பெரும் பயனடைகின்றனர். தேனீக்கள் மலர்களை நாடித் தேனருந்துகின்றன. அவற்றின் மூலம் மகரந்தச் சேர்க்கை ஏற்படுகிறது.

இறைவனின் பூஜைகளுக்கு மலர்கள் பயன்படுகின்றன. மாலைகள் கட்டவும் பல்வேறு நிகழ்வுகளுக்கும் மலர்கள் அதிகமாக பயன்படுத்தப்படுகின்றன. வாசனைத் திரவியங்கள் எடுக்கவும் மலர்கள் பயன்படுகின்றன. மலர்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் பெருமளவு அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் கிட்டுகிறது.

**பெ. திலானுஷா,**
மாபோலை, வத்தளை.

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

## மருதானை இந்து வித்தியாலய மாணவி முத்திருளன் ரதுசா 160 புள்ளிகள்
## 15 ஆண்டுகளுக்கு பின்னர் சாதனை



மருதானை இந்து வித்தியாலய மாணவி முத்திருளன் ரதுசா அண்மையில் வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 160 புள்ளிகளை பெற்று விசேட சித்தியெய்தி பாடசாலைக்கு புகழை ஈட்டித் தந்துள்ளார்.

15 ஆண்டுகளுக்கு பின்னர் இப்பாடசாலையிலிருந்து மாணவி சித்தியடைந்திருப்பது விசேட அம்சமாகும் எனவும் மாணவியையும் கற்பித்த ஆசிரியர்களையும் உளமார பாராட்டி வாழ்த்துவதாகவும் பாடசாலையின் அபிவிருத்தியில் அர்ப்பணிப்புடன் செயற்படும் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கும் தமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதாக அதிபர் கே. செல்வகுமார் தெரிவித்தார்.

# சிவனொளி பாதமலை



நுவரெலியா மாவட்டத்தின் தென்மேற்கு எல்லையில் அமைந்துள்ள இம் மலையானது 2243 மீற்றர் உயரமானது. இம்மலையை ஓட்டியே இரத்தினபுரி மாவட்டத்தின் வட எல்லை உள்ளது. கொழும்பிலிருந்து ஹட்டன் செல்லும் வீதியில் உள்ள கினிகத்தேனையை அடுத்து வரும் கரோலினா சந்தியிலிருந்து தெற்கு நோக்கி நோட்டன் பிரிட்ஜ், லக்சபான, மவுசாக்கல ஊடாக நல்லதண்ணி மலையடிவாரம் வரை ஓர் பாதை செல்கிறது. இங்கிருந்து கால்நடையாக மலைக்கு செல்ல வேண்டும். இதுவே சிவனொளிபாத மலைக்கு செல்லக் கூடிய இலகுவான பாதையாகும்.

கொழும்பிலிருந்து இரத்தினபுரிக்குச் செல்லும் வழியில் குருவிட்ட என்னுமிடத்திலிருந்து கிழக்கு நோக்கி எக்னெலிகொட, எம்புல்தெனிய, குருளுவான ஊடாக பாலபெத்தலே என்னுமிடத்தை அடைந்து அங்கிருந்து கால்நடையாக மலைக்கு செல்லும் இன்னொரு வழியாகும்.

சிவனொளிபாதமலை பருவகாலம். மார்கழிப் பௌர்ணமியிலிருந்து வைகாசி வரையான காலப்பகுதியாகும். இக்காலப்பகுதியில் யாத்திரிகர்கள் அங்கு அதிகமாக செல்வதுண்டு. மிகவும் குளிரும், காற்றும் அதிகமுள்ள இந்த மாதங்களில் அதுவும் இரவு வேளைகளில் மலையேறத் தொடங்கி மலையுச்சிக்குப் போய்ச்சேர 6 முதல் 8 மணித்தியாலங்கள் செல்லும். மலையுச்சியிலிருந்து அதிகாலை வேளையில் உதயசூரியனைக் காண்பதற்காக யாத்திரிகர்கள் காத்திருப்பார்கள்.

அழகு மிகுந்த சோலைகளைச் சூழவுள்ள மலை இது. மகாவலி, களனி, களுகங்கை போன்ற ஆறுகள் இங்கிருந்து தான் உற்பத்தியாகின்றன. உலகில் நான்கு மதங்களைச் சேர்ந்தவர்கள் ஒரே இடத்தை சர்ச்சையின்றி வணங்கிச் செல்லும் ஒரே இடம் நம் இலங்கையில் தான் இருக்கிறது. பௌத்தர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் என அனைவரும் தத்தமது புனித மலையாக கருதி வருகிறார்கள். அந்த நம்பிக்கையின் பின்னணியில் அந்தந்த மதம் சார்ந்த புனிதக் கதைகளாக புனைகதைகள் பல இருக்கின்றன. சிவனொளிபாத மலையில் உள்ள பாதத்தை இந்துக்கள் சிவனின் பாதம் எனவும், பௌத்தர்கள் புத்தரின் பாதம் எனவும், இஸ்லாமியர்கள் ஆதாமின் பாதம் எனவும், கிறிஸ்தவர்கள் சாந்த தோமஸின் பாதம் எனவும் தத்தமது மதத்திற்குரியதென வழிபடுகின்றனர்.

இலங்கையில் உள்ள நான்கு மதத்தவர்களும் எந்தவித தடையுமின்றி சுதந்திரமாக வழிபாடு செய்யும் ஒரே இடமாக சிவனொளிபாதமலை அமைகிறது. உலகின் முக்கிய மதத்தவர்கள் அனைவரும் ஒற்றுமையாக வழிபடும் ஒரே வழிபாட்டுத்தலம் உலகத்திலேயே இது ஒன்றாகத்தான் இருக்க வேண்டும்.

**சுஸ்மிதன் ஆனந்தன்,**
க.பொ.த (உ/த),
நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயம்,
நோர்வூட்.

# சிறுவர் சித்திரங்கள்



**ஆர். அம்ரிதா,**
தரம் 05,
கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி,
கொழும்பு 04.



**ஜே. டினுஷன்,**
தரம் 08, மா/கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
மாத்தளை.



**எஸ். ஹரிசாந்த்,**
தரம் 08, கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
மாத்தளை.



**ஜே. கோபிநாத்,**
தரம் 08, கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
மாத்தளை.



# விளையாட்டு

# இவ்வாரம் ஆரம்பமாகும் இந்தியன் பிரிமீயர் லீக்

## முதல் போட்டியில் சி.எஸ்.கே.–கே.கே.ஆர். களத்தில்

கிரிக்கெட் திருவிழாவான இந்தியன் பிரிமியர் லீக் ரி/20 தொடர் இவ்வார இறுதியில் மும்மையில் ஆரம்பமாகவுள்ளது. 15வது தடவையாக நடைபெறும் இத்தொடரில் முதன் முதலாக 10 அணிகள் பங்குபற்றவுள்ளன. 26ம் திகதி ஆரம்பமாகும் இத்தொடரில் எதிர்வரும் மே மாதம் 29 திகதி நடைபெறும் இறுதிபோட்டி வரை மொத்தம் 65 நாட்களில் மூன்று நகரங்களில் மொத்தம் 74 போட்டிகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளன. கடந்த ஐ.பி.எல் தொடர்களைப் போலல்லாமல் இம்முறை 10 அணிகளையும் 5 அணிகள் வீதம் இரு குழுக்களாக பிரித்து போட்டிகளில் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்து அணிகளையும் அவ்வணிகள் ஏற்கனவே நடைபெற்ற தொடர்களின் போது கிண்ணம் வென்ற எண்ணிக்கையின் அடிப்படையிலும், இறுதிப் போட்டிக்குத் தெரிவான எண்ணிக்கையின் அடிப்படையிலும் அணிகள் இரு குழுவாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அந்தடிப்படையில் 5 முறை கிண்ணம் வென்ற மும்பை இந்தியன்ஸ் அணி ஒரு குழுவிலும் 4 முறை கிண்ணம் வென்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ஒரு குழுவிலும் இடம்பெற்றுள்ளன.

இதில் மொத்தம் 70 லீக் போட்டிகள் நடைபெறவுள்ளதுடன் மும்பையிலுள்ள வென்கடே, பிராபோர்ன், ஏ. எம். சி ஆகிய மூன்று மைதானங்களில் 55 லீக் சுற்றுப் போட்டிகளும் மீதமுள்ள லீக் சுற்று ஆட்டங்கள் பூனேயிலுள்ள டீ. வை. பட்டேல் மைதானத்திலும் நடைபெறவுள்ளன. இறுதிச் சுற்றான பிளே ஓப் சுற்று, இறுதிப் போட்டி மே மாதம் 24 முதல் 29ம் திகதி வரை அஹமதாபாத்திலுள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளன. மகாராஷ்டிர மாநில அரசின் நிபந்தனையின் அடிப்படையில் மைதானத்தில் பார்வையாளர்களுக்கு அனுமதி 25 வீதமாக அல்லது 50 வீதமாக என்று தீர்மானிக்கப்படும் எனவும் இந்திய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இதுவரை நடைபெற்ற 14 ஐ. பி. எல். தொடர்களில் மும்மை இந்தியன் 5 முறையும், சென்னை சுப்பர் கிங்ஸ் 4 முறையும், கொல்கொத்தா நைட்ரைடர்ஸ் 2 முறையும், ராஜஸ்தான் ரோயல், டெகன் சார்ஜர்ஸ், சன்ரைசஸ் ஹைதராபாத் அணிகள் தலா ஒரு முறையும் கிண்ணங்களைக் கைப்பற்றியுள்ளன. பஞ்சாப் கிங்ஸ், ரோயல் செலேஞ்சர்ஸ் பெங்களூர், டெல்லி கெபிடல்ஸ் அணிகள் இதுவரை கிண்ணம் வென்றதில்லை.

குழு ஏயில் 1. மும்பை இந்தியன்ஸ், 2. கொல்கொத்தா நைட் ரைடர்ஸ், 3. ராஜஸ்தான் ரோயல், 4. டில்லி கெபிடல்ஸ், 5. லக்னோ சுபர் ஜெயன்ட் அணிகளும்,

குழு பியில் 1. சென்னை சுப்பர் கிங்ஸ், 2. சன்ரைசஸ் ஹைதராபாத், 3. ரோயல் செலெஞ்சர்ஸ் பெங்களூர், 4. பஞ்சாப் கிங்ஸ், 5. குஜராத் டைடன்ஸ்

எதிர்வரும் 26ம் திகதி மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெறும் முதல் போட்டியில் நடப்பு சம்பியன் சி.எஸ்.கே., கே.கே.ஆர் அணியை எதிர்த்தாடுகிறது.

இம்முறை ஐ.பி.எல். தொடரில் பல சர்வதேச வீரர்கள் ஆரம்ப போட்டிகளில் பங்கு கொள்வதில் சிக்கலேற்பட்டுள்ளது. தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, மேற்கிந்திய அணிகளுக்கிடையில் இக்காலப் பகுதியில் போட்டித் தொடர்கள் நடைபெறுவதால் அவ்வணிகளின் முக்கியமான வீரர்கள் பங்குகொள்ள முடியாதுள்ளது. மேலும் மிக நீண்ட காலமாக கொரோனா கட்டுப்பாட்டு வலயத்துக்குள் இருப்பதால் ஐ. பி. எல். தொடரிலும் இரண்டு மாதகாலம் மீண்டும் அவ்வாறு இருக்க முடியாது என்ற காரணத்தினால் பல சர்வதேச வீரர்கள் விலகியுள்ளனர்.



இம்முறை நடைபெற்ற மெகா ஏலத்தில் துடுப்பாட்ட வீரர்களை விட தீபக் சஹார், அவேஸ்கான், சர்குர் தாக்கூர், ஹர்சால் பட்டேல், பிரசித் கிருஷ்ணா, ரபாடா, பெர்குசன், லிவிங்டன், ஹசரங்க போன்ற பந்து வீச்சாளர்களே அதிக விலைக்கு அணிகளால் வாங்கப்பட்டுள்ளனர்.

இந்த மெகா ஏலத்தில் சிரேஷ்ட வீரர் சுரேஸ் ரெய்னாவை எந்த அணியும் எடுக்காதது முக்கிய நிகழ்வாக அமைந்தது. மேலும் 2008ம் ஆண்டு ஐ. பி. எல். தொடர் ஆரம்பமானது முதல் நடைபெற்ற 14 சீசன்களிலும் ஏ. பி. டி. டிவிலியர்ஸ், கிறிஸ் கெயில், ஷோன் மார்ஷ், டுவைன் பிராவோ ஆகிய சர்வதேச வீரர்கள் தொடர்ந்து விளையாடி வந்துள்ளனர்.

இவர்களில் மேற்கிந்தியத்தீவுகள் வீரர் டுவைன் பிராவோவைத் தவிர மற்றைய மூவரும் இவ்வருட ஐ. பி. எல். இல் விளையாடவில்லை. இம்முறை நடைபெற்ற மெகா ஏலப்பட்டியலிலும் இவர்களது பெயர்கள் இடம்பெறவில்லை.

இதனால் தொடர்ந்து 15 ஐ. பி. எல். போட்டிகளிலும் இடம் பெற்ற ஒரே வெளிநாட்டு வீரர் என்ற பெருமையை மேற்கிந்தியத் தீவுகள் அணியைச் சேர்ந்த பிராவோ பெற்றுள்ளார். மும்பை, குஜராத், சென்னை ஆகிய அணிகளுக்கு விளையாடியுள்ள பிராவோ இம்முறை 2 கோடி ரூபா அடிப்படை விலைக்கு ஏலத்துக்கு தெரிவாகியிருந்தார். 3.50 கோடிக்கு இவரை மீண்டும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ஏலத்தில் வாங்கியுள்ளது.

இலங்கை அணியின் சகலதுறை வீரர் வனிந்து ஹசரங்க ஏலத்தில் 1 கோடி என்ற சுமாரான அடிப்படை விலையில் இருந்து 10.75 கோடிக்கு வாங்கப்பட்டுள்ளார். பெங்களூர், ஹைதராபாத் ஆகிய அணிகள் விட்டுக்கொடுக்காமல் இவரை ஏலம் கேட்டன. இறுதியில் பெங்களூர் அணி மேற்படி தொகைக்கு அவரை வாங்கியது. இது ஐ. பி. எல். வரலாற்றில் அதிக தொகைக்கு ஏலம் போன இலங்கை வீரர் என்ற பெருமையையும் 24 வயதான வனிந்து ஹசரங்க பெற்றுள்ளார். மேலும் இலங்கையிலிருந்து ஐந்து இளம் வீரர்கள் இம்முறை ஏலத்தில் வாங்கப்பட்டுள்ளனர்.

வேகப்பந்து வீச்சாளர் துஷ்மந்த சமீரவை 2 கோடிக்கு லக்னோ அணியும், மகேஷ் தீக்ஷனவை 70 இலட்சத்துக்கு சென்னை அணியும், சாமிக்க கருணாரத்னவை 50 இலட்சத்துக்கு கொல்கொத்தா அணியும், பானுக்க ராஜபக்ஷவை 50 இலட்சதுக்கு பஞ்சாப் அணியும் ஏலத்தில் எடுத்துள்ளன. அஞ்சலோ மெத்தியூஸ், குசல் மெண்டிஸ், திக்வெல்ல போன்ற சிரேஷ்ட வீரர்கள் உட்பட 32 வீரர்கள் இந்த ஏலத்துக்கு இலங்கை சார்பாக விண்ணப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆரம்ப முதல் ஐ.பி.எல். தொடரில் பங்கேற்று மும்மை இந்தியன்ஸ் அணிக்காக தனது திறமையான பந்து வீச்சால் அசத்திய இலங்கை வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க இம்முறை ராஜஸ்தான் ரோயல் அணியின் வேகப்பந்து வீச்சுப் பயிற்சியாளராக இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

இதுவரை நடைபெற்ற ஐ.பி.எல். தொடர்களில் கிண்ணம் வென்ற அணிகள்: மும்பை இந்தியன்ஸ் 5, சென்னை சூப்பர் கிங்ஸ் 4, கொல்கொத்தா நைட் ரைடர்ஸ் 2, ராஜஸ்தான் ரோயல் 1, டெகன் சார்ஜஸ் 1, சன்ரைசஸ் ஹைதராபாத் 1

**ஒரு அணி பெற்ற கூடிய ஓட்டம்:** 273 ஓட்டங்கள் பெங்களூர் அணி 2013 எதிர் புனே வாரியஸ்

**ஒரு அணி பெற்ற குறைந்த ஓட்டம்:** 49 ஓட்டங்கள் பெங்களூர் அணி 2019 எதிர் கேகேஆர்.

**தனி நபர் கூடிய ஓட்டம்:** 175 (66) கிறிஸ்கெயில் பெங்களூர் அணி 2013 எதிர் புனே வாரியஸ்

**அதிக ஆறு கூட்டங்கள்:** கிறிஸ்கெயில் 135 போட்டிகள் 351

**அதிக சதம்:** கிறிஸ்கெயில்: 6

**அதிக அரை சதம்:** டேவிட் வோனர் - 52

**சிறந்த பந்துவீச்சு:** அல்சாரி ஜோசப் (மும்பை) 12/6 2019ம் ஆண்டு ஹைதராபாத் அணிக்கு எதிராக.

**கூடிய மொத்த விக்கெட்டுகள்:** லசித் மலிங்க (மும்பை) 125 போட்டிகளில் 170 விக்கெட்.

**ஒரு சீசனில் கூடிய விக்கெட்:** டெரன் பிரோவோ (சென்னை) 2013ம் ஆண்டு 18 போட்டிகள் 32 விக்கெட்டுகள்.

**ஒரு சீசனில் கூடிய ஓட்டங்கள்:** விராட் கோஹ்லி (பெங்களூர்) 2016ம் ஆண்டு 17 போட்டிகள் 973 ஓட்டங்கள்.

**விரைவான சதம்:** கிறிஸ் கெயில் (பெங்களூர்) 30 பந்துகள்

**விரைவான அரைச் சதம்:** கே. எல். ராஹுல் (பஞ்சாப்) 14 பந்துகள்.

எம்.எஸ்.எம்.ஹில்மி...

### ஐ. பி. எல். போட்டி அட்டவணை வருமாறு

| திகதி | அணி | மைதானம் | நேரம் |
|---|---|---|---|
| மார்ச் 26 | சென்னை–கொல்கொத்தா | வென்கடே | 7.30 |
| மார்ச் 27 | டெல்லி–மும்பை | பிராபோர்ன் | 3.30 |
| மார்ச் 27 | பஞ்சாப்–பெங்களூர் | பட்டேல் | 7.30 |
| மார்ச் 28 | குஜராத்–லக்னோ | வென்கடே | 7.30 |
| மார்ச் 29 | ஹைதராபாத்–ராஜஸ்தான் | எம்.சி.ஏ. | 7.30 |
| மார்ச் 30 | பெங்களூர்–கொல்கொத்தா | பிராபோர்ன் | 7.30 |
| மார்ச் 31 | லக்னோ–சென்னை | பிராபோர்ன் | 7.30 |
| ஏப்ரல் 01 | கொல்கொத்தா–பஞ்சாப் | வென்கடே | 7.30 |
| ஏப்ரல் 02 | மும்மை–ராஜஸ்தான் | பட்டேல் | 3.30 |
| ஏப்ரல் 02 | குஜராத்–டெல்லி | எம்.சி.ஏ. | 7.30 |
| ஏப்ரல் 03 | சென்னை–பஞ்சாப் | பிராபோர்ன் | 7.30 |
| ஏப்ரல் 04 | ஹைதராபாத்–லக்னோ | பட்டேல் | 7.30 |
| ஏப்ரல் 05 | ராஜஸ்தான்–பெங்களூர் | வென்கடே | 7.30 |
| ஏப்ரல் 06 | கொல்கொத்தா–மும்பை | எம்.சி.ஏ | 7.30 |
| ஏப்ரல் 07 | லக்னோ–டெல்லி | பட்டேல் | 7.30 |
| ஏப்ரல் 08 | குஜராத்–பஞ்சாப் | பெங்களூர் | 7.30 |
| ஏப்ரல் 09 | சென்னை–ஹைதராபாத் | பட்டேல் | 3.30 |
| ஏப்ரல் 09 | பெங்களூர்–மும்பை | எம். சி. ஏ | 7.30 |
| ஏப்ரல் 10 | கொல்கொத்தா–டெல்லி | பெங்களூர் | 3.30 |
| ஏப்ரல் 10 | ராஜஸ்தான்–லக்னோவ் | வென்கடே | 7.30 |
| ஏப்ரல் 11 | ஹைதராபாத்–குஜராத் | பட்டேல் | 7.30 |
| ஏப்ரல் 12 | சென்னை–பெங்களூர் | பட்டேல் | 7.30 |
| ஏப்ரல் 13 | மும்பை–பஞ்சாப் | எம்.சி.ஏ | 7.30 |
| ஏப்ரல் 14 | ராஜஸ்தான்–குஜராத் | பட்டேல் | 7.30 |
| ஏப்ரல் 15 | ஹைதராபாத்–கொல்கொத்தா | பெங்களூர் | 7.30 |
| ஏப்ரல் 16 | மும்பை–லக்னோவ் | பெங்களூர் | 3.30 |
| ஏப்ரல் 16 | டெல்லி–பெங்களூர் | வென்கடே | 7.30 |
| ஏப்ரல் 17 | ஹைதராபாத்–பஞ்சாப் | பட்டேல் | 3.30 |
| ஏப்ரல் 17 | குஜராத்–சென்னை | எம். சி. ஏ | 7.30 |
| ஏப்ரல் 18 | கொல்கொத்தா–ராஜஸ்தான் | பிராபோர்ன் | 7.30 |
| ஏப்ரல் 19 | லக்னோவ்–பெங்களூர் | பட்டேல் | 7.30 |
| ஏப்ரல் 20 | டெல்லி–பஞ்சாப் | எம். சி. ஏ. | 7.30 |
| ஏப்ரல் 21 | சென்னை–மும்பை | பட்டேல் | 7.30 |
| ஏப்ரல் 22 | டெல்லி–ராஜஸ்தான் | எம். சி. ஏ. | 7.30 |
| ஏப்ரல் 23 | கொல்கொத்தா–குஜராத் | பட்டேல் | 3.30 |
| ஏப்ரல் 23 | பெங்களூர்–ஹைதராபாத் | பெங்களூர் | 7.30 |
| ஏப்ரல் 24 | லக்னோவ்–மும்மை | வென்கடே | 7.30 |
| ஏப்ரல் 25 | சென்னை–பஞ்சாப் | வென்கடே | 7.30 |
| ஏப்ரல் 26 | பெங்களூர்–ராஜஸ்தான் | எம்.சி.ஏ | 7.30 |
| ஏப்ரல் 27 | குஜராத்–ஹைதராபாத் | வென்கடே | 7.30 |
| ஏப்ரல் 28 | கொல்கொத–டெல்லி | வென்கடே | 7.30 |
| ஏப்ரல் 29 | லக்னோவ்–பஞ்சாப் | எம்.சி.ஏ. | 7.30 |
| ஏப்ரல் 30 | குஜராத்–பெங்களூர் | பெங்களூர் | 3.30 |
| ஏப்ரல் 30 | ராஜஸ்தான்–மும்பை | பட்டேல் | 7.30 |
| மே 01 | டெல்லி–லக்னோவ் | வென்கடே | 3.30 |
| மே 01 | ஹைதராபாத்–சென்னை | எம். சி. ஏ. | 7.30 |
| மே 02 | கொல்கொத்தா–ராஜஸ்தான் | வான்கடே | 7.30 |
| மே 03 | குஜராத்–பஞ்சாப் | பட்டேல் | 7.30 |
| மே 04 | பெங்களூர்–சென்னை | எம். சி. ஏ. | 7.30 |
| மே 05 | ஹைதராபாத்–டெல்லி | பிராபோர்ன் | 7.30 |
| மே 06 | குஜராத்–மும்பை | பிராபோர்ன் | 7.30 |
| மே 07 | பஞ்சாப்–ராஜஸ்தான் | வான்கடே | 3.30 |
| மே 07 | லக்னோவ்–கொல்கொத்தா | எம். சி. ஏ. | 7.30 |
| மே 08 | ஹைதராபாத்–பெங்களூர் | வான்கடே | 3.30 |
| மே 08 | டெல்லி–சென்னை | பட்டேல் | 7.30 |
| மே 09 | மும்பை–கொல்கொத்தா | பட்டேல் | 7.30 |
| மே 10 | லக்னோவ்–குஜராத் | எம். சி. ஏ. | 7.30 |
| மே 11 | ராஜஸ்தான்–டெல்லி | பட்டேல் | 7.30 |
| மே 12 | மும்பை–சென்னை | வென்கடே | 7.30 |
| மே 13 | பெங்களூர்–பஞ்சாப் | பிராபோர்ன் | 7.30 |
| மே 14 | ஹைதராபாத்–கொல்கொத்தா | எம். சி. ஏ. | 7.30 |
| மே 15 | குஜராத்–சென்னை | வான்கடே | 3.30 |
| மே 15 | லக்னோவ்–ராஜஸ்தன் | பிராபோர்ன் | 7.30 |
| மே 16 | பஞ்சாப்–டெல்லி | பட்டேல் | 7.30 |
| மே 17 | ஹைதராபாத்–மும்பை | வான்கடே | 7.30 |
| மே 18 | கொல்கொத்தா–லக்னோவ் | பட்டேல் | 7.30 |
| மே 19 | பெங்களூர்–குஜராத் | வான்கடே | 7.30 |
| மே 20 | ராஜஸ்தான்–சென்னை | பெங்களூர் | 7.30 |
| மே 21 | மும்பை–டெல்லி | வான்கடே | 7.30 |

### ஒக்ஸ்போர்ட் ஜனாதிபதி கிண்ண பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தட்ட போட்டி

# அரையிறுதிப் போட்டிகள் இன்று கொழும்பில்



கொழும்பு ஹமீட் அல் ஹுசைனி கல்லூரியின் 80 ஆவது பழைய மாணவர்கள் ஏற்பாடு செய்த ஒக்ஸ்போட் ஜனாதிபதி கிண்ண பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தட்ட போட்டியின் அரையிறுதிப் போட்டிகள் கடந்த 2020 ஆண்டு நாட்டில் ஏற்பட்ட கொரோனா தெற்று காரணமாக இடைநிறுத்தப்பட்டது. அதன் தற்போது இந்த வருடம் நடாத்துவதற்கு கல்லூரியின் பழைய மாணவர்கள் குழு மற்றும் அனுசரணையாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். அதன் முற்கட்டமாக இரண்டு அரையிறுதிப் போட்டிகள் கொழும்பு சிற்றி லீக் மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 1.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. முதல் அரையிறுதிப் போட்டியில் சென் தோமஸ் கல்லூரி அணியும் களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி அணியும் மோதுகின்றன. இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் ஹமீட் அல்ஹுசைனி கல்லூரி அணியும் நீர்கொழும்பு மரியஸ் டெல்லா கல்லூரி அணியும் பலப் பரீட்சை நடத்தவுள்ளன.



அத்துடன் இறுதிப் போட்டி எதிர்வரும் 27ம் திகதி கொழும்பு குதிரை பந்தய திடல் மைதானத்தில் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர். இந்த அரையிறுதிப் போட்டிகள் இரண்டு வருடங்களின் பின்னர் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. கடந்த 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் இடம்பெற்ற காலிறுதிப் போட்டிகளுடன் இந்த போட்டிகள் கொரோனாவால் தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறை விளையாட்டுக் கழகம் சம்பியன்

*மாளிகைக்காடு குறூப் நிருபர்*


சாய்ந்தமருது கிரிக்கட் சம்மேளனம் ஒழுங்கு செய்து நடாத்திக் கொண்டிருக்கும் 15 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கடின பந்து கிறிக்கட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் கடந்த 17ம் திகதி சாய்ந்தமருது பொலிவேரியன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 32 விளையாட்டுக் கழகங்கள் பங்கேற்ற, கடந்த 6 மாத காலமாக இடம்பெற்று வந்த இந்த சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக் கழகத்திற்கும் சம்மாந்துறை விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சம்மாந்துறை விளையாட்டுக் கழகம் முதலில் துடுப்பெடுத்தாடி 15 ஓவர்களில் 3 விக்கட்டுக்களை இழந்து 151 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பாடிய சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டு கழகம், 15 ஓவர்களில் 5 விக்கட்டுக்களை இழந்து 120 ஓட்டங்களைப் பெற்று தோல்வியினை தழுவிக் கொண்டது. சாய்ந்தமருது கிரிக்கட் சம்மேளனத்தின் தவிசாளர் ஹக்கீம் சரிப் தலைமையிலும் தலைவர் ரீ.கே.எம்.ஜலீல் மற்றும் செயலாளர் இல்யாஸ் அஸீஸ் ஆகியோரின் நெறிப்படுத்தலிலும் இடம்பெற்ற மேற்படி நிகழ்விற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் கல்முனை தொகுதி அமைப்பாளர் றிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாகவும் கல்முனை மாநகரசபை பிரதி மேயர் றஹ்மத் மன்சூர், டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலை நிர்வாக வைத்தியர் ஏ.எம்.முனீர், டவுன் ரவல்ஸ் முகாமைத்து பணிப்பாளர் ஏ.ஜே .எம்.ஜலீல், அல் அமானா நிறுவன பணிப்பாளர் ஏ.எல்.எம்.பரீட், றபீக் கென்ஸ்ரெக்ஸன் பணிப்பாளர் யு.எல். றபீக், டெலிகொம் பொறியியலாளர் எஸ்.எம்.ஹலீம், சமீம்ஸ் லங்கா பணிப்பாளர் ஏ.எம்.சமீம் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், அம்பாறை மாவட்ட கிறிக்கட் கட்டுப்பாட்டு சபை செயலாளர் சிதத் லியனாராய்ச்சி ஓய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளர் எம்.எஸ்.எம்.மஸூட், சுற்றுப்போட்டி தவிசாளர் ஏ.எம்.நளீம், சொர்ணம் நகை மாளிகை பிரதிநிதி அஹமட் லெவ்வை ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர். இறுதிப் போட்டியில் வெற்றிபெற்ற சம்மாந்துறை விளையாட்டுக் கழகத்திற்கு 25,000 ரூபா பணப்பரிசும், சம்பியன் கிண்ணமும், 2வது இடம்பெற்ற சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக் கழகத்திற்கு 15,000 ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டன.

ஆட்டநாயகனாக சம்மாந்துறை விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த எச்.ஆர்.எம். இஸ்மத் தெரிவு செய்யப்பட்டார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மார்ச் மாதம் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.



# மஞ்சரி தினகரன் வாரமஞ்சரி களஞ்சியம்



## வாழ்வாதாரமா சேதாரமா 216



தமிழ்க் கவி பேசுகின்றார்

போர் மனிதர்களை உலுப்பிப் போடுகிறது. ஒரு சிலருடைய அதிகார வெறி, நான் என்னும் அகந்தை, தன்னை நிறுவும் ஆணவம் பல்லாயிரம் என்ன பல கோடிக்கணக்கான அப்பாவிகளைப் பழி தீர்க்கிறது. எதுவுமே செய்யாமல் தண்டனைக்கு ஆளாகின்றனர்.

மகாபாரத யுத்தம் பாண்டவர்கள் ஐவருடைய வீட்டுக்கானது. ஆனால் அதில் பதினாறாயிரம் அக்குறோனி சேனை வீரர்கள் கொல்லப்பட்டார்கள். அவர்களுடைய குடும்பத்தினர் காலம் முழுதும் கண்ணீர் விட்டனர். ஆனால் வெற்றியை கொண்டாடியது பாண்டவராஜ்ஜியம். முதலாம் இரண்டாம் உலகப்போர்கள் ஏன் எதற்காக யாருக்காக என்றே தெரியால் கோடிக்கணக்கானவர்கள், உடலை உயிரை. உடைமைகளை உறவுகளை ஏன் உறுப்புகளைக் கூடவும் இழந்து துயருற்றனர். போரை முடிவுக்கு கொண்டு வந்து ஒப்பந்தம் போட்ட பின்னும் அந்த இழப்புகள் கவனிக்கப்படவில்லை. யார் யாருக்கு எந்தளவு நிலம் என்பதே முடிவானது.

இப்போதும் அப்படித்தான் 'பனைமரத்துக்கு தேள்கடித்தால் தென்னை மரத்துக்கு நெறிகட்டுமாம்' என்றொரு பழமொழி இருக்கிறது. இதில் என்ன வேடிக்கை என்றால் அது உண்மைதான் உக்ரைனில் சண்டை நடக்கிறது ஆனால் உலகின் பல பாகங்களுக்கும் நெறி கட்டிவிட்டது. குறிப்பாக சிறீலங்கா மனிதர்கள் வாழத் தகுதியற்ற நிலமாக மாறி வருகிறது.

உயிரினங்கள் வாழத் தகுதியான இடம் என்பது அவற்றுக்கான உணவு, நீர் தங்குமிடம் என்பவற்றை வழங்கக் கூடிய இடமாக இருந்தாக வேண்டும். இவை அனைத்தும் கிடைக்க அங்கே தூய காற்று இருந்தாக வேண்டும். முப்பதாண்டு போர் ஆரம்பித்த சில வருடங்களிலேயே கடல்வலயத் தடைச் சட்டம் வந்துவிட்டது. ஸ்ரீலங்காவின் மூன்றிலொரு பங்கு கரைப்பிரதேசங்களை கொண்டிருந்த தமிழர்கள் அவற்றில் பெரும் பகுதிகளை படை முகாம்களின் ஆக்கிரமிப்பில் இழந்து போனாலும், கரையோர பகல் மீன்பிடியில் மட்டுமே தமது பகுதி மக்களுக்கு போதிய கடலுணவை வழங்க முடிந்தது.

விவசாயிகள் பட்ட துயரம் சொல்லும் தரமன்று பெரும்பாலும் செய்கை பண்ணப்படும் பயிர்களுக்கு அவர்கள் வரி கட்டினார்கள். நெற்செய்கை செய்வோர் குறித்தளவு நெல்லை போருக்கு தானம்?! செய்ய வேண்டியிருந்தது. இந்த நிலை மாற ஒவ்வொரு குளத்தின் விவசாயப் பங்கிலும் இரண்டு ஏக்கர் வயலை அந்த பங்காளர்கள் தமது செலவில் விதைத்து கவனித்து அறுவடை செய்து கொடுத்தார்கள். ஆனாலும் நெல் விற்க முடியாமல் தேங்கியதால் வீடுகளில் பானையில் சோறிருந்தது. பசுக்களின் பெருக்கம் பால் பானைகள் நிறைந்து கிடந்தன. கறவை மாடுகளை அதிகமாக வைத்திருந்த பண்ணைகளில் பால் கறந்து கொடுப்பதற்கு கூலியாட்கள் சென்றனர். கூலி என்ன தெரியுமா? இரண்டு பானைகள் பால் கறந்தால் ஒருபானை மாட்டுக்காரருக்கு மறுபானை கறந்தவருக்கு. என்றால் அவர்கள் வீட்டிலும் பால்தயிர் நெய் என்பன மிகையாக கிடைத்தன. நாட்டு மாடுகளை கைவிட்டு சீமை மாடுகளை வளர்க்கும் இந்தக் காலத்தில். அந்தப்பாலும் வெளியூர்களுக்கு அனுப்பப்படுவதால் கிராமவாசிகளுக்கு பால் கிடைப்பதில்லை. போரை ஆரம்பித்தவர்கள் நடத்தியவர்கள் எதுவிதமான கஷ்டமும் படாமல் போரை மட்டும் செய்தனர். மக்கள் அணியும் ஆடைகளுக்கும் உண்ணும் உணவுக்கும் தங்கும் இடத்துக்கும் மாறி மாறி அலைந்தனர். நான்கு எறிகணைகள் வீழ்ந்தால் அந்த ஊரைவிட்டு வெளியேறி அயலூருக்கு செல்ல வேண்டும் அங்கே வாழ்வாதாரத்தை புதிதாக தேடவேண்டும். விதைத்த பயிரை அறுவடைக்கு தயாரான நிலையில் கைவிட்டு விட்டு ஓடியவர்களின் எண்ணிக்கை மிக அதிகம். பூவும் பிஞ்சுமாக காய்த்துக் கொண்டிருக்கும் மரக்கறித் தோட்டத்தை கண்ணீர்மல்க கைவிட்டுச்சென்ற விவசாயிகள் அதிகம்.

பொருட்களுக்கான விலையை விடுங்கள். அத்தியாவசிய தேவைகளை மட்டுமே நாம் நிறைவேற்ற முயன்றோம். நிவாரணம் வழங்கும் நியாய விலைக் கடைக்காரர் ஒரு அரசனைப்போல பவனிவந்தார். அந்த நிவாரண மட்டைகளை வழங்கும் நிர்வாகத்தினர் அதைவிட ஒருபடி மேலாக அதிகாரத்திலிருந்தனர். அங்கே பொதுமக்களுக்கு மீளாய்வுகள் அடிக்கடி நடந்ததால் அவர்கள் வேறு தொழில்களுக்கு செல்ல முடியாமல் சோர்ந்து போயினர். ஆயிற்றா....?

இன்று ஒவ்வொரு எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் வாகனங்கள் நிரைகட்டி நிற்கின்றன. மண்ணெண்ணைக்கும் வெற்றுக்கலன்களை அடுக்கடுக்காக நிரைகட்டி வைத்துவிட்டு காத்திருக்கும் மக்கள் அதிகமாக உள்ளது. இப்படி எண்ணைக்குதங்களில் விவசாயிகளே மிக அதிகமாக நிற்கின்றனர். இனிமேல் விவசாயம் செய்யப்போவதில்லை என பலர் அலுத்துக் கொள்கிறார்கள். ஒரு விவசாயின் பொழுது ஒவ்வொரு நிமிடமும் பெறுமதியானது. அதை இப்படி வரிசையில் போக்கிவிட்டு அவன் என்ன தொழிலை செய்ய முடியும். . 'பனையால விழுந்தவனை மாடேறி மிதிச்சமாதிரி' நிரையில் நின்றாலும் அவனது அன்றாட தேவைக்கான எரிபொருளை பெற முடியவில்லை.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் புதிதாகவும் ஆட்கள் வேலைக்கு இணைத்துள்ளார்கள். அவர்களுக்கு வேலையும் புரியவில்லை மக்களின் நேரமும் புரியவில்லை. என்றாலும் இயன்றளவு மக்களுக்கு சினம் வராதபடிக்கு சிரித்தபடி கடமையாற்றுகிறார்கள்.

இது இப்படியிருக்க கால்நடைகள் வைத்தியநிலையத்தில் பதிவிட்ட கோழிக்குஞ்சுகளை பெறுபவர்கள் வரவில்லை என தெரிகிறது. காரணம் கோழிகளுக்கான உணவின் பிரம்மாண்டமான விலையேற்றம். கோழியோ முட்டையோ விலை ஏறவில்லை. ஆனால் கோழிக்கான தீவனம் ஒரு மாதத்தில் இருபத்தைந்து கிலோவிற்கு நாலாயிரமாக ஏறியுள்ளது. பழைய விலையிலிருந்து தொளாயிரத்து ஐம்பது ரூபா அதிகரித்துள்ளது. நாலாயிரத்து முன்னூறு விற்ற முட்டைக்கோழியில் தீன் ஏழாயிரத்துமுந்நூற்று எண்பது ரூபா... முடியுமா கோழியை வளர்த்து நாளாந்தம் அதற்கு சொந்தப்பணத்தில் தீவனம் வைப்பதைவிட அவற்றை விற்றுவிடலாம். என்பதே தீர்மானமாகிவிட்டது. கோழிச்சந்தையில் ஒருவர் தனது சொந்தக் கோழிகளை மிக குறைந்த விலையில் விற்றுக் கொண்டிருந்தார். 'எப்படி இது உங்களுக்கு கட்டுப்படியாகுமா?' என்று கேட்கும் போதே மனதிற்குள் 'திருட்டுக் கோழியாக இருக்குமோ' என்ற சந்தேகமும் வந்தது. அவர் சொன்னார் ' என்ன செய்ய வீட்டில பிள்ளையள பட்டினி போட ஏலாது. கோழிக்கும் தீன்விலையும் அதிகம் அதான் வித்துத் தொலைப்பம் எண்டு' ஒரு கால்நடை வளர்ப்பாளரின் நாவில் வந்த வார்த்தை 'வித்துத் தொலைப்பம் என்று' ஒரு காலத்தில் இந்தக் கோழிகளே அவர்களது வாழ்வாதாரமாக இருந்தது. இன்று அவைகளே அவருக்கு சுமையாகிவிட்டது. நான் கூட எனது வீட்டுத் தோட்டத்தை கோழிகளுக்காக திறந்து விட தீர்மாத்து விட்டேன் காரணம் வாழத்தோட்டம் போட நினைத்து வாழைத்தோட்டம் போட்டேன். ஆனால் ஒரு வருடம் கடந்து அந்த வாழை பென்னம் பெரிய குலை போட்டது. ஆனால் அதன் பெறுமதி வெறும் நூற்றி ஐம்பதுதான். எதற்கு? அதை வெட்டிக் கீழே போட்டால் கோழிகளுக்கு ஒரு நாள் தீவனமாகும் நாநூறு ரூபா மிகுதியாகும். ம்... எப்படியெல்லாம் கணக்குப் போட்டாலும் தேங்காய் இல்லாமல் மரக்கறிகள் இல்லாமல், வெங்காயம் புளி இல்லாமல், பால்மா இல்லாமல், பச்சைத்தண்ணியில பருப்பை வேகவிட்டு சோற்றில் குழைத்துண்ட அந்த நாட்கள் ஏராளமான மக்களை யுத்த வலயத்துக்குள்ளிருந்து ராணுவத்திடம் ஓட வைத்தது, அதேபோல இப்பவும் மக்கள் ஓடத்தான் நினைக்கிறார்கள். இது எங்க போய் முடியப்போகுதோ.




# இப்பவும் ஓடத்தான் நினைக்கிறார்கள் மக்கள்

## முதல் சூரியன் தினகரன்

என் தந்தை
என் கரங்களில் ஒப்படைத்த
தினகரன் நீ
என்னை இன்று வரை
கரம் பிடித்து
அழைத்து வருகிறாய் மாணிக்கமாய்
என்னை ஒப்பமிட்டு
தினம் என் கரங்களில்
நீ
தினம் உன் கரங்களில்
நான்
காலையில் நாங்கள்
காணும்
முதல் சூரியனே
எங்கள் பாடப் புத்தகங்களோடு
பயணம் செய்தவன் நீ
அறிவை
அள்ளிப் பருக்கிய
பல்கலைக்கழகம் நீ
எங்கள் வாழ்க்கைப் பாதையையும்
செப்பனிட்டவனே
உன் விழிகளால்தானே
உலகத்தைத் தரிசித்தோம்
உன் வழிகளால்தானே
இலக்கியத்தில் நிலை பெற்றோம்
உன் செய்திகள்
எங்கள் உலகத்தைச் செய்தது
உன் இலக்கியம்
எங்களுக்கு உயிரோட்டம் தந்தது
சிறுவயதிலேயே உன்னை
அடையாளம் கண்டோம்
நீ எங்களுக்கு
அடையாளம் தந்தாய்
தினகரன் வாசகன்
என்ற அடையாள அட்டையோடு
மாபெரும் சபைகளிலும்
உலா வரும் நாங்கள்
எங்களையெல்லாம்
என்றென்றும் தூக்கிப்பிடிக்கும்
நீ
உன் அன்பில் துவண்டு
உன் காலடியில் நாங்கள்
உனக்கு
தொண்ணூறு வயது
எனினும்
தமிழ் போல் இளமையாய்
தினகரனே நீ எங்களுக்கு
வெறும் பத்திரிகை அல்ல;
வாழ்க்கை !



என். நஜ்முல் ஹுசைன்...

# சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவியர் மத்தியில் 'தியனிய' திட்டம்

பெண்கள் தூய்மை துவாய் உற்பத்தியில் இலங்கையின் முன்னணி வர்த்தக நாமமான ஈவா (நுஎய) பெண்களுக்கு வலுவூட்டும் வகையில் புதிய திட்டமான 'தியனிய' திட்டத்தின் இன்னொரு கட்டத்தை அண்மையில் செயற்படுத்தியுள்ளது.

பாடசாலை மாணவிகளின் நலனை கருத்திற்கொண்டு நாடுதழுவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் இத்திட்டமானது பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளிகள் மற்றும் முதன்நிலைக் கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா மற்றும் அமைச்சின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படுகின்றது.



'தியனிய' திட்டத்தின் பிரதான நோக்கம், சகல பாடசாலை மாணவிகளுக்கும் தமது மாதவிடாய் காலப்பகுதியில் அவசியமாக அமைந்திருக்கும் தூய்மைத் துவாய் தேவையை நிவர்த்தி செய்து கொள்வதற்கு வசதியளிப்பதாக அமைந்துள்ளது.

முதற்கட்டமாக நாடு முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட 250 பாடசாலைகள் உள்வாங்கப்பட்டு, இத்திட்டம் முன்னெடுக்கப்பபட்டது. அப்பாடசாலைகளுக்கு தூய்மை அலுமாரிகள் வழங்கப்பட்டு, அதில் தூய்மைத் துவாய் வழங்கப்படும். அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு பாடசாலைக்கும் விஜயம் செய்து, பெண்கள் மாதவிடாய் காலப்பகுதியில் தூய்மையாக இருக்க வேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகள் முறையாக பயிற்சிகளைப் பெற்ற நிபுணர்களினூடாக முன்னெடுக்கப்படும்.

'தியனிய' திட்டத்தில் முக்கிய பங்களிப்பை நுஎய வழங்குவதுடன்,அரசாங்கத்தின் இலக்கான சகல பாடசாலை மாணவியருக்கும் இலவசமான முறையில் தூய்மை துவாய்களை வழங்கும் திட்டத்துக்கு பங்களிப்பு வழங்கும்.

'தியனிய' செயற்திட்டம் 2022 வருடத்திற்கான அங்குரார்ப்பண நிகழ்வில் பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளிகள் மற்றும் முதன்நிலைக் கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா, அமைச்சின் செயலாளர் குமாரி ஜயசேகர, இலங்கை மகளிர் பணியகத்தின் பணிப்பாளர் சம்பா உபசேன, தேசிய மகளிர் குழுவின் தலைவி எஸ்.பி. திசாநாயக்க, கெப்பிட்டல் மகாராஜா நிறுவனத்தின் குழுமப் பணிப்பாளர் சுரங்க ஜயலத், கெப்பிட்டல் மகாராஜா நிறுவனத்தின் குழுமப் பணிப்பாளர் சாந்திபகீரதன் உட்பட அந்த நிறுவனத்தின் முகாமைத்துவ உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்தத் திட்டம் தொடர்பாக கருத்து தெரிவித்த எண்ணக்கரு ஸ்தாபகரும் இராஜாங்க அமைச்சருமான பியல் நிஷாந்த டி சில்வா, நாடு முழுவதையும் சேர்ந்த பெண்கள் பாடசாலைகளில் பயிலும் மாணவியருக்கு அவர்களின் மாதவிடாய் தூய்மைத் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் இலவசமாக தூய்மை துவாய்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் 'தியனிய' திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது என்றார்.

பி. விரசிங்கம்....

# அஷ்ரஃப் சிஹாப்தீன் தந்துள்ள பொக்கிஷம் நான் இன்னும் உயிர்ப்புடன் இருக்கிறேன்

"நான் இன்னும் உயிர்ப்புடன் இருக்கிறேன்" மொழிபெயர்ப்பும் தொகுப்பும் மேற்குலகின் இஸ்லாமிய செயற்பாட்டாளர்களான பெண் ஆளுமைகள் பதின்மரின் ஆங்கில உரையின் தமிழாக்கமாகவும் இஸ்லாத்தை இஸ்லாமிய முறையுடன் அறிவுபூர்வமாக மக்களிடம் எப்படி சென்றடைய செய்ய வேண்டும் என்பதனையும் இந்த தமிழாக்க உரையினை இல்லை...பொக்கிஷத்தினை அழகிய முறையில் எம்முன் வைக்கிறார் நாடறிந்த பன்முக ஆளுமையாளர் எழுத்தாளர் அஷ்ரஃப் சிஹாப்தீன் . "இஸ்லாம் பேசாதீர்கள் முன்மாதிரி முஸ்லிமாக வாழ்ந்துக் காட்டுங்கள்" என்றொரு வசனத்திற்கேற்ப.... .இஸ்லாமியனாக பிறந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று மார்தட்டிக் கொள்வதைவிட இஸ்லாத்தை எப்படி நுண்ணறிவுடன் உள்வாங்கி அதன் அடித்தளத்தை எப்படி புரிந்துக்கொண்டு குர்ஆன் ஹதீஸை எப்படி பின்பற்ற வேண்டுமென்பதனையும் இப்புத்தக உரைகள் எம்முடன் அழகான முறையில் உரையாடுகின்றன. இப்புத்தகத்தின் பத்து தமிழாக்க உரைகள் யெஸ்மின் முஜாஹித் என தொடங்கி ஷெய்க்கா முஸ்லிமா புர்முல்லின் உரையுடன் முடிவடைகிறது.

அவர்களின் கருத்துச் செறிவுமிக்க உரைகள் எமது உள்ளங்களை ஆத்மார்த்தமான ரீதியில் ஈர்ப்பதோடு கடந்தகால இஸ்லாமிய நடைமுறை வாழ்வியலின் பல கைசேதங்களையும் உணர்த்திச் செல்கிறது.

"நான் இன்னும் உயிர்ப்புடன் இருக்கிறேன்." நாம் எப்படி புத்தகத்துடன் லயித்திருக்கிறோம் என்பதைவிட நாம் செல்லும் பாதையை இன்னும் தெளிவாக்கி மனதில் ஒரு வெளிச்சத்தையும் இவ்வுரைகள் மூலம் எமக்கு ஒரு சேதியையும் பதிக்கிறார். அஷ்ரஃப் சிஹாப்தீன். அத்தோடு இந்த பெண் புத்திஜீவிகள் வெறுமனே பெயருக்கும் புகழுக்கும் ஊடகங்கள் வசப்பட்டவர்கள் அல்ல என்பதும் தெளிவாகிறது.

மேலும் மிக முக்கிய சிலரால் ஜீரணிக்க முடியாத ஒரு உண்மையும் தனது கருத்துரையில் பதிக்கிறார் நூலாசிரியர்.

"சர்வதேச ரீதியாக இஸ்லாமிய அம்சங்கள் குறித்து உரைகள் நிகழ்த்தும் ஆண்களைத்தான் நமது சூழல் பெரும்பாலும் அறிந்து வைத்திருக்கிறது.

அவர்களது கருத்துக்கள் பெரிய அளவில் விசாலமான பரப்புகளில் பகிர்ந்துக் கொள்ளப்படுகின்றன.

ஆனால் அவர்களுக்கு நிகராக இஸ்லாமிய அம்சங்கள்பற்றி உரை நிகழ்த்துவது மட்டுமின்றிச் சிலவேளைகளில் அவர்களைவிடத் தைரியமாக பொதுவெளியிலும் உரத்துக் குரல் கொடுக்கும் பல முஸ்லிம் பெண்கள் உலகளாவிய ரீதியில் வாழ்ந்து கொண்டும். செயற்பட்டுக் கொண்டும் இருக்கிறார்கள். இருந்தும் நமது சூழல் அதைக் குறிப்பிட்ட அளவுக்கேனும் அறிந்துக் கொள்ளவும் இல்லை. அறிந்து கொள்ள முயலவும் இல்லை என்பதுதான் கவலைக்குரியது.

உண்மைதான் எமது சமூகம் பெரும்பாலும் பெண்களின் திறனை கண்டுக் கொள்வதில்லை.

ஆண்களின் ஆதிக்க மனப்பான்மை தான் ..பெண்களை முன்நிறுத்துவது.. குறைவாக உள்ளது.

இறுதியாக ஒவ்வொருவரும் கட்டாயமாக வாங்கிப்படித்து உள்வாங்க வேண்டிய ஒளிக் கடல் இப்புத்தகம்.






பாத்திமா நளீரா....

# சிறந்த கைத்தொழிலுக்கான தங்கவிருது லீடர் கயிஜி பேட்டரி நிறுவனத்துக்கு

மோட்டார் சைக்கிள் பேட்டரி சந்தையில் இலங்கையின் முன்னோடி நிறுவனமாக விளங்கும் லீடர் கயிஜி பேட்டரி தனியார் நிறுவனம், கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் (IDB) ஏற்பாடு செய்யப்பட்ட சிறந்த கைத்தொழில் 2022 விருது விழாவில் மோட்டார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்திப் பிரிவின், பாரியளவிலான பிரிவின் தங்கவிருதை வென்றுள்ளது.

மே ற்படி விருது விழா வோட்டர்ஸ் ஏஜ் ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது. 2016 ஆம் ஆண்டில் மோட்டார் சைக்கிள் பேட்டரி உற்பத்தி நடவடிக்கையை ஆரம்பித்த லீடர் கயிஜி நிறுவனம் இலங்கையில் முதலாவது மோட்டார் சைக்கிள் பேட்டரி உற்பத்தி நிறுவனம் என்ற பெருமையை பெறுகின்றது. நிறுவனத்தை தொடங்கிய ஆரம்பத்திலேயே ஐஎஸ்ஓ 9001 : 2015 தரச் சான்றிதழை வென்ற லீடர் கயிஜி நிறுவனம் உலகின் மிகப்பெரிய மோட்டார் சைக்கிள் பேட்டரி உற்பத்தி நிறுவனமான கயிஜி நிறுவனத்துடன் தொழில்நுட்ப ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டு தமது உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதால் சர்வதேச தரத்துடன் கூடிய உற்பத்திகளை மேற்கொள்கிறது.

எப்பொழுதும் புதிய தொழில்நுட்பத்தை இணைத்துக்கொண்டு ஆகச் சிறந்த உற்பத்திகளை வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுக்கின்றோம். எமது உற்பத்திகள் மீது வாடிக்கையாளர்கள் வைத்துள்ள நம்பிக்கையை உள்ளபடியே தக்கவைத்துக் கொள்வதற்கு நாம் தொடர்ச்சியாக நடவடிக்கை எடுத்து வருகிறோம். குறிப்பாக பேட்டரிகளை இறக்குமதி செய்வதற்கு இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்ற அன்னியச் செலாவணியை குறைத்துக் கொள்வதற்கு எம்மால் முடிந்துள்ளது. இந்த வெற்றிக்கு உறுதுணையாக நின்ற ஊழியர்களுக்கும் நாடெங்கிலுமுள்ள விற்பனை முகவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வதாக நிறுவனத்தின் அதிபர் கலாநிதி ஸ்ரீயந்த குரே தெரிவித்தார்.

# வணிக ஆலோசனை தொடர்பான முகாமைத்துவ மேம்பாட்டில் டிப்ளோமா பெற்ற முகாமையாளர்களுக்கு HNB Finance அங்கீகாரம்

இலங்கையின் முன்னணி நிதி நிறுவனமான HNB FINANCE PLC, வணிக ஆலோசனைக்கான முகாமைத்துவ மேம்பாட்டு டிப்ளோமாவை வெற்றிகரமாக முடித்த அதன் முகாமையாளர்களுக்கு அண்மையில் சான்றிதழ்களை வழங்கியது. இந்த துறைக்கு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் முதல் தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த வருடம் டிசம்பர் மாதம் 21ஆம் திகதி நாவலவில் உள்ள HNB FINANCE PLC தலைமை அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக முகாமைத்துவப் பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான திரு. சமிந்த பிரபாத், மற்றும் HNB Financeஇன் உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர். மேலும் முகாமைத்துவ அபிவிருத்தி டிப்ளோமாவை நடத்திய பேராசிரியர் காமினி அல்விஸ், கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன மற்றும் கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் தர்மதாச ஆகியோரும் இந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.

2021 டிப்ளோமா பாடநெறியில் பங்கேற்றவர்களில், HNB FINANCE PLCஇன் பிராந்திய முகாமையாளர்கள், முகாமையாளர்கள் மற்றும் துணை முகாமையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். HNB FINANCEஇன் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சமிந்த பிரபாத்தின் மேற்பார்வை மற்றும் வழிநடத்துதல்களின் கீழ் இயங்கும் நிறுவனம், இதுவரையில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் அடிப்படையில் எதிர்காலத்தில் அனைத்து நிர்வாக உறுப்பினர்களுக்கும் இந்த ஆய்வுத் திட்டத்தை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளது.

காலத்தின் தேவைக்கு ஏற்ப நடைமுறைப்படுத்தப்படும் இந்த டிப்ளோமா பாடநெறியானது, சேவையாற்றுவதற்கு சிறந்த நிறுவனங்களில் ஒன்றாக இலங்கையை தொடர்ந்து அங்கீகரிப்பதை மேலும் உறுதிப்படுத்தியுள்ளதுடன் ஊழியர்களுக்கு அவர்களின் வாழ்க்கையில் வெற்றிபெறத் தேவையான அறிவைத் தொடர்ந்து வழங்குவதாகவும் நிறுவனம் உறுதிப்படுத்துகிறது.



# இலங்கையில் வாகனப் பாவனையாளர்களுக்கு ஏற்படவுள்ள நெருக்கடி தொடர்பில் கவலை வெளியிட்டுள்ள CMTA

வாகன உதிரிப் பாகங்களின் கொள்வனவு தொடர்பான LC வசதிகளை மேற்கொள்வதில் ஏற்பட்டுள்ள சிரமங்கள் தொடர்பில், சிலோன் மோட்டார் வாகன வர்த்தகர்கள் சங்கம் (CMTA) கவலை வெளியிட்டுள்ளது. வங்கிகளின் இந்த உத்தியோகபூர்வமற்ற கட்டுப்பாடுகளால், இலங்கையிலுள்ள வாகனங்களின் பராமரிப்பு முடக்க நிலைக்கு தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இது பொருட்களின் போக்குவரத்து மற்றும் மக்கள் போக்குவரத்து மாத்திரமன்றி ஒட்டுமொத்த பொருளாதாரத்திலும் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தும். போக்குவரத்துத் துறை முடக்கத்திற்கு உள்ளானால், அது நாட்டின் முக்கிய வருமானத்தை வழங்குகின்றதும், போக்குவரத்தில் தங்கியுள்ளதுமான, ஏற்றுமதி மற்றும் சுற்றுலா போன்ற துறைகளில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும்.

பெரும்பாலான வாகன உரிமையாளர்கள் ஆபத்தான patch repair, போலியான உதிரிப் பாகங்கள் மற்றும் வெளிநாடுகளில் அகற்றப்பட்ட குப்பைக் கிடங்குகளில் இருந்து பெறப்பட்டு இறக்குமதி செய்யப்படும் உதிரிப் பாகங்களை பயன்படுத்த நேரிடுகின்றன. இந்த நடைமுறைகள் காரணமாக, வாகனங்களைப் பயன்படுத்துவோர் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு பெரும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளது.

பொதுமக்களின் பாதுகாப்பு தொடர்பான கவலைகளுக்கு மேலதிகமாக, இந்த கட்டுப்பாடுகள் மற்றும் LC வசதிகளின் தாமதங்கள், முழு வாகன சந்தையிலும் நிச்சயமற்ற தன்மை மற்றும் தேவையற்ற பீதியை உருவாக்குவதுடன், உதிரிப் பாகங்களின் விநியோகம் அல்லது விலையை முறையான அனுமதிப்பத்திரம் கொண்டவர்களால் தீர்மானிக்க முடியாமல் போவதற்கும் காரணமாக அமைகிறது.

சுமார் இரண்டு வருட கால இறக்குமதித் தடை



காரணமாக பாதிக்கப்பட்டுள்ள இத்துறையில் அனுமதிப்பத்திரம் கொண்டவர்கள், தங்கள் ஊழியர்களுக்கும், ஏனைய செலவுகளை பூர்த்தி செய்யவுமாக, மேற்கொள்ளப்பட்டு வருகின்ற எஞ்சியுள்ள ஒரே வருமான ஆதாரமான, விற்பனைக்குப் பின்னரான சேவைகளை நிர்வகிப்பதில் தற்போது மேலும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

# விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுக்கு Vantage கௌரவம்

இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரான கௌரவ நாமல்ராஜபக்ஷவுக்கு 2022 ஜனவரி 20 ஆம் திகதியன்று ஸ்ரீஜெயவர்தனபுர கோட்டே மொனார்க் இம்பீரியலில் இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட வைபவமொன்றில் Ebony Holdingsஇன் பணிப்பாளர் சபைத்தலைவரான ரஸ்மிரஹீம் அவர்களால் விசேட பாராட்டுச்சின்னம் வழங்கப்பட்டுள்ளது.



இலங்கையில் உதைப்பந்தாட்ட விளையாட்டையும், அதனுடன் தொடர்புடைய ஏனைய விளையாட்டுகளையும் வளர்ப்பதில் அமைச்சரின் உண்மையான மற்றும் அதிசிறந்த ஈடுபாட்டைப் போற்றிப் பாராட்டும் வகையில் இச்சின்னம் வழங்கப்பட்டுள்ளது.

EbonyHoldings ஆனது இலங்கையில் உதைப்பந்தாட்டத்திற்கான இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் உத்தியோகபூர்வ கூட்டாளரான Vantage என்ற ஆண்களுக்கான முதன்மையான ஆடைகள் வர்த்தகநாமத்தின் பின்னால் உள்ள நிறுவனமாகும்.

Ebony Holdings நிறுவனத்தின் பணிப்பாளர் சபைத்தலைவரான ரஸ்மிரஹீம் அவர்கள் இந்த விடயம் தொடர்பில் கருத்து வெளியிடுகையில், "நாமல்ராஜபக்ஷ ஆசியாவிலேயே விளையாட்டுத்துறைக்கான இளம் அமைச்சர்களில் ஒருவர் என்பதுடன், விளையாட்டுக்காக, குறிப்பாக உதைப்பந்தாட்டத்தில் அவர் காண்பிக்கும் அர்ப்பணிப்பு மற்றும் ஆழ்ந்த ஈடுபாட்டைக் காண்பது எமக்கு ஒரு உத்வேகத்தை அளிக்கிறது. Vantage உத்தியோகபூர்வமாக இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்துடன் கைகோர்த்துள்ளதுடன், நமது நாட்டில் உதைப்பந்தாட்டத்தின் மேம்பாடு மற்றும் ஊக்குவிப்புக்காக கணிசமான வளங்களையும் நாங்கள் அர்ப்பணித்துள்ளோம். இது தொடர்பான எங்கள் பணியின்போது, அமைச்சரின் ஆதரவை நாங்கள் எப்போதும் உறுதிசெய்துள்ளோம். எனவே, மாண்புமிகு அமைச்சரின் ஆதரவு மற்றும் தொலைநோக்குடனான இலக்கிற்காக நாம் அவரைப் போற்றிப் பாராட்ட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இலங்கையின் ஆண்களுக்கான சிறந்த நவநாகரிக இலச்சினைகளில் ஒன்றாக இருப்பது, உதைப் பந்தாட்டத்தை ஆதரிப்பதில் Vantage இற்கு ஒரு இயல்பான படியாகும். இலங்கையில் இந்த விளையாட்டு இன்னும் வளர்ச்சியடைந்து வருவதை நிறுவனம் புரிந்துகொண்டு, இலங்கையில் உதைப்பந்தாட்டத்தின் மீது முதலீடுசெய்து, குறிப்பாக நிதியுதவி அடிப்படையில் அதனை வளர்க்க வேண்டியதன் அவசியத்தைப் போற்றுகிறது. இவ்வாறாக, இலங்கையில் உதைப்பந்தாட்டத்தை தொடர்ந்து அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்துடன் கைகோர்ப்பதில் Vantage மிகவும் மகிழ்ச்சியடைகிறது.

# கண்டி காட்சியறையை புதிய இடத்திற்கு மாற்றிய Hameedia



ஸ்டைலுக்கும் தரத்துக்கும் பெயர் பெற்றுள்ளதும் இலங்கையில் ஆடவர் அணிகலன்கள் வர்த்தக நாமத்தில் முன்னணி வகிப்பதுமான Hameedia தமது கண்டி காட்சியறையை இல. 398, பேராதனை வீதி, கண்டி என்ற முகவரிக்கு மாற்றியுள்ளது. இப்புதிய காட்சியறையின் பிரமாண்டமான திறப்புவிழா அண்மையில் இடம்பெற்றதுடன், பிரதம அதிதியாக கண்டி மாநகரத் தலைவர் கேசர சேனாநாயக்க மற்றும் டாக்டர். எஸ்.எம். எம். நியாஸ் சத்திரசிகிச்சை நிபுணர் கண்டி தேசிய வைத்தியசாலை சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டதுடன், நலன் விரும்பிகள் மற்றும் Hameedia ஊழியர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த புதிய இடத்திற்கு மாற்றப்பட்டுள்ள காட்சியறை, கண்டி மற்றும் அதற்கு அண்மித்த நகரங்களில் வசிக்கும் வாடிக்கையாளர்களுக்கு இலகுவாக அணுகக்கூடிய இடத்தில் அமைந்துள்ளது. மேலும் பெரிய வாகன தரிப்பிடம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றையும் கொண்டுள்ளது. ஆண்கள் தங்கள் ஆடவர் ஆடைத் தேவைகளுக்கான ஷொப்பிங் செய்திடும் மனநிறைவினை அதிகரித்தல் மற்றும் பாரிய தெரிவுகளை வழங்குதல் என்பவற்றின் மூலம் Hameedia காட்சியறை வாடிக்கையாளர்களுடன் சிறப்பாக இணைந்திருக்க வழிவகுக்கிறது. மலைநாட்டு நகரத்தில் தமது சந்தை இருப்பினை மேலும் விஸ்தரித்திட அதன் வாடிக்கையாளர் தளத்தில் வர்த்தக நாம தரத்தினை அதிகரிக்கவும் இது அனுமதிக்கிறது.

# புதுப்பிக்கப்பட்ட தயாரிப்பு அட்டவணைக்கு QR குறியீட்டை அறிமுகப்படுத்துமாறு லங்காடைல்ஸ் கோரிக்கை

இலங்கையின் டைல்ஸ் தயாரிப்புக்களில் சந்தையின் முன்னணியாளரான லங்காடைல்ஸ் கொள்வனவுக்கு முன்னர் வாடிக்கையாளர்கள் தமது தயாரிப்புக்கள் பற்றிய முழுமையான பட்டியல்களை அறிந்து கொள்வதற்கும், அதிகூடிய சில்லறை விலை பற்றிய தகவல்களைத் தெரிந்துகொண்டு சௌகரியான முறையில் அவற்றை அணுகுவதற்கும், வெளிப்படைத் தன்மையை வெளிப்படுத்துவதற்கும் வசதிகளிக்கும் வகையில் அண்மையில் QR குறியீட்டை அறிமுகப்படுத்தியது.

QR குறியீட்டை ஸ்கான் செய்வதன் ஊடாக உற்பத்திகளின் அதிகூடிய சில்லறை விலை மற்றும் ஏனைய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு மேலதிகமாக, 0117622822 என்ற விசேட வாடிக்கையாளர் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக அல்லது www.lankatiles.com என்ற இணையத்தின் ஊடாகவும் தேவையான தகவல்களை அறிந்துகொள்ள முடியும்.

இந்த முயற்சி தொடர்பில் கருத்துத் தெரிவித்த லங்கா டைல்ஸ் பிஎல்சி மற்றும் லங்கா வோல்டைல்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மஹேந்திர ஜயசேகர குறிப்பிடுகையில், 'பல தசாப்த கால பாரம்பரியத்தைக் கொண்ட நிறுவனமான லங்காடைல்ஸ், மக்கள் நலனை உறுதி செய்வதற்காக தொழில் வரையறைகளை அமைப்பதற்கும் நிலைநிறுத்துவதற்கும் உறுதிபூண்டுள்ளது. அந்நிய செலாவணி நெருக்கடிக்கு தீர்வுகாணும் நோக்கில் விதிக்கப்பட்ட இறக்குமதி வரம்புகள் காரணமாக விநியோகம் வரையறுக்கப்பட்டுள்ள நிலையில் நேர்மையற்ற வர்த்தகர்களை நிராகரிக்கவும், அவர்களுக்கு உரிய தண்டனையை வழங்குவதற்கும் வாடிக்கையாளர்கள் தங்கள் பலத்தைப் பயன்படுத்த இந்த முயற்சியின் ஊடாக ஊக்குவிக்கப்படுவார்கள் என நாம் நம்புகின்றோம்' என்றார்.

நுகர்வோர் பாதுகாப்பிற்கு சுய கட்டுப்பாட்டின் மூலம் ஒழுக்கம் ஏற்படுவது முக்கியமானது என்றும், போட்டியாளர்கள், சகபாடிகள் இதனைப் பின்பற்றுவதை ஊக்குவிப்பதாகவும் அவர் கூறினார்.

# ஹியாரே மழைக்காடுகள் பகுதியில் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியினால் தாவரக் கன்றுகள் நடுகை



சூழல்சார் செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்கும் பொறுப்பு வாய்ந்த கூட்டாண்மை குடிமகன் எனும் வகையில் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியினால், காலி, ஹியாரே மழைக்காடுகள் மற்றும் நீரேந்து பகுதியில் ஒரு ஏக்கர் பகுதியில் மரக்கன்றுகளை நடும் திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் பிரசன்னத்துடன் இந்த மரநடுகைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதில் கூட்டாண்மை சமூகப் பொறுப்புணர்வு செயற்பாடுகளுக்கான தலைமை அதிகாரி தேஜா சில்வா, மனித வளங்கள் பிரிவின் நிறைவேற்று உப தலைவர் ரமனிகா ஊனம்பூவே, பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி சஞ்ஜய செனரத் மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு சங்கத்தின் அதிகாரிகள் என பலரும் அடங்கியிருந்தனர்.

2021 தமிழ் சிங்களப் புத்தாண்டு வார காலப்பகுதியில் 'Mihikathata Avurudu' திட்டத்தின் பிரகாரம், நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியில் புதிய நடைமுறைக்கணக்கு, சேமிப்புக் கணக்கு அல்லது முதலீட்டுத் திட்டமொன்றை ஆரம்பித்த சகல வாடிக்கையாளர் சார்பாகவும் தாவரக் கன்றுகள் நடப்பட்டிருந்தன.

# தொடர்ச்சியாக 3ஆவது வருடமாக சிறந்து விளங்கும் பெல்வத்தை!

இலங்கை தேசிய கைத்தொழில்துறைகள் சம்மேளனத்தினால் (CNCI) ஏற்பாடு செய்யப்பட்ட சாதனையாளர் விருதுகளுக்காக (Achiever Awards) இலங்கையிலுள்ள அனைவரினதும் நாக்கின் நுனியிலும் இருக்கும் முன்னணி பால் வர்த்தகநாமமான பெல்வத்தை (Pelwatte Diaries), தொடர்ந்தும் 3ஆவது வருடமாக விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. 20 ஆண்டுகளுக்கும் மேலாக இடம்பெற்று வரும் இவ்விருது வழங்கும் விழா, கொவிட்19 தொற்றுநோய் காரணமாக ஒரு சிறிய இடைவெளிக்குப் பின்னர், கடந்த 2022 ஜனவரி 12ஆம் திகதி கலதாரி ஹோட்டலில் 2021ஆம் ஆண்டுக்கான விருது வழங்கும் விழாவின் மூலம் மீண்டும் நடாத்தப்பட்டிருந்தது.

Pelwatte Diaries, தொழில்துறை வெற்றியுடன் ஒலிக்கும் ஒரு பெயராக தற்போது மாறியுள்ள நிலையில், இவ்விழாவில் ஒரு உற்பத்தி நிறுவனம் பெறக்கூடிய மிகப் பெரிய கௌரவங்களில் ஒன்றான, Extra Large பிரிவில் தேசிய ரீதியிலான பாராட்டு (National Merit) விருதை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அது மாத்திரமன்றி, 8 மாகாணங்களுக்கும் மேல் வெற்றியை கொண்டு வந்து சேர்த்துள்ளதன் மூலம், Pelwatte Diaries ஆனது, மாகாண வெண்கல விருதையும் பெற்றுள்ளது. இவ்வாறு பெல்வத்தை நிறுவனம் வெற்றிகரமான மாலைப் பொழுதைக் கொண்டாடிய நிலையில், அதற்கு Business Excellence Award (வணிக மேன்மை விருது) விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர், அக்மால் விக்ரமநாயக்க, இந்தசாதனைகுறித்துகருத்துத்தெரிவிக்கையில், "CNCI சாதனையாளர் விருதுகள், தொழில்துறை தரத்திற்கும் மேலாக பொருளாதாரத்திற்கும் எமது பங்குதாரர்களுக்கும் வழங்கிய பங்களிப்பை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படுகின்றன. இவை அனைத்தும் கொவிட்19 காரணமாக ஏற்பட்ட நிச்சயமற்ற நேரங்களில் வழங்கப்பட்ட சவாலுக்கு மத்தியில் இடம்பெற்றுள்ளது. எவ்வாறாயினும், இந்த மகத்தான சாதனைகளை தொடர்ச்சியாக 3 வருடங்களாகப் பெற்றமை தொடர்பில், நிறுவனம் மற்றும் அதன் பின்புலத்தில் உள்ளவர்கள் தொடர்பிலும் நான் மிகவும் பெருமைப்படுகிறேன்." என்றார்.





# வாரபலன்

20.03.2022 - 26.03.2022

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

ஜென்ம ராகு சப்தம கேது கடந்த 1 -1/2 ஆண்டாக உங்கள் ராசிக்கு 2ஆம் இடமான குடும்ப ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த ராகு இப்பொழுது ஜென்ம ராசிக்கு மாறுகிறார். அட்டம ஸ்தானத்தில் சஞ்சரித்த கேது சப்தம ஸ்தானத்திற்க்கு பெயர்கிறார். எனவே சுபச்செலவுகளும் மங்கள நிகழ்ச்சிகளும் இல்லத்தில் நடைபெறும் பொருளாதாரத்தில் பற்றாக்குறை ஏற்பட்டாலும் தேவையான நேரத்தில் உதவிகள் கிடைக்கும். குல தெய்வ வழிபாடு இஷ்ட தெய்வ வழிபாடு சர்ப்ப தோஷ நிவர்த்தி பரிகாரங்களை யோகபலம் பெற்ற நாளில் செய்வதன் மூலம் உங்கள் நம்பிக்கைகள் அனைத்தும் நடைபெறும்.

## ரிஷபம்

ராகு இப்பொழுது சஞ்சரிக்கப்போவது உங்கள் ராசிக்கு 12ஆம் இடமாகும்.இதனால் விரயங்கள் அதிகரிக்கும் என்பது பொதுவான நியதி. பயண ஸ்தானம் என்றும் 12ஆம் இடத்தை சொல்வது வழக்கம் எனவே நீண்ட தூர பயணங்கள் ஒரு சிலருக்கு உத்தியோக மாற்றம், ஊர் மாற்றம், வீடு மாற்றம் ஏற்படலாம். வரும் மாற்றங்கள் நன்மை தருவதாகவே அமையும். சுப விரயங்கள் அதிகரிக்கும். உலுக்கி எடுத்த பிரச்சினைகள் ஒவ்வொன்றாக மாறும். வழக்குகள் நல்ல முடிவிற்க்கு வரும்.மனப்போராட்டம் அகல நண்பர்கள் வழி காட்டுவர். 6ஆம் இடத்தில் கேது இருப்பதால் எதிரிகளால் பிரச்சினைகள் அதிகரிக்க வாய்ப்பு உண்டு. அடிக்கடி உடல்நலச் சீர்கேடுகள் உருவாகும். எனவே சர்ப்ப தோஷ நிவர்த்திக்குரிய பரிகாரங்களை அனுகூல நாளில் செய்வது நல்லது.

## மிதுனம்

வரவை பெருக்கும் ராகு சுபச் செய்தியை வழங்கும் கேது 11ஆம் இடமான லாப ஸ்தானத்திற்கு வரும் ராகு பணத்தேவையை உடனுக்குடன் பூர்த்தி செய்வார். வியாபாரத்தில் இதுவரை ஏற்பட்ட சரிவை ஈடுகட்டுவீர்கள். தொழிலை விரிவுபடுத்தும் முயற்சிக்கு கடனுதவி கிடைக்கும். படித்து முடித்தவருக்கு வேலை வாய்ப்பு உண்டு. பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் பிள்ளைகளின் கல்யாண வாய்ப்பு கைகூடும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். பூர்வீக சொத்துக்களை விற்றுவிட்டு புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் அதிகரிக்கும். இதுவரை எதிர்நீச்சல் போட்ட நீங்கள்,இனி முன்னேற்றம் காண்பீர்கள்.

## கடகம்

10ஆம் இடத்தில் ராகு 4ஆம் இடத்தில் கேது தொழில் ஸ்தானம் எனப்படும் 10ஆம் இடத்தில் ராகு பகவான் வரும்பொழுது செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள். வேகமும் விவேகமும் கலந்து செயல்பட்டு வெற்றி காண்பீர்கள்.புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுகாக வந்து சேரும்.தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஆர்வம் கூடும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைப்பதோடு உத்தியோக உயர்வும் கிடைக்கும். சுக ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பது நல்லதில்லை.ஆரோக்கிய தொல்லைகள் அதிகரிக்கும். திடீர் திடீர் என விரயங்கள் ஏற்படும் திட்டமிட்ட காரியங்களில் மாற்றங்களை செய்ய முன்வருவீர்கள்.தொழிலில் எதிரிகளின் தொல்லை அதிகரித்தாலும் அதை சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு.

## சிம்மம்

9ஆம் இடத்தில் ராகு 3ஆம் இடத்தில் கேது ராகு பகவான் 9ஆம் இடத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். இதனால் உங்கள் பாக்கிய ஸ்தானம் பலப்படுகிறது. தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். தந்தை வழி உறவில் ஆதாயம் உண்டு.தர்ம காரியம் செய்யும் வாய்ப்பு கிடைக்கும். பங்காளிகள் பக்கபலமாக இருப்பர். பதவி வாய்ப்புக்கள் தானாக வந்துசேரும்.மங்கல காரியங்கள் மனையில் நடைபெறும். 3இல் கேது சஞ்சரிப்பதால் உடன்பிறப்புக்கள் உதவி கரமாக இருப்பர். பஞ்சாயத்துக்கள் சாதகமாக அமையும் பகல் இரவாக பாடுபட்டதற்க்கு பலன் கிடைக்கும். உற்சாகத்தோடு பணி புரிந்து உயர்ந்த நிலையை அடைய முயற்ச்சிப்பீர்கள். பொருளாதாரத்தில் இதுவரை இருந்த பற்றாக்குறை அகலும் பிள்ளைகள் வழியில் சுபச் செய்திகள் வந்து சேரும்.

## கன்னி

அட்டமத்தில் ராகு தன ஸ்தானத்தில் கேது ராகு பகவான் வரப்போவது 8ஆம் இடம் என்பதால் ஓரளவு உங்களுக்கு பய உணர்ச்சி வரலாம். இருந்தாலும் மறைந்த ராகுவால் நிறைந்த தன லாபம் கிடைக்கும். என்பது பழமொழி எனவே பொருளாதாரத்தில் பற்றாக்குறை ஏற்படாது. வருமானம் எதிர்பார்த்த இடங்களில் இருந்து வந்து கொண்டேயிருக்கும். ஆனால் விரயங்கள் அதற்கு முன்னதாகவே வந்து காத்திருக்கும்.எதையும் திட்டமிட்டு செய்ய இயலாது. திடீர் மாற்றங்களை சந்திப்பீர்கள். கூட்டாளிகள் மாற்றம், குடியிருக்கும் வீட்டில் மாற்றம் ஏற்படும்.போட்டிக்கு மத்தியில் தொழில் முன்னேற்றம் இருக்கும்.ஆனால் போதுமான வருமானம் இல்லையே என்ற ஏக்கம் உருவாகும்.ராகு கேதுகளுக்குரிய சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை உங்களுக்கு அனுகூலம் தரும் தலங்களை தேர்ந்தெடுத்து யோக பலம் பெற்ற நாளில் செய்தால் அதன் கடுமை குறைந்து நன்மை ஏற்படும்.

## துலாம்

களத்திர ஸ்தான ராகு, ஜென்ம ராசியில் கேது உங்கள் ராசிக்கு 7ஆம் இடமான சப்தம ஸ்தானத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கப்போகிறார்.இதனை களத்திர ஸ்தானம் என்பார்கள். திருமண வயதடைந்த ஆண்களாக இருந்தாலும் பெண்களாக இருந்தாலும்இக் காலத்தில் திருமண பேச்சுக்கள் வரத்தொடங்கும்.' ராகுவைப் போல கொடுப்பானுமில்லை' என்பதால் நிறைய வரன்கள் வந்து அலைமோதும்.இருப்பினும் பொருத்தம் பார்த்து திருமணம் செய்துகொண்டால் தான் வருத்தமில்லாத வாழ்க்கை அமையும். ஜென்மத்தில் கேது சஞ்சரிப்பதால் சிந்தனை ஆற்றல் அதிகரிக்கும்.உறவினர்களிடம் வாக்குவாதம் செய்ய வேண்டாம். சமூகப்பற்று மிக்க உங்களுக்கு பொறுப்புக்களும் பதவிகளும் கிடைக்கலாம்.அடிக்கடி உடல் நல குறைபாடு ஏற்பட்டு உற்சாகத்தை குறைக்கும். கவனம் தேவை. சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை செய்துகொள்வதன் மூலம் சகஜ நிலைக்கு வரலாம்.

## விருச்சிகம்

அதிஷ்டம் தரும் ராகு, சுபவிரயம் தரும் கேது உங்கள் ராசிக்கு 6ஆம் இடத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கப்போகிறார்.தொழிலில் தன லாபம் கிடைத்து நினைத்த தொழில் தொடங்கும் வாய்ப்பு உருவாகலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வு,பதவி உயர்வு போன்றவை வந்துசேரும். வாகனம் வாங்கும் யோகம் உண்டு. கொடுக்கல் வாங்கலை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். உங்கள் ராசிக்கு 12ஆம் இடத்தில் கேது சஞ்சரிப்பதால் பயணங்கள் அதிகரிக்கும். அடுத்தவர்களுக்காக எடுத்த முயற்சியில் ஆதாயம் உண்டு. வீடு கட்டுவது அல்லது கட்டிய வீட்டை பழுது பார்ப்பது போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள்.புதிய திட்டங்களை தீட்டி வெற்றி காணும் நேரம் இது.

## தனுசு

5ஆம் இடத்து ராகு 11ஆம் இடத்து கேது இந்த ராகு கேது பெயர்ச்சியில் ராகு பகவான் உங்கள் ராசிக்கு பூர்வ புண்ணிய ஸ்தானமான 5ஆம் இடத்திற்கு வருகிறார்.இது பிள்ளைகளை பற்றி அறிந்துகொள்ள வைக்கும் இடமாகும். அந்த இடத்திற்கு ராகு வரும்பொழுது பிள்ளைகளால் ஏற்பட்ட தொல்லைகள் அகலும் கற்ற கல்விக்கு ஏற்ற வேலை கிடைக்கவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு நல்ல பொருத்தமான வேலை அமையும். பூர்வீக சொத்து சம்பந்தமான பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும்.11ஆம் இடத்திற்க்கு வரும் கேதுவால் பொருளாதார பற்றாக்குறை அகலும்.மூத்த சகோதரர்களால் முன்னேற்றம் உண்டு. பழுதடைந்த வீட்டை பராமரிக்கும் பணியை துரிதமாக செய்வீர்கள்.புதிய சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு.

## மகரம்

சுக ஸ்தானத்தில் ராகு, தொழில் ஸ்தானத்தில் கேது இந்த ராகு கேது பெயர்ச்சியில் உங்கள் ராசிக்கு 4ஆம் இடத்திற்க்கு வருகிறார் ராகு.இது சுக ஸ்தானம் ஆகும்.அர்தாஷ்டம ராகுவாக வருவதால் சுக ஸ்தானத்தில் பிரச்சினைகள் ஏற்படும்.ஆரோக்கிய தொல்லைகள் அடிக்கடி தலை தூக்கும். கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். தொழில் வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிக்கும்.உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய வேலை கிடைக்கும்.தொழில் ஸ்தானத்தில் கேது சஞ்சரிக்கப்போவதால் பங்குதாரர்கள் விலக நேரிடலாம்.புதிய பங்குதாரர்களை ஆராய்ந்து சேர்த்துக்கொள்வது நல்லது.பொதுவாழ்வில் பொறுப்புக்கள் திடீரென மாற்றப்படலாம். ஆண்மீக நாட்டம் அதிகரிக்கும்.

3ஆம் இடத்தில் ராகு 9ஆம் இடத்தில் கேது

## கும்பம்

இந்த ராகு கேது பெயர்ச்சியில்உங்கள் ராசிக்கு 3ஆம் இடத்திற்கு வருகிறார் ராகு பகவான்.அந்த இடத்திற்கு ராகு வரும்பொழுது வீரத்தோடும் விவேகத்தோடும் செயல்படுவீர்கள்.வெற்றிக்குரிய வாய்ப்புக்கள் வந்துசேரும்.பாக பிரிவினைகள் சுமுகமாக முடியும்.பங்காளி பகை மாறும்.9இல் சஞ்சரிக்கும் கேதுவால்பூர்வீக சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் விலகும்.தந்தைவழி ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் பதவி உயர்வு பற்றிய நல்ல தகவல் வரும்.வீடு வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும். வேற்று மனிதர்களின் ஒத்துழைப்பால்உங்கள் கூட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.குல தெய்வ வழிபாடும் இஷ்ட தெய்வ வழிபாடும் உங்கள் குடும்ப முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

குடும்ப ஸ்தான ராகு செலவை கூட்டும் கேது

## மீனம்

**இந்த ராகு** கேது பெயர்ச்சியில் உங்கள் ராசிக்கு 2ஆம் இடத்திற்கு ராகு பகவான் வரப்போகிறார்.வாக்கு தனம் குடும்பம் ஆகியவற்றை குறிக்கும் இடம் அது.எனவே ராகுவால் பணப்புழக்கம் நன்றாக இருக்கும்.இல்லம் தேடி நல்ல தகவல்கள் வரலாம்.கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு செய்வீர்கள் மாற்றுக் கருதுடையோர் மனம் மாறுவர்.இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான வாய்ப்புக்கள் உண்டு.8இல் கேது சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல.குடும்பச்சுமை கூடும்.அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது.உடல்நலக் குறைபாடு ஏற்படும்.வீண்விரயங்களில் இருந்து விடுபட சுபவிரயங்களை மேற்கொள்ளலாம்.தைரியமும் தன்னம்பிக்கையும் தக்க சமத்தில் கைகொடுக்கும்.

# நந்தவனம் பவுண்டேசன் வழங்கிய சாதனைப் பெண்கள் விருது விழாவின் சில பதிவுகள்...

தமிழ்நாடு திருச்சியை தலைமையிடமாகக் கொண்டு இயங்கிவரும் நந்தவனம் பவுண்டேசன் ஆண்டுதோறும் உலக மகளிர் தினத்தை முன்னிட்டு பல்துறைகளில் சாதித்த பெண்களுக்கு சாதனைப் பெண் விருது வழங்கி சிறப்பித்து வருகிறது

2022 ஆம் ஆண்டுக்கான சாதனைப் பெண்கள் விருது வழங்கும் விழா 13/03/2022 அன்று சென்னை அரும்பாக்கம் விஜய் பார்க்கில் சிறப்பாக நடைபெற்றது

நந்தவனம் பவுண்டேசன் தலைவர் நந்தவனம் சந்திரசேகரன் வரவேற்புரை வழங்க பொருளாளர் பா.தென்றலின் நோக்கவுரையுடன் தொடங்கிய நிகழ்வில்கனடா உதயன் வார இதழின் பிரதம ஆசியர் ஆர்.என்.லோகேந்திரலிங்கம், வளரும் அறிவியல் இதழ் ஆசிரியர் இ.கே, தி.சிவகுமார், இலங்கை இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர், காவல்துறை உதவி ஆய்வாளர் எஸ்.ராஜா, ஸ்ரீவெங்கடேஸ்வரா ஆசிரியர் பயிற்சிப் பள்ளி தாளாளர் திருமதி விஜயா, ஊடகவியளாலர் விக்ரமசிங்க, கனடா ரூபம் வானொலி ராம் சங்கர் இலக்கை தினகரன் நாளிதழ் பிரதம ஆசிரியர் செந்தில்வேலவர் ஆகியோ சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு விருது பெற்ற பெண்களுக்கு சாதனைப் பெண் விருது வழங்கி சிறப்பித்தனர்

கோமதி சங்கரன் (மலேசியா), தீஷ்மா கருப்பசாமி (கோவை), கீதா குணாலன் (நீலகிரி),

தொகுப்பு
**எச்.விக்கிரமசிங்க ...**

சுபத்திரா இராஜேந்திரன் (சென்னை), நாச்சியார் (கிழக்கு ஆபிரிக்கா), தமிழணங்கு (சென்னை), சூரியா யாலின் (இலங்கை), எஸ். மோகனா (சென்னை), மரு.நந்தினி (புதுக் கோட்டை), கௌசல்யா(ராணி பேட்டை), ஜெயலட்சுமி (புதுக் கோட்டை), சுஹாசினி பரமானந்தன் (இலங்கை), வெற்றிச் செல்வி சந்திரகலா (இலங்கை), ஆர். சிரிலேகா (சேலம்), பி.கவிதா(சேலம்), மரு. பத்மினி ரகுநாதன் (பெங்களூர்), பத்மலோசனி லோகேந்திரலிங்கம் (கனடா), வாசுகி ராஜா (ஹைதராபாத்), விஜி வெங்கட் (சென்னை), ஜமுனா ரவி (புதுச்சேரி), பரிமளா வீரசேகரன் (திருவள்ளூர்) இவள் பாரதி (சென்னை), சுகன்யா கந்தசாமி (சென்னை), ப.நித்யா (சென்னை), சுஷாந்தி சாந்தகுமார்(இலண்டன்) ஆகி யோருக்கு சாதனைப் பெண் விருது வழங்கப்பட்டது. இவ்விழாவில் இலங்கையைச் சேர்ந்த மூன்று பெண்களுக்கு விருது வழங்கிச் சிறப்பித்தது இலங்கைக்கு கிடைத்தப் பெருமையாகும் கடந்த 25 ஆண்டுகளாக இனிய நந்தவனம் சஞ்சிகையை வெளியிட்டு சர்தேச அளவில் உலகத் தமிழர்களிடம் நன்மதிப்பைப் பெற்றுள்ள நந்தவனம் சந்திரசேகரனின் இச் சமுதாயப்பணியும் போற்றக்கூடியது மேலும் விழாவில் செல்வி ஹரிப்பிரியவின் நடனமும் செல்வி சாய் காயத்திரியின் திரையிசைப்பாடலும் நிகழ்வை அழகுபடுத்தியது கவிஞர் சொர்ணபாரதி நிகழ்வை அழகாக தொகுத்து வழங்க நந்தவனம் பவுண்டேசன் செயலாளர் எம். சாதிக்பாட்சா அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.






















என். சரவணன்

# கோட்டை டச்சு ஆஸ்பத்திரி

கொழும்பில் எஞ்சியிருக்கும் பழமையான கட்டிடங்களில் "பழைய டச்சு ஹொஸ்பிடல்" ("Old Dutch Hospital") குறிப்பிடத்தக்க ஒன்று. கொழும்பு கோட்டையின் மையப்பகுதியில் Port Hospital Laneஇல் இருக்கிறது என்றால் சிலவேளை நீங்கள் குழப்பமடையலாம். ஆனால் கோட்டை இரட்டைக் கோபுரக் கட்டிடத்துக்கு எதிரில் என்று கூறினால், அல்லது செலிங்கோ கட்டிடத்துக்கு பின்னால் என்றோ கூறினால் பிடித்துவிடுவீர்கள். கொழும்பில் இறுதியாக எஞ்சியுள்ள பழைய டச்சு கட்டிடம் இது தான். பெரிய, அகலமான சுவர்களையும், பெரிய ஜன்னல்களையும், விரிந்த வராந்தாக்களையும் கொண்ட டச்சு கட்டடக் கலையுடன் கூடிய அமைப்பு.


1656ஆம் ஆண்டு போர்த்துக்கேயருடன் சண்டையிட்டு கொழும்பைக் கைப்பற்றினார்கள் ஒல்லாந்தர்கள். ஏழு மாதங்கள் தொடர்ச்சியான குண்டுவீச்சால் கொழும்பு கோட்டைப் பகுதியில் இருந்த பல கட்டிடங்கள் சிதைந்தன. ஒல்லாந்தர்கள் கொழும்பைக் கைப்பற்றிய பின்னர் அவற்றை முழுவதுமாக இடித்துவிட்டு புதிய கட்டிடங்களை அமைத்தார்கள். போர்த்துக்கேயரின் ஒரு ஆஸ்பத்திரியும் இங்கே இருந்தது. ஆனால் டச்சு ஆஸ்பத்திரி அமைந்திருக்கும் இதே இடத்தில் அது இருந்திருக்கவில்லை. ஒல்லாந்தர்கள் கைப்பற்றியதும் இந்த ஆஸ்பத்திரி கட்டப்பட்டிருக்க வேண்டும்.

இது கட்டப்பட்ட ஆண்டை உறுதியாகக் கூற முடியாது போனாலும் நிச்சயமாக அது 1677 ஐ விடப் பழமையானது என்பதை மட்டும் சொல்லாம். ஏனெனில் 1676 –1682 காலப்பகுதியில் இராணுவத்தில் பணியாற்றிய கிறிஸ்டோபர் ஸ்வீட்சர் (Christopher Schweitzer) என்ற ஜெர்மன் ராணுவ வீரர் தனது பதிவுகளில் மருத்துவமனையைப் பற்றிய பல குறிப்புகளை எழுதியுள்ளார்.அங்கே பல அடிமைகளும் பணிபுரிந்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். அவரின் அப்பதிவுகளைப் பற்றி 1803 ஆம் ஆண்டு எழுதப்பட்ட An account ofthe island of Ceylon என்கிற நூலில் விபரங்கள் கூறப்பட்டுள்ளன. அந்த நூலை எழுதியவர் 1796 இல் டச்சு வசம் இருந்து ஆங்கிலேயர்கள் கொழும்பைக் கைப்பற்றிய போது அதன் சாட்சியமாக இருந்தவரான கெப்டன் ரொபர்ட் பேர்சிவல். கடும் காயங்களுக்கு உள்ளான பல வீரர்கள் சிகிச்சைக்கு இங்கு அனுப்பப்பட்டதாக அதில் குறிப்பிட்டுள்ளார்.

அன்றைய கொழும்பு கோட்டை சுவருக்குள் இருந்த கட்டிடங்களில் மிகப் பெரிய விஸ்தீரணத்தில் இருந்தது இந்த டச்சு ஆஸ்பத்திரி தான். அரை ஹெக்டயார் பரப்பில் அது இருந்தது.

1732 இல் புரோஹியர் உருவாக்கிய வரைபடத்தில் மருத்துவமனை தெளிவாகக் குறிக்கப்பட்டது. இதைவிட முக்கியமாக அன்று டச்சு அரசாங்கத்தில் பணியாற்றிய டென்மார்க்கைச் சேர்ந்த யோஹன்னஸ் ரேச் (Johannes Rach) என்கிற ஓவியர் இலங்கையில் வாழ்ந்த காலத்தில் 1771இல் வரைந்த டச்சு ஆஸ்பத்திரியின் ஓவியம் அதன் அமைப்பை அழகாக விளக்கியிருக்கிறது.







A. தலைமை மருத்துவரின் வதிவிடம், B. மருந்தகம், C. மருந்து தயாரிப்பாளரின் வதிவிடம், D. ஆஸ்பத்திரி, E. சமையலறை, F. கால்நடைத் தொழுவம், G. சுற்றுச் சுவர்

அன்று கோட்டைக்குள் வாழ்ந்து வந்த ஒல்லாந்தர்களுக்காகவும், டச்சு கிழக்கிந்தியக் கம்பனியின் (VOC) அதிகாரிகளுக்காகவும், ஊழியர்களுக்காகவும் கட்டப்பட்டது. இந்த ஆஸ்பத்திரி. கொழும்பு துறைமுகம் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கிய காலமும் கூட. துறைமுகத்துக்கு அண்மையில் கட்டப்பட்டதன் நோக்கம்; அப்போது கொழும்புக்கு வந்து போகும் கப்பல்களில் நோய்வாய் பட்டிருந்தவர்களுக்கும் இங்கு வைத்து உயர்தர சிகிச்சையளிக்கப்பட்டு வந்திருக்கிறது.

ரொபர்ட் நொக்ஸ் இருபது ஆண்டுகளாக கண்டியில் சிறைப்பட்டுக் கிடந்தபோது 1679இல்அங்கிருந்து தப்பிவந்து டச்சுக் காரர்களிடம் வந்து சேர்ந்தார். அவரோடு சேர்ந்து தப்பி வந்த சிலர் நோய்வாய்ப்பட்டிருந்த போது அவர்களுக்கு இங்கே சிகிச்சை அளிக்கப்பட்டதை தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். கண்டியை ஆண்ட மன்னன் வீர நரேந்திரசிங்கனுக்கு (இலங்கையின் இறுதி சிங்கள அரசன்) காலில் ஏற்பட்ட காயத்துக்கு சிகிச்சை செய்வதற்காக 1739இல் டொக்டர் டேனியல்ஸ் (Dr. Danielsz) கண்டிக்கு இந்த ஆஸ்பத்திரியில் அனுப்பப்பட்டிருந்தார் என்பதை அவரது பதிவொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.




1732 ஆம் ஆண்டு போர்த்துகேயர் கால வரைபடம். இதில் E அடையாளம் ஆஸ்பத்திரியைக் குறிக்கிறது.

சுமார் 300 நோயாளர்களை வைத்து பராமரிக்கக் கூடிய அளவுக்கு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னரே இயங்கியிருக்கிறது. டச்சு மருத்துவமனையினை முதலில் நேரில் கண்ட சாட்சி விபரமாக டச்சு அரசாங்கத்தில் 1734_1737 காலப்பகுதியில் பணியாற்றிய ஜெர்மனைச் சேர்ந்த ஹெய்ட் (Johan Wolfgang Heydt)என்பவரால் போற்றிப் பதிவு செய்யப்பட்ட குறிப்புகளைக் கூற முடியும். இலங்கையில் மட்டுமல்ல, ஒல்லாந்தர்களின் காலனி நாடுகளிலேயே நவீன வசதிகளைக் கொண்டிருந்த சிறந்த ஆஸ்பத்திரியாக அன்று இந்த ஆஸ்பத்திரி இருந்ததாக அவர் குறிப்பிடுகிறார். மேலும் சிறந்த பரிசோதனைக் கூடமும், அதிலேயே உயர் ரக மருந்துகளை உருவாக்கக் கூடிய வசதிகளையும் கொண்டிருந்தததாகவும் அவரின் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். ஒரு நோயாளிக்கு இரு தலையணைகளையும், இரு நேர உணவும் வழங்கப்பபட்டதாகவும், இளம் ஆண் பணியாளரால் நான்கு/ஐந்தடி நீளமுள்ள பாத்திரத்தில் அந்தந்த நோயாளியின் தேவைக்கிணங்க சிறு சிறு பாத்திரங்களில் சோறு, கறிகள் மிளகாய், உப்பு, வினாகிரி என்பன வழங்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். ஒல்லாந்திலிருந்து பல அறுவை சிகிச்சை நிபுணர்கள் இங்கே பணியாற்ற வரவழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அதுபோல அறுவை சிகிச்சை செய்யக்கூடிய நிபுணத்துவம் இல்லாத மருத்துவம் மட்டுமே தெரிந்தவர்களும் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். உதாரணத்துக்கு ரைமர் (C.F. Reimer). அவர் ஒரு இராணுவ வீரர். அவரிடம் இருந்த மருத்துவ அறிவின் காரணமாக மூன்றாம் நிலை அறுவை சிகிச்சை வைத்தியராக அனுப்பப்பட்டார். அவர் ஒரு ஓவியரும் கூட. கண்டி மன்னன் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனுக்கும் டச்சு ஆளுநர் பிளாக்குக்கும் (Iman Willem Falck) இடையில் 1766 இல் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்த நிகழ்வை பிரசித்தி பெற்ற ஓவியமாக வரைந்தவர் பிளாக்.

இந்த ஆஸ்பத்திரியைப் பற்றிய பல குறிப்புகளை எழுதியவர்களில் இன்னொரு முக்கியமானவர்; இலங்கை தாவரவியலின் தந்தை என்று அழைக்கப்படும் போல் ஹேர்மன் (Paul Hermann). அவர் இந்த ஆஸ்பத்திரியில் 1672 –1679 காலப்பகுதியில் பணியாற்றியவர். முன்னாள் தொல்லியல் திணைக்கள ஆணையாளராக இருந்த கே.டி.பரணவிதானவும் ஒரு இந்த ஆஸ்பத்திரியைப் பற்றிய ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையை எழுதியிருக்கிறார். ஆஸ்பத்திரிக்கு தேவையான முக்கிய மருந்துகள் ஒல்லாந்து தலைநகர் ஆம்ஸ்டர்டாமில் இருந்து வருவிக்கப்பட்டதாகவும், உள்ளூர் ஆயுர்வேத நாட்டு மருந்துகளும் அங்கே பயன்படுத்தப்பட்டன என்றும் அக்கட்டுரையில் விளக்குகிறார். 1771 இல் வரையப்பட்ட இரண்டு நீர்வர்ண ஓவியங்களின் படி, மருத்துவமனை கட்டிடம் மூன்று தனித்துவமான பிரிவுகளைக் கொண்டிருந்தது. முதலாவது முகப்பு கட்டிடம் இரண்டு மாடிகளைக் கொண்டதாக அன்றே அமைக்கப்பட்டிருந்ததும் சிறப்பான அம்சம். இதன் முக்கியப் பகுதியான மையப் பகுதி, மருத்துவமனை வார்டுகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. மற்றொன்று மருத்துவமனை, ஆய்வுகூடம், அறுவை சிகிச்சை கூடம் ஆஸ்பத்திரி நிர்வாகியின் இருப்பிடம் என்பவற்றுக்காகவும்,மூன்றாவது பகுதி சமையலறைக்காகவும் ஒதுக்கப்பட்டிருந்தது. இப்போது அந்த அமைப்பைக் காண முடியாது. ஆங்கிலேயர் காலத்தில் இதில் மாற்றங்கள் செய்யப்பட்டன.



1796 இல் பெர்சிவல் எழுதிய குறிப்புகளின் படி, இந்த மருத்துவமனையின் அறைகள் விசாலமானவை, நன்கு காற்றோட்டமானவை. இதனால் மற்ற நோயாளிகளுக்கு நோய் பரவவில்லை.

டச்சு காலத்தில் ஆபிரிக்காவிலிருந்து நீக்ரோ அடிமைகள் கொண்டுவரப்பட்டிருந்தார்கள். அவர்களுக்கு பரவியிருந்த தொற்று நோய்களை இதே ஆஸ்பத்திரியில் தமது எஜமானர்களுக்கு அளிக்கப்பட அதே மருத்துவ வசதிகள் இவர்களுக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. 1707 ஆளுனர் யுவான் சிமோன் (Joan Simons) பின்னர் இவர்களுக்கென்று தனி ஆஸ்பத்திரியை கட்டினார்.

தற்போதைய கட்டிடம் இரண்டு முற்றங்களை மத்தியில் கொண்டுள்ளது. தற்போது சுமார் 40 x 30 அடி பரப்பளவில் புல் நடப்பட்டுள்ளது. சுமார் அரை மீற்றர் தடிமன் கொண்ட பெரிய சுவர்கள் கபுக் கல் மற்றும் சுண்ணாம்பு சாந்து ஆகியவற்றைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. மருத்துவமனையின் இரண்டு கூடங்களில் ஒன்று ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டது. ஆஸ்பத்திரியின் பிரதான வாயில் இருந்த பகுதி ஆஸ்பத்திரி வீதி (Hospital street) என்று ஆங்கிலேயர் காலத்தில் பெயரிடப்பட்டது. இன்று இலங்கை வங்கி, உலக வர்த்தக மையம் அமைந்திருக்கிற Bank of Ceylon Mawatha தான் அந்த வீதி.

ஆஸ்பத்திரி வீதியோடு சேர்ந்தாற்போல படகுப் போக்குவரத்துக்காக ஒரு கால்வாயும் அன்று இருந்திருக்கிறது. ஆங்கிலேயர் கைப்பற்றியவுடன் இக்கால்வாய்களை நிரப்பி வீதிகளையும், கட்டிடங்களையும் அமைத்தார்கள். கொழும்பில் போக்குவரத்துக்காக கால்வாய்கள் பயன்படுத்தப்பட்ட காலம் ஒன்று இருந்தது. அதன் எச்சங்களை இன்றும் காணலாம்.

ஆங்கிலேயர் காலத்தில் இக்கட்டிடம் சற்று விரிவாக்கப்பட்டது. மருத்துவமனையின் வடக்குப் பகுதி மட்டும் இரண்டு தளங்களாக மாற்றப்பட்டுள்ளது. பெரிய அளவிலான திடமான மற்றும் வலுவான நீளமான மரக்கட்டைகள் கூரையின் உறுதிக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவை இன்னும் நல்ல நிலையில் இருப்பதைக் காணலாம்.

இலங்கையின் சிவில் யுத்த காலத்தில் இந்தக் கட்டிடம் நான்காம் மாடியில் தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதிகளையும், சந்தேகநபர்களையும் வார இறுதியில் சந்திக்க வருபவர்களை சந்திக்க வைக்கின்ற பொலிஸ் நிலையப் பிரிவாகவும் தொழிற்பட்டது. 1980 களில் இருந்து அவ்வாறு கோட்டை பொலிசின் நடவடிக்கைகளுக்காக இந்தக் கட்டிடம் பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆயுதக் களஞ்சியமாகவும். சில சிறைக்கூடங்களையும் உள்ளே கட்டினார்கள். கட்டிடத்தின் கட்டடக்கலை மற்றும் தொல்பொருள் மதிப்பு இன்றும் முக்கியமானது. 90 களின் ஆரம்பத்தில் சந்திரசேகரன், காதர், தர்மலிங்கம் போன்ற மலையகத் தலைவர்கள் நான்காம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது பல தடவைகள் அவர்களைச் சந்திக்க வார இறுதியில் இங்கு சென்று வந்திருக்கிறேன்.

1996இல் மத்திய வங்கி குண்டுவெடிப்பின் போது இக் கட்டிடமும் சேதமுற்றது. யுத்தம் முடித்தபின்னர் தற்போதைய ஜனாதிபதியும் அப்போது நகர அபிவிருத்திக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்த கோட்டாபய ராஜபக்ச 2011 டிசம்பரில்; இதனை உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் உயர்தர உணவு விடுதிகளையும், உயர் ரக பொருட்களை விற்பனை செய்யும் கடைகளையும் கொண்ட கட்டிடத் தொகுதியாக திறந்து வைத்தார். அரை ஹெக்டயர் பரப்பில் இன்று அது இருக்கிறது.

# 'கறிவேப்பிலைகள்' தொகுப்பின் மூலம் தன்னை அடையாளப்படுத்திய குறிஞ்சித் தங்கம்

ஈழத்து தமிழ்ச் சிறுகதை விருட்சத்தில் ஒரு சிறு சல்லி வேராக இறங்கிய மலையக இலக்கியம் இன்று பலம் வாய்ந்த ஒரு பக்க வேராக ஓடிக் கொண்டிருக்கிறது, என்பதை உணர்த்தும் வண்ணம் வெளிவந்திருப்பது தான், "குறிஞ்சித் தங்கம்" எழுதிய "கறிவேப்பிலைகள் " என்னும் சிறுகதைத் தொகுதி. எங்கோ பிறந்து, எங்கெல்லாமோ முட்டி மோதி உழன்று, இன்று புதுக்கோட்டையில் வந்து வாழ்ந்து கொண்டிருக்கும், இந்த அல்லோல கல்லோல வாழ்க்கையிலும், என்றோ எழுதி, என்றோ பிரசுரமான, ஒரு பதினொரு சிறுகதைகளை , ஐம்பது வருடங்களுக்கு மேலாக அடி மடியில் கட்டி வைத்திருந்து, இன்று அவற்றை நம் பார்வைக்கு ஓர் அழகான ஒரு சிறுகதைத் தொகுதியாகத் தந்திருக்கின்றார் என்றால் அவர் எழுத்தையும், சிறுகதை இலக்கியத்தையும், அந்த மண் சார்ந்த வாழ்க்கையையும், அந்த மக்களையும் ,எவ்வளவு நேசித்திருக்கிறார், என்பதை நன்கு உணர்ந்து கொள்ள முடிகிறது.

கதாசிரியர் மாத்தளை (கொள்ளுமண்டி) என்னும் மலையகத் தேயிலைத் தோட்டத்தில் வாழ்ந்தவர். மாத்தளை என்றதும் "கலை ஒளி" என்னும் சிற்றேடும் அதனை வெளியிட்ட முத்தையாபிள்ளையும் தான் நினைவிற்குள் ஓடி வருகின்றார்கள்.

கொழும்பில் இருந்து கொண்டே குறிஞ்சித்தங்கத்தை தட்டி தட்டி எழுப்பி இந்தச் சிறுகதைக் தொகுதியுடன் நம்முன்னே இழுத்து வந்து நிறுத்தியிருக்கும் சூத்திரதாரி, மூத்த பத்திரிகையாளரான விக்ரமசிங்க தான். மலையகப் படைப்பாளிகளை , அவர்கள் உலகில் எந்த மூலையில் இருந்தாலும் தேடிக் கண்டு பிடித்து இழுத்து வந்து இலக்கிய வெளியில் அறிமுகம் செய்வதில் அவர் வல்லவர் ."73 ல் எழுதிய சிறுகதை ஒன்று என்னிடம் இல்லை" என்று சொன்னால் போதும் கொழும்பு அரசு பத்திரிகைக் காப்பகத்திற்குள் நுழைந்து 50 வருடங்களுக்கு முந்தைய அதை தேடிக் கண்டு பிடித்து எடுத்து வந்து அதன் ஒளி நகலை ஒரு மாதத்திற்குள் ளாக அனுப்பி வைக்கும் வியக்கத்தக்க ஆற்றல் மிக்கவர்.

அந்த அளவிற்கு அவர் மலையகப் படைப்புக்களையும் அதன் படைப்பாளர்களை நேசிக்கிறவர். சுமார் 50 வருடத்துக்கு மேலாக. மட்கிக் கிடந்த "கறிவேப்பிலை "களின் வாசத்தை தோண்டித் துருவி எடுத்திருக்கிறார். கீழடி அகழ்வாய்வாளரைப் போல.

இலங்கை அரசு தனது உயரிய விருதுகள் அனைத்தையும் வழங்கி கௌரவப்படுத்தி இருக்கும் மலையக இலக்கியத்தின் தந்தை எனப் போற்றப்படும் தெளிவத்தை ஜோசப் பின் அணிந்துரை இந்தத் தொகுதிக்கு கிடைத்திருக்கும் ஒரு கலங்கரை விளக்கமாக ஒளி வீசிக்கொண்டிருக்கிறது.

11 சிறுகதைகள் இந்தத் தொகுதியைக் கனம் கொள்ளச் செய்கின்றன. போகிற போக்கில் படித்து வீசி விட்டு அப்படியே மறந்து போகக் கூடியவைகள் அல்ல அவை.

வறுமையாலும் பசி பட்டினியாலும் வாழ்வை எதிர்கொள்ள முடியாத மலையகத் தொழிலாளர்கள் சின்னஞ் சிறுசுகளை பணக்காரர் வீடுகளுக்கு வேலைகளுக்கு அனுப்பும் கொடுமை முதல் சிறுகதையிலேயே நம்மை மிரள வைக்கிறது.

அரசியல் பக்க பலம் கொண்ட ஒரு பணக்காரர் வீட்டுக்குப் பணிப் பெண்ணாகச் செல்லும் ஹிசாலினி என்னும் சிறுமி பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகி அந்தப் பணக்காரரால் படுகொலை செய்யப்பட்ட நிகழ்ச்சி இலங்கைத்தீவையே உலுக்கிவிடுகிறது. உலகின் பல பாகங்களிலும் அது எதிரொலிக்கிறது.

சாதி, இன, மதம் கடந்து அனைவரும் ஓரணியாகத் திரண்டு எதிர்த்த பயங்கரமான படுகொலை அது. சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் இது போன்றதொரு

குடந்தை பரிபூரணன் ...

படுகொலை நிகழ்வு சமுதாயத்தில் எவ்வளவு பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கும் என்பதை சொல்ல வேண்டியதில்லை. இது போன்றதொரு நிகழ்வு மலையகத் தொழிலாளர் வாழ்க்கையில் நிகழக்கூடாது என்று கதாசிரியர் தமது "மனம் விழித்தபோது " என்ற சிறுகதை வாயிலாக சொல்லியிருக்கிறார். அதாவது பெற்றோர்கள் மனம் மாறி தமது குழந்தைகளை வீட்டுப் பணிகளுக்காக அனுப்பக் கூடாது என்பதே அக்கதை சொல்லும் தீர்வு. ஒரு தலைக்காதலால் உருகும் ஓர் இளைஞனின் மன ஓட்டத்தை "நீர்க்கோலம்" என்னும் சிறுகதை அழகியல் காட்சியாகப் படம் பிடித்துக் காட்டுகிறார் ஆசிரியர் .

"நீர்க்கோலம் " என்ற சிறுகதை மலையகத் தொழிலாளகள் இன்று நிர்வாக மட்டத்தில் மட்டும் அல்லாமல் தனிப்பட்ட வாழ்க்கையிலும் மிகவும் வறுமையான வாழ்க்கை தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அழுத்தமாகக் கூறிச் செல்கிறது.

"நிரந்தர அமைதியைத் தேடி" என்ற சிறுகதை மதுவின் தீமையால் தான் இவை எல்லாம் நடைபெறுகிறது என்பதாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

இரண்டு மனங்களின் சரியான புரிதலின்றி நடைபெறும் திருமணங்கள் தோற்றுத் தான் போகும் என்பதை "வாழ்வின் விளிம்பிலே அவள்" என்னும் சிறுகதை நமக்கு படம் பிடித்துக் காட்டுகிறது.




இலக்கிய உலகில் அதிகமாக அறியப்படாமலிருந்த குறிஞ்சித்தங்கம் இந்தத் தொகுப்பின் மூலம் ஓர் எழுத்தாளர் என்று தன்னை அடையாளப்படுத்திக் கொண்டுள்ளார். மலையக இலக்கியத்தில் தன்னை அதிக மாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் பேராசிரியர் சோ.சந்திரசேகரன் வாழ்த்துரை வழங்கியிருக்கிறார். அச்சுப் பிழைகள் ஏதுமில்லாமல் அழகிய வண்ணத்தில் நூலுருவாக்கித் தந்திருக்கும் பழம்பெரும் பதிப்பகமான "மணிவாசகர் பதிப்பக" த்தாரும் பாராட்டுக்கு உரியவர்களே.

## பலாங்கொட பெருந்தோட்டக் கம்பனி

### கழிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்தல்

எமது நிறுவனத்திற்கு சொந்தமான தோட்டங்களில் பாவிக்கப்பட்டு அகற்றப்பட்ட கழிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**- Used Tyre - Cast Iron - Scrap Iron - Empty plastic Cans etc.**

கீழ்க்காணும் பெருந்தோட்டங்களில் குறித்த தோட்ட அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு பொருட்களை பரீட்சிக்கலாம்.

யூரி தோட்டம் - பஸ்ஸர - 055-5633023/ 077-9555595
ரை தோட்டம் - பலாங்கொட - 045-5622597/ 076-8372389
மஹவலவத்த - இரத்தினபுரி - 045-5622559/ 077-7539228

குறித்த உருப்படிக்காக வேறுவேறாக விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

தோட்டத்தின் பெயரைக் குறிப்பிட்டு 2022 ஏப்ரல் 30 அல்லது அத்தினத்திற்கு முன் கீழ்க்காணும் முகவரியில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கழிக்கப்பட்ட பொருட்களுக்கான விலைமனுக்கள்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

கவனிக்கவும் :- விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை கேள்விச் சபைக்கு உரியது.

**பிரதம நிறைவேற்று அதிகாரி,**
**பலாங்கொட பிளான்டேஷன்ஸ் பிஎல்சீ**
**த.பெ. எண் - 06, பார்ம்காடின், இரத்தினபுரி.**




## பல்கலைக்கழக கல்லூரி

### டிப்ளோமா விருது வழங்கும் விழா

2022 ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி புதன்கிழமை பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு பிரதான மண்டபத்தில் (BMICH) நடைபெற உள்ளது.

தகுதியுடைய மாணவர்களுக்கான டிப்ளோமா பட்டமளிப்பு விழா பற்றிய தகவல்கள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு,

அனுராதபுரம் பல்கலைக்கழக கல்லூரி
உதவி பதிவாளர்
025 222 2010

புடன்கல பல்கலைக்கழக கல்லூரி
உதவி பதிவாளர்
036 223 5570

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கல்லூரி
உதவி பதிவாளர்
021 221 7791

குளியாபிட்டிய பல்கலைக்கழக கல்லூரி
உதவி பதிவாளர்
037 205 9570

மாத்தறை பல்கலைக்கழக கல்லூரி
உதவி பதிவாளர்
041 222 2962

இரத்மலானை பல்கலைக்கழக கல்லூரி
உதவி பதிவாளர்
011 262 6297

ஔடத உற்பத்திகள் வழங்குநர்கள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு
இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்

SPMC

## விலைமனுக்களுக்கான அழைப்பு - IFB

**தேசிய போட்டி கேள்விகள் - NCB**

### விலைமனு மூடப்படும் திகதி மற்றும் நேரத்தை நீடிப்பதற்கான அறிவித்தல்

**SPMC லோட்டஸ் பார்மா திட்டத்தின் சிவில் வேலைகள்**

| விலைமனு விபரம் | நிர்மாண தலைப்பு | மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணம் | விலைமனுப் பிணை பெறுமதி மற்றும் செல்லுபடியாதல் | நிர்மாண காலம் | தேவைப்படும் குறைந்தபட்ச CIDA பதிவு தரம் |
|---|---|---|---|---|---|
| SPMC/ LP/003/2022 | SPMC லோட்டஸ் பார்மா திட்டத்தின் சிவில் வேலைகள் | ரூபா 20,000.00 | ரூபா 150,000.00 மூடப்படும் திகதியிலிருந்து 120 நாட்கள் வரை | 180 நாட்கள் | தரம் C3 அல்லது அதற்கு மேல் |

2022 பெப்ரவரி 27ம் திகதி தினகரன் 22ஆம் பக்கத்திலும் 2020 மார்ச் 06 வாரமஞ்சரி 15ஆம் பக்கத்திலும் பிரசுரமான மேற்படி தலைப்பிலான விளம்பரம் சம்பந்தமானது. 2022 மார்ச் 21ம் திகதி பி.ப. 3.00 மணிக்கு தீர்மானிக்கப்பட்டிருந்த மேற்படி கேள்வியின் விலைமனு மூடப்படல் 2022 மார்ச் 25ம் திகதி மு.ப. 10.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் இத்தால் அறிவிக்க விரும்புகின்றது.

முன்னைய விளம்பரத்தின் ஏனைய விதிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றி காணப்படும்.

திருத்தப்பட்ட விளம்பரத்தை www.spmclanka.lk இற்கு பிரவேசித்து பெற்றுக் ெ காள்ளலாம்.

இப்பெறுகையின் விபரங்களை எமது இணைய தளத்திலிருந்து பார்வையிட முடியும். (www.spmclanka.com)

**தலைவர் - லோட்டஸ் பார்மா திட்டத்தின் பெறுகைக் குழு,**
**அரசாங்க மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்,**
**இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை,**
**கந்தவல எஸ்டேட், இரத்மலானை.**

**தொ.பே. 2635353/ 2637574/2623298**
**பெக்ஸ்: 2634771/ 2626621**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## பாதுகாப்பு அமைச்சு

### Supply, Applicator Training and Application Supervision of Wall Granular based Exterior Coating System for Blocks 06,07 and 08 of Defence Headquarters Complex at Akuregoda

**Contract No.: DHQC/GRAN COAT 678/2022**

1. கீழே விபரிக்கப்பட்டவாறும் பெசேவ நீங்கலாக 276 மில்லியன் இலங்கை ரூபா ஆகுசெலவில் மதிப்பிடப்பட்டதுமானதும் **Supply, Applicator Training and Application Supervision of Wall Granular based Exterior Coating System for Blocks 06,07 and 08** இற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பாதுகாப்பு அமைச்சின் சார்பாக அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.
   ***The works consist of Supply, Applicator Training and Application Supervision of Wall Granular based Exterior Coating System for Blocks 06,07 and 08 of Defence Headquarters Complex at Akuregoda.*** இவ்வேலைகளின் முழுமையான பூர்த்தி செய்தலுக்கான காலப்பகுதியானது 168 நாட்களாகும்.
2. விலைமனுக் கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்த வழங்கலின் தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியில் சேர்க்கப்படாதவராகவும் கடந்த 5 வருடங்களில் இலங்கையில் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள வியாபார பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும். விலைமனுதாரரின் அனுபவம் மற்றும் தட பதிவு ஆகியவற்றிற்கான ஆவணசான்றானது விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இந்த ஒப்பந்தத்தை வளமுள்ள வழங்களாவிற்கான தகைமையை பெறுவதற்காக விலைமனுதாரர் ஒன்றில் உற்பத்தியாளராக அல்லது முன்வைக்கப்படும் கிரான்யுலார் அடிப்படையிலான வெளியக அமைப்புபூசும் முறைமைக்கான உற்பத்தியாளரின் உள்ளூர் அதிகாரம் பெற்றமுகவராகவிருத்தல் வேண்டும்.
   கிரான்யுலார் பூச்சுமுறைமையின் உற்பத்தியாளரானவர் புகழ்வாய்ந்ததொரு நிறுவனமாகவும் பொருத்தமான கைத்தொழில் தரமாக்கப்பட்ட உற்பத்தி வசதியைக் கொண்டதாகவும் தொழில் வழங்குநரின் தேவைப்பாட்டிற்கு நிகராக பூச்சுக்களை விநியோகம் செய்வதற்கான ஆற்றலையும் கொண்டிருத்தல் வேண்டும்.
   கிரான்யுளார் பூச்சு முறைமையின் உற்பத்தியாளரானவர் உள்ளக உற்பத்தி சோதனை செய்வதற்கான வசதி, **ISO 9001** மற்றும் **14001** பெயிண்டுகள், ப்ரைமர்கள், நீர்புகாப்பு இரசாயனங்கள் மற்றும் பசைகள் ஆகியவற்றின் மேம்படுத்தல் மற்றும் உற்பத்திக்கான சான்றிதழ்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகைமைத் தேவைப்பாடுகள் பின்வருமாறு:
   - கடந்த ஐந்து வருடங்களில் நிறைவேற்றப்பட்ட நிர்மாண வேலையின் வருடாந்த சராசரி பெறுமதியானது ஆகக் குறைந்தது 414 மில்லியன் இலங்கை ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
   - 1000 மீ $^2$ இற்கு குறையாத பரப்பளவுள்ள பிரதேசமொன்றில் texturized வெளியக எந்தவொரு பூச்சுக்களையும் வழங்கல் மற்றும் பூசுவதில் ஆகக் குறைந்தது இரு செயற்றிட்டங்களின் அனுபவம் அல்லது ஒவ்வொரு செயற்றிட்டதிற்கும் 2.5 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு குறையாத பெறுமதியிலிருத்தல். இவ்வாறான செயற்றிட்டங்கள் இலங்கையில் கடந்த ஐந்து வருடங்களில் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   - திரவச் சொத்துக்களின் ஆகக் குறைந்த தொகையானது (ஏனைய ஒப்பந்த ரீதியிலான கடப்பாடுகளுக்கு ஒதுக்கிய பின்னர்) இந்த ஒப்பந்தத்திற்காக வழங்கப்பட்ட எந்தவொரு முற்பணக் கொடுப்பனவு நீங்கலாக, 138 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு குறையாமலிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பத்தரமுல்ல, பெலவத்த, அக்குரேகொட பாதை, பாதுகாப்பு தலைமையக கட்டிடத்தொகுதி செயற்றிட்ட, செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனையின் பணிப்பாளரிடமிருந்து பெற்று அதே முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக 2022 மார்ச் 21 ஆம் திகதியிலிருந்து 2022 ஏப்ரல் 18 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்துபி.ப. 3 மணி வரையும் பரீட்சிக்கலாம்.
6. 2022 மார்ச் 21 ஆம் திகதியிலிருந்து 2022 ஏப்ரல் 18 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்துபி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக நாற்பத்தோராயிரத்து ஐந்நூறு இலங்கை ரூபாவை (41,500 இ.ரூபா) செலுத்திய பின்னர், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, பாதுகாப்பு தலைமையக கட்டிடத்தொகுதி, பாதுகாப்பு அமைச்சின் பெறுகைக்கான கணக்காளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது பாதுகாப்பு அமைச்சின் பெயரில் ரொக்கப் பணமாக அல்லது வங்கி வரைவொன்றாக வழங்கப்படல் வேண்டும்.
7. விலைமனுக்கள் இரு பிரதிகளில் கீழேயுள்ள முகவரியில் 2022 ஏப்ரல் 19 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது கீழேயுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடியபின்னர் விரைவாக வேசமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் 2022 ஓகஸ்ட் 16 ஆம் திகதியன்று வரையும் (விலைமனுக்களை திறந்த பின்னர் 119 நாட்கள்) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. அனைத்து விலைமனுக்களும் விலைமனுப்பிணையொன்றாக இருபத்தேழு இலட்சத்து அறுபதினாயிரம் இலங்கை ரூபாவை (2,760,000 இ.ரூபா) இணைக்கப்பட்டிருப்பதுடன், இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படுவதுமான வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும். இந்த விலைமனுப்பிணையானது நிபந்தனையற்றதும் உடனேயே மாற்றக்கூடிய பிணையமாகவும் இருப்பதுடன் 2022 செப்டம்பர் 13 ஆம் திகதி வரையும் (விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 147 நாட்கள் பின்னராக).
10. பத்தரமுல்ல, பெலவத்த, அக்குரேகொட வீதியிலுள்ள பாதுகாப்பு அமைச்சின் தலைமைய ககட்டிடத் தொகுதியில் 2022 மார்ச் 30 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.
11. எந்தவொரு விலைமனுதாரரும் இந்த செயற்றிட்டத்தின் ஒரேதொகுதியின் பல பொதிகளுக்கு அல்லது வேறேதாவது தொகுதிகளுக்கு விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு விரும்பின், ஒவ்வொரு ஒப்பந்தத்தின் கீழுள்ளதேவைப்படும் தகைமை/ தகுதித் தன்மை தகவுத்திறனை உறுதிப்படுத்தல் வேண்டும், இல்லாவிடின் ஒரு விலைமனுவிற்கு மேலதிகமான வழங்கலுக்கான தகைமையை இழந்துவிடுவார்.
12. மேலேயுள்ள 11 ஆம் அம்சத்திற்கு மேலதிகமாக, இந்த செயற்றிட்டத்தின் தொகுதியின்/தொகுதிகளின் எந்தவொரு பொதிக்கும் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டிருப்பின்/ ஒப்பந்தக்காரரொருவராக வேலை செய்து கொண்டிருப்பின், விலைமனுதாரரானவர் அவரதுநிதியிடல் மற்றும் தொழில்நுட்ப தேவைப்பாடுகளை அளவுக்குறிப்புக்களின்/ தகுதித்தன்மை தகவுத்திறனை இந்த விலைமனுக்கோரல் பொதிக்காக பிரத்தியேகமாக உறுதிப்படுத்தல் வேண்டும். இல்லாவிடின், இந்த விலைமனுவிற்கான தகைமையை விலைமனுதாரரானவர் இழந்துவிடுவார்.
13. பாதுகாப்பு அமைச்சிற்கு விலைமனுக்களை சமர்ப்பிக்கும் வேளையில் தேவைப்படின், 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்களின் கீழுள்ள பதிவுச் சான்றிதழை முன்வைக்குமாறு விலைமனுதாரர்கள் கண்டிப்பாக அறிவுரை வழங்கப்படுகின்றனர்.
14. விலைமனுக்களை திறப்பதற்கு ஆகக் குறைந்தது மூன்று (3) வேலை நாட்களுக்கு முன்னராகவேவிலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் பங்குபெறும் நபரின் பெயர், தேஅஅ/ கடவுச்சீட்டின் இலக்கத்தை ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, பாதுகாப்பு தலைமையக கட்டிடத் தொகுதியின், பாதுகாப்பு அமைச்சின் பிரதானநிதியிடல் அலுவலருக்குஎழுத்து மூலமாக அறிவிக்கும் படி விலைமனுதாரர்கள் அறிவுரை வழங்கப்படுகின்றனர்.

**மேலேயுள்ள 7 ஆம் அம்சத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி/ முகவரிகள் பின்வருமாறு:**

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு, பாதுகாப்பு அமைச்சு,**
**பாதுகாப்பு தலைமையக கட்டிடத்தொகுதி, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே.**
**தொலைபேசி : 0094-11-2439381/ 0094-11-2390719**
**தொலைநகல் : 0094-11-2390720**
**மின்னஞ்சல் : procurement@defence.lk**

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK
IBRD • IDA | WORLD BANK GROUP

**කෘෂිකර්ම අමාත්‍යාංශය**
**கமத்தொழில் அமைச்சு**
**Ministry of Agriculture**

### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
### விவசாய நவீனமயமாக்கல் திட்டம் - விவசாய அமைச்சு

**IDA Credit No: 5873 LK**

## பெறுகை அறிவித்தல்

### மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டத்தில், தம்புள்ள ஹுபஸ்கமுவவில் 1km கிரவல்/ கொங்கிறீட் வீதியுடன் வடிகால் அமைப்பை நிர்மாணித்தல் ஹுபஸ்கமுவ Mango Cluster மேம்படுத்தல்

**ஒப்பந்த இல: LK-MOA-PMU-227528-CW-RFB**

1. விவசாய அமைச்சின், விவசாய நவீன மயமாக்கல் திட்டத்தின் செலவுகளுக்காக 58,630 மில்லியன் அமெரிக்க டொலருக்கு சமமான பல்வேறுபட்ட நாணயங்களில் சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் (IDA) இடமிருந்து ஓர் கடனை, இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு பெற்றுள்ளது. அத்துடன் அதன் ஒரு பகுதியை கீழே அட்டவணையில் விபரிக்கப்படுமாறு கீழ்க்காணும் வேலைகளுக்கான ஒப்பந்தத்தின் கீழ் தகைமையான கொடுப்பனவுகளுக்காக இந்தக் கடனை பயன்படுத்த எண்ணியுள்ளது.
2. கீழேயுள்ள உருப்படிகள் மற்றும் கீழ்க்காணும் விபரங்களுக்கு அமைவாக, தகைமையும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து வெவ்வேறான பொறியிடப்பட்ட விலைமனுக்களை விவசாய அமைச்சு, ASM செயற்றிட்டத்தின் சார்பாக திட்டபெறுகைக் குழு (சிறிய) தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| ஒப்பந்த இல. | வேலைகளின் விளக்கம் | பெசேவ நீங்கலாக மதிப்பீடு செய்யப் பட்டுள்ள ஆகு செலவு (மில். ரூபாவில்) | ஒப்பந்த காலம் | தேவைப் படும் தரம் | விலைமனு ஆவணத் தொகை (மீளளிக்கப் படாதது) | தேவைப்படும் விலைமனுப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகை. ரூ. | தொகை ரூ. | தொகை ரூ. |
| LK-MOA-PMU-227528-CW-RFB | மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ள, ஹுபஸ்கமுவவில் ஹுபஸ்கமுவ Mango Cluster-1KM - கிரவல் / கொங்கிறீட் வீதியுடன் வடிகாலமைப்பை நிர்மாணித்தல் | 12.00 | 03 மாதங்கள் | C6 மற்றும் அதற்கு மேல் | 5,000.00 | 200,000.00 | 2022 ஜூன் 23 |

3. 2022 ஜூன் 23 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் காலத்துடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறு ஒவ்வொரு விலைமனுப்பிணையொன்றுடனும் மேலேயுள்ள பணிக்காக விலைமனுக்கோரலை முன்வைப்பதற்கு விலைமனுதாரர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தரத்திற்காக உரித்தான நிர்மாணத்துறையில் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
5. விலைமனுக்கோரல் ஆவணத்தின் 4 ஆம் பிரிவில் தகைமைத் தேவைப்பாடுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் அட்டவணையின் 5 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ளன.
6. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை மாத்தளை, மத்திய மாகாணம் விவசாய துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டப் பணிப்பாளரிடமிருந்து பெற்று (தொலைபேசி: 066-2051710. தொலைநகல்: 0662233789) (மின்னஞ்சல்: **asmpepmt@gmail.com)** விலைமனுக்கோரல் ஆவணங்களை எந்தவொரு வேலை நாளிலும் அதே இடத்தில் 2022 மார்ச் 21 மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் பரீட்சிக்கலாம்.
7. மாத்தளை, கொஹொம்பிலிவெல, கொட்டுவேகெதர வீதி, இல. 20, விவசாய துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, மாகாண பிரதி செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனையில் 2022 மார்ச் 30ஆம் திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.
8. விலைமனுக்கள் 2022 ஜூன் 23 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவலின் பிரகாரம் விலைமனுப்பிணையொன்றுடன் விலைமனுவானது இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. 2022 மார்ச் 21 ஆம் திகதியிலிருந்து 2022 ஏப்ரல் 4ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டவாறான ஒவ்வொரு விலைமனு ஆவணத்திற்கும் ரூபா 5,000.00 மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், மாத்தளை, கொஹொம்பிலிவெல, கொட்டுவேகெதர வீதி, இல. 20, விவசாய துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, மாகாண செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனைக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
11. 2022 ஏப்ரல் 05 ஆம் திகதியன்று 14.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் மாத்தளை, கொஹொம்பிலிவெல, கொட்டுவேகெதர வீதி, இல. 20, விவசாய துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, மாகாண செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனையில் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கோரல் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. குறிப்பிட்டுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
12. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியானது தனித்தனியாக அடக்கப்பட்டு முறையே 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என அடையாளமிடப்பட்டு, முத்திரையிடப்படல் வேண்டும். அதன் பின்னர் இவ்விரண்டு தபாலுறைகளும் தனியொரு தபாலுறையில் சேர்க்கப்பட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம் மற்றும் ஒப்பந்தப் பெயர் ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**மாகாண செயற்றிட்ட பெறுகைக் குழு (கீழ் மட்டம்),**
**விவசாய துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 20, கொட்டுவேகெதர வீதி,**
**கொஹொம்பிலிவெல, மாத்தளை.**

**திகதி: 16 மார்ச் 2022**

# மாணிக்காச்சி !



"என்னடி இந்தக் குறனாவோ கிறனாவோ எண்டு ஒரு நிலுவைச் சனியன் வந்தபிறகு மனுசருக்கு ஒரே ஆக்கினையும் வேதனையுமாக் கிடக்கு. மனுசர் ஒரு இடமும் போகேலாம வரேலாமக்கிடக்கடி. இன,சனம் வீடுகளுக்கு கூட ஒரு நன்மை தீமை எண்டும் போகவரப் பயமாவெல்லே கிடக்கு" எண்டு ஒழுங்கையால அலம்பினபடி மாணிக்காச்சி சின்னையா வீட்டுப் படலையைத் திறந்து கொண்டு வந்தா. மாணிக்காச்சி கதைக்க வெளிக்கிட்டா அறளை பெயர்ந்த அரசியல்வாதி மாதிரி சொன்ன விசயத்தையே திருப்பித் திருப்பி சம்பந்தா சம்பந்தம் இல்லாம சொல்லிக் கொண்டு இருப்பா.சில நேரங்களிலை பேதி குடிச்ச ஆக்களுக்கு வயித்தால போற மாதிரி நிப்பாட்டாமலே கதைச்சுக்கொண்டு போவா.

ஒவ்வொருநாளும் பின்னேரம் நாலைஞ்சு மணி எண்டால் சின்னையா வீட்டுப் படலையடிப் புழுதியிலை அயலுக்கிள் பெண்டுகள் எல்லாம் கூடி வட்டமா இருந்து ஊர்ப்புதினம் வம்பு தும்பு நாலு பன்னண்டு கதையெண்டு பலதும் பத்தும் கதைப்பினம். உந்த வட்ட இருப்பு மகாநாடு இல்லாட்டில் படலையடிக் கூட்டம் மம்மல் பொழுதாகி விளக்கு கொழுத்தும் வரையும் நடக்கும். ஆம்பிளையள் கள்ளுக்கொட்டில், கோயில் வீதியள், மடங்கள், மதகுகள், வயல் சாடு வாயள், வாசிகசாலை, மைதானங்கள் எண்டு கூடி இருந்து கதைப்பினம் . ஆனாப் பெண்டுகள் உப்பிடி ஆம்பிளையள் மாதிரி அங்கை இஞ்சை எண்டு போகாம படலை வழியை கூடி இருந்து கதைப்பினம். என்ன ஒரு வித்தியாசம் எண்டால் ஆம்பிளையள் அரசியல் ,விளையாட்டு, உத்தியோகம், படிப்பு, எண்டு கதைப்பினம் . ஆனால் பெண்டுகள் சீலை, துணி, நகைநட்டு, ஆற்றையும் வீட்டு விடுப்புகள் விண்ணாயங்கள் எண்டு கதைப்பினம். ஆனால் உதில ஒரு விஷயம் என்னனண்டால் உப்பிடி கூடி இருக்கிற பெண்டுகள் தங்கட வீட்டு விண்ணாயங்களை விட்டுப்போட்டு அடுத்தவன் வீட்டு விசயங்களைத்தான் விலாவாரியா அலசி தோச்சுப் பிழிஞ்சு காயப்போடுவினம். ஆம்பிளையள் கூடி இருந்து கதைக்கிற இடத்தில சிரிப்பும் சீண்டலும் பகிடியும் கும்மாளமும் தாராளாம இருக்கும் ஆனால் பெண்டுகள் கதைக்கிற இடத்தில குசுகுசுப்பு , சிணுங்கல், மூக்கைச் சிந்துறது கொஞ்சம் தூக்கலா இருக்கும்.

உப்பிடி கூடி இருந்து கதைக்கிறது எண்டது உண்ணாண மனுசருக்கு பெரிய ஆறுதல். அவரவர் தன்ரை கவலையளை துக்கங்களை ஏன் சந்தோசங்களை பகிர்ந்து கொள்ளிற ஒரு இடமா உந்த பின்னேர ஒன்று கூடல் இருக்கும். அவையுக்குள்ள ஒரு அன்னியோன்னியம் ஆத்மார்த்தமான நட்பு ஆளாளுக்கு நன்மை தீமையில உதவிறது எண்டு இப்பத்தே மனுசர் கனபேரிட்டை இல்லாத ஒரு மனுசாரப்பு இல்லாட்டில் மனுசக்குணம் நிறையவே இருக்கும் . உப்பிடியான உந்த பின்னேர ஒன்று கூடல் இப்பத்தே வாழ்க்கை முறையால இல்லாமப் போனதால தான் இப்பத்தே மனுசர் மற்ற மனுசரோட தொடுசல் இல்லாமல் மனுசத்தன்மை இல்லாமல் தனித்தனியா சீவிக்கினம் போல.

அண்டைக்கும் வழக்கம்போல பொழுதுபட சின்னையா வீட்டுப் படலையடியில சுந்தரி, வள்ளி , சிவக்கொழுந்து, பராசத்தி, அன்னம்மா எண்டு அயலட்டைப் பெண்டுகள் எல்லாம் கூடி இருக்க படலையைத் திறந்து கொண்டு வந்த மாணிக்காச்சி "இதென்ன வெச்சி சீணாப்பிட்டி அழவம்கொம்பரை எண்டு எல்லாக் காணியும் சிறுதானியம் போட்டுக்கிடக்கு இக்கணம் கண்டவன் நிண்டவன்ரை மாடுகள் ஒருபக்கம் கிளியள் ஒரு பக்கம் எண்டு எல்லாத்தையும் கொண்டு போகப்போகுதுகள்" எண்டு நிலத்திலை குந்தியிருந்தவ கையால மண்ணை விளக்குமாத்தால கூட்டுறமாதிரி மாதிரி இடம் வலமா அளைஞ்சபடி அரைஞ்சு அரைஞ்சு அரைவட்டம் அடிச்சபடி கதைச்சுக் கொண்டிருந்தா. உப்பிடி கதைச்சுக்கொண்டு இருக்கேக்கை புழுதி அளையிறதில இருக்கிற சந்தோசம் ஒரு வித்தியாசமான சந்தோசம். இப்ப கனபேருக்கு உந்தக் குடுப்பினை இல்லை.

மாணிக்காச்சி உப்பிடி சிறுதானியம் போட்ட வயல்பக்கம் காவலுக்கு போகேலாத கிளிகலைக்கப் போகேலாத தன்ரை ஆதங்கத்தை கதைக்கத் தொடங்க கதைப்பெண்டுகளுக்கு வேர்க்கொம்பு போட்ட கோப்பி ஊத்தி மூக்குப்பேணியிலை கொண்டுவந்த சின்னையரின்ரை மனிசி சின்னப்பிள்ளை "ஓமடி பிள்ளை மாணிக்கம் முந்தினமாதிரி நினைச்ச நினைச்ச மாதிரி வயல் பக்கம் போகேலாமல் கிடக்கு உவங்கள் எங்கட பெடியள் உந்த ஊரடங்கு நேரத்தில வயல் சாடுவாயில கூடியிருந்து காட்ஸ் கரம்போர்ட் டெண்டு விளையாடிக்கொண்டிருக்கேக்கை ஆடு மாடுகள் போகமா கிளி கொத்தாம பாத்தாங்கள். இப்ப அவங்கள் உந்த நிவாரணம் குடுக்கிறமெண்டு ஒரு வேலையில்லை வெளிக்கிட்ட பிறகு அவங்களுக்கு சாடுவாய்ப் பக்கம் போக நேரம் கிடைக்கிறேல்லை" எண்டா.

சின்னப்பிள்ளை உப்பிடி பெடியள் நிவாரணம் குடுக்கப் போன கதையைச் சொல்லவும் "அது சரி உவங்கள் என்ன ஆருக்கும் உருகியே செய்யிறாங்கள். அவங்களுக்கு ஏதும் வரும்படி இருக்கும். அதை இதையெண்டு தங்கட வீடுகளுக்கும் கொண்டு போகாமல் இருக்கிறாங்களே" எண்டு வள்ளி சொல்ல கோபப்பட்ட சுந்தரி "எணை வள்ளியக்கை சும்மா பெடியளைப்ப்றி விசர்க்கதை கதையாதணை. அவங்களை வம்புப்பிள்ளையள் சும்மா ஊர்மேயுதுகள்.வீட்டில ஆத்தைமார் அவிச்சுக் ககொட்டத்திண்டு போட்டு நாலு றோட்டும் ஒரு றோட்டா சயிக்கிள் தடியைக் கவட்டுக்கை வைச்சுக் கொண்டு திரியிறாங்கள் .குடிச்சு வெறிச்சு பீடி சிகரட்டு பத்திக் கொண்டு திரியுறாங்கள்உருப்படுவாங்களோ பெண்புரசு ஒழுங்கை வழிய போகேலாது வரேலாதெண்டு எல்லாம் உங்களைப் போல ஆக்கள் எத்தினை கதையைக் கதைப்பியள் " எண்டு கோவமாச் சொன்ன சுந்தரி சின்னப்பிள்ளை கொண்டுவந்த கோப்பியை மூக்குப்பேணியின்ரை மூக்கு வாயிலை படாதபடி அண்ணாந்து குடிச்சா . முந்தி எங்கட சனம் உப்பிடி அண்ணாந்து தான் என்னவும் குடிக்குங்கள். இப்ப உள்ள ஆக்கள் மாதிரி பேணியில இல்லாட்டில் கிளாசிலை வாய் வைச்சு சூப்பிறேல்லை . அண்ணாந்து குடிக்கிறது எண்டது ஒரு நல்ல சுகாதாரப் பழக்கம் .

ஒரு மிடறு கோப்பியை விட்டுத் தொண்டையை நனைச்ச சுந்தரி ஒருக்காச் செருமிக் கொண்டு "பெடியள் விளையாடிக்கொண்டு முசுப்பாத்தி பண்ணிக் கொண்டு திரிஞ்சாலும் ஊரில ஒரு நல்லது கெட்டது எண்டு வந்தால் அவங்கள்தானே உடன முன்னுக்கு வாறாங்கள் . உப்பவும் உந்தக் கொறோனா கோதாரி வந்தபிறகு அவங்கள் அங்கயும் இஞ்சையும் ஓடி ஆடித் திரிஞ்சு அவையை இவையைப் பிடிச்சி சனத்துக்கு சாமான்கள் குடுக்கிறாங்கள் எல்லே . உங்க கடை கண்ணி எல்லாம் மூடி இருக்கேக்கை வேலை வெட்டிக்கு போகவர ஏலாமல் கனபேர் தின்னக் குடிக்க வழி இல்லாமல் இருகேக்கை உவங்கள் செய்யிறது பெரிய உதவி எல்லே என்னணை மாணிக்காச்சி நான் சொல்லுறது சரிதானே " எண்டா.

சுந்தரி சொன்னதைக் கேட்ட சிவக்கொழுந்து "ஓமடி வள்ளி சுந்தரி சொல்லுறதும் ஞாயம்தானே. நாங்கள் ஒரு நாளும் ஆதாரம் இல்லாமல் ஒரு கதையளையும் கதைக்கப்படாது . ஒருத்தரைப்பற்றி புறஞ் சொல்லுறது வீண் கதையள் கதைக்கிறதை நிப்பாட்டவேணும். உப்பிடி கதைச்ச வீண் கதையளால உங்க எத்தினை குடும்பங்கள் சீரளிஞ்சு போச்சுதுகள் எண்டு எங்களுக்கு நல்ல வடிவாத் தெரியுமெல்லே " எண்டா.

உவை பெண்டுகள் உப்பிடி கதைச்சு பிடுங்குப்பட்டுக் கொண்டது அப்பதான் சுருட்டுக் கொட்டிலாலை படலையைத் திறந்துகொண்டு வந்த சின்னையரின்ரை காதில விழுந்தது . அந்தக் கதையகளை காதில வாங்கின சின்னையர் "என்ன இருந்தாலும் எங்கட பெடியள் வலு கெட்டிக்காறர் கண்டியளோ " எண்டார் ."நாங்கள் முந்தி வரிவளவுப் பிள்ளையார் கோவில் தேர் முட்டியில இருந்து எத்தினை குழப்படியளைச் செய்திருப்பம். பின்னேரங்களிலை கோவளம் மெலிஞ்சியோடைக்கு விளையாடப் போகேக்கை வரேக்கை மம்மல் பொழுதுக்கை எத்தினை சேட்டையளை விட்டிருப்பம். இப்ப நாங்கள் என்ன கெட்டே போனம்."அந்தந்த வயதில செய்யிற குழப்படியள் விளையாட்டுகளைசெய்ய வேணும். அப்பதான் அந்த வயதில இருக்கிறதில ஒரு அர்த்தம் இருக்கும்.

"இப்ப எங்கட பெடியள் என்ன விளையாட்டு விளையாடினாலும் என்ன குழப்படி செய்தாலும் இண்டைக்கு எங்கட சனத்துக்கு ஒரு பிரச்சனை எண்டதும் எப்பிடி வேலை செய்யுறாங்கள் பாத்தியளே" எண்ட சின்னையர் "அவங்களுக்கு நாங்கள் சப்போர்ட் பண்ணாட்டாலும் குறை சொல்லாம இருக்கப் பழகவேணும் அப்பதான் அவங்கள் வாழ்க்கையில முன்னுக்கு வருவாங்கள் கண்டியளோ " எண்டபடி தோளிலை கிடந்த துவாயை உதறிக்கொண்டு தலைவாசல் பக்கம் போக சின்னப்பிள்ளை மெல்ல அவருக்குப் பின்னால போனா . சின்னையர் உப்பிடிச் சொல்லவும் மூஞ்சையை நீட்டின வள்ளி ம்க்கும்.. எண்டு முணுமுணுத்தபடி தன்ரை மோவாய்க்கட்டையைத் தோளில தேச்சு தலையைச் சிலுப்பியபடி மெதுவா குண்டி மண்ணைத் தட்டிக்கொண்டு வெளிக்கிடவும் எல்லாப் பெண்டுகளும் ஒவ்வொருத்தரா அண்டைய கூட்டத்தை முடிச்சுக் கொண்டு வெளிக்கிட்டினம். **(யாவும் கற்பனை)**

காரைக்கவி
**கந்தையா பத்மானந்தன் ...**

# 'வானம்பாடிகள்' இலக்கிய குழுவினர் வழிகாட்டலில் தங்களை கவிஞர்களாக அடையாளப்படுத்தியவர்கள் மிக அதிகம்


## விழுப்புரம்' நகரில் இடம்பெற்ற 'அத்தியூர் விஜயா' நூல் வெளியீட்டு விழாவில் உதயன் லோகேந்திரலிங்கம்

ஐம்பது வருடங்களுக்கு முன்னர் தமிழ் நாட்டின் 'வானம்பாடிகள்' இலக்கிய குழுவினர் வழிகாட்டலில் தங்களை கவிஞர்களாக அடையாளப்படுத்தியவர்களில் பலர் இன்றும் எழுதிக்கொண்டிருகின்றார்கள். அவர்களில் நானும் ஒருவன் என்பதை இங்கு கூடியிருக்கின்றவர்களோடு பகிர்ந்து கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். அன்றைய இலக்கிய ஈடுபாடும் அக்கறையும் தற்போதைய இலக்கியவாதிகளிடம் இல்லாத ஒன்றாகிவிட்டது. பல இலக்கியவாதிகளுக்கு 'தலைக்கனம்' அதிகமாகி விட்டது. தங்களை மட்டுமே உயர்த்திக் கொள்வதில் ஆர்வம் கொண்டவர்களாக காணப்படுகின்றார்கள்.ஆனாலும் இன்றைய நமது கதாநாயகன் நண்பர் ஜோதி நரசிம்மன் எவ்விதமான கர்வம் அற்றவராய் அடி மட்டத்தில் வாழ்ந்து அரசினதும் காவல்துறையினதும் அடக்கு முறைக்கு உள்ளாகிய பல்வேறு இன்னல்களை அனுபவித்த இருளர் இன மக்களின் துன்பியல் அனுபவம் கொண்ட வாழ்க்கையையும் குறிப்பாக அத்தியூர் விஜயா என்னும் சமூகப் போராளியைப் பற்றியும் மற்றவர்கள் அறிந்து கொள்ள இந்த 'அத்தியூர் விஜயா' என்னும் நாவலைப் படைத்துள்ளார். அத்துடன் அதன் ஆங்கில மொழிபெயர்ப்பு வெளியிடப் படுகின்றது. இந்த விழாவில் நான் கலந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். இவ்வாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை 13ம் திகதி விழுப்புரம்' நகரில் இடம்பெற்ற 'அத்தியூர் விஜயா' நூல் வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய உதயன் லோகேந்திரலிங்கம் தெரிவித்தார் அங்கு அத்தியூர் விஜயாவின் போராட்டங்கள் மற்றும் தன்னை மானபங்கம் செய்த காவல்துறை அதிகாரிகளுக்கு எதிராக தொடுத்த வழக்குகள் ஆகியவற்றில் அவருக்காக நீதிமன்றத்தில் வாதாடிய வழக்கறிஞர் எம். ஆர். செரிப்பைப் பாராட்டும் வைபவமும் இணைக்கப்பட்டிருந்தது. விழுப்புரம் 'சாந்தி நிலையம்' மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவிற்கு ஆசிரியர் த. பாலு தலைமை தாங்கினார். வரவேற்புரையை இரா முருகப்பன் வழங்கினார். அங்கு உரையாற்றிய ஆர். என். லோகேந்திரலிங்கம் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்" இன்றிலிருந்து நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர் நான் எழுதிய கவிதை வரிகளிலிருந்து ஒன்றைப் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். அதற்கு காரணம் இன்றை இந்த விழாவான அந்த வரிகளுக்கு மிகவும் பொறுத்தமானவை என்று கருதுகின்றேன். அடக்கப்பெற்று வாழ்ந்த நான் ஒரு நாள் வெகுண்டெழுந்தேன். அன்று முதல் நான் ஒரு போராளி' என்பதுதான் இந்த வரிகள். இந்த மண்டபத்தில் கூடியிருக்கின்ற அனைவரும் ஒரு வகையான போராளிகளே ஆவார்கள். சமூகப் போராளிகளான இருளர் இன மக்கள் அவர்களில் தலைமைத்துவத்தை எடுத்துப் போராடுகின்றவர்கள் எழுத்துப் போராளிகள் சட்டப்போராளிகள் போன்றவர்கள் கூடியிருக்கின்ற இந்த மண்டபத்தில் இந்தியாவின் தமிழ்நாட்டில் எங்கோ ஒரு இடத்தில் தொடர்ச்சியாக இடம்பெறும் காவல்துறையின் அடக்குமுறைகளுக்கு எதிராக இடம்பெறும் உணர்வு மிக்க போர்க்குணத்தை நேரடியாக அனுபவிக்கின்றேன்' என்றார்.'அத்தியூர் விஜயா' நூலை எழுதிய ஜோதி நரசிம்மன் ஏற்புரையாற்றுகையில் தனது படைப்பிற்கு தான் எதிர்பார்த்ததை விட மிகுந்த பாராட்டுக்கள் கிடைத்து வருவதாகவும். தற்போது வெளிவந்த ஆங்கில மொழிபெயர்ப்பிற்கும் உலகெங்கும் இருந்து நல்ல வரவேற்பு கிடைப்பதாகவும் மகிழ்ச்சியோடு தெரிவித்தார்.



**சென்னையிலிருந்து**
**அருண் கதாகரன்**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 15




திரு/திருமதி.செல்வி ..........................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..........................................

திகதி ............ கையொப்பம் ............

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
போட்டி இல. 15
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல :15

**இடமிருந்து வலம்**

(1) தினகரன்... தசாப்த காலத்தை நிறைவு செய்கிறது.
(4) ஏதோ ஒருவகையில் திறமை படைத்தவனை இப்படிச் சொல்வர்.
(6) விற்பனை செய்ய வேண்டிய பொருளை சட்டவிரோதமாக மறைத்து வைத்திருப்பது. (குழம்பியுள்ளது)
(8) இனிப்புச்சுவை.
(9) இளம் பருவத்திலான ஆண் மாடு. (திரும்பியுள்ளது)
(11) கட்டடத்தின் மேல்தளம்.
(12) பெற்றோரின் தந்தை குழம்பிவிட்டார்.
(13) வீட்டுப் பாதுகாப்புக்காக அமைக்கப்படுவது.
(14) அமைதியான இயல்புடையவர். (திரும்பியுள்ளது)
(15) உயிர் இழப்பையும் குறிக்கும்.
(16) பாம்பு போன்ற நீண்ட உடல் கொண்ட ஒருவகை மீன். (குழம்பியுள்ளது)
(18) மூத்த சகோதரி திரும்பிவிட்டார்.
(20) மழை வெயிலுக்குரிய பாதுகாப்பு சாதனம்.
(21) தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்டிருப்பவர்.

**மேலிருந்து கீழ்**

(1) ஒரு நிகழ்ச்சியை அரங்கேற்றுவதற்கு முன், அதனை சரிபார்க்கும் பயிற்சி.
(2) தெய்வபக்தி நிறைந்தவரை இப்படிச் சொல்வர்.
(3) போர்வை. (குழம்பியுள்ளது)
(4) சூழ்ச்சி.
(5) தகராறு அல்லது கலாட்டா.
(7) கால்நடைகளின் உணவுகளில் ஒன்று. (கீழிருந்து மேல்)
(10) அடாவடிச் செயல்களில் ஈடுபடுபவர். ரவுடி என்றும் சொல்வர்.
(12) உண்மையில் ஒரு செயலைச் செய்யாமல் அதனைச் செய்வது போன்று மேற்கொள்ளும் நடிப்பு.
(13) பார்ப்பதற்கு அல்லது கேட்பதற்கு வினோதமானதாகவும் சிரிப்பூட்டுவதாகவும் அமைந்திருப்பது.
(14) கிணறுகளிலிருந்து நீர் பெறுவதற்கு உதவுவது.
(15) சிறப்பு அல்லது கீர்த்தி வாய்ந்தது.
(17) கேள்விக்குரிய பதில்.
(19) மிக உன்னதமான எனவும் பொருள்படும்.

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 14

### விடைகள்

**இடமிருந்து வலம்**

*01. ஆடவன் 04. அங்கி 06. பஞ்சம்*
*07. வசனம் 09. கடல் 11. வாகனம்*
*13. வில் 14. உரம் 15. வடம்*
*17. துவாரம் 19 கசிப்பு 21. கொழுப்பு*
*22. சிந்தை*

**மேலிருந்து கீழ்**

*01. ஆழம் 02. வஞ்சகம் 03. வம்பன்*
*04. அசல் 05. கிண்டல் 08. வானரம்*
*10. விகடம் 12. வனவாசி 16. சிகரம்*
*17. துப்பு 18. கொலை 19. புழு*
*20. சிதை*

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 13

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**

**பி. வாஞ்சுதா,**
*இல. 4, ஸ்ரீபுர வீதி,*
*பொகவந்தலாவ.*

**இரண்டாம் பரிசு**

**எம்.ஏ. அம்ரா,**
*215, கராகொட,*
*எட்டியாந்தோட்டை.*

**மூன்றாம் பரிசு**

**எம்.ஆர்.எப். அஸ்மா,**
*18/1, பதுர்லேன்,*
*கல்பொக்கை, வெலிகம.*

### பாராட்டு பெறுவோர்

***1. எஸ். சத்தியவதனி,***
*பிரதான வீதி,*
*பாலமுனை, மண்டூர்.*
***2. மஸீடா அன்சார்,***
*268/4, எகொட உயன, மோதர,*
*மொறட்டுவை.*
***3. என்.கே. வேர்ணி,***
*இல. 25/10, தேவாலய வீதி,*
*பலாங்கொடை.*
***4. ஏ.எஸ்.எஸ். பஜூன்,***
*19/A, முஸ்லிம் கொலனி,*
*கதுறுவெல, பொலன்னறுவ.*
***5. என்.ஐ. இஸ்மத்,***
*190, மன்னார் வீதி,*
*புத்தளம்.*
***6. கஸ்தூரி களியபெருமாள்,***
*2/27A, வெளிக்கந்தை,*
*கண்டி.*
***7. ராஸியா வாஹிட்,***
*இல. 26/2,*
*பெரியபள்ளிவாசல் வீதி,*
*பதுளை.*
***8. பி. சிவகாமி,***
*இலக்குமிபதி,*
*அம்பிகாவத்தை வீதி,*
*சங்கானை.*
***9. எஸ். நாகராஜா,***
*சாரதா வீதி,*
*காரைதீவு 02.*
***10. பி. சந்தியாகு,***
*34/12, செமினரிவத்த வீதி,*
*தென்னக்கும்புர,*
*கண்டி.*

✦✦✦

# கசப்பும்... இனிப்பும்...



தமிழ்மணி மானா மக்கீன்

## கசப்பு

கடந்த 12.03 சனிக்கிழமை அற்புத மான சிறப்புரை ஒன்றைக் கேட்கும் வாய்ப்பு.

வழங்கியவர் ஒரு கால வானொலிக் கலைஞரும் நாடக எழுத்தாளருமான **கலாநிதி எம். சீ. றம்ஸீன்.**

வழங்கும் ஏற்பாடு 'ஸ்ரீலங்கா முஸ்லிம் ஊடகவியலாளர் அமைப்பு' (மீடியா போரம்) அவர்களது வெள்ளிவிழா, வெற் றிப்பயணத்தை ஒட்டிய பொதுக் கூட்டத்தில் அந்தச் சிறப்புச் சொற்பொழிவு.

அச் சொட்டாக அரைமணி நேரத்தில் பூர்த்தி செய்த சிறப் புரை ஆகிய கருத்தோட்டத்தில் வழங்கப்பட்ட கசப்பு வில்லை களை பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஊடக அமைச்சர் டலஸ் அழகப் பெரும முதற் கொண்டு என் மூத்த பேனை ஈறாக விழுங்கினோம்.

ஒரு கால ஊடகவியலாளராக ஜொலித்த அமைச்சர் கசப்பை முகம் சுளிக்காமல் விழுங்கி வைத்ததோடு உரைஞருக் குக் கைகொடுத்தும் பாராட்டி மகிழ்ந்தார்.

உரை முடித்து இருக்கையில் அமர்ந்த அவரை நோக்கிப் போனது பேனை!

'கலாநிதி ரமிஸீன் உங்கள் கருத் துக்களின் ஆரம்பப் பகுதி எனக்கு முற்றிலும் புதிய செய்தி. ஆனால் பிற்பகுதியோ நான் சதா சர்வகால மும் எழுத்திலும் பேச்சிலும் 'ஒரு கை ஓசையா' ஒலித்தவையே என் றாலும் ஒரு கை ஓசைக்கு சத்தம் கேட்கவில்லை! இப்பொழுது நீங் களும் ஓசை! இனி எல்லோருக்கும் கேட்கும்!' என்றது பேனை.

அவ்வளவு தான்! உடனடியாக இருக்கையிலிருந்து எழும்பி நின்ற அநுராதபுரப்பகுதி அற்புத மண்ணின் மைந்தரான கலாநிதி அப்படியே நின் றவர் நின்றவரே!



ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும வழங்கிய சிறப்பு விருதை கலாநிதி எம்.சீ. றஸ்மின் பெறு கிறார். அருகில் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ்கனி, தமிழக 'மணிச்சுடர்' நாளேடு ஊடகவி யலாளர் சாஹுல் ஹமீது ஆகியோர் காணப்படுகின்றனர். (படப்பிடிப்பு: ஏ.எஸ்.எம்.ஜாவீத்)

உரையாடலை மிகச் சுருக்கிக் கொண்டு சிறப்புரையின் பிரதி ஒன்றைப் பெற்று தன் இருக்கை திரும்பியது பேனை!

அன்னவரது உரையின் ஆரம்பப் பகுதி (சுமார் 24 நிமிடங்கள்) **'ஊட கமும் முஸ்லிம்களது எதிர்காலமும்'** பற்றியதாக அமைந்திருந்தது. முழு வதையுமே அபிமானிகள் அலசி ஆராய்ந்து ஆயாசப்பட வேண்டிய ஒன்று. அதனை நமது மூத்த 90 அகவை ஊடக ஆசாமியிடம் (வேறு யார் தினகரனே!) சொல்லிப் பிர சுரிக்க வைக்கலாம். பிற்பகுதி (06 நிமிட உரை) மட்டும் இங்கே சுருக்கி.

அது, இந்த மூத்தது, வானொலி 'சிறுவர் மல'ரிலும், 'முஸ்லிம் நிகழ்ச்சிச் சேவையிலும் பத்து ஆண்டுகள் ஓடியாடிய இலங்கை வானொலி ஒலிபரப்பைப் பற்றி யது.

**கலாநிதி நம்ஸீன் கருத்துரைத் தார் இப்படி;**

- ★ இன்றையப் பொழுதில் முஸ்லிம் கலா நெஞ்சங்க ளின் கவலைக்குரிய விடய மாக இருப்பது அரச ஒலிபரப் பில் இடம்பெறும் முஸ்லிம் சேவைகள் பற்றியதே.
- ★ அச்சேவை தனது பொறுப் பிலிருந்து வீரியம் குறைந்து திறனற்று ஒலிக்கிறது. அது ஒரு சமயப்பாடசாலையைப் போன்று இயங்குகிறது.
- ★ 'அன்றாடத் தொழுகைக்க டமைக்கான அழைப்பை (அஸான்) அரச ஒலிபரப் புச் சேவை செய்ய வேண் டுமென்று, எந்த முஸ்லிம் விரும்பியதில்லை. அரசியல் நோக்கத்திற்காக எப்போதோ ஏற்பாடானது. இலங்கை வானொலியில் தான் முதன் முதல் தொழுகை அழைப்பு ஒலிக்க ஆரம்பித்தது என்ற தொரு விசித்திரத்தை உரு வாக்கினார்கள். அத்தோடு, பிற சமூகத்தினர் தங்கள் மத நிகழ்ச்சிகளை ஒலிபரப்பும் பொழுது அது இடைநடுவில் நிறுத்தப்பட்டு 'தொழுகைக்கு வாருங்கள்' என்ற அழைப்பும் ('அஸான்') ஒலிபரப்பானது.
- ★'மேலும், வானொலிச் செய்தி அறிக்கை என்பது நேயர்கள் அத்தனை பேருக்கும் பொது வானது. இதுவும் தொழுகை அழைப்பை ஒலிபரப்புவதற் காகத் தாமதிக்கப்படுகிறது!

'பல நேரங்களில் சினிமாப் பாடல்களை முன்னும் பின்னுமாக இசைத்துவிட்டு ஒலிபரப்புகிறார் கள்.

- ★ 'இவை அத்தனையும் நடப் பது' பண வருவாய்' ஒன்றுக் காகவே வர்த்தக விளம்ப ரங்கள் கிடைக்காவிட்டால் தொழுகை அழைப்பு ஒலிப ரப்பாகாது.

' அமைச்சரே, இன்னுமொரு விடயத்தையும் நான் ஆராய்ந்த பொழுது, காலை நேர முஸ்லிம் ஒலிபரப்புகளில் 95 விழுக் காடு விளம்பரங்களும், மார்க்க உரைகள் இடை நடுவிலும், அவற் றின் ஒலிப்பதிவு தயாரிப்பு தரம் குறைந்து இருப்பதையும் உணர்ந் தேன்.


பண வருவாய் ஒன்றுக்காக இஸ் லாமிய கீதங்கள் நாடகங்கள், வரலாற்றுச் சித்திரங்கள் போன்ற கலாசார நிகழ்ச்சிகளுக்குத் தடை போடப்பட்டுள்ளன.

'கடந்தாண்டு புனித றம்ழான் நோன்பு மாத காலங்களில் காலை ஒலிபரப்பில் 47 நிமிடங்களுக்கு வர்த்தக விளம்பரங்களே ஒலிபரப் பாகின. அந்த நோன்பு நாட்களில் பல லட்சங்கள் சேர்க்கப்படுகிறது. ஆனால் அபூர்வமாக நாடகம் ஒன்று ஒலிக்க நாடகப் பிரதியாளர்களுக் கும் கலைஞர்களுக்கும் ஆயிரம் ரூபாய் சன்மானம் வழங்க நிர்வா கத்தினருக்கு மனம் இல்லை!

இவ்வாறு கசப்புக் கருத்துகள் கலாநிதி றஸ்மினின் சிறப்புரை யில் சிறகடித்தன. ஒரு கை ஓசை இட்டுக் கொண்டிருந்த என் மூத்த பேனைக்கு இன்னுமொருவரின் ஓசையும் சேர்ந்து கொண்டது. நன் றிகளும் பாராட்டுகளும்.

## இனிப்பு

கடந்த வாரம் கசப்பில் 'ஏரூர்' ஆகிய ஏறாவூர் இலக்கியத்துறையி னர் 41 பேரைப் பட்டியல் போட்டு மொத்தம் 35 பேர் சிறுகதை, நவீனம், நாடகம், கட்டுரை எதிலும் கை வைக்காதவர்கள் என்று பேனையின் ஆதங்கத்தைப் பதித்தி ருந்தேன்.





சென்ற வியாழனன்று கல்முனைப் பக்கமும் ஒரு கழுகுப்பார்வை. பட்டியல் போடும் நோக் கமின்றி சும்மா ஒரு சிறு பார்வை!

அந்தக் கழுகுப் பார்வை யில் ஒரு 'காகம்' சிறகடித் தது! அதுவும் 'சிறுகதை, சிறுகதை' என்று பாடிப்ப றந்தது!

சிறுகதை, நூல் பெயர் கூட விசித்திரம்!

**'காக்கை நிறச்சேலை'** கதைத் தொகுதியின் பெயர்! **'கல்முனைக் கதீர்'** தனது சுயப்படைபபுகள் எட்டை ஏட்டில் (நூல்) வழங்கியிருக்கிறார்.

ஒரு பொழுது இந்தக் கதீரும் ஒரு கவிஞர் தானாம்! வரிக்குதிரைச் சவாரியரோ அறியேன்!

எவ்வாறாயிலும், கதை என்றால் கட்டுத் தறி அறுத்து காத் தூரம் ஓடிப் போகிறவர்கள் மத்தியில் ஒரு **கதீர்** கதிர்பாய்ச்சுகி றார். பாராட்டு, பாராட்டு!

நம்ம, மருதூர்க்காரர், தீரனார் **ஆர்.எம். நௌஷாத்,** சாய்வு நாற் காலியில் சாயந்தாடியபடி இந்தக் 'காக்கை நிறச் சேலையைக் கண்டு விட்டு முகநூலில் இப்படிப் பதிவிட் டிருக்கிறார்!

★'கதீரை ஒரு கவிஞனாகவே கருதி இருந்தேன். காக்கை நிறச் சேலையை வாசிக்கும் பொழுது, வாசிப்போர் மனத்தில் ஒரு கதிரி யக்க வீச்சின் அதிர்வுகளைத் தவறா மல் தருகிறது!'

என்ன அபிமானிகளே, இப்பவே ஒரு சிறுகதையைப் படிக்கும் பரபரப்பு ஏற்படுகிறதல்லவா! என் பேனைக்குந்தான்! கதைத் தொகுதியை அனுப்பி வைக்கட்டும் நீங்களும் பெறக்கூடிய வழிகளைத் தெரிவிக்கிறேன்.





# இவர்களுக்குள் தான் இருக்கிறான் கொலைக்காரன் கண்டு பிடிப்பவன் தான் கெட்டிக்காரன்!

18

'ஆமாம் எனக்கும் அப்படித் தான் தோன்றுகிறது. தீபன் தீபிகாவின் கொலையில் இவர்கள் யாருக்காவது சம்பந்தம் இருக்கலாம்... இல்லையென்றால் தீபிகா எழுதிய ஒரு கடிதத்தினால் எப்படி ஒரு கொலைகாரன் உருவாகியிருக்க முடியும்?'

'அதுமட்டுமல்ல... இந்த கொலைகாரன் மிகவும் திறமைசாலியாக இருப்பான்!'என்றார் சார்ஜன் வசந்தன்.

'திறமைசாலியாக இல்லாமல் இருந்தால் எப்படி வசந்தன் இந்த மாதிரியான ஒரு காரியத்தைச் செய்ய முடியும். தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் தீபிகா கடிதத்தை எழுதியிருந்தாலும் உண்மையிலேயே அவள் தற்கொலை செய்து கொள்ளவில்லை! ஆனாலும் அந்தக் கடிதத்தைப் பயன்படுத்தி வேறு யாரோ ஒருவன் தீபினையும் தீபிகாவையும் பாதாளத்தில் தள்ளிவிட்டு கொலை செய்திருக்கிறான்.

'அதுதான் சேர் உண்மை. இப்போது நாங்கள் கண்டுபிடிக்க வேண்டியதெல்லாம் அந்த கடிதத்தைப் பயன்படுத்தி தீபனையும் தீபிகாவையும் பாதாளத்திற்கு அருகில் அழைத்துச் சென்றது யார் என்பதைத் தான்!'

'அதேதான் நாங்கள் இந்த ரிப்போட்களை எல்லாம் இன்பராஜ் சேரிடம் ஒப்படைத்த பிறகு என்ன செய்ய வேண்டும் என்று அவர் எங்களுக்கு சொல்லுவார். அதன் படிநாங்கள் செயல்படுவோம்.

'ஆகட்டும் சேர்!' என்றார் சார்ஜன் வசந்தன்.

மறுநாள் காலையிலேயே தான் திரட்டிய தகவல் அத்தனையும்

ஒன்றாக கோர்த்து இன்பராஜிடம் கொடுத்தார். இன்ஸ்பெக்டர் ராகவன்.

அவை எல்லாவற்றையும் படித்துப் பார்த்தார் இன்ஸ்பெக்டர் இன்பராஜ்.

அது மட்டுமல்ல இந்த கொலை வழக்கு தொடர்பாக

இதுவரை பத்து கோர்வைகள் அவர் வசம் இருந்தது.

எல்லாவற்றையும் படித்துப் பார்த்து விட்டு

இன்ஸ்பெக்டர் ராகவனை நிமிர்ந்து பார்த்தார்!

'ம்... நீங்கள் கொடுத்துள்ள இந்த தகவல்களின் படி நாங்கள் உடனடியாகவே இந்த அமுதனை தேடிப்பிடிக்க வேண்டும். தேடிப் பிடித்து அவனிடம் விசாரணை செய்ய வேண்டு! அப்படி விசாரித்ததை உங்களுக்கே தோன்றும் என்ன செய்ய வேண்டும் என்று. சொல்லி அப்படி தோன்றவில்லையென்றாலும் பரவாயில்லை. அமுதனைப் பற்றிய தற்போதைய நிலைப்பாடுகளை எனக்குச் சொல்லுங்கள். அதன் பிறகு என்ன செய்ய வேண்டும் என்று நாம் பார்ப்போம்!'

'சரி சேர் நான் அப்படியே செய்கிறேன் சேர்... ஆனாலும் அமுதனைப் பார்ப்பதற்கு முன்பு தீபனுடைய நண்பர்கள் மூவரையும் சந்திக்க வேண்டுமல்லவா?'

'இல்லை ராகவன் அது தேவை இல்லை. நீங்க இந்த அமுதனைப் பற்றி மட்டும் விசாரியுங்கள். அவர்களைப்பற்றி விசாரிப்பதற்கு நான் எங்கள் டிபாட்மென்ட்டில் உள்ள ராணியை அனுப்புகிறேன்! அவர் அந்தத் தகவல்களைப் பெற்று வருவார்!' ஆகட்டும் சேர்... அப்போ நான் விடை பெறுகிறேன்!'

'சரி... எதற்கும் கொஞ்சம் ஜாக்கிரதையாகச் செல்லுங்கள்!' என்றார் துப்பறியும் இன்ஸ்பெக்டர் இன்பராஜ்.

பிரசன்னா வழமைபோல் தனது இல்லத்தில் இருந்து பயணத்தை ஆரம்பித்த போது!

அந்த ஆடம்பரக் காரைப் பார்த்ததும்,

இதற்கு முன்பு அந்தக் காரை எங்கோ பார்த்ததாக ஞாபகம் வரவே கொஞ்சம் உற்றுப் பார்த்தான். காரின் அருகில் நின்றிருந்த ஓர் அழகிய பெண்மணி

தனது செல்போனில் யாருடனோ பேசிக் கொண்டிருந்தாள்.

இன்னும் கொஞ்சம் கார் நெருங்கி வந்ததும்.

அது மதுமிதாதான் என்பதை புரிந்து கொண்டான் பிரசன்னா.

காரை ஓரமாக நிறுத்தி விட்டு, கீழே இறங்கி வந்தான் பிரசன்னா.

'என்ன மதுமிதா இங்க என்ன செய்றீங்க?'

'ஓ... பிரசன்னா நல்ல வேளை நீங்க வந்தீங்க... ஒரு டயர் பஞ்சராகி விட்டது...' என்ன செய்யதென்றே தவித்துக் கொண்டிருக்கிறேன்'

'பரவாயில்லை அதால என்ன நாங்க ஸ்பெயர் வீலை மாற்றுவோமோ?'

'எப்படி பிரசன்ன அதைச் செய்றது.. ஜெக்கும் ஸ்பெயாவீலும் அப்பாவின் காரில் அல்லவா இருக்கிறது!'

'ம்... என்ன இது எப்படி நடந்தது?' வியப்புடன் கேட்டான் பிரசன்னா.

'ஸ்பெயா வீலுக்கு புதிய ரோதை நேற்று மாற்றினோம். அப்பா தான், அப்பாவின் ஜெக் காணவில்லையென்று எனது காரின் ஜெக்கை வாங்கிச் சென்றிருந்தார்.

அதைத் திருப்பிவாங்க நான் மறந்து விட்டேன்!' என்றாள் ஒரு வித பாவனையுடன் மதுமிதா.

'ம்... நல்லாத்தான் இருக்கிறது உங்கள் வேலை... இவ்வளவு ஞாபக மறதியாகவா நடந்து கொள்வார்கள்?'

'அதென்னடா உண்மைதான் பிரசன்னா.. நான் அப்பாவுக்கு போன் பண்ணத்தான் பார்த்தேன்...

இவ்வளவு ஞாபக மறதியாகவா வேலை பார்க்கிறது என்று திட்டுவார்... அதனால் பண்ணவில்லை.

'அப்போ இவ்வளவு நேரம் யாருடன் பேசிக் கொண்டிருந்தீர்கள்?' 'வழக்கமாக நான் டயர் மாற்றும் கடைக்குத்தான் பேசினேன்.

அவர்களுடைய கடை இன்னும் திறக்கவில்லை என்று நினைக்கிறேன். ரிங்போகுது யாரும் எடுக்கிறார்கள் இல்லை!'

'ம்... இப்போது எப்படி நீங்க போகப் போறீங்க?'

'அதைப்பற்றித் தான் பிரசன்னா நானும் யோசித்துக் கொண்டிருக்கிறேன்!' 'சரி... நான் ஒரு யோசனை சொல்லவா?'



'ம்... சொல்லுங்க பார்ப்போம்!'

'எனது காரில் உள்ள ஜெக்கை அடித்து ரோதையை கழற்றுவோம். அருகில் உள்ள டயர் கடை ஒன்றிற்கு சென்று பெச்சாக இருந்தால் போடுவோம்.

இல்லையென்றால் புதிய டியூப் ஒன்றைப் போடுவோம். மீண்டும் வந்து ரோதையை மாற்றிவோம். .. என்ன ஓகேவா' அவள் அழகிய முகத்தைக் கூர்ந்து பார்த்த படியே கேட்டான் பிரசன்னா.

'யோசனை நன்றாகத்தான் இருக்கிறது... ஆனாலும்...?'

'என்ன ஆனாலும்... என்னுடன் வர பயமாயிருக்கிறதா?'

'ஐயையோ அப்படி ஒன்றும் இல்லை பிரசன்னா...!'

'அப்படி இல்லையென்றால் வாங்க சீக்கிரம் டயரை கழற்றுவோம்!'

'என்னால் உங்களுக்கும் நேரமாகிறது... அதுவுமில்லாமல் நீங்க டை எல்லாம் போட்டுக் கொண்டு டயரை கழற்றுவது பார்க்குறதுக்கு நல்லவா இருக்கும்...அதுதான் யோசிக்கிறேன்!'

'பைத்தியம் விளையாடாமல் காரின் வீல்யிரஸ்சை எடுங்க... நட்களை கழற்ற வேண்டும்!' என்று சொல்லியபடியே முன்னால் நடந்தான் பிரசன்னா!

**(இளமை வளரும்)**

# படித்ததும் பகர்வதும் 88



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### சர்வதேச கவிதை தினம்

மார்ச் 21ஆம் திகதி உலக கவிதை தினம்! அமெரிக்கக் கவிஞர் டேசா வெப் 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் சர்வதேச கவிதை தினமொன்றைக் கொண்டாட முன்மொழிந்து முயற்சித்தார். ஆனால் சர்வதேச அளவில் அது ஏற்கப்பட்டு உத்தியோக பூர்வமாக அங்கீகரிக்கப்படவில்லை.

1999 ஆம் ஆண்டு யுனெஸ்கோவின் 30ஆவது மாநாட்டில், வருடத்தின் மார்ச் மாதம் 21ஆம் திகதி, சர்வதேச கவிதை தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது. உலகம் முழுவதும் பரந்து வாழும் கவிஞர்களை ஒருங்கிணைக்கும் நாளாக இத்தினம் அமைந்துள்ளது.




சர்வதேச கவிதை தினத்தை உலகெங்கும் வாழுகின்ற கவிஞர்கள், நாடு, மொழி, மதம் என சகல வேறுபாடுகளையும் கடந்து ஒன்று சேர்ந்து உற்சாகமாக கொண்டாடி மகிழ்கின்றனர்.

'கவிதை' என்றால் என்ன? என்பதிலும், 'எது கவிதை' என்பதிலும் பலதரப்பட்ட கருத்துக்கள், பல்வேறு நாடுகளிலும், பல்வேறு மொழிகளிலும், பலவிதமாக காணப்படுகின்றன. இவற்றில் ஒன்றுக்கொன்று நேர்முரணான கருத்துக்களும், வரைவிலக்கணங்களும் கூட இருப்பதை எவராலும் மறுக்க முடியாது. தமிழ் மொழியில் 'மரபுக் கவிதை' என்றும் 'புதுக்கவிதை' என்றும் இரு பெரும் பிரிவுகளாக கவிதைகளை வகுத்து நோக்குவது இன்று பிரபலமாக உள்ள ஒரு விடயமாகும். இவற்றோடு பாடல்களையும் இன்னொரு வகை கவிதையாகக் கொள்கின்றனர்.

இன்றைய காலத்தில் சிறுகதை, கட்டுரை, நாவல், நவீனம் போன்ற பல்துறை படைப்பாளர்களோடு ஒப்பிடும்போது, கவிஞர்களின் எண்ணிக்கையே பலமடங்கு அதிகமாக இருப்பதை எவராலும் மறுக்க முடியாது. 'இலக்கியவாதிகள் அனைவரும் கவிஞர்களே' எனும் அளவுக்கு எல்லோரும் ஏதோ ஒருவிதத்தில் கவிதை எழுதுபவர்களாகவே உள்ளனர் எனலாம். இத்தகைய அனைவரையும் கவிஞர்களாய் ஏற்கலாமா? என்பது விடையில்லா வினாதான்.

நவீன யுகத்தில், சமூக ஊடகங்களின் வளர்ச்சி கவிஞர்களின் எண்ணிக்கையை பல மடங்குகளாக அதிகரித்துள்ளது. பலரும் பல்வேறு கோணங்களில் கவிதை(?) என எழுதிக்கொண்டே இருக்கிறார்கள். இவர்களுக்கென எண்ணற்ற கவிதை குழுமங்கள் கூட உருவாகியுள்ளன. அவை பல்வேறு போட்டிகளை நடாத்தி வெற்றியாளர்களையும் அறிவிக்கின்றன, எனினும் இவற்றில் "கவிதைகள்" என எழுதப்படும் அனைத்தும் உண்மையில் கவிதைகளாக ஏற்றுக்கொள்ளப்பட முடியுமா? என்பது மற்றுமொரு கேள்விக்குறியே!.

கவிஞர்கள் தமது கவிதைகளை, தரமானவையாக, தாக்கம் செலுத்துபவனவாக, நல்ல கருத்துக்களை பரப்புவனவாக, கருத்தாளம் நிறைந்தவையாக, எல்லாவற்றுக்கும் மேலாக கவித்துவம் மிக்கதாக படைப்பது அவசியம். இவற்றை கருத்தில் கொண்டு, கவிதைகள் என்று சொல்லி வெறும் வார்த்தைகளின் கோர்வையை எழுதிடாமல் உண்மையிலேயே கவித்துவம் மிக்க, கருத்தாளம் மிக்க கவிதைகளை எழுத, சர்வதேச கவிதை தினத்தில் உள உறுதி கொள்வதே சிறப்பானது.

## நெஞ்சுக்கு நீதி

**உன்னெழுத்து கூர்வாளாய் மின்னட்டும்**
**மண்ணுலக கொடுமைகளை சாய்க்கட்டும்**
**நல்லவையே கவிதைகளாய் பிறக்கட்டும்**
**நானிலமே நற்கவிகளால் சிறக்கட்டும்!**

## நெஞ்சோடு நெஞ்சம்

கடந்த வாரம் உங்களின், ஜனரஞ்சகமான 'படித்ததும் பகர்வதும்' பத்தியில், முஸ்லிம் சேவையில் நான் தொகுத்தளித்து வரும், 'பாரம்பரியம்' நிகழ்ச்சி பற்றி முழுமையான ஒரு பதிவினை, மிகச்சிறப்பாகப் பதிவு செய்திருந்தீர்கள். இதற்கென கூடுதலான களத்தினையும், வழங்கியிருந்தீர்கள்.

இப்பதிவு, இந்த பயணத்தில், நான் பட்ட கஷ்டங்கள், கவலைகள், சோர்வு, சளிப்பு, அத்தனையையும், மறக்கடிக்கவைத்து விட்டது. இந்நிகழ்ச்சியில், பங்கேற்ற, நம் மூத்த கலைஞர்கள் மனம் திறந்து, ஆத்மார்த்தமாக செய்த பிரார்த்தனைகளில், என்னோடு, கைகோர்த்த உங்களைப்போன்ற அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் பங்குண்டு.

நெஞ்சார்ந்த நன்றிகள்!

**அன்புடன் எம். எஸ். எம். ஜின்னா.**

## வாசித்ததில் வசீகரித்தது

### கவிதை என்றால் என்ன..?
**கி. சிவகுமார்**

'இச்சொல்லை நீக்கி வேறொரு சொல்லை இங்கு அமைத்தால் இக்கருத்தும் அமைப்பும் சிறக்காது' என்று கருதுமளவிற்கு இன்றியமையாத சொற்சேர்க்கையைக் கொண்டு திகழ்வது கவிதை. படிப்போரும் கேட்போரும் மகிழும் வண்ணம் நல்ல நடையுடையதாக விளங்க வேண்டியது கவிதைக்கு அவசியமானதோர் இலக்கணமாகும். கருத்து, உணர்ச்சி, கற்பனை, வடிவம் ஆகியவற்றால் பிற எல்லாவற்றினும் சிறந்திருக்க வேண்டியது கவிதைக்கு மிகத் தேவையான பண்பாகும்.

இலக்கண நூல்களைப் பயின்றும், இலக்கியங்களை இடைவிடாது படித்தும், யாப்பு விதிகளையும், ஓசை நலன்களையும் உள்வாங்கிக் கொண்டு, சீரும் தளையும் சிதையாமல் வரையறுத்த அமைப்பில் பாப்புனைவது மரபுக்கவிதை எனப்படும். இலக்கணக் கட்டுப்பாட்டுக்குள் அடங்காமல் உணர்ச்சி வெளிப்படப் பாடுவது புதுக்கவிதையாகும். இவையன்றி இசைப் பாடல்களும் (சந்தப் பாடல்கள்) கவிதை என்பதற்குள் அடங்குவனவாகும்.

மரபுக் கவிதை: ஆசிரியப்பா, வெண்பா என்னும் பா வகைகளும், ஆசிரிய விருத்தம், கலி விருத்தம் என்னும் பாவினங்களும் மட்டுமே இன்றைய நிலையில் மரபுக் கவிதை வகையில் செல்வாக்குப் பெற்று வருகின்றன. பா வகைகள் சீர், தளை பிறழாதன; பாவின வகைகள் குறிப்பிட்ட வாய்பாடுகளில் அமையும் நான்கு அடிகளை உடையன.

நகை (சிரிப்பு), அழுகை, இளிவரல் (இழிவு), மருட்கை (வியப்பு), அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை (மகிழ்ச்சி) என்பன எண்வகை மெய்ப்பாடுகள் எனப்படும். இவற்றுடன், எதற்கும் கலங்காதிருக்கும் நிலையாகிய சாந்தம் என்பதனையும் சேர்த்து நவரசம் (ஒன்பான் சுவை) என்பர். கற்போர்க்கும் கேட்போர்க்கும் இவ்வுணர்ச்சிகள் பொங்குமாறு மாற்றத்தை ஏற்படுத்துவது கவிதையின்கண் அமையும் உணர்ச்சியாகும்.

புதுக்கவிதை: எதுகை, மோனை வரையறைகளைக் கடந்து, வேண்டாத சொற்களைத் தவிர்த்துச் சுவை மிளிர நடைமுறைச் சொற்களால் கருத்தை உணர்த்துவது புதுக்கவிதையாகும். மேனாட்டாரின் இலக்கியத் தாக்கத்தால் இருபதாம் நூற்றாண்டளவில் தமிழ்மொழியில் சிறந்தெழுந்த வகைப்பாடாகும் இது.

இசைப் பாடல்கள்: கீர்த்தனை, கும்மி, சிந்து என்பன இசைப் பாடல் வகைகளாகும்

## சிந்தனை செய் மனமே

### கணவனும் மனைவியும்

கணவனுக்கும் மனைவிக்குமிடையில் ஒரு சிறிய தகராறு. அது பெரிதாகி ஒருவரோடு ஒருவர் பேசுவதை நிறுத்திவிட்டனர்.



ஒரு நாள் கணவன் தொழில் விடயமாக அதிகாலை 5மணிக்கு புறப்பட வேண்டியிருந்தது. மனைவியிடம் நேரடியாக சொல்ல அவனது சுயமரியாதை இடம் தரவில்லை.

'அதிகாலை 5 மணிக்கு எழுப்பி விடு' என ஒரு தாளில் எழுதி மனைவியின் தலையணையின் மேல் வைத்து விட்டு 'மனைவி காலையில் எழுப்பிவிடுவாள்' என்ற நம்பிக்கையில் தூங்கிவிட்டான்.

காலையில் எழுந்து நேரத்தை பார்த்தால் மணி 7. பயங்கர கோபத்தோடு மனைவியை பார்த்தான். 'ஏன் என்னை எழுப்பி விட வில்லை' என கோபமாக கேட்டான்.

மனைவி அமைதியாக கணவனின் தலையணையை காட்டினாள். அதன் மேல் ஒரு தாளில் மனைவி எழுதிவைத்திருந்தாள் "மணி 5 ஆகிவிட்டது எழுந்திருங்கள்" என்று!

கணவன் மனைவிக்கிடையிலான "ஈகோ"வின் விளைவு இப்படித்தானே இருக்கும்!

## செந்தமிழ் அது தேன் தமிழ்


### "எதனால் எது கெடும்" ஔவைப் பாட்டிமேலும் சொல்கிறார்:

- செல்வம் போனால் சிறப்பு கெடும்.
- சொல் பிறழ்ந்தால் பெயரும் கெடும்.
- தூண்டாத திரியும் கெடும்.
- தூற்றிப் பேசும் உரையும் கெடும்.
- காய்க்காத மரமும் கெடும்,.
- காடழிந்தால் மழையும் கெடும்.
- குறி பிறழ்ந்தால் வேட்டை கெடும்.
- குற்றம் பார்த்தால் சுற்றம் கெடும்.
- வசிக்காத வீடும் கெடும்.
- வறுமை வந்தால் எல்லாம் கெடும்,.
- குளிக்காத மேனி கெடும்.
- குளிர்ந்து போனால் உணவு கெடும்.
- அழகும் கெடும்.
- பொய்யுரைத்தால் புகழும் கெடும்.
- துடிப்பில்லா இளமை கெடும்,.
- துவண்டிட்டால் வெற்றி கெடும்.
- தூங்காத இரவு கெடும்.
- தூங்கினால் பகலும் கெடும்.
- கவனமில்லா செயலும் கெடும்.
- கருத்தில்லா எழுத்தும் கெடும்.

## பேசும் கவிதை

'புரவலர் புத்தகப் பூங்கா'வின் 10வது
வெளியீடான மருதூர் ஜமால்தீனின்
"தடயங்கள்" கவிதை தொகுதியிலிருந்து....

### பாவலர் வேண்டும்!



நாட்டின் நன்மையை நலியா
சேவையை நயந்து பாடிட உள்ளம்
வியந்தே பாடிட
போட்டி பூசலால் புழுகும் மனங்களை
புவியில் வழங்கியே – உண்மை
நவின்று பாடிட – பாவலர் வேண்டும்

அழகை அமைதியை இயற்கை
வளங்களை அன்பில் பாடிட – அதில்
இன்பம் தேடிட
உழைக்கும் கரங்களை உயர்த்தும் வழிகளை
உணர்த்திப் பாடிட – சிந்தை
நிறைந்து பாடிட பாவலர் வேண்டும்

தமிழில் கலைகளில் தரணி சிறந்திடும்
தன்மை பாடிட – அதில்
உண்மை சேர்ந்திட
அமிழும் உணர்வுகள் அகந்தை அமைதியை
அகற்றிப் பாடிட – வாழ்வில்
உகப்பைப் பேணிட – பாவலர் வேண்டும்

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207**

# சிட்டுக்குருவி இனம் உலகில் முற்றாக அழிந்து போகுமா?

**மர்லின் மரிக்கார்**

உலக சிட்டுக்குருவிகள் தினம் (2022.03.20)இன்றாகும். அதன் நிமித்தம் இக்கட்டுரை பிரசுமாகிறது.

இன்றைய நவீன அறிவியல் வளர்ச்சி மனிதனுக்கு அபரிமித நன்மைகளைப் பெற்றுக்கொடுத்துள்ளன. அதேநேரம்அனைத்துஉயிரினங்களுக்கும்அவைதாக்கங்கள் மற்றும் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடியனவாகவும் அமைந்துள்ளன. அதனால் சில உயிரினங்கள் முற்றாக அழிந்து அருகிவிடக்கூடிய அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளன. அவற்றில் சிட்டுக்குருவியும் ஒரு உயிரினமாகக் கருதப்படுகின்றது.

என்றாலும் சிட்டுக்குருவிகள் அவ்வாறான அச்சுறுத்தலை எதிர்கொள்ளவில்லை என்று ஒரு சாராரும் எதிர்கொள்கின்றது என்று மற்றொரு சாராரும் தத்தம் பக்க நியாயங்களை முன்வைத்தபடி தெரிவிக்கின்றனர். ஆனால் நவீன அறிவியல் வளர்ச்சியின் விளைவாக மனிதனின் நடத்தை மற்றும் பழக்கவழக்கங்களில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. உலகம் எமக்கானது எனக் கருதிய சுய நல செயற்பாடுகள் பெரிதும் அதிகரித்துள்ளன. அவற்றின் விளைவான மாற்றங்களும் கூட பறவைகள் உள்ளிட்ட உயிரினங்களின் இருப்புக்கு பெரும் சவால்மிக்க அச்சுறுத்தலாக விளங்குகின்றன.

அந்த வகையில் சிட்டுக்குருவியானது, ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா ஆகிய கண்டங்களின் பல நாடுகளில் காணப்படுகின்றன. இவை பார்ப்பதற்கு மிகவும் சிறியவை. இது வீட்டுக்குருவி, அடைக்கலக் குருவி, ஊர்க்குருவி போன்ற பெயர்களாலும் அழைக்கப்படுகின்றன. இப்பறவை இளம் சாம்பல் கலந்த பழுப்பு நிறத்திலும் காணப்படும். சிறிய அலகு, சிறிய கால்களைக் கொண்ட இப்பறவை 8 முதல் 24 சென்றி மீற்றர்கள் நீளமுடையவை. அதேநேரம் பழுப்பு சாம்பல், மங்கலான வெள்ளை நிறங்களிலும் காணப்படக்கூடிய இப்பறவை, கூம்பு வடிவ அலகுகளையும் 27 முதல் 39 கிராம் நிறை கொண்டவையாகவும் காணப்படக்கூடியன.

இப்பறவைகளின் ஆண், பெண் இனங்களை இலகுவாகக் கண்டறியலாம். ஆண் பறவையின் உடலின் மேற்பகுதியில் தவிட்டு நிறத்தில் மஞ்சளும் கறுப்பும் கலந்த கோடுகளை அவதானிக்கலாம். கீழ்ப்பகுதி வெள்ளை நிறத்தில் காணப்படும்.

அதேவேளை முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து இனப்பெருக்கம் செய்யக்கூடிய இப்பறவையினம், பசரீன்கள் குடும்பத்தைச் சேர்ந்தது. இக்குருவிகளின் வாழ்நாள் சுமார் 13 ஆண்டுகளாகும். இவை மூன்று முதல் ஐந்து முட்டைகள் வரை இடும். அதன் முட்டைகள் பச்சை கலந்த வெள்ளை நிறத்தில் காணப்படும். ஆண், பெண் இரண்டுமே முட்டைகளையும், இளம் உயிரிகளையும் பாதுகாத்து வளர்க்கக்கூடிய பண்பைக் கொண்டிருக்கின்றன. குஞ்சுகள் பெரிதாகும் வரை அவை கூட்டிலேயே இருக்கும். அவை பறக்கத் தொடங்கியவுடன் தனியே பிரிந்து விடும். காகத்திற்கு அடுத்தபடியாக மனிதனுக்கு நன்கு அறிமுகமான பறவையே இது.

மனிதர்கள் வாழும் பிரதேசங்களில் காணப்படக்கூடிய பறவையாக சிட்டுக்குருவிகள் விளங்கிய போதிலும் அவை மனிதர்களோடு பழகுவதுமில்லை. அவற்றை செல்லப் பறவைகளாக வளர்க்கவும் முடியாது. மரத்திலும், வீடுகள் உள்ளிட்ட கட்டடங்களிலுள்ள மறைவான இடங்களிலும் வைக்கோல் போன்ற மெல்லிய பொருட்களைக் கொண்டும்



கூடு கட்டி வசிக்கக்கூடிய இப்பறவை, கிண்ண வடிவில் கூடுகளை அமைக்கக்கூடியனவாகும். குளிர் காலத்தில் கூட்டமாக புதரில் ஒன்று சேர்ந்து இரவைக் கழிக்கும் பண்பையும் கொண்டிருக்கின்றன.

இப்பறவைகள் தானியங்களையும், புழு, பூச்சிகளையும் உணவாக உட்கொள்ளக்கூடியவை. என்றாலும் மலர் மொட்டுகளையும் உண்ணும் பண்பைக் கொண்ட சிட்டுக்குருவிகளும் இவற்றில் உள்ளன.

## இரைதேடுவதில் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்

எனினும் வீட்டுக்குத் தேவையான உணவுத் தானியங்கள் வீட்டு முற்றத்திலும் திறந்த வெளியிலும் உலர வைக்கும் பழக்கம் நீண்ட காலமாக மனிதனிடம் காணப்பட்டன. அதன் பயனாக இறைதேடிக் கொள்வதில் இக்குருவிகளுக்கு எவ்விதப் பிரச்சினையும் இருக்கவில்லை. ஆனால் அறிவியல் வளர்ச்சியின் விளைவாக அண்மைக்காலம் முதல் தானியங்கள் உள்ளிட்ட அனைத்து உணவுப் பொருட்களும் பொலித்தீன் பைகளில் பொதியிடப்படும் பழக்கம் மனிதனில் குடிபுகுந்துள்ளன. பலசரக்கு கடைகளும் மூடுண்ட, பல்பொருள் அங்காடிகள் நிலையங்களாக மாறி வருகின்றன. அங்கும் பொலித்தீன் பைகளில் தானியங்களை அடைத்து விற்பனை செய்யப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக தானியங்கள் சிதறுவதற்கான வாய்ப்புக்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. அதனால் வீடுகளிலும் பல சரக்கு கடைகளிலும் இரைதேட முடியாத நிலைக்கு இப்பறவை இனம் உள்ளாகியுள்ளன.

## இரசாயனப் பாவனை அதிகரிப்பு

அதேநேரம் மனித செயற்பாடுகளால் சுற்றுச்சூழலில் ஏற்படும் மாற்றங்களும் இப்பறவை இனத்தின் இருப்புக்கு பெரும் அச்சுறுத்தலாகியுள்ளதாக சூழலியலாளர்கள் தெரிவித்துள்ளனர். விவசாய நிலங்களுக்கு பயன்படுத்தப்படும் இரசாயனப் பசளை, கிருமி நாசினி, களைக்கொல்லி என்பன இதற்கு பாரிய பங்களிப்பு நல்கியுள்ளன. இதன் விளைவாக இப்பறவை இனம் உணவாகக் கொள்ளும் விவசாய நிலங்களில் காணப்படும் பூச்சி இனங்களும் புழுக்களும் அழிக்கப்படுகின்றன.

அதனால் இப்பறவை இனம் இரண்டு விதமான அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுத்துள்ளன. அவற்றில் ஒன்று வீட்டுத்தோட்டங்கள், வயல்களுக்கு இரசாயனப் பசளை மற்றும் கிருமிநாசினிப் பாவனையால் வண்டுகள், புழுக்கள் மற்றும் பூச்சி இனங்களும் சுற்றாடலில்





அழிவடைந்து வருகின்றன. இதன் விளைவாக இப்பறவை இனம் உணவை இழந்து வருகின்றன. மற்றையது இரசாயனப் பசளை மற்றும் கிருமிநாசினிகளால் உயிரிழந்த பூச்சி புழுக்களையும் உணவாக கொள்ளும் நிலைமைக்கு இப்பறவை இனம் சில சந்தர்ப்பங்களில் முகம் கொடுக்கின்றன. அதனால் அவை ஒன்றில் உயிரிழக்கின்றன அல்லது அவற்றின் இனப்பெருக்கத் தொகுதிகளில் நச்சு இரசாயனத் தாக்கம் ஏற்பட்டு இனப்பெருக்கம் செய்ய முடியாத நிலைக்கு உள்ளாகின்றன.

மேலும் எரிவாயுக்களில் இருந்து வெளியேறும் மெத்தைல் நைத்திரேட்டு எனும் இரசாயனக் கழிவுப் புகையால் காற்று மாசடைகின்றன. அதன் விளைவாகவும் பூச்சி இனங்கள் அழிவடைகின்றன. இவற்றின் விளைவாக இரை தேடுவதில் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள சிட்டுக்குருவிகள், உணவுப் பற்றாக்குறைக்கும் முகம் கொடுத்துள்ளன.

## கூடமைப்பதில் ஏற்பட்டுள்ள சிக்கல்

மேலும் இப்பறவை இனம் மெல்லிய நார் போன்ற நூலிழைகளைக் கொண்டு கூடமைத்து வாழும் பழக்கத்தைக் கொண்டிருக்கின்றன. ஆனால் மனிதனின் நடத்தை மற்றும் பழக்கவழக்கங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் விளைவாக சுற்றுச்சூழலில் இவ்வாறான நூலிழைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைக்கு இப்பறவை இனம் உள்ளாகியுள்ளன. அத்தோடு இப்பறவை இனம் கூடமைப்பதற்கு பயன்படுத்தும் பொருட்களில் மரங்கள், தாவரங்களில் இருந்து பெறும் பொருட்களும் அடங்கும். காடழிப்பு காரணமாக அவற்றைப் பெற்றுக்கொளள முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளன.

அதேநேரம் மனிதன் வாழும் சூழலில் மனிதக் குடியிருப்புக்களில் கூடமைத்து வாழ்ந்து பழக்கப்பட்ட இப்பறவை இனம், அண்மைக் காலம் முதல் கூடுகளை அமைத்துக் கொள்வதற்கான வசதிகளை வீடுகளில் இழந்துள்ளன. குறிப்பாக கொங்கிறீட் கட்டடங்களாகவும் கூடுகளை அமைக்கக்கூடிய வசதிகளைக் கொண்டிராதவையாகவும் வீடுகள் அமைக்கப்படுகின்றன.

அத்தோடு வீடுகள் பெரும்பாலும் மின்வசதியைக் கொண்டிருப்பதால், காற்றாடி, அதிக வெப்பம் கொண்ட மின்விளக்குகள் பயன்படுத்தப்படுபவையாக உள்ளன. அத்தோடு வெளிக்காற்று வீட்டிற்குள் வர முடியாதபடி, வீடு முழுவதும் குளிரூட்டப்பட்ட அறைகள் உருவாக்குவதால், அதில் குருவிகள் கூடுகட்டி குடியிருக்க முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளன.

இவை இவ்வாறிருக்க, தொலைபேசி கோபுரங்களில் இருந்து வெளிப்படும் கதிர்வீச்சுக்களும் சிட்டுக்குருவிகளுக்கு தாக்கம் மிக்கவையாக அமைவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக ஸ்பெய்னில் நடாத்தப்பட்ட ஆய்வொன்றில் இந்த விடயம் கண்டறியப்பட்டது. ஆனால் தொலைத்தொடர்பு கோபுரங்களால் சிட்டுக்குருவிகளுக்கு பாதிப்பு ஏற்படுவது தெற்காசிய பிராந்திய நாடுகளில் உறுதிப்படுத்தப்படவில்லை என்று பறவையியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.


என்றாலும் தொழிற்சாலைகளின் அதிகரிப்பு, இரைதேடும் இடங்களான வயல் வெளிகள் நிரப்பப்பட்டு வீடுகள் அமைக்கப்படுதல், விவசாய நிலங்களுக்கு இரசாயனப் பாவனை அதிகரிப்பு என்பன சிட்டுக்குருவிகளின் வாழ்க்கை வட்டத்தில் தாக்கம் செலுத்தவே செய்யும் என்பதே சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கருத்தாகவே உள்ளது.

இவ்வாறான நிலையில் சிட்டுக்குருவிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டு வருவதை 1990 களில் அவதானித்த ஆய்வாளர்கள்சிட்டுக்குருவிகளைப்பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தியுள்ளனர். இதன் அவசியம் பரவலாக உணரப்பட்டுள்ளது. அதற்கேற்ப மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 2010 மார்ச் 20 ஆம் திகதி முதல் வருடாந்தம் உலக சிட்டுக்குருவிகள் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

யாதுமறியா அப்பாவிகளான சிட்டுக்குருவிகள் மனிதனின் தவறான செயற்பாடுகளால் எதிர்கொண்டுள்ள அச்சுறுத்தல்களில் இருந்து அவற்றைப் பாதுகாப்பதற்காக ஒவ்வொருவரும் பங்களாரகளாக வேண்டும். அது சிட்டுக்குருவிகளின் இருப்புக்கு ஆற்றும் பாரிய சேவையாக அமையும்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மார்ச் மாதம் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2022 மார்ச் 20 ஞாயிற்றுக்கிழமை
அபிநய கலாகேந்திர
நாட்டியப்பள்ளி
இயக்குனர்
சிகிவாகினி லிங்கநாதன்



# உலகத் தலைவர்களே! கொசு விரட்டுவது கூட கவனம்

அமெரிக்க பாதுகாப்பு தலைமையகமான பெண்டகனுக்கு எதையெல்லாம் பார்க்க வேண்டும் என்று விவஸ்தை இல்லை. உலகத் தலைவர்களின் சாதாரண நடத்தைகளைக் கூட உன்னிப்பாக கவனிப்பதற்கு என்றே தனி பிரிவு ஒன்று இருக்கிறது. உதாரணத்திற்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் நடத்தை எப்போதுமே புதிராகவே இருக்கும், ஒரு நாளைக்கு வெற்று உடம்போடு போஸ்ட் கொடுப்பார், மற்றொரு நாளைக்கு ஜுடோ விளையாடுவது போல் போஸ்ட் கொடுப்பார், ஏதாவது கேள்வி கேட்டால் திருட்டுப் பார்வை பார்த்துக் கொண்டு நையாண்டியாக பதில் கூறுவார். இதையெல்லாம் நாம் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டுதான் இருக்கிறோம் என்று பெண்டகனே ஒருநாள் வெளிப்படையாக கூறியது.

இப்படி உலகத் தலைவர்களை அவதானிப்பதற்காக மாத்திரம் பெண்டகன் ஆண்டுக்கு 300,000 டொலர்களை செலவு

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

# நாயாக வாழ்ந்த பெண்



உக்ரைனைச் சேர்ந்த ஒக்சானா மலாயா என்ற பெண்ணை எல்லோருமே 'நாய் சிறுமி' என்றே அழைப்பார்கள். அது அவரை திட்டுவதற்காகவல்ல. நினைவு தெரிந்த நாட்களில் நாயுடனே வளர்ந்ததால் முற்று முழுதாக நாயின் நடத்தைகளை வெளிப்படுத்தியதால் அவர் உலகப் புகழ் பெற்றார்.


1983 ஆம் ஆண்டு பிறந்த மலாயாவின் குடிகார பெற்றோர் அவளை தவழும் வயதிலேயே கைவிட்டுவிட்டார்கள். இதனால் அந்த குழந்தை நாய்களுடனேயே வளர்ந்திருக்கிறது, இல்லையென்றால் நாய்களே அந்த குழந்தையை வளர்த்திருக்கிறன.

நாய்களிடம் இருந்து அதிகாரிகளால் அவர் மீட்கப்பட்டபோது அவருக்கு ஏழரை வயதாக இருந்தது. நடத்தைகள் செயற்பாடுகள் எல்லாமே நாய் போலத்தான் இருந்தது. இரண்டு கால்கள், இரண்டு கைகளின் உதவியுடனே நடப்பார், ஓடுவார். குரைப்பார், நாய்கள் படுப்பது போலவே நிலத்தில் படுப்பார், சாப்பிடுவது கூட நாய்போல இருந்தது.

அதிகாரிகள் அவளை விசேட தேவையுடையவர்களுக்கான இல்லம் ஒன்றுக்கு அனுப்பியே சாதாரண மனிதராக மாற்றினார்கள். இப்போது மலாயா சாதரணமாக பேசுவார், நடப்பார், சாப்பிடுவார் உறங்குவார்.

ஆனால் அவரை உலகம் இன்றும் விட்டுவிடவில்லை. உக்ரைன் தொலைக்காட்சிக்கு அண்மையில் பேட்டி அழித்த மலாயா, 'தயவு செய்து என்னை மனிதனாக பாருங்கள்' என்று மன்றாடினார்.

# 1974இல் முடிந்த இரண்டாவது உலகப் போர்!



ஹிரோஷிமா, நாகசாகி மீது அமெரிக்கா அணு குண்டு போட்டபின் இன்னும் போர் செய்ய முடியாது என்று 1945 ஓகஸ்ட் 15 ஆம் திகதி ஜப்பான் சரணடைந்தது. இரண்டாவது உலகப் போரும் முடிந்தது.

ஆனால் ஜப்பானின் ஒரே ஒரு வீரர் மாத்திரம் சரணடையாமல் தொடர்ந்து தனியே போர் செய்தார். அவரது பெயர் லெப்டினென்ட் ஹிரூ ஒனொடோ. போர் நடந்துகொண்டிருந்தபோது 22 வயது ஒனொடோ ஒரு உளவு அதிகாரியாக பிலிப்பைன்ஸின் லுபங் தீவில் இருந்தார். எதிரிகளின் செயல்களை குழப்புவதும் தடங்கல் ஏற்படுத்துவதுமே இவரின் வேலை.


1945இல் நேசப்படை அந்த தீவை அடைந்தபோது ஒனொடோவுடன் மேலும் மூன்று ஜப்பான் வீரர்கள் சரணடையாமல் இருந்தார்கள். மலை உச்சி ஒன்றுக்கு போய் ஒளிந்துகொண்ட இவர்கள் கெரில்லா யுத்தம் செய்து வந்தார்கள். 1945 கடைசி வாக்கில் போர் முடிந்து விட்டது என்று இவர்களுக்கு வானில் இருந்து துண்டு பிரசுரங்கள் கூட போட்டுப்பார்த்தார்கள். அதனையும் நம்பாத இவர்கள் விடாப்பிடியாக சண்டை பிடித்தார்கள்.

என்றாலும் ஒனொடோவின் ஒரு சகா 1950இல் சரணடைந்ததோடு மற்றொரு சகா 1954இல் தேடுதல் வேட்டையில் கொல்லப்பட்டார். தன்னுடன் இருந்த கடைசி வீரரும் 1972இல் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார். கோபப்பட்ட ஒனொடோ உள்ளுர் அரிசிக் கடை ஒன்றுக்கு தீ வைத்தார்.

1974இல் ஒனொடோவை அந்த காட்டுக்குள் சந்தித்த ஜப்பானிய இளைஞர் ஒருவர் நாட்டுக்கு வரும்படி அழைத்தபோது, எனது உயர் அதிகாரியின் உத்தரவு வரும் வரை வர மாட்டேன் என்று கூறிவிட்டார். கடைசியில் ஜப்பான் அரசு ஒனொடோவின் கட்டளை அதிகாரியை தேடிப்பிடித்து பிலிப்பைன்ஸ் தீவுக்கு அனுப்பி சரணடைய வைத்தது. அதாவது இரண்டாவது உலகப் போர் முடிந்து 29 ஆண்டுகளின் பின்னரே ஒனொடோ சரணைந்தார்.

# விசித்திரமாக வெற்றியை கொண்டாடிய மன்னர்

பண்டைய எகிப்தின் பிரபல பாரோ மன்னரான இரண்டாவது ரம்சிஸின் மகன் மெர்னெபெடா ஆட்சிக்கு வந்தது ஒரு அதிர்ஷ்டம். ஏனென்றால் மன்னரின் பதின்மூன்றாவது மகன் தான் மெர்னெபெடா. ஆனால் மூத்த சகோதரர்கள் எல்லாம் இறக்கவே அவரின் தலையில் கிரீடம் ஏறியது. ஆனால் மெர்னெபெடா ஒரு குரும்புக்கார கொடூரமான ஆள். அப்போது எகிப்திய பேரரசுக்கு பெரும் சவாலாக இருந்தவர்கள் லிபியர்கள். அப்பேர்ப்பட்ட லிபியர்களை வீழ்த்தினார் மெர்னெபெடா. ஆனால் ஊரில் தான் வெற்றி பெற்றதை நம்பமாட்டார்கள் என்று நினைத்த அவர் 6000 எதிரிகளின் ஆணுறுப்புகளை அறுத்து நாட்டுக்கு எடுத்துச் சென்றாராம்.




# தொழிலுக்கு வேட்டு வைத்த அலாரம்

அலாரம் கடிகாரம் கண்டுபிடிக்கப்பட்டது எத்தனையோ பேரின் தொழிலுக்கு வேட்டு வைத்தது தெரியுமா? முன்னர் நேரத்துக் எழுப்புவதற்கு என்றே தனி நிறுவனங்கள் இருந்து வந்தன. தம்மை இத்தனை மணிக்கு எழுப்ப வேண்டும் என்று ஒருவர் கேட்டுக் கொண்டால் நீண்ட தடியுடன் வீட்டுக்கு முன் வரும் நபர் கதவு அல்லது ஜன்னலை அந்தத் தடியால் தட்டி அவரை எழுப்பி விட்டுச் செல்வார். இந்த பழக்கம் 1920கள் வரை நீடித்தது.



# உலகை அச்சுறுத்தும் அணுக்குண்டை தயாரிக்க முதன் முதலில் யோசனை தெரிவித்த யூத விஞ்ஞானியான அல்பேட் ஐன்ஸ்டீன்!



**கடவுள் இந்த உலகை எப்படி படைத்தான் என்று ஒரு நாள் கண்டு பிடித்து விட வேண்டும் என்று கூறினாராம் ஒருவர்! அவர்தான் அல்பேட் ஐன்ஸ்டீன்.**

அல்பேட் ஐன்ஸ்டீன் 1879ம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி ஜெர்மனியிலுள்ள உல்ம் என்ற சிற்றூரில் ஹெர்மன் ஐன்ஸ்டீன், பாலைன் ஐன்ஸ்டீன் என்ற யூத தம்பதியினருக்கு மகனாக பிறந்தார்.

குழந்தைப் பருவத்தில் மற்ற குழந்தைகளைப் போன்று ஓடியாடி விளையாட விரும்பமாட்டார். சிறு வயதில் பேசுவதற்கு மிகவும் சிரமப்பட்டார். இவரது பேச்சுக்கள் குளறலாகவே வெளிப்படும்.

அல்பேட் ஐன்ஸ்டீன் சிறு வயதாக இருந்தபோது இவரது தந்தையார் இவருக்கு ஒரு சட்டைப்பையில் வைக்கக் கூடிய திசையறி கருவியைக் காட்டினார் அந்த வயதிலேயே அவர் ஏதுமற்ற வெளியில் ஏதோ ஒன்று காந்த ஊசியில் தாக்கம் ஏற்படுவதை புரிந்து கொண்டார். சிறு வயதிலேயே எந்தவொரு விடயத்தையும் ஆராயக் கூடியவராக இருந்தார். இதுவே பின்னர் விஞ்ஞானியாக இவர் மாறுவதற்கு காரணமாக அமைந்தது.

இவர் இளம் வயதிலேயே கணிதத்தில் தீவிர ஆர்வம் காட்டினார். 12 ஆவது வயதிலே கேத்திர கணிதத்தை சுயமாக கற்றுக் கொண்டார். தனது 15 ஆவது வயதில் குடும்பத்தினருடன் இத்தாலியிலுள்ள மிலான் நகருக்கு செல்ல வேண்டியேற்பட்டது. அதன் பின்னர் சுவிட்சர்லாந்திலுள்ள பாடசாலை ஒன்றில் சேர்ந்து தனது இடைநிலைக் கல்வியை பூர்த்தி செய்தார். பின்னர் சூரிச்சில் உள்ள தேசிய தொழில்நுட்பக் கல்லூரியில் உயர் கல்வியைத் தொடர்ந்தார். அக் கல்லூரியின் கற்பித்தல் முறைகள் அவருக்குப் பிடிக்கவில்லை. எனவே அவர் அதிகமாக வகுப்புக்கு செல்வதில்லை அந்த நேரத்தில் சுயமாக பௌதிகவியலைக் கற்றுக் கொண்டார். அவர் வகுப்புக்கு அதிகம் செல்லாத காரணத்தினால் வகுப்பு தோழனின் உதவியுடன் குறிப்புக்களை கேட்டு குறித்து படித்து கொண்டார். 1900 ஆம் ஆண்டில் பட்ட பரீட்சையில் சித்தி அடைந்தததும் 21.02.1901 இல் சுவிஸ் குடியுரிமையும் அவருக்கு கிடைத்தது. அவர் சித்தி அடைந்தாலும் பேராசிரியர்கள் மத்தியில் இவருக்கு எவ்வித உயர்வான நல்ல அபிப்பிராயமும் இல்லை. ஏனென்றால் இவர் கல்லூரிக்கு ஒழுங்காக சமூகமளிப்பதில்லை. எனவே பேராசிரியர்கள் இவரை பல்கலைக்கழக உயர் பதவிகளுக்கு சிபாரிசு செய்யவில்லை.

அவருக்கு கிடைத்த முதலாவது தொழில் விஞ்ஞானிகளின் கண்டு பிடிப்புகளை பதிவு செய்து ஆராய்வது. அந்த வேலையில் அதிக ஓய்வு நேரம் இருந்ததால் அவர் சொந்தமாக பல ஆராய்ச்சிகளை செய்ய உதவியாக இருந்தது. அவர் பல ஆய்வு கட்டுரைகளையும் எழுத தொடங்கினார். மூலக்கூறுகளின் பரிமாணங்கள் பற்றிய ஆய்வுக்காக அல்பேட் ஐன்ஸ்டீன் அவர்களுக்கு கலாநிதி பட்டம் கிடைத்தது.

1898 ஆம் ஆண்டில் அல்பேட் ஐன்ஸ்டீன் மாணவனாக இருந்த போதே வகுப்புத் தோழியான மிலேவா மாரிக் என்ற பெண்ணை காதலித்த போது ஒரு குழந்தையும் திருமணமான (06.01.1903) பின்பு ஒரு குழந்தையும் கிடைத்தது. பிள்ளைகள் பெற்ற மிலேவா மாரிக் போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டன. உலக மேதையான ஐன்ஸ்டீன் உள்ளத்தை புரிந்துகொள்ள விரும்பாத அவரது மனைவி ஐன்ஸ்டீனை விட்டு பிரிந்தார் (14.02.1919). அல்பேட் ஐன்ஸ்டீன் தனக்கு ஒரு துணை வேண்டி தம் தேவைகளை அறிந்து தாயுள்ளத்தோடு நடந்து கொள்கின்ற ஒரு பெண்ணை தேடினார். அவருடைய உறவுக்கார பெண்ணான எல்ஸா லொவென்தால் என்ற பெண்ணை மணந்தார். திருமணமான சிறிது காலத்திலேயே எல்ஸா மறைந்தார். அறிவாற்றலைக் கண்டு காதலித்து திருமணம் செய்த மிலேவா மாரிக் அவரின் பிரிவும், தம் உறவுக்கார பெண்ணான எல்ஸாவின் மறைவும் ஐன்ஸ்டீனை யோசிக்க வைத்தது. இதுபோன்ற நிகழ்ச்சிகள் தமது எதிர்கால வெற்றிகளுக்கு தடைக்கற்களாக இருப்பதை நினைத்து ஒரு முடிவுக்கு வந்தார். இனி எஞ்சிய காலத்தை தனியாகவே வாழ்ந்து முடிப்பது என்று ஐன்ஸ்டீன் உறுதி பூண்டார்.

அணுக்குண்டைத் தயாரிப்பதற்கு தேவையான (Theory of Relativity) சார்புக் கொள்கையை (E = mc 2) கண்டுபிடித்து 1905 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27 ஆம் திகதி வெளியிட்டார். இந்த சூத்திரம்தான் அணுக்குண்டு தயாரிப்பின் அடிப்படை ஆகும். இந்தக் கண்டுபிடிப்பின்போது ஐன்ஸ்டீனை வெள்ளை முடியும் சுருக்கம் விழுந்த வயதான மனிதராக பலர் உருவகப்படுத்திக் கொள்கின்றனர். ஆனால், அப்படியல்ல. இச் சமன்பாட்டை உருவாக்கியபோது ஐன்ஸ்டீன் வயோதிபர் இல்லை. துடிதுடிப்பும் துள்ளலும் நிறைந்த 26 வயது நிரம்பிய இளைஞர்.

அமெரிக்காவில் பிரின்ஸ்டன் சர்வகலாசாலையில் இயற்பியல் பேராசிரியராக பணி புரிந்தார்.

ஜெர்மனியில் ஹிட்லரின் ஆட்சியில் அணுக்குண்டைத் தயாரிக்கும் வல்லமை இருப்பதை அங்கிருந்த யூதர்களின் மூலம் அறிந்துகொண்டார். 1939 இல் ஐன்ஸ்டீன் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் அணு ஆயுதங்கள் தயாரிப்பதற்கான வாய்ப்புக்களை விளக்கி இருந்தார். ஜெர்மனி அணுக்குண்டு செய்வதை அமெரிக்கா தடுத்து நிறுத்த வேண்டும் அல்லது ஜெர்மனியர்கள் அணுக்குண்டு தயாரிப்பதற்கு முன்னராக அமெரிக்கா தயாரித்து விட வேண்டும் என்றும் வலியுறுத்தி இருந்தார். அல்பேட் ஐன்ஸ்டீன் ஜெர்மனி அணுக்குண்டு செய்வதை அமெரிக்கா தடுத்து நிறுத்த வேண்டும் என்பதையே விரும்பினார். ஆனால், அமெரிக்க ஜனாதிபதியோ அணுக்குண்டு தயாரிக்க வேண்டும் என்பதையே விரும்பினார். அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் அவர்கள் ஐன்ஸ்டீனுடன் அணுக்குண்டு தயாரிப்பதற்கு பொறுப்பாக இருக்குமாறு கூறினார். ஆனால், அதை ஐன்ஸ்டீன் விரும்பவில்லை. அணுக்குண்டு தயாரிக்க தேவையான சகல யோசனைகளையும் தருகிறேன். மற்ற விஞ்ஞானிகளைக் கொண்டு அவசரமாக தயாரித்துக் கொள்ளுங்கள் என்று கூறி ஒதுங்கி விட்டார். அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் வேறொரு விஞ்ஞானியை வைத்து அணுக்குண்டை தயாரித்தார். இரண்டாவது உலக மகா யுத்தம் நடந்தபோது அந்த அணுக்குண்டினால் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6 ஆம் திகதி உலக வரலாற்றில் ஒரு கரும்புள்ளி தோன்றியது. அதன் தாக்கம் இன்னும் மறையவில்லை. ஜப்பானிலுள்ள ஹிரோஷிமா, (3 நாட்களுக்குள்) நாகசாகி ஆகிய நகரங்களின் மீது அமெரிக்கா அணுக்குண்டை வீசியது. ஆயிரம் ஆயிரமாய் அப்பாவி உயிர்கள் பலியெடுக்கப்பட்டன. பல ஆயிரம் மக்கள் ஊனமுற்றனர். இன்றும் அங்கு பிறக்கும் குழந்தைகளில் சிலர் மந்தமாக பிறக்கின்றனர்.

அல்பேட் ஐன்ஸ்டீன் தான் கண்டுபிடித்த ஒரு விடயம் மக்களை அழிக்கப் பயன்படுவதை எண்ணி மிகவும் மனம் வருந்தினார்; விம்மி விம்மி அழுதார். எனினும், ஆக்க வேலைகளுக்கு பயன்படும் என கண்டறிந்த பின்னரே அவரது மனம் சமாதானம் அடைந்தது.

அல்பேட் ஐன்ஸ்டீன் யூதர் என்பதால் சியோனிச ஆதரவாளராக திகழ்ந்தார். ஆனால், மற்றைய சியோனிச தீவிர ஆதரவாளர்கள் போலல்லாது நேர்மையானவராக காணப்பட்டார். இதற்கு சான்று பகர்கிறது இந்த விடயம். உலகப்புகழ் பெற்ற விஞ்ஞானி ஐன்ஸ்டீன் ஒரு யூதர். உருவாகும் இஸ்ரேல் நாட்டிற்கு அவரே முதல் ஜனாதிபதியாக இருக்க வேண்டும் என்பதை யூதர்கள் மட்டுமல்ல அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளும் விரும்பின. இன்னொருவர் பூமியை ஆக்கிரமித்து உருவாக்கும் ஒரு நாட்டிற்கு தான் ஜனாதிபதியாக இருக்க முடியாது என்று அறிவித்து ஐன்ஸ்டீன் விலகிவிட்டார்.

அல்பேட் ஐன்ஸ்டீன் தமது சார்புக் கொள்கைக்காக புகழ் பெற்ற போதிலும் அவருடைய ஒளி மின்விளைவு (Photo Eletcric Effect) ஆராய்ச்சிக்காக இவருக்கு இயற்பியலுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

அல்பேட் ஐன்ஸ்டீன் வாழ்நாள் முழுவதும் எளிய வாழ்க்கையே வாழ்ந்து வந்தார். இவர் நயமான நகைச்சுவை உணர்வுடையவராகவும் மிகுந்த தன்னடக்கம் வாய்ந்தவராகவும் திகழ்ந்தார். வயலின் இசைப்பதிலும் அவர் ஓரளவு திறமை பெற்றிருந்தார்.

அல்பேட் ஐன்ஸ்டீன் அமெரிக்காவிலுள்ள பிரின்ஸ்டன் நகரில் 1955 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி தனது 76 ஆவது வயதில் காலமானார். உயில் மூலமாக தனது மூளையையும் உடலின் சில பகுதிகளையும் ஆய்வுக்காக தானமாக வழங்கினார்.

இன்று உலகில் அணு உலைகள் மூலமாக ஆயிரக்கணக்கான மெகா வாட் மின்னுற்பத்தி செய்யப்படுகிறது. இதன் பலன் மக்களுக்கு நேரடியாக கிடைக்கத்தான் செய்கிறது. ஆனால், உலகம் அச்சுறுத்தலுக்கும் உட்படுத்தப்படுகிறது. உலகம் முழுவதும் 437 அணு உலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதன் மூலமாக 3,80,250 மெகா வாட் மின்னுற்பத்தி செய்யப்படுகிறது. மேலும் புதிதாக 66 அணு உலைகள் விரைவில் செயற்பட பணிகள் துரிதமாக இடம்பெறுகிறது. அணுசக்திக்கு உலகில் ஆதரவும் எதிர்ப்பும் பலமாக இருக்கிறது. வளர்ச்சியடைந்த நாடுகள் அணு உலைகளை கொஞ்சம் கொஞ்சமாக மூடுவதற்கு முடிவு செய்திருக்கின்றன. ஆனால், மூன்றாம் உலக நாடுகள் அணு உலைகளை அதிகமாக தொடங்க முடிவு செய்திருக்கின்றன. வளர்ச்சியடைந்த நாடுகள் பல மூன்றாம் உலக நாடுகளில் அணு உலைகளை அமைத்துக் கொடுக்க ஆர்வம் காட்டுவது ஏன்? சாதாரண நாடுகளுக்கு உள்ளேயும் புகுந்து குழப்பங்களை ஏற்படுத்துவதுதான் நோக்கமா? ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டமாம்.

இந்தியாவில் 21 அணு உலைகளும் பாகிஸ்தானில் 3 அணு உலைகளும் அமைத்து செயற்பட்டு வருகின்றன. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான காஷ்மீர் பிரச்சினை அதிகரித்துக்கொண்டு போகும் இக்காலகட்டத்தில் இரு நாடுகளிலும் அணு உலைகள் செயற்படுவது நல்லதல்ல. இரு நாடுகளும் நாசமாகி விடும். எனவே, அணு உலைகளை படிப்படியாக மூடிவிட்டு மாற்று மின்சக்தி திட்டங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். இது அணு உலைகளை வைத்திருக்கும் சகல நாடுகளுக்கும் பொருந்தும்.



பரீட் இக்பால்
யாழ்ப்பாணம்

தினகரன் வாரமஞ்சரி வானவில் ஊடக அனுசரணையில்

# இந்திய வம்சாவளி அமைப்பின் முப்பெரும் விழாவும் திரை நட்சத்திரங்களின் எடிசன் விருது வழங்கும் விழாவும்



































எப்போ பார்த்தாலும் மரத்து மேல் ஏறி உக்கார்ந்திருக்காரே யார் இவர்?
இவர் தாங்க எங்க கிளை செயலாளர்.



ஏன் உங்க மாப்பிள்ளை எப்ப உங்க வீட்டுக்கு வந்தாலும் ராத்திரி மட்டும் தங்கவே மாட்டேங்கிறாரு?
அவரு எங்க வீட்டுல தலைவச்சுப் படுக்க மாட்டேன்னு ஒரு தடவை சண்டையில சொல்லிட்டாரு...



என்னங்க! கல்யாணப் பொண்ணுக்கு கழுத்துல, இடுப்புல, கைலன்னு எல்லா இடத்திலேயும் பூவிலேயே அலங்காரம் பண்ணி இருக்கீங்க?
நீங்கதானே பொன் வைக்கிற இடத்துல பூவை வைங்கன்னு சொன்னீங்க

# சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி

தண்ணீரை தண்ணி னு சொல்லலாம்! ஆனா பன்னீரை பன்னி னு சொல்ல முடியுமா?

அவர் வாரிய தலைவரா!
ஆமாம், பல பேர் காலை வாரிய தலைவர்!

டாக்டர் செலவு மட்டும் எனக்கு மாசம் ஐநூறு ரூபாய் ஆகுது.
டாக்டரோட செலவைப்போய் நீங்க ஏன் பண்றீங்க?



என்ன சார்? ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் அப்படீங்கறிங்க, சாப்பாட்ல கல் இருக்கே?
ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்ங்கிறதுக்காக வைரக் கல்லா சார் போட முடியும்?



உங்க மகன் சிகரெட் பிடிக்கிறானே! உங்களுக்கு தெரியுமா?
எனக்கு சிகரெட் பிடிக்க தெரியாதுங்க!



ஏன் பாத்ரூம் கதவை திறந்து வச்சுகிட்டே குளிக்கிற?
அப்பதான் யாராவது எட்டிப் பார்த்தா தெரியும்!



உங்க கடிகாரம் ஓடாதா?
நான் தான் அதை கையில் கட்டியிருக்கேனே.



பொலிஸ்காரர் அடிச்ச உடனே அந்த ஆளுக்கு பேச்சே வர்லைங்க ஏன்?
ஊமைக்காயம் பட்டுடுத்தாம்.

தினகரன் வாரமஞ்சரி வண்ண வானவில் ஊடக அனுசரணையில்

## ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணனின்

# கடிஜோக்ஸ் இறுவட்டு வெளியீட்டு விழா



















படங்கள்: எம். நஸார்

தினகரன் வாரமஞ்சரி வானவில் ஊடக அனுசரணையில்

# அகில இலங்கை கிராமிய கலை ஒன்றியத்தின் கிரிக்கெட் திருவிழா













படங்கள்: எம். நஸார்





# சினி பஜார் கேள்வி பதில்



மொழிவாணன்

**ஜே.எம்.முனவ்வரா. மாவனல்ல.**

**கேள்வி :** புதுமை இயக்குநர் பார்த்திபன் இயக்கத்தில் வெளியாகி விமர்சன ரீதியாகவும் வசூல் ரீதியாகவும் வெற்றி பெற்ற திரைப்படமான 'ஒத்த செருப்பு சைஸ்7' படம் இந்தியிலும் தயாராகிறதா..?




**பதில்:** ஆமாம் இந்தப் படம் தற்போது அபிஷேக் பச்சன் நடிப்பில் ஹிந்தியில் ரீமேக்காகி வருகிறது... இதனை பார்த்தீபனே இயக்கி வருகிறார்...இதனைத் தொடர்ந்து ஒரே ஷொட்டில் படமாக இருக்கும் 'இரவின் நிழல்'என்றபடத்தின் பணிகளில் ஈடு பட்டு வருகிறார் பார்த்தீபன்.

**ஆர் .எஸ். சுவாதி வவுனியா.**

**கேள்வி :** நடிகை கீர்த்தி சுரேஸ் வீடியோ இசை அல்பத்திலும் நடிக்கப் போகிறாராமே... உண்மையா...?

**பதில்:** சிறந்த நடிகைக்கான தேசியவிருது பெற்ற நடிகை கீர்த்தி சுரேஷ் வண்ணத்திரை ,சின்னத்திரை,டிஜிட்டல் திரை என் மூன்று திரை வடிவங்களிலும் தன் திறமையை வெளிப்படுத்தி இருக்கிறார்.இதனைத் தொடர்ந்து முதன் முதலாக இன்றைய இளம் ரசிகர்களை கவரும் விதத்தில் வீடியோ இசை அல்பத்திலும் நடிக்க சம்மதித்துள்ளார். 'ஹே சினாமிகா'படத்தின் மூலம் இயக்குநராக அறி. முகமாகும் நடன இயக்குநர் பிருந்தாவின் நடனம் மற்றும் இயக்கத்தில் தயாராகி மினுங்கும் 'காந்தாரி'இசை ஆல்பத்தில் நடிகை கீர்த்தி சுரேஸ் கதையின் நாயகியாக தோன்றி நடனமாடியிருக்கிறார். நான்கு மொழிகளில் வெளியாகி இருக்கும் இந்தப் பாடலை பிரபல பாடகி அனன்யா பட் பாடியிருக்கிறார்.



**எம் .மாகிரட்.எலபடகம.**

**கேள்வி:** தென்னிந்திய சினிமாவில் முதன் முதலாக அதிக சம்பளம் வாங்கிய நட்சத்திரங்கள் யார்?

**பதில்:** முதன் முதலாக ஓர் இலட்சம் ரூபாய் வாங்கிய நடிகை கே. பி.சுந்தராம்பாள்.'பக்த நந்தனார்'என்ற படத்தில் நடிப்பதற்காக இந்தத் தொகையை வாங்கினார். அடுத்த படியாக நடிகர் எம் .ஆர்.ராதா அவர்கள் 'ரத்தக்கண்ணீர்'என்ற படத்தில் நடிப்பதற்காக ஓர் இலட்சத்தி இருபத்தையாயிரம் ரூபாய் வாங்கினார். அடுத்த படியாக 'சகோதரி'என்ற படத்தில் நகைச்சுவை காட்சி களில் நடிப்பதற்காக மட்டும் ஓர் இலட்சம் ரூபாய் வாங்கினார். இவர்கள் மூவரும் தான் அந்தக் காலத்திலேயே லட்சத்தைத் தொட்டவர்கள்.

**சினி பஜார் கேள்வி பதில்,**
**தினகரன் வார மஞ்சரி,**
**லேக் ஹவுஸ், கொழும்பு-10.**

# ஏடாகூட கேள்விக்கு யாஷிகாவின் 'ஜில்... ஜில்...' பதில்

நடிகை யாஷிகா ஆனந்த் சமூக வலைதளத்தில் தன்னிடம் ஆபாசமாக கேள்வி கேட்ட ரசிகருக்கு சமயோஜிதமாக யோசித்து ஸ்மார்ட்டாக பதில் சொன்ன யாஷிகா ஆனந்தை ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர்.

2016ம் ஆண்டு வெளியான 'கவலை வேண்டாம்' படம் மூலம் தமிழ் திரையுலகில் நடிகையாக அறிமுகமானவர், யாஷிகா ஆனந்த். சந்தோஷ் ஜெயக்குமார் இயக்கத்தில் வெளியான 'இருட்டு அறையில் முரட்டு குத்து' படத்தில் கவர்ச்சியாக நடித்ததன் மூலம் மிகவும் பிரபலமானார். அடுத்தடுத்த படங்களிலும் கவர்ச்சியாக நடித்து பேசப்பட்டார். படவாய்ப்புகளும் குவிந்து வந்தன. இந்தநிலையில் எதிர்பாராத கார் விபத்தில் சிக்கி படுகாயம் அடைந்தார். பல மாதங்கள் ஆஸ்பத்திரியிலேயே சிகிச்சை பெற்று வந்தார். தற்போது அவர் பழைய நிலைக்கு மீண்டு வந்து கொண்டிருக்கிறார். ஒரு சில படங்களிலும் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார்.

சமூக வலைதளங்களிலும் யாஷிகா ஆனந்த் சுறுசுறுப்பாக இருக்கிறார். ரசிகர்களுடன் தொடர்ந்து உரையாடி வருகிறார். இந்தநிலையில் இன்ஸ்டாகிராமில் ரசிகர்களின் கேள்விக்கு யாஷிகா பதில் அளித்தார். அப்போது ஒரு ரசிகர், 'உங்களை முதன்முதலில் நிர்வாணமாக பார்த்தது யார்?', என ஏடாகூடமான கேள்வி கேட்டார். இதற்கு சற்றும் தாமதிக்காமல் 'டாக்டர் என்று நினைக்கிறேன்' என அவர் பதிலளித்தார்.

எடக்குமடக்கான கேள்வியையும் சமாளித்து பொறுமையாக பதிலளித்த யாஷிகாவின் சமயோசிதத்தை ரசிகர்கள் பாராட்டுகிறார்கள். ஏற்கனவே, 'நீங்கள் கன்னித்தன்மையுடன் இருக்கிறீர்களா?' என்ற கேள்விக்கு 'இல்லை, நான் யாஷிகா' என்று அவர் பதிலளித்து இருந்தது குறிப்பிடத்தக்கது.





தெலுங்கு பட உலகில் முன்னணி கதாநாயகியாக இருக்கும் வரலட்சுமி சரத்குமார், அங்கே புகழின் உச்சத்தை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கிறார்.

வரலட்சுமி சரத்குமாரிடம் தமிழ் படங்களைப்போல் தெலுங்கு படங்களும் கை நிறைய உள்ளன. அதில் தமிழ் படங்களை விட, தெலுங்கு படங்கள் அதிகம். தெலுங்கு பட உலகிலும் சரி, ரசிகர்கள் மத்தியிலும் சரி, அவருக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது.அவர் நடித்த 'கிராக், ' 'நந்தி' ஆகிய 2 படங்களும் மிகப்பெரிய வெற்றி பெற்றன. அதை அவர் பயன்படுத்திக்கொண்டு நிறைய தெலுங்கு படங்களில் நடிக்க ஒப்புக் கொண்டிருக்கிறார். சென்னையை விட ஐதராபாத்தில் அதிக நேரங்களை செலவிடுகிறார்.

சென்னைக்கும், ஐதராபாத்துக்கும் அடிக்கடி பறந்து கொண்டிருப்பதை தவிர்க்கவும், ஓட்டல்களில் தங்குவதை தவிர்க்கவும், ஐதராபாத்திலேயே ஒரு வீடு எடுத்து தங்க முடிவு செய்து இருக்கிறாராம்.

இதுபற்றி வரலட்சுமி கூறும்போது, ''இது என் வாழ்க்கையில் ஒரு புதிய அத்தியாயம். நான் ஐதராபாத்தில் வசிக்கப் போகிறேன்'' என்று குறிப்பிட்டு இருக்கிறார்.

வரலட்சுமி

# வரலட்சுமி

# நான் எப்பவும் அப்படித்தான்



தற்போது காஜல் அகர்வால் கர்ப்பமாக உள்ளார். ஆயினும் அவரது சுறுசுறுப்புக்கும் பரபரப்புக்கும் பஞ்சம் இல்லாமல் உள்ளது. சமூக வலைதளங்களில் தினந்தோறும் கொண்டாட்டமான பதிவுகளை பதிவிட்டு வருகிறார்.

நடிகை காஜல் அகர்வால் பொம்மலாட்டம், பழனி போன்ற படங்களில் தன்னுடைய அறிமுகத்தை கொடுத்து தொடர்ந்து நிற்கக்கூட நேரமில்லாமல் நடித்து வந்தார். விஜய், அஜித், சூர்யா என இவர் அடுத்தடுத்த படங்களில் முன்னணி நடிகர்களுடன் நடித்தார். தன்னுடைய அழகான சிரிப்பு மற்றும் கட்டுக்கோப்பான உடல் மூலம் ரசிகர்களை தொடர்ந்து கவர்ந்து வருகிறார்.

சமீபத்தில் பிருந்தா இயக்கத்தில் துல்கர் சல்மானுடன் இவர் இணைந்து நடித்திருந்த ஹே சினாமிகா படம் ரிலீசாகியுள்ளது. படத்தில் இவரது நடிப்பு சிறப்பாக அனைவரையும் கவரும் வகையில் அமைந்திருந்தது. மிகச்சிறந்த விமர்சனங்களை இந்த படத்தின் மூலம் காஜல் அகர்வால் பெற்றுள்ளார்.

கௌதம் கிச்சுலு என்ற தொழிலதிபரை திருமணம் செய்து கொண்டு தற்போது கர்ப்பமாக உள்ளார் காஜல்அகர்வால். சமீபத்தில் இவருக்கு வளைகாப்பு நடைபெற்றது. அதன் வீடியோக்கள் மற்றும் புகைப்படங்களை ரசிகர்களுடன் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்தார் காஜல் அகர்வால்.

தொடர்ந்து இன்ஸ்டாகிராமில் இவர் மிகவும் பிஸியாக செயல்பட்டு வருகிறார். தினந்தோறும் தனது கர்ப்பத்தை வெளிப்படுத்தும் வகையிலும் மறைமுகமாகவும் இவர் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை பகிர்ந்து வருகிறார். இவை அனைத்தும் ரசிகர்களை கவரும் வகையில் உள்ளது. அதிகமான லைக்ஸ்களையும் பெற்று வருகிறது.

இந்தியன் 2 படத்தில் கமல்ஹாசனுடன் ஜோடி சேர்ந்து நடிப்பதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார் காஜல் அகர்வால். ஆனால் இவர் கர்ப்பமான சூழலில் அந்த படத்தில் இருந்து அவர் நீக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகின. விரைவில் இந்த படத்தின் ஷூட்டிங் துவங்க உள்ளது குறிப்பிடத்தக்கது.

# பூஜா ஹெக்டேவுக்கு பக்கபலமாக இருந்தவர்கள்

எனக்கு சொந்த ஊர் சென்னை. ஆனால் அங்கு உறவினர்கள் அதிகம் இல்லாததால் கோவை வந்தாச்சு. ரியாலிட்டி ஷோக்களில் டான்ஸராக இருக்கிறேன். இதோடு பலவிதமான வெயிட் போட்டா மட்டும் தான் பிட்னஸ் பண்ணுவேன். குறிப்பாக எப்பவும் சிரிச்சிகிட்டே இருப்பேன். என்னை நான் ரொம்ப லவ் பண்றேன். இப்படி இருந்தாலே உடம்பும், மனசும் ஆரோக்கியமாக இருக்கும்.

மாடலிங் துறையில் சந்தித்த பிரச்சினை ?

நிறைய பிரச்சினைகளை சந்தித்து தாண்டி தான் போறேன். தவறான எண்ணம் கொண்டவர்களை ஈஸியாக கண்டுபிடிச்சிடுவேன். வாய்ப்புகளை தேடி அலைய மாட்டேன். கிடைக்கிறது கிடைக்கட்டும் என இருப்பேன். ஒரே நாளில் யாரும் நயன்தாரா, திரிஷாவாக முடியாது தானே...



# என்னிடம் ரசிகர்கள் எதிர்பார்ப்பதே வேறு

சன்னி லியோன் திரையுலகில் தனது பயணம் பற்றியும், 'நல்லது, கெட்டது மற்றும் மோசமான' தருணங்கள் பற்றியும் பேசியுள்ளார்.

வெளிநாட்டில் ஆபாச படங்களில் நடித்து நடிகையான சன்னி லியோன் தற்போது இந்தி படங்களில் நடித்து வருகிறார். தமிழில் 'வடகறி' படத்தில் ஒரு பாடலுக்கு நடனம் ஆடினார். தற்போது தமிழ், இந்தி, கன்னட மொழிகளில் தயாராகும் வீரமாதேவி என்ற சரித்திர படத்தில் நடித்து வருகிறார். மேலும் பேய்ப்படம் ஒன்றில் நடித்து வருகிறார்.

இந்நிலையில், சன்னி லியோன் தனது வாழ்க்கை வரலாற்றுப் படமான "கரன்ஜித் கவுர்" – தி அன்டோல்ட் ஸ்டோரி ஆஃப் சன்னி லியோனுக்குப் பிறகு, அனாமிகா என்ற வெப் சீரிஸில் நடித்து வருகிறார்.

இதுகுறித்து அவர் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:

"அனாமிகா செட்டில் நான் செலவழித்த ஒவ்வொரு நொடியும் ஒவ்வொரு நாளும் எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது, ஏனென்றால் சண்டை காட்சிகள் எனக்கு உண்மையிலேயே பிடிக்கும். எனது நிஜ வாழ்க்கையில் நான் ஒருபோதும் சண்டையிட மாட்டேன், எனவே இந்த வித்தியாசமான விஷயங்களை எப்படி செய்வது என்று கற்றுக்கொள்வது மிகவும் சந்தோசமாக இருந்தது.

அனாமிகா என்று படத்திற்கு பெயர் வைத்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. விக்ரம் சாரிடம் நிறைய கற்றுக்கொண்டேன். நடிப்பாக இருந்தாலும் சரி, சண்டை காட்சியாக இருந்தாலும் சரி, என்னையும் என் கதாபாத்திரத்தையும் அவர் எப்படி உருவாக்கினார் என்பது இதுவரை நான் அனுபவித்திராத ஒன்று. யாரோ ஒருவர் தங்கள் முழு முயற்சியையும் என் மீது நம்பிக்கையையும் வைத்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.

நான் கவர்ச்சியான கதாபாத்திரத்தில் நடிப்பேன் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள் அவ்வாறு நடிப்பதில் எனக்கு எந்த பிரச்சினையும் இல்லை. இது ஒரு நல்ல சமநிலையான கதாபாத்திரம், காதல் இருக்கிறது, நெருக்கமான காட்சிகள் உள்ளன, ஆனால் இது மக்கள் என்னிடம் வழக்கமாக எதிர்பார்க்கும் கதாபாத்திரம் அல்ல.

நான் என் ரசிகர்களை நேசிக்கிறேன், அவர்கள் என்னை முழு மனதுடன் ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் என்னை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள், காலப்போக்கில் அவர்கள் என்னை ஏற்றுக்கொள்கிறார்கள். ஒவ்வொரு படமும் வித்தியாசமாக இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன், நான் செய்வதை மக்கள் விரும்புவார்கள், சில சமயங்களில் அவர்கள் விரும்ப மாட்டார்கள், ஆனால் ஒரு நடிகராக, நான் தொடர்ந்து வித்தியாசமான விஷயங்களைச் செய்து, என்னிடம் இருப்பதை நிரூபிக்க விரும்புகிறேன்" என்றார்.



## துரைவி சிறுசொல்

# நெடும் பணி

துரைவி என்கிற சொல்லுக்கு ஈழத்து இலக்கியப் புலத்தில் தனித்த இடமுண்டு. அமரர் துரை விஸ்வநாதன் தொடங்கிய துரைவி பதிப்பு ராஜ் பிரசாத் துரைவிஸ்வநாதனால் துரைவி விருதாகத் தொடரப்படும் பணிநெடும் பணிதான். 1996இல் துரைவி விருது தோற்றம் கண்டது. புனைவுக்கு அப்பால் புனைவின் மீது துரைவியின் கவனம் குவிகிறது. ஆய்வு மற்றும் மொழிபெயர்ப்புத் துறைகள் மீதான முன்னெடுப்பு என்ற வகையில் இரு முக்கிய துறைகளில் குறித்த வருடத்தில் வெளியாகும் பனுவல்கள் மீதான ஊக்குவிப்பைத் துரைவி தொடர்கிறது.

இலக்கிய ஆய்வுப் புலம் மேலெழும் போது அல்லது வீச்சமான திறனாய்வு அபுனைவுகள் முன்னெழும்போது இலக்கியத்தின் ஒருகட்டச் செழுமையாக இதனை நோக்கலாம்.

அதுபோல் மொழிபெயர்ப்பு பிறமொழிகளிலிருந்து தமிழுக்கும் கையளிக்கிற பனுவல் முயற்சிகள் தமிழ் இலக்கியப் புலத்தின் வரவுகளை அகலிக்கச் செய்யும்.

இந்தநோக்கில் தான் துரைவி மற்ற விருதுகளிலிருந்து வேறுபடுகிறது.

துரைவி நிகழ்வு எளிமையானது ஆரோக்கியமானது. துரைவி விருது விழாவை முன்வைத்து இயங்கும் துரைவி நினைவுப் பேருரை கட்டிறுக்கமானது.

இவ்வாண்டு துரைவி விருதினை இரு பனுவல்கள் பெறுகின்றன.

அப்துல் ரசாக் எழுதிய 'கிழக்கிலங்கை தமிழிலக்கிய திறனாய்வு வளர்ச்சி''ஆய்வுத்துறையிலும், ரிஷான் ஷெரீப் மொழிபெயர்த்த சுவர்ண மாலினியின் 'அந்திம காலத்தின் இறுதி நேசம்''மொழிபெயர்ப்பிலும் விருது பெறுகின்றன.

நினைவுப் பேருரை மலையக மக்களின் வாழ்வும் இலக்கியமும் துரைவியை முன்வைத்து திறனாய்வாளர் எஸ். வன்னியகுலம் நிகழ்த்துகிறார். தெளிவத்தை யோசேப்பின் தலைமையுரை, மேமன் கவியின் நெறியாள்கையில் அண்மையில் துரைவி விருது நிகழ்வு இணைய வழியில் நடைபெற்றது.

குறித்த வருடத்தில் ஆய்வு,மொழிபெயர்ப்பு துறையில் மேலும் பல பனுவல்கள் வெளிவந்துள்ளமை கவனத்துக்குரியது. துரைவி குறித்த இரு துறைகள் தொடர்பிலும் வெளியிட்டு முயற்சிகளை முன்னெடுக்குமாயின் அதுவும் ஆரோக்கியமானதே.




## ஔவன் கவிதை

# ஒளிரும் லாந்தரில் பூக்கும் நம்பிக்கை

இருளடர்ந்த வெளியொன்றில்
கால்களிடறி நிற்கிறது காலம்
கனவுகளிலிருந்து உதிர்கிற ஒரு கோடி
எதிர்பார்ப்பும் காய்ந்தொரு
சருகாகி இடறும்
இருளின் பாதை எங்கு தொடங்கி எங்கு முடிகிறது
அலைகிறதென் மனசு
பொங்கியெழுந்த உணர்வின் வீச்சத்தை
அடிமனதில் கட்டிக்கொண்டெழுகிறேன்
இருள் மீளமீள இடர்கிறது
கண்களில் ஒளியின் கீர்த்தி
நம்பிக்கையின் துளிர்கதிர்பு
என் காலடியில் வேர் கொள்கிறது
ஆயிரம் லாந்தர் தலைக்கு மேலாக
ஒளியின் சிறகெடுத்துப் பறக்கும்
வெளுத்து விரிகிறது நெடும் பாதை
கால்களில் கோடி வேர் படர்ந்து அடர்கிறேன்
லாந்தரில் பூக்கிறதொரு
ஒளிச்சிறகு

## மனம் ததும்பும் ஹைக்கூ1

# மனக்கிண்ணத்தில் ததும்பம் உணர்வ

ஹைக்கூ கவிதையின் அழகு. அதுமனம் ததும்புறச் செய்வது. அதனுள் பொதிந்த ஆச்சரியம், கணநேரத்து அதிர்வு, அர்த்தத்தின் திரட்சி, உணர்வைத் கிளர்த்தும் மண், பாங்கு, ஹைக்கூ வின் கோலம் எல்லாமே மனதைத் ததும்பச் செய்வது தான்.

உணர்வுகளின் இழைகளில் உள்ளோடித் திரியும் ஒரு வகை ஈர்ப்பு ஹைக்கூ எனும் மூன்று வரிஅற்புதம்.

இயற்கையின் நிகழ்வுகளில் பூரிப்பது சம்பவங்களின் கோர்வையில் பிரகாசி அன்றாடங்களின் நடத்தைகளில் இயங்குவது உள் மனதில் மானுடக் கவிச்சியில் ஈரலிப்பதென்றெல்லாம் ஹைக்கூ குறித்து அதன் வரலாற்றினடியாகவும், அதன் வடிவத்தினூடாகவும், அது நகர்ந்து வந்து அர்த்தச் செறிவினடிப்படையிலும் நிறுவிடலாம்.

ஹைக்கூ வாசிப்பு அலாதியானது.மூன்று வரிகளில் பன்னிரெண்டு அசைகளில் அது ஏற்படுத்தும் சலனம் அலை போலெழுந்து சுழலும் உணர்வுக் கிளர்ச்சியென ததும்பும் மனசு ஹைக்கூ மனசு.

சின்னச் சின்ன அனுபவங்களையும் கட்புலக் காட்சிகளையும் வசீகரத்தையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் வருடல்தான் ஹைக்கூ.

மிகச் சிறிய மிக எளிமையான சொற்கள் நீண்ட சிந்தனைத் தொடராக விரியும்,மேலும் விரியும் ஆற்றல் ஹைக்கூவுக்குண்டு.

ஹைக்கூவின் பிதாமகன் பாஷோவின்
'பழையகுளம்
தவளை குதிக்கையில்
தண்ணீரில் சப்தம்'
பிரபல்யமான இந்தக் ஹைக்கூ ஏற்படுத்தும் சப்தம் ஒய்வற்றது.

# இல் பதினம்

புதினம் பெருக்கெடுக்கத் தொடங்கி காலம் பழசாகிவிட்டது.பெருக்கெடுப்பை எழுத்தில் பாய்ச்சிவிட இவன் கால்வாயொன்றும் வெட்டி வைத்தான். அது தூர்ந்துவிட்டதாக அல்லது கால்வாயின் வடிவம் திரிந்து விட்டதாக சிலர் சொல்லிச் சொல்லி இவனைக் கிளர்த்திவிடுகின்றனர்.

என்றாலும் கால்வாயில் ஒற்றைக் கால் வைத்தபடி நிற்கிறான். இவனுக்குள் இவனது மூன்றாம் மீராக்கிழவர் கதிர் மீராகுளக்கரையில் மறு கால் வைத்தபடி நிற்கிறார். பழைய கிழவன் இன்னும் கண்ணொளி மங்காதபடி இவனுக்குள் நடந்து திரிகிறார். கிழவனின் காலடியோசை எதையோ விராண்டிக் கொண்டிருப்பதாக நண்பர்களிடம் நூறு கிளைகட கதைகள் சொல்லியிருப்பான். கிழவனின் காலடியிலிருந்து வேர் கொண்ட ஊரின் கதையொன்று இவன் நெஞ்சுல் பிரேம் கழன்ற கறுப்பு வெள்ளைப் படமாகத் தொங்கிக் கிடக்கிறது. அதிலிருந்து ஒவ்வொரு பாத்திரமாக உரித்தெடுக்கிறான். மீள் வனைகிறான்; பத்திரப்படுத்துகிறான்; அவற்றோடு சம்பாசிக்கிறான். ; சில போது முரண்படுகிறான். குறிப்புப் புத்தகத்தில் சுருக்கெழுத்தில் கிறுக்கி வைக்கிறான். அது உக்கிப்போன கிறுக்கல்.புதினம் பெருக்கெடுக்கத் தொடங்கிகாலம் பழசாகி விட்டது.எனினும் பிரதாப முதலியும் அசன்பேயும் இன்னும் உயிர்ப்பு;ன் இருக்கிறார்கள்.

அவர்களின் பெருக்கெடுப்பு முடிவற்றது.

அஸன்வளவில் இவன் பிஞ்சுக் கால்கள் உழுது உழுதுதிரிந்த புழுதி உறைந்து கிடக்கிறது.வளவைத் தூசு தட்டியெடுத்தான்.சப்பாத்துக் கால்கள் ஆக்கிரமித்த வளவு. தன் கால் பிடுங்கி வெளியெறிந்தான்; அழுதான்; வெந்தான்.எறிந்த காலடியில் அழியாத நினைவொன்று கொடிபோல் சுற்றிச் சுற்றி வருவதாய்க் கனவு நூறிலும் அலைந்தான்.

இவன் இன்னும் எழுதாத புதினத்தை 1990ஆம் பக்கத்திலிருந்து நீங்கள் வாசிக்கக் கிடைக்கலாம். முன்னுள்ள பக்கங்கள் அழிந்து விட்டன அல்லது தெளிவற்று மங்கி விட்டனவென முறைப்பாடும் செய்யலாம்.

நிச்சயமாக நாவல் முடியும் போது அதன் பக்கங்களின் தொடர்ச்சி பற்றிய அடிக்குறிப்பு இருக்கும். வாசிப்போர்தொடங்கவேண்டிய,தொடரவேண்டிய, முடிக்க வேண்டிய பக்கங்கள் பற்றி இவன் குறிப்பிட்டிருப்பான். அல்லது இவனை விஞ்சிய வாசகர் தமது விருப்பம் போல் வாசிக்க தொடங்கி முடித்திருக்கலாம்.

சிலவேளை இவனது புதினம் வெளிவரும் போது புதினம் பற்றிய கருதுகோல்கள் உதிர்ந்து விட்டிருக்கலாம். அல்லது இது இலையுதிர் காலத்து மரமெனபுதினப் புரட்டர்கள் எழுதி முடித்திருக்கலாம். சிலவேளை இவனின் இல் புதினம் பற்றியே பிரதாப முதலியும் அசன்பேயும் பேசலாமென வாசகர் முடிவெடுத்திருக்கலாம் அல்லது, வன் புதினத்தை எழுதிமுடிக்கும் போதுசொற்கள் திரிபடைந்து ஒன்றின் மேல் ஒன்று பொருள் திரண்டிருக்களாம்.

அப்போது இவனது இல் புதினம் சர்வதேசவிருதுக்குப் பரிந்துரைக்கவும் படலாமென இவனது இல் புதினத்தில் பெரும் பாத்திரமாகி அடிக்கடி பறந்து கொண்டிருக்கும் பொன்னிவண்டும் குதூகலிக்கலாம்

**பொன்மீரா**

# முதுமை..!

நினைவெனும் சேமிப்பில்
இருப்பில் இருந்த
இளமையின் எண்ணம்
எம் வாழ்வில்
முதுமையில் கூட
என்றும் இனிமையே
பிள்ளைகள் பெற்று
பெரியவர் ஆக்கி
அவர்களின்
பெற்றோரெனநம்
பெயர் கேட்பதும்
எம் வாழ்வில்
முதுமையில் கூட
என்றும் இனிமையே
கல்வியை விடவும்
காலங்கள் தந்த
அனுபவ அறிவும்
அளுமை பண்பும்
எம் வாழ்வில்
முதுமையில் கூட
என்றும் இனிமையே
வருங்கால
குழந்தைகள்எம்
வாழ்வை பின்பற்றி
வாழநினைத்தாலே
வாழ்வில்
முதுமையில் கூட
என்றும் இனிமையே
பள்ளிக்கு போன
காலத்தை திரும்பபேர
பிள்ளைகள் படிப்பில்
பார்த்து மகிழ்தல்
எம் வாழ்வில்
முதுமையில் கூட
என்றும் இனிமையே
நாங்கள் நட்ட
தென்னம் தோப்பில
நாலுபேர் இளனி
புடுங்கி குடிப்பதை
பார்க்க,கேட்பதும்
எம் வாழ்வில்
முதுமையில் கூட
என்றும் இனிமையே.

**பசுவூர்க்கோபி**
நெதர்லாந்து.



வெலிகமயிலிருந்து அர்ஹாம், அப்துர் ரஹ்மான், ஆதில்,



அரபாத் ஹசன்



பிரவீன் சதா

# செல்ஃபி உலா

[illegible]



சிவராஜா – திருகோணமலை



பத்மா சந்திரமோகன்



ரமேஷ் சுபாஷினி – வெள்ளவத்தை



டிவோனா – கொட்டாஞ்சேனை



சாரீக் அமீன் – மடவளை பஸார்



சந்திரமோகன் – வத்தளை

## 07 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்





## நிறம் தீட்டுங்கள்



## விடுகதைகள்

1. கீழேயும் மேலேயும் மண்; நடுவிலே அழகான பெண். அது என்ன?

**மஞ்சல்செடி**

2. சொன்ன நேரத்துக்கு தொண்டை கிழிய கத்து வான். அவன் யார் ?

**அலாரம்**

3. உயிர் இல்லாத நீதி பதியிடம் ஒழுங்கான நியாயம் அது என்ன?

**தராசு**

4. பூவோடு பிறந்து; நாவோடு கலந்து விருந் தாவான் மருந்தாவான். அவன் யார்?

**தேன்**

5. நூல் நூற்கும் நெசவா ளிக்கு கட்டிக்கொள்ள துணியில்லை அது என்ன?

**சிலந்தி**

6. உடம்பெல்லாம் சிவப்பு, அதன் குடுமி பச்சை அது என்ன?

**தக்காளி**

7. ஒட்டுத் திண்ணையில் பட்டுப் பாவாடை அது என்ன?

**தோடு**

8. தலைக்குள் கண் வைத் திருப்பவன் இவன் மட் டும்தான் அவன் யார்?

**நுங்கு**


9. செய்தி வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே. அது என்ன?

**தொலைபேசி**

10. வாயிலிருந்து நூல் போடுவான்; மந்திரவாதி யும் இல்லை, கிளைக்குக் கிளை தாவுவான்; குரங் கும் இல்லை, வலைவிரித் துப் பதுங்கியிருப்பான்; வேடனும் இல்லை – அவன் யார்?

**சிலந்தி**

## Fill in the blanks




## ORANGE



My name is Orange. I'm orange in colour and round in shape. Inside my pulp taste sour or sweet and I'm rich in vitamin C.

## வழிகாட்டுங்கள்




## விடுபட்ட எழுத்தை நிரப்புங்கள்






புத்த.........





கு.........



பூ.........

பந்.........

கோ.........

# இந்திய சினிமாப் பாடல்களுக்கு நிகராக மருதமுனையில் இருந்து வெளிவரவுள்ளது

# மருதமுனை ஜெஸீலின் என் நிலவே

**இந்திய சினிமாப் பாடலுக்கு நிகராக இலங்கை மருதமுனையில் இருந்து புது மெருகுடன் மிக விரைவில் வெளிவரவுள்ளது மருதமுனை ஜெஸீலின் கவிவரிகள் மற்றும் இசையமைப்பில் என் நிலவே பாடல் இறுவெட்டு எமது மண்ணின் வாசம் மாறாது நமக்கே உரிய பரிமாணத்துடன் 'என் நிலவே 'எனும் பாடல் இசை தொகுப்பு மிக விரைவில் வெளியிடப்படவிருக்கிறது. மருதமுனையின் புதிய எழுத்தாளராக தன்னை இனங்காட்டும் அளவிற்கு தனது முதலாவது படைப்பை வெளியிடவுள்ளார் மருதமுனை ஜெஸீல்.**








மருதமுனை ஜெஸீல் கலை, இலக்கிய மற்றும் இசைத் துறையிலும் தன்னைத் தடம் பதித்த வருகின்றார்' இவரது முதலாவது கன்னி முயற்சி இந்திய தமிழ் சினிமாவுக்கு நிகராக கவிதை,இசை,காட்சி ஒளிப்பதிவு மற்றும் ஒலிப்பதிவு என்பன சிறப்பாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மருதமுனை ஜெஸீல் 1980ஆம் ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி மருதமுனையைச் சேர்ந்த சம்சுத்தீன் அப்துல் வாஹிட் மற்றும் ஆதம்லெவ்வை செய்னுல் அரப் ஆகியோரின் மூன்று பிள்ளைகளில் முதற் பிள்ளையாக மருதமுனையில் பிறந்தவர்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையில் தரம் ஒன்று தொடக்கம் உயர்தரம் வரை பயின்றவர். உயர்தரக் கல்வியை நிறைவு செய்தபின்னர் சக்தி வானொலியில் பிராந்திய சந்தைப்படுத்தல் அதிகாரியாக கடமையாற்றினார். பின்னர் 2013ஆம் ஆண்டு முகாமைத்து உதவியாளராக நியமனம் பெற்று அக்கரைப்பற்று அஸ்சிறாஜ் வித்தியாலயத்தில் கடமையேற்றார்.




பின்னர் மருதமுனை அல்ஹம்றா வித்தியாலயத்தில் கடமையாற்றி தற்பொழுது மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் கடமையாற்றி வருகின்றார்.இந்த நிலையில் தனது கல்வியை மேம்படுத்தும் வகையில் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பினை பூர்த்தி செய்து கலைமானி பட்டத்தைப் பொற்றுள்ளார்.

ஊடகத்துறையில் தான் இணைய வேண்டும் வானொலியில் தன் குரல் ஒலிக்க வேண்டும் என்று முயற்சித்தாலும் அது அவருக்கு கைகூட வில்லையென்பது இவருக்கு பெரும் கவலையாக இருந்து வருவதாகத் தெரிவிக்கின்றார்.இருந்த போதிலும் தனக்குள் இருந்த ஊடகத்துறையின் ஆர்வத்தையும், ஆசையையும் நிறைவு செய்யும் வகையில் மருதமுனையின் மூத்த ஊடகவியலாளர் கலாபூஷணம் பி.எம்.எம்.ஏ.காதர் அவர்களின் ஆலோசனையிலும், வழிகாட்டலிலும் நவமணிப் பத்திரிகையின் செய்தியாளராக இணைந்து கடமையாற்றியுள்ளார் அத்துடன் கெப்பிடல் வானொலியிலும் சிரேஷ்ட சந்தைப் படுத்தல் அதிகாரியாகவும் கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் இவருக்கு இருந்த கலை,இலக்கிய, ஆர்வம் காரணமாக தான் எழுதிய பாடல் ஒன்றுக்கு தானே மெட்டமைத்து இசை வடிவம் கொடுத்துள்ளார். அந்தப்பாடலுக்கு காட்சி வடிவம் கொடுத்து சிறப்பாக காட்சியமைத்தள்ளார்.இப்பாடல்தான் என் நிலவே என்ற தலைப்பில் இறுவெட்டாக வெளிவரவுள்ளது.

பாடலை அதே தலைப்பில் மிக விரைவில் வெளியிடவுள்ளதாகவுள்ளார். இவற்றின் அறிமுகத்தினை துது எனும் யூ டியூப் எனும் சனலில் பார்வையிடலாம்

பாடல் வரிகள், மெட்டமைப்பு மற்றும் இசை : ஏ.டப்ளியூ.எம்.ஜெஸீல், பாடியவர்: எம். ஜெஸ்மின்,இசை கோர்வை.கே.கேஷாந்த், காட்சியமைப்பு: .எஸ்.என்.விஷ்; னுஜன், ஒளிப்பதிவு, ஒளித்தொகுப்பு மற்றும் வர்ணம்: ஜீ.புஷ்; பகாந்த், காட்சியில் தோன்றியவர்கள், பீ.சனித், எஸ்.திஸ்கா(றியா), நடனம் மற்றும் இயக்கம் ஏ.டப்ளியூ.எம்.ஜெஸீல்.

**பி.எம்.எம்.ஏ.காதர்மருதமுனை**
**தினகரன் நிருபர்**





தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

# லிப்ஸ்டிக் உபயோகித்தால் ஏற்படும் பிரச்சினைகள்...

**24 மணி நேரத்துக்குள் இரண்டு அல்லது மூன்று முறைக்கு மேல் லிப்ஸ்டிக் பூசும்போது அதிலிருக்கும் குரோமியம் அளவு உடலில் அதிகரிக்கும் அபாயம் உண்டாகும்.**

பெண்களின் ஒப்பனை, லிப்ஸ்டிக் இல்லாமல் முழுமை பெறாது. அது முகத்திற்கு சட்டென்று அழகு சேர்க்கும். கவர்ச்சியாக காண்பிக்கும். கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் பெர்க்லி ஸ்கூல் ஆப் பப்ளிக் ஹெல்த் நடத்திய ஆய்வில், இன்று புழக்கத்தில் இருக்கும் பெரும்பாலான லிப் க்ளோஸ், லிப்ஸ்டிக்கில் குரோமியம், ஈயம், அலுமினியம், காட்மியம் மற்றும் தீங்கு விளைவிக்கும் பல நச்சு பொருட்கள் இருப்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக லிப்ஸ்டிக் பூசிக்கொள்வது நீண்டகால உடல் நல பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் என்றும் அந்த ஆய்வு குறிப்பிடுகிறது. குறிப்பாக 24 மணி நேரத்துக்குள் இரண்டு அல்லது மூன்று முறைக்கு மேல் லிப்ஸ்டிக் பூசும்போது அதிலிருக்கும் குரோமியம் அளவு உடலில் அதிகரிக்கும் அபாயம் உண்டாகும். இது வயிற்று கட்டிகளுடன் தொடர்புடையது.

**லிப்ஸ்டிக்கில் காணப்படும் வேறு சில நச்சுப் பொருட்கள்:**


- ★ லிப்ஸ்டிக்கில் இருக்கும் பித்தலேட்டுகள் என்னும் ரசாயனம் நாளமில்லா சுரப்பி அமைப்புக்கு தீங்கு விளைவிக்கும்.
- ★ இதில் கலந்திருக்கும் ஈயம், நீண்ட கால ஆரோக்கிய அபாயங்களை ஏற்படுத்தக்கூடியது.
- ★ பாலி எத்திலின் கிளைகோல்கள் கிரீம் அடிப்படையிலான தயாரிப்புகளிலும் உள்ளன. அவை நரம்பு மண்டலத்திற்கு பாதிப்புகளை உண்டாக்கக்கூடியவை.
- ★ பாரபென் எனப்படும் ஒருவகை மெழுகுகள் உதட்டுச்சாயத்தில் காணப்படுகின்றன. அவை சருமத்தில் எளிதில் ஊடுருவுகின்றன. மனச்சோர்வு, வயிற்றுப்போக்கு உட்பட பல பக்க விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.





**மனதில் கொள்ள வேண்டியவை**

- அடர் நிற லிப்ஸ்டிக்கள் அதிக அளவில் நச்சு ரசாயனங்களின் உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளன.
- லிப்ஸ்டிக் பயன்படுத்துவதற்கு முன்பு எப்போதும் பெட்ரோலியம் ஜெல்லியைப் பயன்படுத்துங்கள். இது உதடுகளுக்கு ஒரு பாதுகாப்பு அடுக்கை வழங்கும். அதிக பாதிப்பு நேர்வதை தடுக்கும்.
- நச்சு இல்லாத அல்லது இயற்கையான உதட்டுச்சாயங்களை உபயோகிப்பதற்கு முயற்சியுங்கள்.
- கர்ப்பகாலத்தில் லிப்ஸ்டிக் பயன்பாட்டை தவிருங்கள். அவை கருச்சிதைவை ஏற்படுத்தக்கூடும்.
- ஒரு வாரத்தில் 23 முறைக்கு மேல் லிப்ஸ்டிக் உபயோகிக்காதீர்கள்.



## சப்பாத்திக்கு அருமையான வெஜ் கீமா



**தேவையான பொருட்கள்:**

வெங்காயம் 4 (பொடிதாக நறுக்கியது)
தக்காளி 1 (பொடிதாக நறுக்கியது)
தக்காளி 2 (அரைத்தது)
இஞ்சி பூண்டு விழுது 1 தேக்கரண்டி
குடைமிளகாய் 1
கேரட் 1
பீன்ஸ் 50 கிராம்
ஊறவைத்த பச்சைப் பட்டாணி 100 கிராம்
பச்சை மிளகாய் 1
கறி மசாலாப் பொடி 1 தேக்கரண்டி
மிளகாய்த் தூள் 1 தேக்கரண்டி
தனியா தூள் 1தேக்கரண்டி
சீரகத் தூள் 1தேக்கரண்டி
நெய் 2 தேக்கரண்டி
துருவிய பன்னீர் 100 கிராம்
துருவிய வெண்ணெய் 2 தேக்கரண்டி
எலுமிச்சம் பழச்சாறு 1தேக்கரண்டி
கொத்தமல்லித் தழை சிறிதளவு
உப்பு தேவையான அளவு

**செய்முறை :**

பீன்ஸ், கேரட், பச்சை மிளகாய் மற்றும் குடை மிளகாயை சிறிய துண்டுகளாக நறுக்கிக்கொள்ளவும்.

அடுப்பில், அடி கனமான வாணலியை வைத்து அதில் நெய் ஊற்றி சூடானதும் வெங்காயத்தைப் போட்டு பொன்னிறமாக மாறும் வரை வதக்கவும்.

பின்பு அதில் இஞ்சி பூண்டு விழுது, குடை மிளகாய், பட்டாணி, பச்சை மிளகாய், அரைத்த தக்காளி விழுது மற்றும் நறுக்கிய தக்காளி சேர்த்து நன்றாக வதக்கவும்.

2 நிமிடங்கள் கழித்து மிளகாய்த் தூள், சீரகத்தூள், கறி மசாலாத் தூள் மற்றும் தேவையான அளவு உப்பு சேர்த்துக் கிளறவும். பின்பு சிறிது தண்ணீர் ஊற்றிக் கலந்து கேரட், பீன்ஸ், துருவிய பன்னீர் சேர்த்து வதக்கவும். 2 நிமிடங்களுக்குப் பிறகு சிறிதளவு துருவிய வெண்ணெய்யை அதில் சேர்க்கவும்.

இந்தக் கலவையை நன்றாகக் கிளறி தேவையான அளவு தண்ணீர் சேர்க்கவும். பின்பு 15 முதல் 20 நிமிடங்கள் வரை மூடி வேக வைக்கவும். வெந்ததும் மீதம் இருந்த துருவிய வெண்ணெயை மேலே தூவி எலுமிச்சம் பழச்சாறை ஊற்றவும்.

கடைசியாக கொத்தமல்லி தழையை மேலே தூவி இறக்கவும்.

சுவையான வெஜ் கீமா தயார். இதனை சப்பாத்தி, தோசை, அடையுடன் சேர்த்துப் பரி மாறலாம்.

# பெருங்கவிஞன்

**காலத்தால் அழியாத வெகு சில கலைஞர்கள் தெய்வத்தால் அனுப்பபடுவார்கள், முதலில் தாங்கள் யாரென தெரியாமல் தடுமாறுவார்கள், உலகின் நகைப்புக்கும் பழிப்புக்கும் ஆளாவார்கள், தடுமாறுவார்கள்.**

எப்பொழுது தெய்வத்திடம் சரணடைவார்களோ அப்பொழுது அவர்களின் அறிவுகண் திறக்கப்படும், காலத்தால் அழியா கலைகளை கொடுப்பார்கள்.

வடக்கே அப்படி காளிதேவியால் உருவானான் காளிதாசன்

தெற்கே சரஸ்வதியினை வணங்கி உருவானான் கம்பன். அபிராமி அன்னையினை வணங்கி பெரும் உயரம் பெற்றான் அபிராமிபட்டன், அவன் வழியே அழியா புகழ்பெற்றவன் ஒட்ட கூத்தன்.

காளி என வணங்கி உயரம் பெற்றான் பாரதி.

அவ்வரிசையில் செட்டிநாட்டின் சிறுகூடற்பட்டியில் மலையரசி அம்மன் ஆலயத்தில் ஒருகாலத்தில் அழுது கொண்டிருந்த முத்தையா பின்னாளில் கண்ணதாசனாக தமிழ் இலக்கிய உலகை பாடல் உலகை ஆண்டுகொண்டிருந்தான்.

தெய்வாம்சம் பெற்ற கவிஞர்களுக்கு தனி தன்மை வாய்க்கும்.

அவர்களிடம் தமிழ் பொங்கும், அருவியாய் கொட்டும், வர்ணணைகளும் உவமையும் வார்த்தைகளும் காவேரி வெள்ளமாய் கொட்டும், அதில் தத்துவமும் ஆன்மீகமும் வாழ்வியல் விஷயமும் இன்னும் ஏகபட்ட உணர்ச்சிகளும் அழகு தமிழில் குற்றால அருவியாய் வழிந்தோடும்.

எதையுமே அழகாகவும் உருக்கமாகவும் பொருத்தமாகவும் அவர்களால் பாட முடியும்.

அப்படி வள்ளுவன், இளங்கோ, கம்பன், பாரதிக்கு பின் தமிழகம் தந்த மாபெரும் கவிஞன் கண்ணதாசன்.

முத்தமிழ் அறிஞர் எனும் அடையாளம் பொருந்தும். மூன்று தமிழும் அவரிடம் கொஞ்சியது. ஆம் அவன் வாழ்ந்த காலத்தில் அவனே முத்தமிழின் மொத்த அறிஞன்.

பாடல், எழுத்து, பேச்சு என எல்லாவற்றிலும் அவரின் தமிழ் அப்படி இருந்தது, அதிலும் உண்மை மட்டும் பேசிய உத்தம கவிஞன் அவன்.

கடவுள், காதல், இயற்கை, மதம், தத்துவம், அரசியல் பாசம், காதல், கடமை, நட்பு, தாய்மை , நன்றி, சோகம், பிரிவு, நேசம், மோசம், நம்பிக்கை என எல்லாவகை உணர்வுகளுக்கும் அற்புதமாக வரிகள் கொடுத்த அபூர்வ கவிஞன்.

அவ்வளவு எளிமையாக சந்தத்தோடு ஒட்டி, ராகத்தோடு இணைந்து உணர்ச்சிகளை மொழியாக கொட்டும் கலை அவருக்கு மிக மிக எளிதாக வந்தது.

எல்லா வகையிலும், எல்லா நிலையிலும், எச்சூழலுக்கும் அவரால் மிக மிக பொருத்தமான வரிகளை எழுத முடியும்.

குளிர்ந்த தென்றல் பூக்களையும் சேர்த்து வீசுவது போன்ற தமிழ் அவருடையது, வாழ்வின் அனைத்து பக்கங்களுக்கும் பாடியவர், எல்லா மதங்களுக்கும் செய்யுள் அமைத்தவர்.

இன்றும் மலேசிய சிங்கப்பூர் நாடுகளை காணுங்கள், உங்கள் காதில் "அக்கறை சீமை அழகினிலே மனம் ஆடகண்டேனே.." பாடல் தானாக ஒலிக்கும்.

அரசியல் நிலையினை பாருங்கள் "ஊதுபத்திக்கும் பீடிகளுக்கும் பேதம் புரியல" எனும் வரிகள் காதில் மோதும்.

ஒட்டு மொத்த இந்திய பிரச்சினைகளையும் ஒரே பாடலில் விளக்கிய பெருமை அவருக்கு உண்டு.

கோகுலாஷ்டமி என்றால் அவரின் கிருஷ்ணகானம் பாடல்கள் நினைவில் வராமல் போகாது. இந்து மதத்திற்கு கண்ணன் அருளியது பகவத் கீதை என்றால், கண்ணதாசன் கொடுத்தது அர்த்தமுள்ள இந்துமதம். இரண்டும் இந்து மதத்தின் மாபெரும் அடையாளங்கள்.

பத்திரிகை,மோசடி அரசியல், அவமானம்,துரோகங்கள், தீராத கடன் தொல்லை என பல துன்பங்களும் அவரே தேடிகொண்ட போதை பழக்கத்தின் பாதிப்புகளும் தாண்டியே இவ்வளவு பிரகாசித்திருக்கின்றார் என்றால், அவரது மொத்த திறமை எவ்வளவு இருந்திருக்கும்.

எல்லாம் வெறுத்து, ஆன்மீகத்தில் கலந்து இனி என் வாழ்வு எழுத்துலகமே என அவர் புத்துணர்ச்சி பெற்றபொழுது பாவம் உடல்நிலை இடம்கொடுக்கவில்லை, அந்த சூரியனின் சில கதிர்கள் மட்டுமே உலகிற்கு தெரிந்தது.

மதுப்பழக்கமும்,போதை பழக்கமும் எப்படியெல்லாம் ஒரு மனிதனை அழிக்கும் என்பதற்கு அவரது வாழ்வு பெரும் எடுத்துகாட்டு. அவரே சொன்னது போல "ஒரு மனிதன் எப்படியெல்லாம் வாழகூடாது என்பதற்கு எனது வாழ்வு பெரும் உதாரணம் ."

வனவாசமும் மண்வாசமும் அக்கால மோசடி அரசியலை அப்படியே படம்பிடித்து காட்டும் வரலாற்று கல்வெட்டுக்கள்.

தனது வாழ்வினை திறந்த புத்தகமாக்கி, தான் கண்ட நல்லவர்களையும், துரோகிகளையும் அப்படியே புட்டுவைத்த ஒரே தமிழக திரை, அரசியல் பிரபலம் கண்ணதாசன் மட்டுமே.

பெரும் ஞானிகளுக்கும் யோகிகளுக்கும் மட்டும் வரும் பக்குவம் இது.

தமிழ்சாதியில் "நல்ல தமிழ்" கவிஞர்களுக்கு மட்டும் ஆயுள் குறைவு,

பாரதி,பட்டுகோட்டை கல்யாணசுந்தரம் வரிசையில் கண்ணதாசனும் இடம்பிடித்ததுதான் கொடுமை.

கவிதையோ, பாடலோ அவை அழகுணர்ச்சியோடு அமையவேண்டும், விஷயத்தை மறைமுகமாக புரியவைக்கவேண்டும், மொழியை கையாளும் வார்த்தை ஜாலங்களும், வர்ணனைகளும் மிக அவசியம், அதாவது கேட்பவர்கள் புரிந்துகொண்டு மனதால் ஒன்றி, கவிஞன் காட்டும் சூழ்நிலைக்கு அப்படியே செல்லவேண்டும்.

வெகு சிலருக்கு மட்டுமே அந்த வரம் சாத்தியம், கண்ணதாசனும் அவர்களில் ஒருவர்.

இன்று தமிழக கவிதை உலகம் உலகிற்கே தெரியும் முற்போக்கு, பிற்போக்கு, வயிற்றுபோக்கு என என்னவெல்லாமோ சொல்லிகொண்டு, நவீனத்துவம், முன் நவீனத்துவம், பின் நவீனத்துவம், இடையநவீனம் இன்னும் என்ன இம்சைகள் எல்லாமோ கவிதை என சொல்லபடுகின்றது.

ஆக சிறந்த காளமேகமே இருபொருள்தான் சொலமுடிந்த கவிதைகளை சொன்னான், இவர்கள் செய்யும் இம்சை தாளமுடியவில்லை

எப்படியும் விரைவில் மானமிக்க தமிழன், தமிழை நேசிக்கும் தமிழன், முதல்வராகும் பொழுது முதல் காரியம் இந்த கவிஞர்கள் இனி கவிதை எழுதமாட்டார்கள் என



உறுதிமொழிவாங்குவார் என்ற ஆசை இருக்கின்றது, டாஸ்மாக் கூட இரண்டாம் பட்சம்தான். தமிழின் அழகை அழிப்பதில் முதல்காரணம் இந்தவகை கவிஞர்கள்.

தமிழக சாதிசங்கங்களின் எண்ணிக்கையை விட இவர்கள் தமிழகத்தில் அதிகம்.

இப்படியான காலங்களில் அடிக்கடி கண்ணதாசன் நினைவுக்கு வருவார், இந்த கவிஞன் மட்டும் ஐரோப்பாவில் உலகில் பிறந்திருந்தால் இன்று உலக கவிஞனாக அவனை கொண்டாடியிருப்பார்கள், பாவம் தமிழனாய் பிறந்துவிட்டான்.

"இல்லையொரு பிள்ளையென ஏங்குவோர் பலரிருக்க இங்குவந்து ஏன்பிறந்தாய் செல்வமகனே" என்ற கவிஞரின் வரி அவருக்கே பொருந்தும்.

தமிழ் அறிந்த, தமிழ் சிறப்பறிந்த யாரும் அவரை மறக்க மாட்டார்கள், நாமும் மறக்க முடியாது. வாழ்வின் எல்லா நிலைகளுக்கும் அல்லது எல்லா பிரச்சினை சூழலுக்கு மிக அற்புதமான பாடல்களை எழுதிய ஒரு கவிஞன் உண்டென்றால் சந்தேகமே இல்லாமல் சொல்லலாம் அது கவியரசர் மட்டுமே.

தமிழகத்தின் மிக சிறந்த கவிஞர் என்றவகையில் அவருக்கு அழியா இடமுண்டு, ஒரு காலமும் மறைந்துபோகாத கவிதை கல்வெட்டு அவர்.

அவர் மிகவும் நேசித்த கண்ணனுக்கு அவர் பாடிய பாடலை ஒரு முறை கேளுங்கள், அக்கவிஞன் தேனில் குழைத்து தந்த பலாப்பழத்தின் ஒரு சுளை "ஆயர்பாடி மாளிகையில் தாய்மடியில் கன்றினைபோல்" எந்த மதத்தவராயினும் உருகுவார்கள், ஏன் கம்சனுக்கே தமிழ்தெரிந்தால் அப்பாடலுக்காக கண்ணனை கொண்டாடுவான்.

எப்படிபட்ட கவிஞன் அவர்? இனி அப்படி ஒரு கவிதை மேகம் இனி தமிழில் சாத்தியமில்லை "ஆனந்தமானது அற்புதமானது" என்பதெல்லாம் மானிடன் பாடகூடிய பாடல் அல்ல, சித்தர்களால் மட்டுமே சாத்தியம்.

சாகாவரம் பெற்ற கவிஞன் அவர். எல்லாவற்றிற்கும் மேல் அவரின் நாட்டுபற்று வாழ்த்துகுரியது.

திராவிடத்தின் சில பொய் முகங்களை அவர் உரித்துகாட்டிய அளவு இன்னொரு நாட்டுபற்றாளன் செய்யமுடியாது

திராவிட அழிச்சாட்டியம் அரசியல் உள்நோக்கம் கொண்டது, மாயமானை பிடிக்க ஓடுவது என முதலில் எச்சரித்தது அவனே..

கிட்டதட்ட 30 ஆண்டுகள் அற்புத பாடல்களை கொடுத்து செங்கோல் ஆட்சி செலுத்திய கவிஞர் அவர். திரையில் கவிஞர் பெயரினை கண்டவுடன் தமிழகம் கைதட்டிய காலமும் இருந்தது எமனுக்கும் தமிழ் தெரிந்திருக்கும், ஆனால் விதிக்கு தெரிந்திருக்காது. தெரிந்திருந்தால் இவ்வளவு விரைவில் அழகிய தமிழ்கவிதையை கொண்டுசென்றிருக்காது.

அவரின் பிறந்த நாளில் அவரை நினைவுகூர்வதில் தமிழ் அறிந்தவர்கள் எல்லோரும் பெரும் மகிழ்ச்சிகொள்வதில் வியப்பு ஏதுமில்லை.

எம்மை பொறுத்தவரை ஒரு விஷயம் உறுதியாக சொல்லமுடியும், அந்த சிறுகூடல்பட்டி செட்டி ஒரு தெய்வீக கவிஞன், அந்த கிராமத்தில் இருந்து சிக்காகோ வரை ஒரு தேவதை அவரை நடத்தியது

வாழ்வின் ஒவ்வொரு நிலைபாட்டையும் அவரை அனுபவிக்க வைத்தது. சூது, வஞ்சகம்,மோசடி, ஏமாற்றம் , அவமானம் என எல்லாவற்றையும் அவர் தெரிந்து புரிந்து கொள்ள வாய்ப்புகளை வழங்கியது

அதில்தான் அவர் திமுகவில் இருக்க வேண்டிய காலமும் வந்தது. அம்மனிதன் அனுபவம் பெற்றபின் அவனை அந்த தெய்வம் ஆன்மீக பாதைக்கு இழுத்து வந்தது அவன் கவிஞனானதும், அரசியல்வாதியாக அனுபவம் பெற்றதும், எல்லா வகை நன்மை தீமை ரோகம் போகம் என எல்லாவற்றிலும் விழுந்து எழுந்ததும் அனுபவம் பெறவே

அந்த அனுபவத்தை கொட்டித்தான் அவன் "அர்த்தமுள்ள இந்துமதம் எழுதினான்", இந்துமதத்தின் பொக்கிஷம் அது. தெய்வம் அவன்மூலம் கொடுத்த வரம் அது.

எம்மை பொறுத்தவரை பாரதிக்கும் அவனுக்கும் பல ஒற்றுமைகளை காட்டமுடியும். ஆனால் பாரதி பெரும் வட்டம் ஞான தீ.

கண்ணதாசன் ஆடி களைத்து ஆன்மீகத்தில் இளைப்பாறிய பத்ருஹரி சித்தர் சாயல்

இருவருமே கண்ணன் பக்தர்கள்

இருவருமே தேசியவாதிகள், பாரதிக்கு பிரிட்டானியர் எதிரி. கண்ணதாசனுக்கு திமுகவினர் எதிரிகடைசி காலங்கள் இருவருக்கும் ஒன்றாய் இருந்தன, இருவரும் தங்கள் கடைசி காலத்தில் உடல் நலத்துக்காய் ஏங்கினர், பாரதி நலம்பெற்று இன்னும் எழுதமுடியும் என நம்பினான், கண்ணதாசனும் ஆழ்வார்கள் அடியார்கள் வரலாறை எல்லாம் எழுதுவேன் என சொல்லிகொண்டிருந்தார்

இன்னும் ஒரு ஒற்றுமை உண்டு, பொதுவாக கவிஞர்கள் என்பவர்கள் இளகிய மனம் கொண்டவர்கள், சிரிப்பவனுடன் சிரிப்பார்கள், அழுபவனோடு அழுவார்கள்.

கொண்டாடும் இடத்தில் இருக்கும் குழந்தை மனம் அவர்களுடையது, ஆனால் எங்கிருந்தாலும் அங்கீகாரத்துக்கும் அரவணைப்புக்கும் ஏங்குவார்கள்.

உண்மையே பேசும் அவர்கள் மனம் அப்படி ஏங்கும், அழும், ஒரு அரவணைப்பை தேடி ஓடும் இதை பக்குவமாக கையாளும் வஞ்சக கூட்டம் உண்டு, அவர்களின் பலவீனத்தை பயன்படுத்தி வளைக்கப்பார்ப்பார்கள், அப்படித்தான் பாரதிக்கும் கடைசி காலத்தில் சோகங்கள் வந்தன, அவன் அகப்படவில்லை, இதனால் அவன் அஞ்சலிக்கு கூட யாரும் வரவில்லைபாரதி தன் தேசத்து விடுதலையினை பார்க்கமாலே மறைந்தான், கண்ணதாசன் இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் இந்து எழுச்சியினை காணாமலே மறைந்தான்.

# நந்தவனம் பவுண்டேசன் வழங்கிய சாதனைப் பெண்கள் விருது விழா




தமிழ்நாடு திருச்சியை தலைமையகமாகக் கொண்டு இயங்கிவரும் நந்தவனம் பவுண்டேசன் ஆண்டு தோறும் உலக மகளிர் தினத்தை முன்னிட்டு பல்துறைகளில் சாதித்த பெண்களுக்கு சாதனைப் பெண் விருது வழங்கி கௌரவித்து வருகிறது.

2022 ஆம் ஆண்டுக்கான சாதனைப் பெண்கள் விருது வழங்கும் விழா 13/03/2022 அன்று சென்னை அரும்பாக்கம் விஜய் பார்க்கில் சிறப்பாக நடைபெற்றது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மார்ச் மாதம் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.